

# அலைமொழி

5

கலாசாரப் பேரவை,
தீவகம் வடக்கு பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.
2021

11002 PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைமொழி

# 5

**வெளியீடு**

**தீவகம் வடக்கு பிரதேச**

**கலாசாரப் பேரவை,**

**பிரதேச செயலகம், தீவகம் வடக்கு,**

**ஊர்காவற்றுறை**

*2021*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | அலைமொழி - 5 |
| நூலின் வகை | : | ஆண்டிதழ் |
| வெளியீடு | : | தீவகம் வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், தீவகம் வடக்கு,<br>ஊர்காவற்றுறை. |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு |
| நிதி அனுசரனை | : | வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம். |
| முதற்பதிப்பு | : | 2011 |
| முன் அட்டை வடிவமைப்பு | : | திரு. தவயோகராசா மயூரதன்,<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>(மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு) |
| அளவு | : | B 5 |
| தாள் வகை | : | 80 gsm |
| பக்கங்கள் | : | xvi + 155 |
| பிரதிகள் | : | 200 |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்,<br>ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை

ஊர்காவற்றுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேச கீதம்

காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம் – ஊர்
காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம் (காவலூர்)

கைப்பணி கருப்பணியும் கடல்வளமும் – மக்கள்
செய்பணி திறம்படவே திகழ்வளமும்
செப்பெரும் கல்வி வளம் கலை வளமும் – இங்கு
ஒப்பெரும் புகழுடைய தனவளமும் – கொண்ட
(காவலூர்)

எத்தனை இன்னல் கண்டும் எழுந்தவளே – எங்கள்
சொத்தென மானிலத்தில் திகழ்பவளே!
இத்தனை சிறப்பெல்லாம் கொண்டவளே – நீ
எங்களின் உயிரம்மா உனையணிந்தோம் –நெஞ்சில்
(காவலூர்)

புரட்டினோம் வரலாற்றுப் பதிவேட்டை – அதில்
உட்கார்ந் திருக்கிறதே கடற்கோட்டை!
கரம்பொன் தம்பாட்டி சுருவிலொடு – அன்னை
அருளைப் பொழிகின்ற சின்னமடு!
புளியங்கூடலொடு மெலிஞ்சி முனை – நெல்
கழனி தனுவிலொடு நாரந்தனை!
அனலை எழுவைதனை அணைத்த படி – பழம்
பெருமை துறைமுகத்தை சுமந்தபடி – செல்லும்
(காவலூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசாரப் பேரவையின்
# நிர்வாகச் செயற்குழு விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**<br>பிரதேச செயலாளர்,<br>பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை. |
| உபதலைவர் | : | **திரு. கிருத்தோ லக்ஷ்மன்,**<br>ஊர்காவற்றுறை. |
| செயலாளர் | : | **திருமதி காசிநாதன் நிருபா,**<br>கலாசார உத்தியோகத்தர்,<br>பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை. |
| உபசெயலாளர் | : | **திரு. பாலசிங்கம் பரமேஸ்வரன்,**<br>ஊர்காவற்றுறை. |
| பொருளாளர் | : | **திரு. அன்ரனி ஜோசெப் யொனிற்றன் ஜோசெப்,**<br>ஊர்காவற்றுறை. |

செயற்குழு உறுப்பினர்கள் :

**திரு. செல்லன் சௌந்தரராஜன்**
**திரு. யோண்பிள்ளை லோறண்ஸ் சாள்ஸ் குயின்சன்**
**திரு. சேவியர் அனுரதன்**
**திரு. செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன்**
**திரு. இராயப்பு லூயிஸ்**
**திரு. சிறில் லோரண்ஸ்**
**திரு. கஸ்பார் ஸ்ரனிஸ்லாஸ்**
**திரு. சின்னத்தம்பி இராமச்சந்திரன்**
**திரு. கமலநாதன் யதுர்ஷன்**
**திரு. குமாரவேலு டக்ளஸ்**
**திரு. குணநாதன் சுபோதன்**
**திரு. தேவராசா ரஜிதரன்**
**திரு. யாகோப்பு நவரத்தினம்**
**திரு. சபாபதி புவனேந்திரன்**
**திருமதி கந்தசாமி தையல்யானகி**
**செல்வி பாலசுப்பிரமணியம் யமுனா**
**செல்வி திருநீலன் வால்டர் கமன்சியா**
**திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா**
**திரு. பொன்னுத்துரை சந்திரவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள்




**நிற்பவர்கள் இ-வ:** திரு. கு.சுபோதன், திரு. கஸ்பார் ஸ்ரனிலாஸ், திரு. யாக்கோப்பு நவரத்தினம், திரு. கு.டக்ளஸ், திரு. க.யதுர்ஷன், திரு. செ.சௌந்தரராஜன், திரு. சி.இராமச்சந்திரன், திரு. சிறில்லோறண்ஸ், திரு. செ.யேசுதாசன், திருமதி ஜெ.உதயகலா, திரு. ச.புவனேந்திரன், திரு. இ.லூயீஸ், திரு. சே.அனுரதன், திருமதி க.தையல்யானகி, செல்வி. வால்டர் கமன்சியா

**இருப்பவர்கள் இ-வ:** திரு. பொ.சந்திரவேல், திரு. பா.பரமேஸ்வரன், திரு. கந்தையா சிறீதரன் (கணக்காளர்), திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி (பிரதேச செயலாளர்), திருமதி.பிரணவசொரூபி சிவகரன் (உதவிப் பிரதேச செயலாளர்), திரு. கிருத்தோ லக்ஷ்மன், திரு. அன்ரனி ஜோசெப் யொனிற்றன் ஜோசெப், திருமதி கா. நிருபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு உறுப்பினர்கள்



**நிற்பவர்கள் இ.வ:** திரு. இ.லொ.அன்சிலின் பெகின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. இ. யோகேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. வி. றொ. செ. ஜோன்சன் (கிரராம உத்தியோகத்தர்), திரு. வீ. கணேஸ்வரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. க. வசந்தகோகுலன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), திருமதி வ. துஷானி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி சி. பானுசிறி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), செல்வி சு. நிதனாஞ்சலி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி எஸ். மல்லிகாதேவி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**இருப்பவர்கள் இ.வ:** திரு. கிருத்தோ லக்ஷ்மன் (கலாசாரப் பேரவை உபதலைவர்), திரு. பொன்னுத்துரை சந்திரவேல் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. கந்தையா சிறீதரன் (கணக்காளர்), திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி (பிரதேச செயலாளர்), திருமதி பிரணவசொரூபி சிவகரன் (உதவிப் பிரதேச செயலாளர்), திருமதி காசிநாதன் நிருபா (கலாசார உத்தியோகத்தர்), திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா (இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**
கலாசாரப் பேரவையின் தலைவரும்
பிரதேச செயலாளரும்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

**திரு. கிருத்தோ லக்ஷ்மன்,**
உபதலைவர், பிரதேச கலாசாரப் பேரவை,
ஊர்காவற்றுறை.

**திருமதி பிரணவசொரூபி சிவகரன்,**
உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

**திருமதி கா. நிருபா**
**திருமதி ஜெ. உதயகலா**
**திரு. பொ. சந்திரவேல்**
**திரு. இ. லொ. அன்சிலின் பெகின்**
**திரு. இ. யோகேந்திரன்**
**திரு. வி.றொ.செ.ஜோன்சன்**
**திரு. வீ. கணேஸ்வரன்**
**திரு. க. வசந்தகோகுலன்**
**திருமதி வ. துஷானி**
**செல்வி சி. பானுசிறி**
**செல்வி சு. நிதனாஞ்சலி**
**செல்வி எஸ். மல்லிகாதேவி**
**செல்வி அ. டில்லிபவீனா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிச் செய்தி | ix |
| 2. | ஆசிச் செய்தி | x |
| 3. | வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துரை | xi |
| 4. | அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xii |
| 5. | பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xiii |
| 6. | ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xiv |
| 7. | ஊர்காவற்றுறையின் பண்பாட்டு மொழியாகட்டும் அலைமொழி ! | xv |
| 8. | மலர்க்குழுவின் இதயத்திலிருந்து ..... | xvi |
| 9. | ஊர்காவற்றுறை வீடமைப்பின் வளர்ச்சிப் போக்கு - ஓர் ஆய்வு | 01 |
| 10. | கொவிட் -19 இன் பின்னரான இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவு - ஒரு நோக்கு | 09 |
| 11. | நுண்நிதிக்கடன் திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம் | 12 |
| 12. | ஊர்காவற்றுறையும் ஐரோப்பிய காலனித்துவ எச்சங்களும் | 18 |
| 13. | தாய்மை! | 30 |
| 14. | பசுமை பேணுவதில் மரங்களின் பங்களிப்பு | 38 |
| 15. | இல 66 விஷாலினி | 42 |
| 16. | ஊர்காவற்றுறை : பெயர்க் காரணம் | 47 |
| 17. | "கடல் வாணிபமே காவலூரின் பொற்காலம்" (நேர்காணல்) | 50 |
| 18. | வேற்றுக்கிரகம் நாடி ஓடிவிடு கொறோனாவே! | 55 |
| 19. | 200வது யூபிலி ஆண்டைக் கொண்டாடும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் | 56 |
| 20. | ஆரோக்கிய வாழ்வு | 60 |
| 21. | கருவேல மரமும் அதன் விளைவுகளும் | 62 |
| 22. | அதிகரித்துவரும் விவாகரத்துக்களும் உடைக்கப்படும் சமூகக் கட்டமைப்புக்களும் | 65 |
| 23. | தீவகத்தில் வெடியரசனின் ஆட்சி - ஒரு தேடல் | 70 |
| 24. | கவனத்தை ஈர்த்து நிற்கும் அனலைதீவுக் கிராம அபிவிருத்தி | 86 |
| 25. | காதல் போயிற் சாதல்! | 92 |
| 26. | பருத்தித்தீவும் புனித காணிக்கை மாதா ஆலயமும் | 94 |
| 27. | கிராம நாமங்கள் | 96 |
| 28. | எண்ணெய் லாம்பு | 104 |
| 29. | திருக்குறளும் எனது பார்வையும் | 105 |
| 30. | பெண்ணினமே விழித்தெழு! | 110 |
| 31. | அமரர் ஜெயக்குமாரின் வாழ்வும் கலைப்பணிகளும் | 112 |
| 32. | கச்சதீவு : ஒரு மீள்பார்வை | 115 |
| 33. | நல்லதோர் வீணை செய்து... | 126 |
| 34. | மரபுரிமைச் சின்னங்களின் சுரங்கம் - ஊர்காவற்றுறை | 133 |
| 35. | தீவகத்து நினைப்பிருக்கு! | 140 |
| 36. | ஊர் அடங்கியும் அடங்காத மனச்சுமைகள் | 141 |
| 37. | போர்ச் சூழலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள திருக்கோயில் பண்பாட்டு மாற்றங்களும் தாக்கங்களும் | 145 |
| 38. | இயற்கை வளங்களும் சூழல் பாதுகாப்பும் | 153 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

"அலைமொழி" மலர் கலை கலாசார வடிவங்களுடன் தொடர்ந்து வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் எனது ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினதும் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையினதும் பெரு முயற்சியினால் வருடாவருடம் அலைமொழி வெளிவருவதானது எமது வரலாற்றைப் பதிவு செய்து கொள்வதற்கும் எமது வரலாற்றை இளைய தலைமுறைக்கு கற்பித்துக் கொடுப்பதற்குமான சந்தர்ப்பமாக அமைகிறது.

எமது பண்டைய மன்னர்களது காலப்பகுதிகளிலும் அன்னிய நாட்டு ஆட்சிக் காலங்களிலும் இலங்கையின் மிக முக்கிய வர்த்தகத் துறைமுகமாக ஊர்காவற்றுறை துறைமுகம் விளங்கியிருந்தது.

படகுகள், தோணிகள் முதல் வானுயர் பாய்மரக் கப்பல்கள் வரை வெளிநாட்டு வணிகக் கப்பல்கள் வந்து செல்லும் துறைமுகமாக இத்துறைமுகம் திகழ்ந்தது.

தற்போதைய துறைமுகத்தைப் பார்க்கும் போது நான் மேற்சொன்ன தகவல்கள் நம்பத்தக்கதாக இராது. ஆகவே எமது வரலாற்றை மீள நினைவுபடுத்தும் வகையிலும் இளையவர்கள், சிறுவர்களுக்கு தெரியப்படுத்தும் வகையிலும் அலைமொழி தொடர்ந்து வர வேண்டும். எமது பிரதேசத்துக்கு உரித்தான கலையம்சங்கள், கலாசார வடிவங்கள், தொன்மையான வரலாறுகளை ஆவணப்படுத்தக்கூடிய ஒரே தளமாக அலைமொழி அமைகிறது. பிரதேச செயலகத்தினதும் கலாசாரப் பேரவையினதும் தலையாய கடமையும் காலத்தின் கட்டாய தேவையுமாய் அலைமொழி என்ற மலர் அமையப் பெறுகிறது.

கடற்கோட்டை, ஊருண்டிக் கோட்டை போன்றவைகளையும் பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட இந்து, கத்தோலிக்க வழிபாட்டுத் தலங்களையும் கொண்டமைந்து விவசாயம், மீன்பிடி வணிகத்துறைகளில் சிறப்புற்றுத் திகழும் காவலூரின் சிறப்பினைச் சுமந்து அலைமொழி தொடர்ந்து வெளிவர எனது ஆசிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், எல்லாம் வல்ல சக்தி - உலகாளும் நாயகி ஆதி சொரூபமாக அமைந்த மகாமாரி அன்னையின் ஆசியும் இறையருளும் சகலருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.


**சிவஸ்ரீ கு. குகேஸ்வரக்குருக்கள்,**


பிரதம குரு,

செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜமகாமாரி அம்பாள் திருக்கோயில்,

புளியங்கூடல், ஊர்காவற்றுறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

உப்புக்காற்றினால் முறுக்கேறிய ஊர்காவற்றுறையை தலைமையாகக் கொண்டு தீவகத்தின் ஒரு பகுதி ஆளப்படு கின்றது. இந்த ஆளுகைக்குள் உள்ள குட்டிக் கிராமங்கள் கூட எட்டி நிமிர்ந்து நிற்கக் காரணம் தனக்கடியில் புதைத்து வைத்திருக்கும் மரபுவழிச்சின்னங்கள்தான். தமிழினதும் ஈழத்தினதும் அறியாத ஆரம்பங்களையும், முடியாத வரலாறுகளையும் நம்மூரில் கண்டுகொள்ள நாளை ஐ.நா கூட இங்கே முகாமிடும் என்பதில் ஐயமில்லை. நம்மூர்களை யெல்லாம் பசுமையான பாலைவனம் என்று கூறலாம்.

ஏனென்றால், எப்படித்தான் உப்புக்காற்று வீசினாலும் வெந்து தணல் போல் வெயில் அடித்தாலும் பன்னிரண்டு மாதங்களும் ஊர்கள் பச்சயம் இழப்பதில்லை. இவ் ஊர்களின் கலை, கல்வி, கலாசாரம், பண்பாடு, மானிடம், மருத்துவம் எனப் பல்வேறு பரிமாணங்களைத் தாங்கிவரும் இந்த அலைமொழி-5, எம் கரங்களில் தவழவரும் தேன்மொழிப் பொந்து. வரலாறு அறியாச் சிறார்களுக்கும் வாழத்துடிக்கும் இளையோருக்கும் நாம் கொடுக்கும் வரதட்சணை ஏடு இந்த அலைமொழி-5. எனவே எங்கெல்லாம் தமிழ்மொழியோ அங்கெல்லாம் அலைமொழியும் ஆட வாழ்த்துகிறோம்.

**அருட்தந்தை M.L. தயாகரன்,**
பங்குத்தந்தை,
கரம்பொன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துரை

ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியிடும் அலைமொழி - 5 மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஊர்காவற்றுறை பிரதேசத்தின் கலை, பண்பாட்டுப் பாரம்பரியங்களை தாங்கி வெளிவரும் சான்றுபடுத்தக்கூடிய ஆவணமாக இந்நூல் அமையும் என்பதில் ஐயமில்லை.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களினூடாக வருடாவருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் - 2021இன் கீழ் நிதி அனுசரணை வழங்கப்பட்டு, பிரதேச எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் வகையிலும், பிரதேசத்தின் மரபுவழிக் கலை, பண்பாடு, சடங்கு சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகளை வெளிக்கொணரும் வகையிலும் அலைமொழி - 5 மலர் வெளியிடப்படுகின்றமை பாராட்டிற்குரியதாகும்.

கற்றல், கற்பித்தல் ஊடாகவே சமூக மேம்பாட்டினை அடைய முடியும் என்ற நிலையினைக் கடந்து, எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற தொன்மையான அடையாளங்களை, பண்பாடு, பாரம்பரியங்களினை பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்க வேண்டிய சமூகப் பொறுப்பு இன்றைய சந்ததியினருடையது. காலத்தின் தேவையுணர்ந்து முன்னெடுக்கப்படும் இவ்வெளியீட்டு முயற்சியானது எழுத்தாளர்களை ஊக்குவிப்பதோடு பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும்.

இம்மலர் தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இன்றைய தொற்றுநோய் நிலையின் இக்கட்டான சூழ்நிலையிலும் வெளியீடு செய்ய அயராது உழைத்த பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், மலர்க்குழுவினர், கலாசார பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. இ. இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சப்ததீவுகளில் ஒன்றான ஊர்காவற்றுறை இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்டு நடுவே அமைந்திருப்பது பசுந்தீவாய் எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்றது. நீண்டகால வரலாற்று வாழ்வியல் தடங்கள், அவற்றின் எச்சங்களை நிறைந்தளவில் பொதிந்து தொல்லியல் பூமியாக விளங்கிவரும் ஊர்காவற்றுறையின் பண்பாட்டு மலர் “அலைமொழி-5” இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

மிகவும் குறைந்தளவான வளங்களோடு நிறைந்தளவிலான பணி செய்யும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் அயரா முயற்சிகண்டு என் உள்ளம் பூரிக்கின்றது. தொழில் நிமித்தம் பலர் புலம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வந்தாலும் தமது ஊரின் அருமை, பெருமைகள் மற்றும் பிரதேசத்தின் தொன்மையினை அலைமொழி ஊடாக பதிவுக்குட்படுத்துதல் என்பது வரலாற்றுச் சாதனையாக மிளிர்கின்றது. இம்மலரில் அடங்கியுள்ள ஆக்கங்கள் பலருக்கும் பயனுள்ள வகையில் அமைந்திருப்பது சிறப்பானதாகும். இவ்வாறான முயற்சியில் ஈடுபடுவோர் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக உறுப்பினர்களின் பணி தொடரவும் அலைமொழி மலர் பயன்தரும் வகையில் பண்பாட்டுடன் கூடியதாக அமைய உழைத்த மலர்க் குழுவினர், பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆக்கங்களை வழங்கிய அறிஞர்கள் என அனைவரையும் பாராட்டி, மலரும் “அலைமொழி” சிறந்த ஆவணமாக அமைய என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி.

**திரு. கணபதிப்பிள்ளை மகேசன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரின்
# வாழ்த்துச் செய்தி

ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வெளிவரும் "அலைமொழி - 05 மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தின் தொன்மையான கலை, பண்பாடு, வரலாறு போன்ற பல்துறை ஆக்கங்களை தாங்கி வரும் "அலைமொழி-05" மலரானது சமூகத்திற்கும், இளந்தலைமுறைக்கும் பயன்படும் ஒன்றாகவும், புதிய படைப் பாளிகளை உருவாக்க வழிவகுப்பதாகவும் அமைகின்றது.

கற்றல், கற்பித்தல் ஊடாகவே சமூக மேம்பாட்டினை அடையமுடியும் என்ற நிலையினைக் கடந்து எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற அரும் அடையாளங் களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. எனவே இப்பிரதேச மலரூடாகப் பல தரமான படைப்புக்கள் மக்களைச் சென்றடையும் என்பதோடு எமது கலை கலாசார பண்பாட்டுடை மைகளைப் பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே இவ் அலைமொழி - 05 "மலர் சிறப்புற வெளிவருவதில் அயராது உழைத்த பிரதேச செயலாளர், கலாசாரப் பேரவையினர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி சுஜீவா சிவதாஸ்,**
பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

இலங்கையின் வடக்கே தனக்கென மிகச் சிறப்பான அம்சங்க ளுடன் தன்னைக் காவல் செய்யவென அழகிய சிறு தீவுகளையும் கொண்டு கடலன்னையின் தாலாட்டில் காவலூர் என்கின்ற சிறப்புப் பெயருடன் விளங்கும் எமது பிரதேசம், காலச்சுவடுகளில் அழிந்துவரும் பாரம்பரிய கலைகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றைப் பாதுகாப் பதிலும் அவற்றை ஆவணப்படுத்தலுடன் புதிய தலைமுறைகளினூடாக எதிர்காலச் சந்ததியினரிற்கு எடுத்துச் செல்கின்ற பணியினையும் மிகச் சிறப்பாக நகர்த்திச் செல்கின்றது.

நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இசைக்கருவிகளின் ஆதிக்கம், தொலைக் காட்சித் தொடர் நாடகங்களின் புதிய போக்கு, இளைய தலைமுறையினரின் மாறுபட்ட எதிர்பார்ப்பு எனப் பல்வேறு சவால்களிற்கு மத்தியிலும் எமது காவலூர் கலைஞர்களின் பாரம்பரிய கலைப்படைப்பு, அவர்களின் அபாரமான திறமையினால் தேசியம் வரை சென்று தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது. கலையோடு மட்டுமல்லாமல் கல்வியிலும் பல தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கி நாட்டின் பல பாகங்களிலும் உயர் ஆசனங்களில் அமரச்செய்து தன் பெருமையினை உயர்த்தியதுடன், பாரம்பரிய கட்டடக்கலை நுட்பங்களுடன் தேவாலயங்கள், இந்து ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் மாறுபட்ட அமைப்பைக் கொண்ட பழம்பெரும் வீடுகள் எனக் காணப்படுகின்ற உயர்ந்த கட்டிடங்கள் காவலூரின் ஆரம்பகாலச் செல்வச் செழிப்பினை இன்றும் கூறி நிற்கின்றன.

இவ்வாறான சிறப்புமிக்க காவலூர் அன்னையின் சாராம்சங்களையும் இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், சமயப் பெரியார்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பல்வேறு தரப்பினர்களினதும் ஆக்கங்களினைத் தாங்கித் தற்காலத்திற்கு ஏற்றவாறு எளிமையான மொழிநடையில் அமையப்பெற்றுள்ள “அலைமொழி - இதழ் 05” அனைவருக்கும் பயனுள்ளதாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே, வருடந்தோறும் பிரசவிக்கப்படும் இவ்விதழ் தொடர்ந்தும் சிறப்பாக வெளிவரவும் இம்மலர் வெளியீட்டிற்காக அயராது உழைத்த அனைவரையும் பாராட்டி விழா சிறப்புற எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**
பிரதேச செயலாளரும்
கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறையின் பண்பாட்டு மொழியாகட்டும் அலைமொழி !

தீவகம் வடக்கு என அழைக்கப்படுகின்ற ஊர்காவற்றுறையின் பிரதேச கலாசாரப் பேரவை ஆண்டுதோறும் வெளியிடும் "அலைமொழி - இதழ் 5" க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பூரிப்படைகின்றேன்.

யாழ். குடாநாட்டின் மக்கள் குடியேற்றத்தின் ஆரம்பப்பகுதியென ஆய்வாளர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கும் தீவுக்கூட்டங்களின் அரணாய் தலைநிமிர்ந்து நிற்கும் ஊர்காவற்றுறையானது, தமிழரின் மரபுரிமைச்சின்னங்களின் அமுதசுரபியாகத் திகழ்வதனையும் வரலாற்றுக் காலம் முதலே நன்கு அறியப்பட்ட புகழ்பெற்ற துறைமுகத்தையும் கொண்டிருப்பது பெருமைக்குரியதே.

இந்நிலையில், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துடன் இணைந்து இக் கலாசாரப் பேரவையானது தொடர்ந்தும் இப்பணியினில் தன்னை ஈடுபடுத்தி, பண்பாட்டின், கலாசாரத்தின் காவலராய் திகழ வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி சு. விஜயரத்தினம்,**
சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் இதயத்திலிருந்து .....

தீவகம் என சிறப்பாக அழைக்கப்படும் யாழ். குடாநாட்டின் தீவுக்கூட்டங்கள் அனைத்திற்கும் தலைநகராய், பாதுகாவலனாய் வரலாற்றுக் காலம் முதல் விளங்கி வரும் ஊர்காவற்றுறையானது இன்று வரையும் ஈழதேச வரலாற்றில் தன் புகழ் பரப்பி நிற்கும் பிரதேசமாகவே துலங்கி வருகின்றது. இந்நிலையில், இப்பிரதேச அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளின் சிந்தனைக்கு உருக்கொடுத்துக் களமாட எமது கலாசாரப் பேரவையானது வருடாந்தம் “அலைமொழி” எனும் தளம் அமைத்து வருகின்றது.

இவ்வருடமும் மருதநிலப் பண்ணும் நெய்தலின் அலை ஒலியும் இணைந்து வாழ்த்திசைக்க , இப்பிரதேச கலை, கலாசார, பண்பாடு மற்றும் மரபுரிமைகளையும் வரலாறுகளையும் தன்னகத்தே கொண்டு தேடல்களையும், ஆய்வுகளையும் தாங்கி “அலைமொழியாள்” முகை அவிழ்த்து உங்கள் முன் இதழ் ஐந்தாக மலர்ந்து மணம் பரப்பி, புன்னகை பூத்துக் களி நடனம் புரிகின்றாள். மங்கை இவளின் நறுமணம் கமழும் புன்னகையுடனான இக் களி நடனத்தை உங்கள் முன் அரங்கேற்றுகின்றோம்.

இந்த அலைமொழியாளின் அரங்கேற்றத்துக்கு நிதி உதவி வழங்கிய வடமாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கும் இதற்கு ஆசிகளை அள்ளி வழங்கிய மதத் தலைவர்கள், திணைக்களச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் இம் மலர்க்குழுவானது இதயபூர்வமான நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றது.

மலருக்கு மணம் சேர்க்கும் விதத்திலும் அழகு செய்யும் விதத்திலும் சுகந்தமாய், மகரந்தமாய் விளங்கும் படைப்பாளிகளின் ஆக்கங்கள் யாவும் அவர்தம் சிந்தனையின், தேடலின் விளைவுகளே என்பதனையும் அந்த ஆக்கங்களுக்கு அவர்களே உரித்தானவர்கள் என்பதால், அவற்றுக்குரிய பொறுப்பும் அவர்களைச் சார்ந்ததே என்பதனைப் பணிவுடன் மலர்க்குழு உங்கள் முன் வைக்கின்றது.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை வீடமைப்பின் வளர்ச்சிப் போக்கு-ஓர் ஆய்வு

திரு. தவயோகராசா மயூரதன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை. (மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு)

மரபுவழி நாகரீகத்தின் ஒரு தொட்டிலாக ஊர்காவற்றுறை இருந்திருக்கின்றது. தெற்கிக்கான பெயர்ச்சி இங்கிருந்து ஆரம்பமாகி இருக்கலாம் என்பதை வரலாறும் ஆய்வுகளும் உரிமை கோரி நிற்கிறது. வரலாறுகள் வந்தேறியோர் பற்றிய கருத்தாடல்களை ஆராதித்தாலும் பூர்வீகமான மக்களின் நிலைப்பாடுகளை முழுவதுமாக ஆராயாமல் விடுதல் வரலாற்றில் தொக்குவிழுதல் போன்றதாகவுள்ளது. வளர்ச்சிப்படிநிலைக்கு ஆரம்பங்கள் தேவை என்பதனை கருத்தில் கொண்டு கட்டிட வளர்ச்சியில் மனைவளர்ச்சிப் படிநிலையாக ஊர்காவற்றுறைசார் வரலாற்றை தொட்டுச்செல்வதில் வரலாறு உவகை கொள்கிறது.

அந்தவகையில் பண்டைய நாகரீக வளர்ச்சியில் உச்சத்தை தொட்டிருந்த தமிழர் பண்பாட்டு கிராமங்கள், பட்டினங்கள் இன்றைய ஆய்வுகள் கோடிட்டு காட்டுகின்ற நீர்மேலாண்மை சமூகக்குடிகளின் எச்சங்களை தீவகத்தில் காணக்கூடியதாக இருப்பது வரலாற்றில் ஆழமாக அசைபோட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் சென்றுள்ளோம்.

வரலாறுகள் மரணமாக்கப்பட்டிருந்தாலும் காலத்தின் தொடர்ச்சி மக்களின் பூர்வீகத்திற்கான வரலாற்றை ஆய்வுகள் வழங்கியே ஆக வேண்டும். அந்தவகையில் எமது தொல்குடி மக்களின் தொன்மங்களை தீவகத்தின் பல பாகங்களில் காணக் கூடியதாகவுள்ளதை ஆய்வுகள் முன்வைக்கிறது. சாட்டி, அல்லைப்பிட்டி, மண்கும்பான், புங்குடுதீவு, சுருவில் போன்ற இடங்களில் தொல்குடியினரின் மனைகள், கிணறுகள், பாவனைப் பொருட்களின் எச்சங்கள் பூர்வீகமான மக்களின் மனைவளர்ச்சியின் அறிவியல் ஆரம்பங்களை நாம் காணலாம்.[1] அந்த வகையில் நன்னீர், கடல்சார்ந்த பிரதேசங்களில் அவர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருப்பது நீர் பற்றிய ஓர் நுட்பமான அறிவியல் அவர்களிடம் இருந்துள்ளதனை காணலாம். மண்கும்பான், அல்லலைப்பிட்டியில் உருவாகும் நீர்வடிப்பானது நிலக்கீழ் ஆற்றுப்பிரிவாக ஏழாற்றுப் பிரிவில் கலக்கிறது என்றும் அவற்றின் படுக்கைகளில் மக்கள் குடியிருந்தார்கள் என்றுமான பூர்வீக கதைகள் இன்றும் உலாவுகின்றது.[2] சங்ககால பாடல்களில் நீர்பற்றிய சொல்லாடலில் ஊரணி என்றபதம் தண்ணீர்[3] ஏந்து பிரதேசமாக இருக்கலாம். ஊர்காவற்றுறை ஊருண்டிப்பகுதியில் நன்னீர் இருப்பதாக மக்களால் கூறப்படுவதும் முன்பு இங்கு வணிகர் குடிகள் இருந்ததாகவும் கூறப்படுவது பின்பும் இவ்வணிகம் தொடர்ச்சியாக நடைபெற்றிருப்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

தொன்மை பற்றிய தேடலில் யாழ் கோட்டையின் அடிப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட அகழ்வுப் பொருட்களின் கால எல்லை கிமு 1000-100 வரையாக காணப்படுகிறது. அவற்றின் கீழான பவளப்பாறைகளால் ஆன கட்டடங்களின் அடித்தளம்[4] வரலாற்றுக்கு முன்னதாக இங்கு கட்டிடம் அமைந்திருந்ததென்பதை இந்துசமுத்திர வாணிபம் வடக்கு நோக்கிய தொடர்ச்சி ஊர்காவற்றுறை தொன்மத்தோடு ஊருண்டி கோட்டை வழியாக இடம் பெற்றிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைகளின் முன்பான முனியப்பர் வழிபாடு இங்கு காணப்படுவது பரம்பரை வழியாக இங்கு அமைந்திருப்பதை நாம் காணலாம். ஊர்காவற்றுறையின் தொன்மத்தோடு தொடர்பை ஏற்படுத்துகின்ற வேலணையில் காணப்படும் சீனகன் பிட்டி, கும்புறுபுட்டி என்பன வரலாற்று ஆதாரங்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. இந்த சமகாலப் பகுதியிலே வீட்டுமனைக் கட்டுமானத்திற்கான அடிப்படை காணப்பட்டிருக்கலாம். செங்கட்டிக்கும், சீமெந்துக்குமான பரிணாம வளர்ச்சி இங்கு கிடைத்த எச்சங்களின் தொன்மை அவர்களின் வாழ்வியல் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டவையே. அவற்றின் எச்சங்களையே நாம் சாட்டி, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு போன்றவற்றில் கிடைத்த கட்டு மானங்களின் எச்சங்களோடு[5] ஒப்பிடும் போது பழங்குடிமக்களின் வாழ்வியல் எமக்கு புலனாகின்றது.

அந்த வகையில் இவர்களின் மனைவளர்ச்சிப் போக்கை நான்கு பிரிவுகளாக வகுத்து நோக்கலாம்.

1. பெருங்கற்கால மனைகள்
2. காலணித்துவத்திற்கு முந்திய கால மனைகள்
3. காலணித்துவகால மனைகள்
4. தற்கால மனைகள்

**1. பெருங்கற்கால மனைகள்**

பெருங்கற்காலத்திற்குரிய மனைகளை நாம் சாட்டி, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழ்வு ஆய்வுகளின்[6] மூலம் அவர்கள் மனைகளை சுடுமணல் கட்டிடங்களாக அமைத்து வாழ்ந்திருக்கின்றனர். தமக்கான நீரைப் பெறுவதற்கு உறை கிணறுகளை பயன்படுத்தியுள்ளனர். தனது சூழலுக்கேற்ற பயன்பாட்டு பொருட்களை பயன் படுத்தியிருந்தமையால் இன்று உக்கக்கூடியவை அழிவடைந்த போதும் அவர்கள் பாவனைப் பொருட்களாக பயன்படுத்தியவையின் எச்சங்கள் ஓர் சமுக மேம்பாடடைந்த மக்கள் வாழ்ந்துள்ளமையை அறியலாம். இவ்வாறாக கரையோரப்பகுதிகளில் பரவலாக ஆதிக்குடிகள் வாழ்ந்திருக்கின்றமையை வைத்து நோக்கும் போது கடல் வாணிபம் சார் மக்கள் அன்றே இங்கு இருந்துள்ளமையை வெளிநாட்டுப் பொருட்கள் அவற்றின் அடையாளங்கள் மூலம் அறியலாம்.[7] இக்காலத்திற்குரிய முழுமையான அமைப்புக்களை அறிய முடியாவிட்டாலும் தங்கள் தேவைக்குரிய அனைத்தையும் மக்கள் தாமாக உருவாக்கி வாழ்ந்து வந்திருக்கின்றனர். எனவே இவற்றின் மூலம் தீவகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வசித்து வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

**2. காலணித்துவத்திற்கு முந்திய கால மனைகள்**

இது ஒரு நீட்சியான காலமாக அமைகின்றது. இக் காலத்தில் எந்த விதமான தடயங்களும் இன்றுவரை காணப்படவில்லை. வரலாற்றுக்கு முந்தியகால மனைவளர்ச்சி இந்தக்காலப்பகுதியில் ஒரு சிறந்த நிலையினை எட்டியிருக்க வேண்டும். ஆனாலும் வளக் கொள்ளையர்களும், மனிதச்சரக்கு வியாபாரிகளும் மாறி மாறி ஆண்ட காரணத்தினால் இங்கு முற்றாக அழிவடைந்திருக்கலாம். ஆனாலும் வரலாற்றுத் தேடல்களில் சிக்கிய சில தகவல்களை வைத்து நோக்கும் போது பிறவணிகர்கள் இங்கு வாழ்ந்திருக்கின்றார்கள்.[8] தீவகத்திற்கும் தமிழகத்திற்குமான தொடர்பு அவர்களின் வணிகம், கல்வி போன்றவற்றை வைத்து நோக்கும் போது "குமாரகம்பனின் காலத்தில் பல நிர்வாக மாற்றங்களை ஏற்படுத்த தீவுப்பகுதி உட்பட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாணப் பகுதியில் உயர்பதவி வகித்தவர்கள் இங்கு வந்து குடியேறினர்.[9] எனவே இக்காலப் பகுதிக்குரிய எச்சங்களை தேடும் போது இக்காலத்தில் ஓடுகள், சிற்பவேலைப்பாடுகளுடைய தூண்கள், பாவனைப் பொருட்கள் என்பன அருங் காட்சியகங்களில் காணப்பட்டாலும் இக்கால வீட்டு நிர்மாணங்கள் பற்றிய தவறான பார்வை எம்மக்களிடையே பரவி காணப்படுகிறது. ஆனாலும் இங்கு கட்டிடங்கள் கட்டும் "கண்ணுள் வினைஞர்கள்" வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் சுதைமுறையிலான கட்டிடங்களை கட்டுபவர்களாகவும் கோவில் கட்டுமானங்கள் செய்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட கால சுடுமண்ணிற்கு பின்னராக இங்கு சுதை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இவை செம்மண் சுதைகள், முருங்கை கற்பாறை சுதைகள், ஊரிமண் சுதைகள் என்பவற்றால் கட்டிடங்களுக்கான தூண்களை உருவாக்கி அவற்றின் மேலாக மரங்களை பரப்பி ஓலைகளால் கூரைகளையும் மண்ணாலான சுவர்களையும் அமைத்து மனைகளை அமைத்து வாழ்ந்திருக்கின்றனர். மண்ணாலான வீடுகள் அவர்களின் சூழலுக்கு இசைவாகக்கட்டப்பட்டாலும் கல்லிலும் வலிமையான சுவர்களை உருவாக்குவதில் வல்லவர்களாக காணப்பட்டிருக்கின்றனர். மனைகள் அழிவடைய கூடாது என்பதில் மிக முக்கியமான கவனம் கொண்டிருக்கின்றனர்.



சங்கப்படலை - வழிப்போக்கர்களுக்காக அமைக் கப்பட்டது. பண்டைய கால நடை போக்குவரத்து, வண்டில் போக்குவரத்தில் களைப்படைந்தவர்கள் இதில் தங்கி இளைப்பாறலாம். இதிலும் தண்ணீர் குடம் காணப்படும். இவை பிற்காலத்தில் சீமெந்திற்கு மாற்றீடு செய்யப்பட்டு இன்றும் காணப்படுகிறது.




தலவாசல் - இது விருந்தினரை வரவேற்பதற்கான ஒரு அமைப்பு. இவை மரங்கள், கற்கள், மண் போன்றவற்றால் கட்டப்பட்டிருந்தன. இங்கு தண்ணீர்குடம், தாம்பூலத் தட்டுகள், பாக்கு உரல் போன்றன காணப்படும். தன வந்தர் வீடுகளில் சுண்ணாம்பு சுதை மூலம் கட்டப் பட்டிருந்தது.



அடுக்களை - இவை காற்றோட்டமாக அமைக்கப்பட் டிருந்தன, அதிகளவாக மண்ணினால் அமைக்கப்பட்டி ருந்தது, கிழமையில் ஒருதடவை இவை மெழுகப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயறை (கூடல்)
இவை மரத்தூண்களைப் பயன்படுத்தி பனை மரங்களால் கூரை அமைக்கப்பட்டு ஓலைகளாலும் சில வீடுகள் பனை ஓலை களாலும் வேயப்பட்டது. சுவர்கள் மண்ணால் வரி பிடிக்கப் பட்ட தடிகளில் அப்பப்பட்டு நன்கு காயவிடப்பட்டு மெழுகப் பட்டன. வீட்டின் நிலப்பகுதி ஆவரசு, முருங்கை இலை, சாம்பல் (கரி) சேர்த்து மெழுகப்பட்டன.

கதவுகள் குனிந்து செல்லக் கூடியதாக பதிவாக அமைக்கப்பட் டிருந்தது. சுவர்கள் பாதிப்புறாத வகையில் தாழ்வாரங்கள் நீளமாகப் போடப்பட்டிருந்தன. சுவர்களை மறைப்பதற்கு ஓலைகளால் பன்னாங்குகள் பின்னி வைக்கப்பட்டிருந்தன.

ஊர்காவற்றுறை சங்குமால் எனும் இடத்தில் சுண்ணாம்பு சூளைகள் அமைத்து மக்களுக்கு வர்ணங்கள் கலந்து[10] கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டது. அக்காலத்தில் மன்னர்கள் தங்களுக்கான கோட்டைகளை அமைக்க இவற்றை பயன்படுத்தினார்கள். தமிழர் பண்பாட்டு மரபுகளில் நிர்வாக மையங்களாக கோவில்களும் அதை அரசர்கள் நிர்வகிப்பவர்களாகவும் பாதுகாப்பு மையங்களாக கோட்டைகளும், குடிமனைகளும் காணப்பட்டிருந்திருக்கலாம். யாழ்ப்பாண வைபவமாலையில் இக்கருத்து நிலை மேலோங்கியிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. எனவே காலணித்துவ ஆட்சியாளர்கள் இவற்றை முற்றாக அழித்திருக்கலாம். மக்கள் வாழ்விடங்கள் பற்றிய எந்தவித தேடலும் இல்லாத காரணத்தினால் இவை அற்றுப் போயிருக்கலாம். ஆனாலும் காலணித்துவ காலத்தில் மனைகள் மண்ணாலும் கல்லாலும் கட்டப்பட்டு காணப்படுகிறது. இக்காலத்தில் வீடுகள் கட்டப்பட்டதற்கான தமிழர் பண்பாட்டு இலக்கிய சான்றாக

*"நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு*
*தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்*
*பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"*

என்றும் நெடுநல் வாடையில் காணலாம்.

இவ்வாறானதன் தொடர்ச்சி கிள்ளி வளவனுடைய படைப்பலம் பற்றிய சொல்லாடலில் "ஈழம் ஒருகால் மிதியா வருமே கிள்ளி வளவன் யானை" எனும் பாடலடி ஈழம் என்பது இலங்கையை குறித்தாலும் வடக்குப்பற்றியதான குறிப்பாக யாழ்ப்பாணம் பற்றியதாக கருத்தே மேலோங்கியுள்ளது. எனவே இக்காலம்மட்டும் பெருங்குடிகள் இங்கு இருந்ததை இலக்கியம் சார்பாக எடுத்துக்காட்ட முடியும்.[11]

இவற்றைவிட அரண்மனை எனும் பதம் பாவிக்கப்பட்டது. அரண்மனை என்பது மனையாகவே இருந்தாலும் அதற்கு பாதுகாப்பு செய்யப்பட்டிருப்பின் அது அரண் மனையாகும். அரசன் தங்குவது அரண்மனை என்ற சொல்லாடல் இல்லாமல் பாதுகாப்பாக கட்டப்பட்ட வீடுகள் அரண்மனைகள் எனப்பட்டது. இவ்வாறான வீடுகள், மனைகள் இருந்திருக்கலாம் என்பது யாழ்ப்பாணத்தில் காணப்படும் சங்கிலியன் அரண்மனை, ஊருண்டியில் காணப்படும் கோட்டை என்பவற்றின் தொடர்ச்சியான கட்டிட அமைப்போடு கூடிய மனைகள் ஊர்காவற்றுறையில் ஒருசில இடங்களில் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் நாடு பூராகவும் காணப்படும் எச்சங்கள் தமிழ் மன்னர்களுடைய கோட்டைகள் அல்லிராணி கோட்டை, இவை முருகைக்கல், செங்கல் என்பவற்றால் சுதை மூலம் கட்டப்பட்டுள்ளன. மண்ணித்தலையில் காணப்படும் சிவன் கோவில் சோழர் காலத்திற் குரியதான இதில் சுதை முறையிலான முருகைப்பாறைக்கல்லும் மேற்பகுதிகளில் செங் கட்டிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இவை சார்பாக வைத்து நோக்கும் போது இக் காலப்பகுதியில் செங்கட்டி, சுதை, கல், மரம் என்பவற்றை நுட்பமான முறையில் பயன்படுத்தி யுள்ளனர். சோழர்களின் காலப்பகுதிகளாக காணப்பட்ட இக்கால கட்டிடங்கள், அவர்களின் ஆட்சியின் தொடர்கள் நாரந்தனை, வேலணை சோழகன் ஓடை[12], பாணா வோடை, பாலா வோடை, வீராமலை, ஊருண்டி போன்ற பகுதிகள் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளாக இருந்திருந்ததனை வரலாறுகள்[13] கூறுகின்றது. ஆனாலும் காலனித்துவ ஆட்சிகள் தங்களின் தேவைக்குரியவற்றில் தாங்கள் அமர்ந்து கொண்டு ஏனையவற்றை முற்றாக அழித்திருக்கலாம். அதனாலேயே வரலாற்றின் இடைப்பட்ட பக்கங்கள் இங்கு காணாது போயிருக்கலாம். எனவே காலனித்துவ ஆட்சியாளர்களின் முன்பான வரலாறு களையும் அவர்களின் செயற்பாடுகள் பற்றிய கருத்தியல்புகள் மூலம் எமது மக்களிடை யேயான செவி வழிக்கதைகள் மூலமாகவும் இக்காலத்துக்குரியதான கட்டிட அமைப்புக்களை நாம் அறியலாம்.

**3. காலனித்துவகாலம்**

வாணிபத்தில் பல களங்களை கண்ட துறைமுகங்கள் காலனித்துவவாதிகளிடம் சிறைப்படுகின்றது. பொருள் வியாபாரமாக வந்த வணிகர்கள் கொள்ளைக்காரர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் மாறி மக்களை அடிமைகளாக்குகின்ற பெரும் வரலாற்று மாற்றத்தினை இக்காலம் ஏற்படுத்துகின்றது. பல சூழ்ச்சிகளும், துரோகங்களும் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டு தமக்குரிய வியாபார தளங்களாக மாற்றுகின்ற நடைமுறைகள் மன்னர்களுக்கும் மக்களுக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து நாட்டை சூறையாடிய காலமாகவே காணப்படுகின்றது. அராபியர், போத்துக்கீஸர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என தொடர்ச்சியான அந்நியராட்சியும் போரும் நிறைந்த காலம் மக்களின் உயர்வினை தடைபோட்டது. பெருவணிகம் முற்றாக அந்நியர் கைகளில் சென்றது. உள்ளூர் வரிகளை அந்நியர்கள் பெற்றுக்கொண்டார்கள். தங்களுக்கு சார்பான கட்டிடங்களையும் வீதிகளையும் அமைத்தார்கள். ஒட்டு மொத்தமாக அந்நியர்களுக்காக மக்கள் தமது இரத்தங்களை காணிக்கையாக்கினார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்று பொருளாதாரம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்னரே பெருவணிகர்கள் உருவாகினர். அதன் பின்னரே மக்களிடம் சுயவளர்ச்சி காணப்பட்டது. மீண்டும் தமது தேசங்களை கட்டியெழுப்ப முற்படுகின்றனர். அக்காலத்தில் உருவானவையே இன்று நாம் காண்கின்ற பெரும் தனவந்தர் வீடுகள், செட்டிநாடு, காரைக்குடி, மலேசியா, கேரளா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தாக்கத்துடன் கூடிய வீட்டுமனைகள் உருவாகின்றன. அதன் வளர்ச்சியும் தொடரவில்லை. மீண்டும் 1988 - 1990களில் ஊர்காவற்றுறை உருக்குலைகின்றது. மீண்டும் உள்நாட்டு யுத்தம் சிறந்த கலைப்பொக்கிசங்களை எமக்கு தரவில்லை. அதன் தொடர்ச்சி இன்றுவரையும் மீளமுடியாத போதும் இன்றும் சில இடங்களில் தனவந்தர்கள் தமது வீடுகளை நவீனமுறையில் அமைத்து வருகின்றனர். ஊர்காவற்றுறை, அனலதீவு, தம்பாட்டி, மெலிஞ்சு முனை போன்ற இடங்களில் நவீனவசதியுடனான வீடுகள் காணப்படுகின்றது. ஊர்காவற்றுறை சார்ந்த வீட்டுமனைக் கட்டுமானங்களை நோக்கும் போது இருவகையான வீட்டுமனைகள் இங்கு காணப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்வீடுகள்
2. மண்வீடுகள்

**கல்வீடுகள்**

இன்றளவில் காணப்படுகின்ற கல்வீடுகள் பல சேதங்களின் மத்தியிலும் உடைக்க முடியாத கோட்டை சுவர்களை போன்ற பிரமாண்டமான கட்டிடங்களாக காணப்படுகின்றது. இன்றைய அளவில் கட்டிட நுட்பத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் ஊர்காவற்றுறைசார் கட்டிட அமைப்புக்களில் சுதேச முறையிலான கட்டிடம் அமைக்கும் பண்பு அவர்களிடம் காணப்படடிருக்கின்றது. சீமெந்து பிறப்பதற்கு முன்பாகவே இவர்களிடம் பாரம்பரியமான ஓர் கட்டிட பொறிமுறை நுட்பம் காணப்பட்டிருக்கின்றது. சாந்துக்களையும் கலவைகளையும் தாங்களே உருவாக்கி அவற்றினால் தூண்களையும் கற்சுவர்களையும் கட்டியுள்ளனர். இடத்திற்கேற்ற வளங்களை சரியான ஆய்வுக்கு உட்படுத்தி வீட்டு மனைகளை கற்களால் உருவாக்கியுள்ளனர். மணலை பயன்படுத்தாமல் கட்டிடங்களை கட்டியுள்ளனர். சுண்ணாம்புக் கற்களை எரித்து அவற்றுடன் கற்றாளை சாறு, முட்டை வெள்ளைக்கரு, சக்கரை, வெல்லம் என்பவற்றை பயன்படுத்தி உறுதியான கலவைகளை உருவாக்கி கட்டிடங்களை அமைத்துள்ளனர். ஒரு வீட்டுமனையினை உருவாக்க பல வருடங்கள் தேவைப்பட்டிருந்தது. கட்டிடத்திற்கு தேவையான சுண்ணாம்பை உருவாக்க பலவருடங்கள் சூழைகள் அடுக்கி அவற்றை எரித்து சுண்ணாம்பு உற்பத்தி செய்துள்ளனர். முருகைக்கற்பாறைகளை எடுத்து வந்து அவற்றை கட்டிடங்களுக்கேற்ப கைக் கோடரிகளாலும் வாள்களாலும் அறுத்து கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி அழுத்தமான மேற்பரப்புக்களை உருவாக்கி கட்டிடங்களை அமைத்துள்ளனர். நிலக்கற்கள், படிக்கற்கள், என்பவற்றையும் தூண்களையும் சிறந்தவகையான அத்திவாரக்கற்களையும் தெரிவு செய்து கட்டிடங்களை அமைத்துள்ளனர். கூரைகள் அதிகளவாக மரங்களால் செய்யப்பட்டிருந்தாலும் ஓலைகள் கொண்டே வேயப்பட்டன. ஓடுகள் போடப்பட்ட வீடுகள் அதிகளவாக காணப்பட்டிருக்கவில்லை. பிற்காலத்தில் கூரை அமைப்புக்கள் சீர் செய்யப்பட்டு தகட்டு ஓடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறான வீட்டினை முகாம் வீதியிலுள்ள கதிரேசன் கோவிலின் அருகில் அமையப்பெற்றிருக்கின்ற வைத்தியக்குடி ஒருவரின் வீடு காணப்படுகின்றது. சின்னத்தம்பி அம்பலவாணர் வல்லிபுரம் என்பவரின் வீடானது கால காலமாக அவர்கள் கல்வீடுகளில் வாழ்ந்துவருவதாக கூறுவது ஆய்வுக்குரியதே.



கிளப் பாலசிங்கம் வீடு
(கரம் பொன்)



அன்ரன் வில்லா
(ஊர்காவற்றுறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பட்ட காலப்பகுதிகளில் 1900ற்கு பின்னராக பலவீடுகள் உருவாக்கம் பெறுகின்றது. பழைமையை தாங்கியதாக கேரள மற்றும் தென்னிந்திய சாயலும் உரோமானியர்களின் தூண் அமைப்பையும் செட்டிநாடடின் வடிவமைப்பிலான பெரும் கல்வீடுகள் உருவாக்கம் பெறுகின்றது. அந்தவகையில் இன்று தொல்பொருள் திணைக்களம் பெற்றுள்ள அன்ரனீஸ் வில்லா மற்றும் கிளப் பாலசிங்கம் ஆகியோரின் வீடுகள் காணப்படுகின்றது. இவற்றின் வடிவமைப்பின் தொடர்ச்சி யாழ்ப்பாணத்திலும் காணப்படுகின்றது. அவை சீமெந்து கற்களாலும் இவ்வாறான வடிவமைப்புடன் உருவாக்கப்பட்டு காணப்படுகின்றது, வீட்டுக் கட்டுமானத்தில் பல்பரிமாண அழகியலை உட்படுத்தி வீடுகள் கட்டப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மதத்தை தழுவியவர்கள் அவர்களின் வீடுகளில் கிறிஸ்தவ சின்னங்களை அடையாளப்படுத்தியுள்ளனர். கொடி, இலை அலங்காரங்கள், மரங்களின் வேலைப்பாடுகள், சிலுவைகளோடு கூடிய மர வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இன்றும் மக்களின் பொருளாதாரங்கள் சிதைவடைந்து மீண்டும் புதியதோர் பரிணாமத்தில் அரச வீட்டுத் திட்டங்களாகவும் ஒருசில தனவந்தர்களால் வேலைப்பாடுகளுடன் கூடிய நவீன வீடுகள் அமைக்கப்படுகின்றது.

**மண்வீடுகள்**

பண்டைய காலம் தொட்டு மண்வீடுகளிலே மக்கள் அதிகளவாக வாழ்ந்து வந்தனர். சூழல் காலநிலை என்பனவற்றிற்கு ஏற்ற வகையில் மண்வீடுகளே பொருத்தமானதாக இருந்திருக்கக்கூடும். வறுமை நிலைப்பட்ட மக்கள் மட்டுமன்றி தனவந்தர்களும் மண்ணாலான பல பெரிய வீடுகளை கட்டினார்கள். பல அறைகளைக் கொண்ட வீட்டையும் வரவேற்பாளர்களுக்கான தலைவாசல் எனும் அமைப்பு மற்றும் அடுப்பு, அறைகள் என்பன வீட்டின் அம்சங்களாக காணப்பட்டன. வரவேற்பு அறைகள் மிகவும் சுவாரசியம் நிறைந்த ஏற்பாடுகளுடன் கட்டப்பட்டிருந்திருக்கின்றன. இருக்கைகளுக்கான குந்துகள் அவற்றின் அளவுகளுக்கேற்ப விரிப்புக்கள், மடித்தலையணைகள், தாம்புலத்தட்டுக்கள், பாக்கு உரல், பாக்கு வெட்டி போன்றவையும் வெற்றிலைப்பெட்டிகளும் சுண்ணாம்புக்குடுவையும் காற்று வந்து செல்லக்கூடிய வகையில் ஓலைகளால் அழகுபடுத்தப்பட்ட மூங்கில் கொண்டு அமைக்கப்பட்ட மூடித்திறக்கக்கூடிய தட்டிகள் போன்றன அமைக்கப்பட்டிருந்தன. சில வீடுகள் சுதை முறையிலான தூண்களும் அவற்றின் மீது கூரைகள் ஏற்றப்பட்டும் சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டிருந்திருக்கின்றது. வடிவமைப்பில் பல்பரிமாண அம்சங்களை கொண்ட மண்வாசனை வீசும் வீடுகள் கட்டப்பட்டிருந்திருக்கின்றன. பின்னர் சாதாரண சில கூரைவீடுகளிலும் மக்கள் செருகு ஓடுவேய்ந்திருக்கிறார்கள். காரைவீடும் மங்களூர் ஓடும் வேய்ந்த காலத்தில் தட்டு வீடுகளும் தோன்றியிருக்கின்றன. ஆனால் இங்கு ஒரு தட்டு வீடுகள் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றது. மன்னர் ஆட்சி அதிகாரங்களை ஏற்படுத்தும் போது பல கலை வல்லுநர்களையும் அப்பிரதேசங்களில் குடியமர்த்தி இருக்கின்றமையும் அவர்களின் நாகரீக வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது. எது எவ்வாறாக இருந்தாலும் கோட்டைச் சுவர்களிலும் மண்மேடுகளிலும் ஒழித்து உறங்கும் தடயங்கள் தமிழர்களின் பாரம்பரிய பண்பாடுகளை வெளிக்கொண்டுவர காத்திருக்கின்றது என்பதே உண்மையாகும்.

**உசாத்துணைகள்**


1. "ஈழத்தமிழர் மரபுரிமை அடையாளங்கள்" - பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்.
2. "தீவகம் வளமும் வாழ்வும்" - பேராசிரியர் கா. குகபாலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3. நேர்காணல் - சாட்டி மண்கும்பான் நீர்பம்பி உத்தியோகத்தர்
4. “கோட்டை ஆய்வு அறிக்கை”
5. “சாட்டியில் காணப்படும் சுடுமண் கிணறுகள்” - நேரடி அவதானிப்பு
6. “சாட்டி அல்லைப்பிட்டி ஆய்வு”
7. “மன்னார் கட்டுக்கரைக்குளம், குருவில் ஆய்வு” - பேரா. ப. புஸ்பரட்ணம்
8. “தீவகம் வளமும் வாழ்வும்” - பேரா. கா. குகபாலன்
9. “நேர்காணல்”
10. “சங்குமால் எனும் இடத்தின் பெயர்ப்பயன்பாடு”
11. நேர்காணல்” - வல்லிபுரம் சுகுணநாதன் - (ஓய்வு பெற்ற கப்பல் பொறியிலாளர்)
12. “தீவகம் வளமும் வாழ்வும்” - பேராசிரியர். கா. குகபாலன்
13. போர்த்துக்கீசர் வரைந்த பழைய கோணேசர் ஆலய வரைபடம் (முதலியார் இராசநாயகம் 1926)
14. மக்களிடையிலான வரலாற்றுக் கதைகள்

## அட்டைப்பட விளக்கம்

வரலாற்றின் தொட்டிலாக விளங்கிய ‘காவலூர்’ எனும் ஊர்காவற்றுறையின் கடந்தகால கம்பீரமான வரலாற்றுச் சான்றுகளாக இன்றும் அப்பகுதியில் காணப்படும் தொட்டுணரக்கூடிய மரபுரிமைச் சின்னங்களின் சிதைவுகள் சான்றாக உள்ளன. ஊருண்டி எனும் கிராமத்தினூடாகவே பண்டைய பெருவணிகம் நடந்ததாகவும், கடல் வணிகப் போக்குவரத்திற்காக “திமில்” வகை கப்பல்களைச் செலுத்தும் மாலுமிகள் இங்கு வாழ்ந்ததாகவும், அவர்களின் வணிகம் ஊருண்டியின் வழியாக இடம்பெற்றதாகவும், இவ் வணிக போக்குவரத்தைக் கண்காணிக்கவும், பாதுகாக்கவும் ஊருண்டியை அண்டி ஒரு கோட்டை அமைக்கப்பட்டு அதன் வழியாக இறக்குமதிப் பொருட்களுக்கு சுங்கத் தீர்வைகள் அறவிடப்பட்டு நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாகவும், வடக்கன் மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றின் நோய்கள் ஆராயப்படுவதற்கு ஒதுக்கப்பட்ட இடம் ‘மாட்டுக்காளை’ என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இன்றும் உள்ள ஊருண்டி, சுங்கவீதி, மாட்டுக்காளை என்ற வீதிகளின், இடங்களின் பெயர்கள் இவற்றிற்கான சான்றுகளாகும். இவற்றை இங்கு ஒரு சிற்றரசன் வழிநடத்தினான் என்பது இன்றும் உள்ள ஒரு செவிவழிக் கதையாகும். எமது மறைந்துபோன வரலாற்றின் பக்கங்களைத் தேடும் ஒரு முயற்சியாக இவ்வட்டைப்படம் அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் -19 இன் பின்னரான இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவு- ஒரு நோக்கு




**திரு. V.S. தினேஸ்,**
மோட்டார் வாகனப் போக்குவரத்து உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

இலங்கையின் பொருளாதார பின்னடைவானது கொவிட் 19 பின்னர் தான் ஏற்பட்டதா? அல்லது அதற்கு முன்னரே திட்டமிடப்படாத பின்னவுடைகள் தான் இத்தகைய பாரிய பொருளாதார பின்னடைவுக்கு வித்திட்டதா என்பது பற்றி நோக்கும் போது உண்மையில் முன்னைய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சரியான திட்டமிடல் இல்லாத நெருக்கடி நிலைகள் தான் இன்றுவரை பொருளாதாரத்தில் நீணடதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது ஏற்படுத்த போகின்றது என்பது நோக்க முடிகின்றது.

இதனை இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைகளை கொண்டு ஆராய்ந்து பார்ப்போம் ஆனால் அன்னிய செலாவணியில் 2015-2020 காலப்பகுதியில் முக்கியமான துறையாக கைத்தொழில் துறை 77% மேற்பட்ட பங்களிப்பை வழங்கின்றது. ஆனால் இதில் ஆடை ஏற்றுமதி ஆனது 45% மேற்பட்ட பங்களிப்பினை வழங்குகின்ற வேளை உள்நாட்டில் ஆடை உற்பத்தியில் பாரிய தட்டுப்பாடு காணப்படுகின்றது. 623 அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கட்டுப்பாடுகளானது இறக்குமதி பொருட்களுக்கான பாரியளவு விலை ஏற்றங்களுக்கு காரணமாக அமைந்துள்ளது. அதாவது கடன் கட்டளை கடிதம் (Letter of Credit) மூலம் உள்நாட்டு வங்கியானது உள்நாட்டு இறக்குமதி யாளர்களுக்கு சார்பாக வெளிநாட்டு இறக்குமதி நிறுவனங்களுக்கு 20% மாகவோ அல்லது அதற்கு குறைவாகவோ பணத்தினை செலுத்தி இறக்குமதிகளை பெற்று கொள்ளும் வாய்ப்பு இருந்தது ஆனால் தற்போது முழுபணத்தினையும் 6மாதங்களுக்கு முன்னரே வைப்பிலிட்டு அதன்பின் இறக்குமதிகளை பெற்று கொள்ளமுடியும் என்பது பழங்கள், குடிபானம், ஆடை, இலத்திரனியல் பொருட்களில் விலை ஏற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. மேலும் இலங்கையின் அதிகரித்தகடன் அமையானது பாரிய வீழ்ச்சி நிலைக்கு காரணமாக அமைகின்றது. இது 2007இற்கு பின்னர் இலங்கையின் மந்த நிலைக்கு வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பு பிரதான காரணமாக அமைகின்றது. அதாவது 2019 உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 42.9% பொதுக்கடன் ஆனது 2021இல் 101% ஆக அமைகின்றது. அதாவது April மாதத்திற்கு பின்னர்கடன் அளவானது 3510கோடி டொலர்களாக உள்ளது இதில்

| | |
|---|---|
| வெளிசந்தை | - 47% |
| ஆசிய அபிவிருத்திவங்கி | - 13% |
| சீனா | - 10% |
| உலக வங்கி | - 9% |
| இந்தியா | - 1% |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வெளிநாட்டுகடன் அமைகின்றது. இதில் குறிப்பாக சீனாவின் கடன் பங்கு அதிகமாகவே உள்ளது. சீனாவினால் கடனாக 10% காட்டப்படுகின்ற போதிலும் 40% ஆன கடன்கள் சீனாவில் இருந்து பெறப்பட்டதாக உள்ளது. அதாவது வெளிச்சந்தை என்றதற்குள் சீனாவின் பல நிறுவனங்களின் பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்யமுடியும் என்ற நிபந்தனை அடிப்படையில் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2021இல் வட்டி / சுமை 400 கோடி டொலர்களாக தேவைப்படும் நிலையில் July மாத கையிருப்பானது 280 கோடி டொலர்களாக உள்ளமை அதிகரித்த இலங்கையின் கையறு நிலையை காட்டுகின்றது. அத்தோடு 2021 ஜனவரி மாத தொடக்கத்தில் 175/=, 185/= ரூபாவாக காணப்பட்ட அமெரிக்க டொலரின் பெறுமதி 199 - 205 ரூபாவாக அதிகரித்துள்ளது இது பாரிய பின்னடைவுக்கு வழிகோலியது எனலாம்.

இதனால் இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறையினால் எரிவாயு, அரிசி, சீனி பால்மா, எரிபொருள், இலத்திரனியல் பொருட்கள் ஆகியவை பாரியளவு துறைமுகத்தில் தேங்கியுள்ளது. அத்தோடு அரசின் உணவு பொருட்களுக்கான அவரச நிலை சட்டமானது தேவையற்ற ஒன்றாகவே உள்ளது. உண்மையில் அரசின் செலவுகளை குறைத்து வரி அதிகரித்து ஏற்றுமதி அதிகரிப்பின் மூலம் பொருளாதாரத்தை மீட்க நடவடிக்கை எடுத்திருக்க முடியும் ஆனால் அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் எதுவும் பின்பற்றப்படாமை துரதிஷ்டவசமானதாகவே பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

கடந்தவருடம் (2020) இல் பொருளாதார வளர்ச்சி வீதமானது 2001இற்கு பின்னர் (3.6%) ஆன எதிர்கணிய பொருளாதார வீழ்ச்சியை 2021இல் 4.1% பொருளாதார வளர்ச்சியை இலங்கை அடையமுடியும் எனவும் இப்போது 3ம் காலாண்டின் பிற்பகுதியில் 3.5% குறைவாகவே பதிவாகும் என தெரிவிக்கின்றமை இன்னும் பொருளாதாரம் மீட்சி அடைய வில்லை என்பதை காட்டுகின்றது.

மேலும் பிரதான உல்லாச பயணத்துறையானது பாரிய வீழ்ச்சி ஒன்றை கண்டுள்ளது. அதாவது 2019 இல் 3.68 பில்லியனுக்கு அதிகமான வெளிநாட்டு உல்லாச பயணிகளை வரவழைத்து அதிக அன்னிய செலாவணியை பெற்று கொண்டு இருந்ததுடன் பல பிரபல்ய சஞ்சிகைகளிலும் இலங்கை சுற்றுலாத்துறை மிகவும் பேசு பொருளாக இருந்தது ஆனால் இரண்டு வருடங்களாக வருமான மூலம் இல்லாது இருக்கின்றமையும் ஒரு காரணமாகின்றது.

2019இல் பல வரி சீர்திருத்தங்கள் பாவனைக்கு கொண்டு வந்த போதிலும் அரச வாக்கு வங்கிகளினை பாதுகாக்கும் பொருட்டு பாரி வரி சலுகைகள் கொடுக்கப்பட்ட மையும் கொவிட் 19க்கு முன்னரே இலங்கைக்கான பொருளாதார பின்னடைவுக்கு வழிகோலியது எனலாம்.

1மில்லியன் கெக்டேயருக்கும் அதிகமான அதாவது 70% மான மக்கள் விவசாயத்தை நம்பி வாழுகின்ற விவசாயத்துறையில் அசேதன உரங்கள் மற்றும் இரசாயண கிருமி நாசினிகள் நிறுத்தப்பட்டமை பாரிய விவசாய உற்பத்தி பின்னடைவுகளை ஏற்படுத்தியதுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் தாக்கத்தினை கொண்டுவரலாம்.

1970ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சி காலத்தில் மூடிய பொருளாதாரம் கொண்டு வரப்பட்ட போது குறுகிய காலத்தில் பஞ்சம், பசி, பட்டினி தலை விரித்தாடியது. ஆனால் அதிகளவான விவசாய உள்ளூர் உற்பத்திகள் காலப்போக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்தன ஆனால் பின்னர் மீண்டும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஒரு குழந்தை தவழ முன்னர் எழுந்து நடக்க வெளிகிட்ட மாதிரி இக் கொள்ளை விளைவாக பாரிய இறக்கமதிகளை குறைந்த செலவில் நகரக்கூடிய துர்பாக்கிய நிலை ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக பல உள்ளூர் உற்பத்திகள் கைவிடப்பட்டதுடன் பாரிய முதலீட்டு நடவடிக்கைகளும் கைவிடப்பட்டு வெளிநாட்டு பொருட்களை கருதல் இலாபகரமாக இருப்பதால் இன்றுவரை இப் பிரச்சனை பாரியதாக உடுவெடுத்துள்ளது.

இன்று இலங்கையின் தலாவருமானத்தை விட 1/3 குறைவாக உள்ள பங்களா தேஸிடம் கடன் வாங்கும் அளவுக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. அதாவது வெளிநாட்டு சொத்து 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு கடனால் அதிகரித்துள்ளது. இது உண்மையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் அத்துடன் வங்கி வட்டிவீதம் குறைக்கப்பட்டு அதிக கடன்கள் அதிக வழங்கும் போது உண்மையில் நாட்டு மக்கள் மெய் சொத்துகளில் தான் முதலிடுவார்கள் இதனால் உற்பத்தி அதிகரிப்புக்கு பாரிய பங்கம் ஏற்படுவதால் அரசாங்கம் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் தடை காணப்படும்.


அமெரிக்காவில் நிதி ரீதியாக மந்த நிலை தோன்றியபோது திரவத்தன்மை பாரியளவு பாதிக்கப்பட்டிருந்தது. இதற்கு தீர்வாக அமெரிக்க டொலர்கள் பாரிய அளவில் அச்சிட்டு வெளியிட்டார்கள் இது நவ நாணயவியல் வாதம் ஆகும். இதனை பின்பற்றி அல்லது உதாரணம் காட்டி இலங்கை நாணயம் ஆனது பல மில்லியன்கள் ஒரு இரவுக்குள் அடித்து வெளியிட்டமை யானது நாட்டின் ரூபாவின் முகப் பெறுமதியை குறைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை குறைக்க வழிகோலும் என்பதே உண்மை. அமெரிக்காவிற்கு சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின் போது டொலர் பயன்படுத்தப்படுவதால் உண்மையில் அந்த நாட்டிற்கு அது ஏற்புடையதாக அமைந்தது. ஆனால் இலங்கை அதனை மேற்கோள் காட்டி நாணயத்தை பல தடவை வெளியிட்டமையானது பாரியதொரு பின்னடைவுக்கே வழிகோலி உள்ளது.

உண்மையில் இலங்கையில் வெளிநாட்டில் இருந்து உறவுகளுக்கும் அனுப்பும் பணமானது சராசரியாக 7-8 பில்லியன் அமெரிக்க டொலராக வருடம் ஒன்றிற்கு அண்ணளவாக காணப்படுகிறது. அதனால் கொவிட் 19 பின்னர் அதுவும் பாரிய விழ்ச்சி கண்டுள்ளது எனலாம். அத்தோடு ஆடை ஏற்றுமதி அந்நிய செலாவணியானதும் 3-4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவே காணப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இலங்கையில் பன்நெடுங் காலமாக காணப்படுகின்ற இன முரண்பாட்டு ரீதியான, மனநிலையும் வாக்கு வங்கியினை நிரப்புகின்ற அரசியல் சுயலாப ஆதாயமும் நீண்ட காலப்போக்கில் இலங்கையின் மீள் எழுச்சி நிலைக்கு பாரிய அளவில் வித்திடாது என்பது குறிப்பிடத்தக்கது. 1987 காலப்பகுதியில் இலங்கை போன்று உருவாக வேண்டும் என்ற சிங்கப்பூர் இன்று லிகுவான்யூ என்ற தனிமனிதரதும் அவரது ஊழலற்ற தலைமைத்துவமும் வெறும் சதுப்பு நிலம், தண்ணீர் இல்லை, விபச்சாரம் பிரதான தொழில் இவை அனைத்தும் அடியோடு மாற்றப்பட்டு உலகத்தில் பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ளது. சிங்கப்பூரில் இன்றுவரை 30 வருடகாலமாக பிரதமராக இருந்த இந்த சிற்பியினது அல்லது வேறு அரச தலைவர்களது உருவ இலைகளோ படங்களோ எங்கும் இல்லை. இவ்வாறான முன்னுதாரணங்களை இன்றுவரை இலங்கை பின்பற்றுவதில் தவறியுள்ளமை எதிர்கால நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கும் கேள்வி குறியாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுண்நிதிக்கடன் திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

திரு. ஏ. ஜெயரூபன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

நுண்நிதி கடன் சேவை என்பது குறைந்த வருமானமுடைய மேலதிக வருமானம் ஈட்டக்கூடிய மக்களை அடையாளப்படுத்தி தொழில்துறைகளை மேம்படுத்துவதாகும். அரசாங்கத்தினது அனைத்து நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனங்களின் பிரதான நோக்கமும் அதுவாகும். உதாரணமாக பங்களாதேஷ் நாட்டில் நுண்நிதி கடன் திட்டம் சாதகமான பாரிய சமூக பொருளாதார மாற்றத்தினை குறைந்த வருமானம் உடைய மக்களிடையே ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. மொகமட் யுனஸ் (Mohamad yunus) என்பவரால் பங்களாதேஷில் வெற்றிகரமாக இவ் நுண்நிதி கடன்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அவர் உலகின் உயரிய விருதான நோபல் பரிசினையும் 2006ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். ஏனெனில் உலக மக்கள் வியக்கத்தக்க வகையில் இவ் நுண்நிதி கடன்திட்டம் வெற்றியளித்திருந்தது.

பங்களாதேஷில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெருமளவான மக்கள் தங்களுடைய வாழ்வாதாரமாக ரிக்சா வண்டி ஓட்டுவதனையே செய்து வந்தனர். அவ் அடித்தட்டு மக்களுக்கு முதலாளித்துவ மக்கள் வாடகை அடிப்படையில் வண்டிகளை வழங்கி பெரும் லாபத்தினை ஈட்டி வந்தார்கள். இவ்வாறான நிலைமைகளை நன்கறிந்த மொகமட் யுனஸ் தன்னுடைய நுண்நிதி கடன் திட்டத்தில் இவ் மக்கள் சொந்தமாக ரிக்சா வண்டிகளை கொள்வனவு செய்து தவணை அடிப்படையில் கடனை மீள செலுத்திய பின்னர் அவற்றை அவர்களது உடைமைகளாக மாற்றினார். தாம் உழைத்த இலாபத்தினை தாமே அனுபவிப்பதற்கும் தங்களுடைய பொருளாதாரத்தினை மேம்படுத்துவத்கும் இவ் நுண்நிதி கடன்திட்டம் வழிகோலியது.

மேற்குறிப்பிட்டது போன்று சுவாரசியமான வெற்றிக் கதைகள் காணப்பட்டாலும், நுண்நிதி கடன் வழங்குபவர் மற்றும் கடன் பெறுபவரின் நோக்கம் பொருத்தமற்றதாகின்ற போது இத் திட்டம் தோல்வியடைந்து விடும். இருந்த போதிலும் இதில் அதிகமான பாதிப்புக்களை சவால்களையும் எதிர் கொள்பவர்கள் குறைந்த வருமானம் உடைய அடித்தட்டு மக்கள் என்பதே உண்மை.

குறிப்பாக எமது நாட்டில் இவ்வாறான ஒரு நிலைமையினை மக்கள் எதிர் நோக்கியுள்ளனர் என்பதனை மத்திய வங்கியின் அண்மைக்கால அறிக்கைகளின் மூலம் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. அத்தோடு மக்களை அவற்றிலிருந்து விடுவிக்கும் முகமாக அரசாங்கம் சில சலுகைகளை அண்மைக்காலங்களாக வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு நுண்நிதிக்கடன் திட்டத்தில் காணப்படும் சில நுணுக்கங்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதே இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் பெறுநரின் மற்றும் கடன் கொடுனரின் நோக்கம் பொருத்தமற்றதாக அல்லது உண்மைக்கு புறம்பானதாக காணப்படல். உதாரணமாக குறிப்பிட்ட ஒருதொழில் முயற்சிக்காக (மாடு வளர்த்தல், பலசரக்கு கடை, கோழிப்பண்ணை, மீன்பிடி, விவசாயம், பெற்றுக் கொள்ளப்படும். கடன் அத் தேவைக்கன்றி வேறு தேவைக்காக பயன்படுத்தல் என்பது முதல் தோல்வியாகும். இன்னும் அதிகமாக கடனை பெற்று மற்றுமொரு கடனை அடைத்தல், அன்றாட செலவிற்காக பயன்படுத்தல், வேறு சொத்துக்களை கொள்வனவு செய்தல் போன்றன நுண்நிதி கடன்திட்டத்தின நோக்கம் நிறைவேறாமல் போவதற்கு முக்கிய காரணமாக காணப்படுகின்றது.

கடன் வழங்குநர்கள் அதிக இலாபமீட்டும் எண்ணத்துடன் பொருத்தமற்ற வாடிக்கை யாளர்களினை தெரிவு செய்தல். உதாரணமாக குறிப்பிட்ட தொழில்துறையை பெயரளவில் மேற்கொள்கின்ற, சட்டபூர்வமற்ற தொழில் செய்கின்றவர்களை அடையாளப்படுத்தி கடன்களை வழங்குவதுடன் வருமானத்திற்கு மிஞ்சிய கடன் சுமை காணப்படும் மக்களையும் இவ் கடன் திட்டத்திற்குள் உள்வாங்குதல் பாரிய பின்னடைவினை ஏற்படுத்துகின்றது.

மக்களிடையே வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகும். பின்வருமாறு கடன் வழங்கும் நிறுவனங்களை வகைப்படுத்தலாம்.

**வங்கிகள்**
- ❖ இலங்கை வங்கி
- ❖ மக்கள் வங்கி
- ❖ கொமர்ஷல் வங்கி
- ❖ சம்பத் வங்கி
- ❖ யூனியன் வங்கி
- ❖ ஷற்றன் நஷனல் வங்கி
- ❖ பிராந்திய அபிவிருத்தி வங்கி
- ❖ தேசிய சேமிப்பு வங்கி

**நிதி நிறுவனங்கள்**
- ❖ லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி
- ❖ றேட் பைனன்ஸ்
- ❖ கொமர்ஷல் கிறெடிட்
- ❖ ஆர்டிகோ
- ❖ சிங்கர் பைனன்ஸ்
- ❖ பெரண்டினா மைக்குறோ பினான்ஸ்
- ❖ பிம்புதீ பைனான்ஸ்
- ❖ லக்ஷயா பினான்ஸ்
- ❖ அலையன்ஸ் பைனான்ஸ் கம்பனி

இவற்றோடு சில சமூக அமைப்புக்கள் கூட கடன் வழங்குகின்றன. உதாரணமாக
- ❖ மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம்
- ❖ துணை மாதர் அபிவிருத்தி சங்கம்

மேற்குறிப்பிட்ட அனைத்து நிறுவனங்களுமே இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டு தமது நிதி நடவடிக்கைகளை மேற் கொள்கின்றன. அதாவது மத்திய வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் உட்பட்டு மக்களுக்கு நிதி நடவடிக்கைகளை மேற் கொள்ளும் நிறுவனங் களாகும். நிறுவனங்கள் கடன்களை மக்களுக்கு வழங்கினாலும் இவற்றுக்குள்ளே கடன் வழங்கல்கள் தொடர்பான வேற்றுமைகள் காணப்படுகின்றன.

- ❖ வட்டி வீதம்
- ❖ கடன் தொகை
- ❖ மீள் செலுத்த கூடிய மதிப்பீட்டு முறைகள்
- ❖ வட்டி கணிப்பிடும் முறை
- ❖ மீள் செலுத்துகை காலம்

என்பன வேற்றுமைக்கான காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலையான வட்டி கணிப்பீடு**

குறித்த கடன் தொகையில் கணிப்பிடப்பட்ட வட்டியானது மாற்றம் அடையாது நிலையான தொகையினை வட்டி செலுத்துவதைக் குறிக்கும். அதாவது மாதாந்தம் செலுத்தும் கடன் தவணை பணமும் வட்டித் தொகையும் மாற்றம் இன்றி ஒரே தொகையினை செலுத்துவதாகும். கடனைப் பெற்றுக் கொள்ளும் போதே முழு வட்டித் தொகை கணிப்பிடப்பட்டு மாத அடிப்படையில் அறவிடப்படும்.

உதாரணம் : விமலன் என்பவர் குறித்த நுண்நிதி நிறுவனமிடம் 20% வருடாந்த நிலையான வட்டி வீதத்திற்கு, வருட காலத்துக்கு ரூபா 30 000/= இனை பெற்றிருப்பாராயின் அவர் செலுத்தும் தவணைப் பணமாக வட்டி மற்றும் கடன் தவணைப் பணம் பின்வருமாறு காணப்படும்.

கடன் தொகை × வருடவட்டி வீதம் × காலம்

$$30\,000 \times \frac{20}{100} \times 1$$

6000/= முழுமையான வட்டியாக காணப்படும்

செலுத்த வேண்டிய மொத்த தொகை 30 000 + 6000
= 36000

ஒரு தவணைப் பணமாக செலுத்த வேண்டிய தொகை $= \frac{36000}{12}$
= 3000 /=

இங்கு ஒரு வருட காலத்திற்கு 6000/= வட்டியாகவும் 2 வருடத்திற்கான கடன் திட்டமாயின் (6000 × 2) 12000/= ஆகவும் 3 வருட கடன் திட்டமாயின் (6000 × 3) 18000/= ஆகவும் காணப்படும்.

மேலும் இக் கணிப்பீட்டின் படி 6000/= (ஒரு வருடத்திற்கான வட்டி) எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றம் அடையாது தவணைப் பணத்தினை செலுத்தி முடிக்கும் வரைக்கும் மாதாந்த வட்டியாக 6000/12= 500/= இனை மாதாந்தம் செலுத்தி முடித்தல் வேண்டும்.

இதனை மேலும் பின்வருமாறு இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும்.

| தவணைகள் / மாதம் | 3000/12 கடன் தவணை | 6000/12 மாத வட்டி | மொத்த தவணைப் பணம் |
|---|---|---|---|
| 1ம் தவணை | 2500 | 500 | 3000 |
| 2ம் தவணை | 2500 | 500 | 3000 |
| 3ம் தவணை | 2500 | 500 | 3000 |
| 12ம் தவணை | 2500 | 500 | 3000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறைந்து செல்லும் மீதி மீதான வட்டி கணிப்பிடும் முறை**

இக் கணிப்பீட்டு முறையில் வட்டியானது குறைந்து செல்லும் அதாவது மாதாந்தம் கடன் தவணைப் பணத்தினை செலுத்தி செல்லும் போது மீதமாக காணப்படும் கடன் தொகைக்கே வட்டி கணிப்பிடும் முறை இதுவாகும். இவ் முறையினை வட்டி கணிப்பீடானது வாடிக்கையாளர்களுக்கு அனுகூலமான கணிப்பீட்டு முறையாகும்.

உதாரணமாக விமல் என்பவர் குறித்த வங்கியிடமோ, அல்லது நிறுவனத்திடமோ 20% வருடாந்த குறைந்து செல்லும் வீதி முறையில் 1 வருட காலத்திற்க்கு ரூபா 30,000யினை பெற்றிருப்பார். ஆயின் மாதாந்த வட்டி மற்றும் தவணைப்பணம் பின்வருமாறு அமையும்.

| தவணை/ மாதம் | 30 000/ 12 கடன் தவணை | வட்டி தவணை | செலுத்த வேண்டிய தவணைப் பணம் |
|---|---|---|---|
| 1ம் தவணை (30000) | 2500 | 500 | 3000 |
| 2ம் தவணை (27500) | 2500 | 458.333 | 2958.33 |
| 3ம் தவணை (25000) | 2500 | 416.66 | 2916.66 |
| 4ம் தவணை (22500) | 2500 | 375 | 2875 |
| 5ம் தவணை (20000) | 2500 | 333.33 | 2833.33 |
| 6ம் தவணை (17500) | 2500 | 291.66 | 2791.166 |
| 7ம் தவணை (15000) | 2500 | 250 | 2750 |
| 8ம் தவணை (12500) | 2500 | 208.33 | 2708.33 |
| 9ம் தவணை (10000) | 2500 | 166.66 | 2666.66 |
| 10ம் தவணை (7500) | 2500 | 125 | 2625 |
| 11ம் தவணை (5000) | 2500 | 83.33 | 2583.33 |
| 12ம் தவணை (2500) | 2500 | 41.66 | 2541.66 |
| | 30000 | 3249.99 | 33,249.99 |

சமன்பாட்டினூடாக குறைந்து செல்லும் மீதி மீதான வட்டிக்கணப்பீடு

01. மாதங்களின் $= \frac{\text{காலம் (மாதங்களில்)}}{2} + (1+12)$

$\frac{12}{2} \times 13$

$6 \times 13 = 78$ மாதங்கள்

02. வட்டி வீதம் × ஒரு தவணைப் பணம் × $\frac{1}{12}$

$\frac{20}{100} \times \frac{30\,000}{12} \times \frac{1}{12}$

$= 41.666$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த வட்டி = 41.66 × 78
= 3249.99

மொத்த கடன் செலுத்துகை = 3249.99 + 30000
= 33, 249.99

ஆகவே செலுத்தப்படும் வட்டியின் அடிப்படையில் குறைந்து செல்லும் மீதி மீதான வட்டி கணிப்பீடானது (3249.99) வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையாகவும் நிலையான வட்டி கணிப்பீடானது (6000) பாதகமானதாக அமைகின்றது. மக்கள் மத்தியில் 20% வருடத்திற்கு வட்டி வீதம் என்னும் மேலோட்டமான விளக்கத்தினை விளங்கிக் கொள்வதனால் பெருந்தொகையான கடன் தொகைகளில் அதிகளவிலான வட்டிகளை செலுத்தி மீளமுடியாத சுமையினை அனுபவித்து வருகின்றனர் என்பதே உண்மை. நிலையான வழக்கு கடன் பெறும் ஒரு நபர் அந்த வட்டி வீதத்திற்கான பயனுள்ள வட்டி வீதத்தினை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமே.

$$\text{சராசரி கடன் தொகை} = \frac{\text{மொத்தக் கடன் தொகை} + \text{ஒரு தவணை கடன்}}{2}$$

$$\frac{30000 + 2500}{2} = \frac{32500}{2} = 16250$$

20% வருடத்திற்கான நிலையான வட்டி வீதமாக இருந்தாலும் அதனுடைய பயனுள்ள வட்டி வீதம் பின்வருமாறு காணப்படும்

$$\frac{\text{நிலையான மொத்த வட்டி}}{\text{சராசரி கடன் தொகை}} \times 100 \qquad \frac{6000}{16250} \times 100$$

$$= 36.92\ \%$$

இதனுடைய விளக்கமாக குறைந்து செல்லும் மீதி முறையில் கடன் பெறப்படுமாயின் 36.92 %ற்க்கு என்ற வட்டி வீதத்தில் பெறப்பட்டாது 6000/= வட்டியாக செலுத்தப்படும்

| | கடன் தொகை | காலம் | வட்டி வீதம் | வட்டி |
|---|---|---|---|---|
| நிலையான வட்டி வீதப்படி | 30, 000 | 12 | 20% | 6000 |
| குறைந்து செல்லும் மீதப்படி | 30, 000 | 12 | 20% | 3249.99 |

அனேகமான நிதி நிறுவனங்கள் வெவ்வேறுபட்ட வட்டி வீதங்களில் மக்களிடம் இருந்து வட்டியினை அறவிட்டுக் கொள்கின்றன. உதாரணமாக 12.5 வீதம் தொடக்கம் 36 வீதம் வரைக்கும் நிலையான வட்டிக்கு நுண்நிதி கடன்களை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

அத்துடன் மேலதிகமான அறவீடுகளால் (ஆவணங்களுக்கான கட்டணம், முத்திரைக் கட்டணம், சேமிப்பு அறவீடுகள், சேவைக் கட்டணம்) கடனை மீள் செலுத்த முடியாத நிலையினை ஏற்படுத்தி வருகின்றது. உதாரணமாக ஆவணங்களுக்கான கட்டணங்களை ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு தொகைகளை மக்களிடம் அறவிட்டுக் கொள்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒரு சிறிய தொகை கடன் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நபர் அன்றைய நாள் பிரயாணச் செலவுகள், ஏனைய செலவுகள் மற்றும் அமையச் செலவுகள் என்பவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது (வட்டி, நிறுவன அறவீடுகள், வாடிக்கையாளர் செப்புகள்) அக்கடனின் நன்மை அற்று பெயரளவில் கடன் பெறும் நடவடிக்கைகளாக மாற்றம் பெற்றுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் நுண்நிதி கடன் திட்டமானது எதிர்மறையான போக்கினை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவன ஊழியர்கள் கடன் தவணைப்பணத்தினை அறவிட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மக்களுடன் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்துவதுடன் அனேகமான மக்கள் உள ரீதியான பாதிப்புக்களையும் சமூகத்தில் கௌரவ குறைவுகளையும் முகங்கொடுக்க நேரிடுகின்றது. அத்துடன் அண்மைக்காலங்களில் அதிகளவான தற்கொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதுவும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக மாலை 5.30 மணிக்கு பிற்பட்ட நேரங்களில் தவணைப் பணத்தினை மக்களிடம் சென்று அறவிட எந்த ஒரு நிறுவனத்திற்கும் அனுமதி வழங்கப்பட் டிருக்கவில்லை ஆகவே குறைந்த வருமானம் பெற்று வரும் மக்களின் தொழில் துறைகள் மேம்படுத்துவதற்கான சிறந்த நுண்நிதி கடன் திட்டமானது அனைத்து தரப்பினர்களின் நோக்கங்களுக்கு அப்பாற் சென்றதே இலங்கையில் நுண்நிதி கடன் திட்டம் தோல்வி அடைந்ததற்கான முக்கிய காரணமாகும்.



காலம் முழுவதும்
உன்னை வயிற்றிலும்
மடியிலும்
தோளிலும்
மார்பிலும்
சுமப்பவள்
தாய் மட்டுமே!
அவளை என்றும்
மனதில் சுமப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையும் ஐரோப்பிய காலனித்துவ எச்சங்களும்

திருமதி காசிநாதன் நிருபா M.A,
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

ஈழ தேச வரலாற்றினை நோக்கும் போது பண்டைக்காலம் தொட்டே பல்வேறுபட்ட அந்நியர்களின் தாக்கங்களுக்கு (செல்வாக்கிற்கு) உட்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஈழத்தின் வட பிரதேசங்களை அவதானிக்கும் போது தென்னிந்தியத் தாக்கங்களுக்கு உட்பட்டதாகவும் சமய சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்களில் தென்னிந்தியத் தாக்கங்களையே பெரும்பாலும் கொண்டிருப்பதனையும் காண முடிகின்றது. இதற்கு அடிக்கடி ஈழத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய, பாண்டிய மற்றும் சோழ மன்னர்களது படையெடுப்புக்களும் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவில் இருந்து பல்வேறுபட்ட காரணங்களால் ஈழத்தின் வட பகுதியில் ஏற்பட்ட குடியேற்றங்களும், இவர்கள் விசேடமாக மொழியாலும் (தமிழ்), இனத்தாலும் (திராவிட), ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையும் காரணிகளாக அமைகின்றன. இதுவே தென்னிந்திய தாக்கங்கள் ஆதிக்கம் செலுத்தவும் வலுவான காரணிகளாக அமைந்த போதும் 16ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எதிர்பாராத விதமாக (விபத்து போன்று) ஈழத்தின் தென் கரையோரம் ஒதுங்கிய மேற்கு ஐரோப்பியரான போர்த்துக்கேயரது வருகையும் அதன் பின்னரான அவர்களது வர்த்தக நடவடிக்கைகளில் ஆரம்பித்து படிப்படியாக ஈழத்தின் (தென்பகுதி) அரச நிர்வாகத்தைத் தீர்மானிக்கும் தவிர்க்க முடியாத சக்தியாக அவர்கள் வளர்ச்சியடைந்த மையையும் அதன் பின்னராக அடுத்தடுத்து வந்த ஒல்லாந்த (டச்சு) மற்றும் ஆங்கிலேயரது (பிரிட்டிஷ்) ஆட்சிக்குள் ஈழமானது வீழ்ந்தமையும் அதன் பயனாக ஐரோப்பியரது அரசியல் பொருளாதார சமூக சமய கலாசார பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கி மாற்றத்திற்குள்ளாகி ஈழமானது வளர்ச்சியடைந் திருப்பதனையும் மறுப்பதற்கில்லை.

இதே போன்றே இன்றைய ஈழத்தின் வடபகுதியிலும் தனித் தமிழரசு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் யாழ் குடாநாட்டிலும் அதன் கரையோரங்களிலும், குடாநாட்டினை அண்மித்த தீவுக் கூட்டங்களிலும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் பிரதேசங்கள் உள்ளடங்கலாகவும் இவ் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களது வருகையும் அவர்களது ஆட்சியதிகாரமும், நிலைபெற, தென்னிலங்கையிலும் பார்க்க சில தசாப்தங்கள் கழிந்திருப்பினும் நாடு விடுதலை (சுதந்திரம்) பெறும் வரையிலும் அவர்களது ஆட்சி நிர்வாகத்தின் காரணமாக இங்கும் அதாவது ஈழத்தின் வடபகுதியிலும் ஐரோப்பிய காலனித்து வத்தின் அரசியல், பொருளாதார, சமய சமூக கலாசார பண்பாட்டுக் கூறுகள் கலந்து மாற்றம் பெற்று ஈழத் தமிழர்களிடையேயும் தாக்கங்களைச் செலுத்தியது எனலாம். இந் நிலையில் 1948ம் ஆண்டு அவர்கள் ஈழத்தைவிட்டு சென்றுவிட்டாலும் அவர்களது அதாவது ஐரோப்பிய காலனிய வாதிகளின் வரலாற்று எச்சங்கள் பல ஈழத்தில் காணப்படினும் ஊர்காவற்றுறையில் இன்று சிதைந்தும், சிதையாமலும் காணப்படும் கோட்டைகள் பற்றிய வரலாற்றை ஆராய்வதும் அவற்றை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதுடன் எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினரிடம் கையளிப்பது பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதுமே இப்பத்தியின் பிரதான எண்ணக் கருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டைகள் பற்றி:

ஐரோப்பிய காலனித்துவத்தின் வரலாற்று மீதிகளாக ஈழத்தின் பல பாகங்களிலும் அவர்களது ஆலயங்கள், கோட்டைகள், கட்டிடங்கள் போன்ற பல்வேறுபட்ட தடயங்கள் சான்றுகளாகக் காணப்படினும் கோட்டைகள் மட்டுமே எவ்வித மாறுபாடுகட்கும் உட்படாது சிதையாமலும் மற்றும் சிதைவடைந்த நிலையிலும் இன்றும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் கோட்டைகள் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயக் கோட்டைகளாகக் காணப்படுவதுடன். அவை அவர்களது தனித்துவத்தைப் பறைசாற்றும் காலனித்துவ எச்சங்களாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை கடல் முகப்புத் தளங்களிலும் கரையோரங்களிலும் தீவுகளிலுமே காணப்படுகின்றன. ஐரோப்பியரது வருகைக்கு முன்னரான சுதேச மன்னர்களது ஒரு சில கோட்டைகள் இங்கு காணப்பட்டிருப்பினும் அவையும் மிகவும் சிதைந்த நிலையிலே காணப்படுவதுடன் சில இருந்த அடையாளங்கள் இன்றியே போய்விட்டன. இந்நிலையில் ஈழத்தமிழ் அரசனாகவும், கிறிஸ்த்துவின் சம காலத்தவனாகவும் அறியப்படும் வெடியரசன் குடாநாட்டின் அனைத்துத் தீவுகளிலும் (கச்சதீவு உட்பட தீவகத்தின் சின்னஞ்சிறிய தீவுகளிலும், இன்று கடற்கோட்டை அமைந்திருக்கும் கற்பாறையிலும்) களபூமி ஊருண்டி போன்ற இடங்களிலும் காவற் கோபுரங்களையும் காவலரண்களையும், கோட்டைகளையும் அமைத்திருந்தான் எனவும் அவற்றில் ஊருண்டிக் கோட்டை அமைந்திருக்கும் பகுதியும் ஹமன்கீல் கோட்டை அமைந்த பகுதியும் களபூமிக் கோட்டை இருந்த பகுதிகளும் உள்ளடங்குவதாக வெடியரசன் பற்றிய வரலாறுகள் கூறுகின்றன.

## ஐரோப்பிய காலனித்துவ எச்சங்களாக ஊர்காவற்றுறைக் கோட்டைகள் :

ஊர்காவற்றுறையில் இன்று பெரும்பாலும் மக்களைக் கவர்ந்திழுப்பதும் பேசு பொருளாகக் காணப்படுவதும் சுற்றுலாப்பயணிகளின் இலக்காக இருப்பதுமான ஐரோப்பிய காலனித்துவ எச்சங்களாகக் காணப்படுகின்றவை ஊருண்டிக் கோட்டையும், ஹமன்கீல் என அழைக்கப்படுகின்ற கடற்கோட்டையுமாகும். இக்கோட்டைகள் அமைவதற்கு இவை அமைந்திருக்கின்ற கேந்திர முக்கியத்துவமிக்க இடமாகிய ஊர்காவற்றுறை எனும் பிரதேசத்தின் துறைமுகப் பகுதியே மிக முக்கிய காரணியாக அமைந்திருப்பதனைக் குறிப்பிடலாம்.

## துறைமுக வரலாற்றில் ஊர்காவற்றுறை:

இந்திய துணைக்கண்டத்திற்கு அண்மையில் கடலின் முனைப்பாக நீண்டு கிடக்கும் வட பகுதியின் அமைவிடமும் குடாநாடு கொண்டிருக்கும் புவியியல் கேந்திர முக்கியத்துவ நிலைகளும் இருபெரும் பருவக்காற்றுக்களான அதாவது வடகீழ் மற்றும் தென்மேல் பருவக்காற்றுக் காலங்களிலும் கச்சான், கொண்டல் போன்ற ஏனைய காற்றுக் காலங்களிலும் பாய்மரப் படகுகள், தோணிகள், கப்பல்கள் என்பவற்றை மிகவும் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக் கூடியதான இயற்கைத் துறைமுகமாகவும், இவற்றை எதிரிகளது பார்வையில் இருந்து மறைவாக பாதுகாக்கும் அரணாகவும், அதேவேளை எதிரிகளை கண்காணிக்க கூடிய பிரதேசமாகவும் காணப்படுவதுடன் ஊர்காவற்றுறைக்கும் காரைதீவுக்கும் இடையேயான மிக ஒடுங்கிய ஆழமான கடற்பரப்பு காணப்படுகின்றமையால் பல்வேறுபட்ட நாடுகளிலிருந்து பொருட்களை ஏற்றவும் இறக்கவும் கூடிய கப்பல்கள் உள்வரக்கூடிய துறையாகவும் காணப்பட்டமையுமே கி.மு. 6ம் நூற்றாண்டின் முன்பே இத்துறைமுகம் உலகில் பிரசித்தி பெற்றிருந்தமைக்கான காரணிகளாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்த்துக்கேயரும் ஊர்காவற்றுறையும் :**

யாழ்ப்பாண நிர்வாக மையத்தின் பாதுகாப்பு அரணாகவும், காவல் மையமாகவும் சுங்கவரி போன்றவற்றை வசூலித்து வருமானம் ஈட்டவும், ஊர்காவற்றுறையிலும் நிர்வாக மையங்களை அமைக்கவும், வெளியிலிருந்து வரும் எதிரிப்படைகளையும் அவர்களின் கப்பல் படைகளின் நடமாட்டங்களையும் கண்காணிக்கவும் சிறந்த இடமாவிருப்பதனை அனுபவ ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் தெரிந்து கொண்டமையாலேயே அவர்கள் ஊர்காவற்றுறையில் கோட்டைகளை அமைத்தனர் எனலாம். Caes (கெய்ஸ்) என்றால் போர்த்துக்கேய மொழயில் துறைமுகம் எனப் பொருள்படும் என்றும், அதனாலேயே அவர்கள் ஊர்காவற்றுறையை கெய்ஸ் என அழைத்ததாகவும் பின்னர் வந்த ஒல்லாந்தர் கெய்ஸ் என்பதனை தமது உச்சரிப்பிற்கேற்ப கைற்ஸ் எனவும் Kayts (கைற்ஸ்) அழைத்தனர் என்றும் கூறப்படும் அதேவேளை கைற்ஸ் என்பது ஒல்லாந்தரது கரையோர நகரம் என்றும் அதனால் தங்களது கரையோரப்பட்டண நினைவாகவே கைற்ஸ் என அழைத்ததாகவும் கூறப்படுகின்றது ஆனால் வேறு சிலர் Cais (கைஸ்) என்றால் போர்த்துக்கேய மொழியில் யானை என்று பொருள்படும் என்றும் யானைகள் ஏற்றும் துறைமுகம் எனவே கைஸ் என போர்த்துக்கேயர் அழைத்தனர் என்றும் அதுவே ஒல்லாந்தர் காலத்தில் மருவி கைற்ஸ் என அழைக்கப்பட்டது என்றும் ஆங்கிலேயரும்அதனையொட்டி கைற்ஸ் என்று அழைத்ததாகவும் அதுவே இன்றுவரை கைற்ஸ் அழைக்கப்படுகின்றது என்கின்றனர். இவற்றின் உண்மைத்தன்மை எதுவென அறியமுடியவில்லை. போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்த மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் மூலமே இதன் உண்மைத் தன்மை வெளிக்கொணரமுடியும் எனலாம்.

ஊருண்டிக்கோட்டை அமைந்திருக்கும் ஊருண்டி என்று இன்று அழைக்கப்படும் இடம் ஆதிக்குடியேற்றம் அதாவது தொன்மையான மக்கள் குடியிருந்த பகுதி எனவும் நன்னீர் நிறைந்த பகுதி எனவும் செம்மண் கலந்த வளமான பூமி எனவும் தொல்லியல் அறிஞரான பேராசிரியர் பொ. இரகுபதி அவர்கள் ஆய்வின் மூலம் குறிப்பிடுகின்றார். ஊருணி என்பது ஊரினுள்ளே உள்ள நன்னீர் மிகுந்து காணப்படும் இடமாகும். எனவே ஊருணிப் பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழ்வது இயல்பே. இது குறித்த ஊருணிப் பிரதேசத்தில் அமைந்த கோட்டையானது ஊருணிக்கோட்டை என்பதே பின்னர் ஊருண்டிக் கோட்டையாயிற்று எனலாம். எனவே போர்த்துக்கேயரும் கடலின் முகப்புத்தளமாகவும் மக்கள் குடியிருந்த பகுதியாகவும் நன்னீர் மிகுந்த பகுதியாகவும் காணப்பட்ட இப்பிரதேசத்தில் கோட்டையை அமைத்தனர். இக் கோட்டையை உருண்டைக் கோட்டை எனவும் அழைப்பதுடன் பழைய கோட்டை எனவும் இன்றும் சிலர் அழைத்து வருகின்றனர்.

**ஊருணி எனும் சொல்பற்றி நோக்கும் போது :**

"ஊருண்கேணி உண்துறை" என்று பரணரால் குறுந்தொகையிலும்
"ஊருண்கேணி" என ஔவையாரால் புறநானூறிலும்
"மணலிரு நிலத்துறை" என சங்க நூல்களிலும் காணப்படுவதுடன்

"ஊருணி" பற்றி கம்பரும், பாரதியாரும் கூட சிறப்பித்து அதன் முக்கியத்துவத்தைப் பாடியிருப்பதன் மூலம் இவ் ஊருணியின் இன்றியமையாமை பற்றி புரிந்து கொள்ள முடியும்.

எனவே ஊருணியின் நன்னீர்ச் சிறப்பின் காரணமாகவே மக்கள் குடியிருப்புக்கள் ஊருணிப் பகுதிகளில் பண்டைக் காலம் முதலே அமைந்திருப்பதனையும் அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருண்டிக் கோட்டையானது பருத்தியடைப்புப் பிரதேசத்தில் மேற்குப் பகுதியாகக் காணப்படுவதுடன் மாட்டுக்காலை, சங்குமால் ஆகிய பகுதிகளும் அருகருகே காணப் படுகின்றன. இவ் மாட்டுக்காலை எனும் பகுதியே தொண்டி போன்ற இடங்களிலிருந்து வடக்கன் மாடுகளையும், நல்லினப்பசுக்களையும் கொண்டு வந்து பராமரிக்கும் இடமாகும். இம் மாட்டுக்காலை அமைந்தமைக்கும் ஊருணிப் பிரதேசத்தில் காணப்பட்ட நிறைந்த நன்னீர் வளமே காரணம் எனலாம். இம்மாடுகளுக்கான மற்றும் கால்நடைகளுக்கான குடிநீர்த் தேவைகளையும் இப்பிரதேசம் பூர்த்தி செய்தமையாலும் இவ்விடத்தினை போர்த்துக்கேயரும் தமது கோட்டை அமைக்க தெரிவு செய்தனர் எனலாம். தமக்குத் தேவையான மாடுகளையும், ஆடுகளையும், எருமைகளையும் நெடுந்தீவில் இருந்து கொண்டு வந்து ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறையில் இறக்கி மாட்டுக்கலையில் வைத்து அவற்றைப் பராமரிப்பது வழக்கம் என்றும் பருத்தியடைப்புப் பகுதியில், மாடுகளுக்குத் தேவையான பருத்திக்கொட்டை களுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பருத்தியும் விளைவிக்கப்பட்டது என்றும் அறியப் படுகின்றது. அதேபோன்று இதன் அருகேயுள்ள சங்குமால் எனும் பகுதியில் சங்குகளைச் சேகரித்து தமது வருமானத்தைப் போர்த்துக்கேயர் பெருக்கியதாகவும் தமக்கு முன்பிருந்தே இங்கு நடைபெற்று வந்த தொழிலையே இவர்களும் தமது வருகையின் பின்னர் தொடர்ந்ததாகவும் அறிய முடிகின்றது.

## கோட்டை கட்டிய காலப்பகுதியும் வரலாறும்

கி.பி.1621 - கி.பி1624 காலப்பகுதியில் இக்கோட்டை போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட தாகவும் படைஉயர் அதிகாரிகள் மற்றும் மதகுருமார் போன்றோர் தங்குவதற்காகவே இக் கோட்டை கட்டப்பட்டதாகவும், இறைவழிபாடு செய்வதற்கான ஆலயம் ஒன்று சிறியதாக இதனுடன் இணைத்துக் கட்டப்பட்டதாகவும் அறியமுடிவதுடன் புனித மரியாளின் திருச்சொரூபத்தை வைத்து வணங்கிய மாதா குழியும் (மிகச்சிறிய குகை) ஆலய டோமின் ஓர் அரைவட்ட வடிவிலான கட்டிடத்தின் பகுதியையும் சிதைந்த நிலையில் இன்றும் அவதானிக்க முடிகின்றது. சில வருடங்களின் பின்னர் கடற்கோட்டை கட்டியதனால் இது அவர்களின் உணவுக் களஞ்சிய சாலையாகவும் கடற்கோட்டையின் ஆயுதக் களஞ்சியமாகவும் பாவிக்கப்பட்டதனையும் அறிய முடிகின்றது. மேலும் படையதிகாரிகள் மற்றும் அவர்களின் மதிப்புக்கும் மரியாதைக் குரியவர்களும் ஒருசில மதகுருமாரும் அங்கு தங்கியமையால் அது பிரபுக்கள் மனை எனப் பொருள்படும் (Fort of castle) காசல் கோட்டை எனவும் அது அழைக்கப்பட்டது. போர்த்துக் கேயருடன் வந்த மதகுருவான வணக்கத்திற்குரிய பேதுருதே பெற்றங்கோ எனும் அடிகளார் துறைமுகத்துக்கு அண்மையில் ஒர் பிரான்சிஸ்கன் சபை குருமடத்தையும் புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தையும் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டியிருந்ததாகவும் அதன் கட்டிடப் பணிகளை கண்காணிக்கவும், அங்கு ஆன்மீக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சில காலம் அவர் இக்கோட்டையிலேயே தங்கி இருந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. ஊர்காவற்றுறையில் எழுந்த முதலாவது கத்தோலிக்க தேவாலயமும் தூய திருமுழுக்கு அருளப்பர் ஆலயமே என்றும் கி.பி 1658 - கி.பி 1687 காலப்பகுதியில் ஒல்லாந்தரால் இத்தேவாலயம் அழிக்கப்பட்டதாகவும் ஊருண்டிக் கோட்டையும் இடிக்கப்பட்டதாவும் தெரிகின்றது. இக்கோட்டையில் இருந்த புனித கன்னி மரியாளின் திருச்சொரூபம் பிரான்சிஸ்கன் சபைக் குருமார்களால் காப்பாற்றப்பட்டிருக் கலாம் எனவும் நம்பப்படுகின்றது. போர்த்துக்கேயரால் தமது நிர்வாகம், ஆயவரி மற்றும் படை நடவடிக்கைகள் போன்றவற்றைக் கண்காணிக்க நிறுவப்பட்ட இக்கோட்டையானது கடற் கோட்டை கட்டி முடிக்கப்பட்டதும் களஞ்சியக் கோட்டையாகவும், படைவீரர்கள் தங்குமிடமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கப்பட்ட போதும் தமது எதிரிகளையும் தமது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காத வர்களையும் கொண்டுவந்து சித்திரவதை செய்யும் இடமாகவும் இதனைப் பயன்படுத்தினர் எனவும் அதனால் இதனைக் குரங்குக்கோட்டை அதாவது வாலில்லாக் குரங்குகளின் கோட்டை (Fort of Ape) எனவும் மக்கள் அழைத்தனர் எனவும் தெரிகிறது. கடற்கோட்டை கட்டிய பின் இரட்டை அடுக்கு பாதுகாப்பு வலயங்களில் ஒன்றாக, கடற்கோட்டையுடன் இவ் ஊருண்டிக் கோட்டையும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கி.பி 1658ம் ஆண்டு சித்திரை மாதம் (April) 10ம் திகதி ஒல்லாதந்தரிடம் இக் கடற்கோட்டை வீழ்ந்த சமயம் இக்கோட்டையும் ஒல்லாந்தரின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஒல்லாந்தரால் இக்கோட்டை அழிக்கப்பட்டாலும் கி.பி 1950ம் ஆண்டு வரை இக்கோட்டையில் காணப்பட்ட ஆலயத்தின் கூரை நல்ல நிலையில் காணப்பட்டதாக அறிய முடிகின்றது. (வடமாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொகுதி - 1. 2018: 126. பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்). மேலும் ஐரில் கோட்டை (Eyriel) என்றும் அழைக்கப்படும் இவ் ஊருண்டிக் கோட்டையினைச் சுற்றியுள்ள பகுதிகள் அரசால் சுவீகரிக்கப்பட்டு வீட்டுத்திட்டங்களுக்கு கொடுக்கப்படவுள்ளதாகவும் அவை போர்த்துக்கேயரின் படைவீரர் தங்கும் இடங்களாகவே காணப்பட்டதாகவும் அப் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். யாழ் திருமறைக் கலா மன்றத்தால் சில வருடங்களின் முன் இவ் ஊருண்டிக் கோட்டையில் இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டதாகவும் கல்வாரி மலையை நினைவுபடுத்தும் விதமாக இது காணப்பட்டமையே இதற்கான சிறப்புக்குக் காரணம் என்றும் இப்பிரதேச மக்கள் தெரிவிப்பதுடன், இவ் ஊருண்டிப் பகுதிக்கு ஊருண்டி என்று பெயர் அமைந்தமைக்கான காரணம் ஏதுவெனில்; இப்பகுதியிலே மக்கள் அதிகம் வசித்தமையால் முன்னைய காலங்களில் தூர பிரதேசங்களில் இருந்து கால் நடையாக வரும் பிரயாணிகள் சாலை ஓரங்களில் தங்கி இளைப்பாறும் போது உணவு கொடுத்து அவர்களது பசியாற்றுவதால் உண்டி கொடுக்கும் ஊர் என்று பொருள்பட ஊர் + உண்டி = ஊருண்டி என அவர்களால் அழைக்கப்படவே ஊருணி என்னும் இப்பிரதேசம் ஊருண்டியாயிற்று என்கின்றனர்.

## ஊருண்டிக் கோட்டை என்பது காக்கை வன்னியன் கோட்டையா?

சுமார் 3 மாதங்கட்கு முன்னர் சாலை விழிகள் எனும் வலைத்தளத்தில் ஷாலினி (ஷாலு) என்பவர் வெளியிட்ட இக்கோட்டை பற்றிய விபரணக் காணொளியில் காக்கை வன்னிய மன்னின் கோட்டை இதுவென்றும் இதனைக் காணும் போது பண்டாரவன்னிய மன்னருக்கு செய்த துரோகம் நினைவு வருவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் காக்கை வன்னியன் மன்னனாக இருந்ததாக வரலாறுகளில் அறிய முடியவில்லை. தவிரவும் மயிலவாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலை பற்றிய யாாழ்ப்பாண வைப விமர்சனம் எனும் நூலில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் "புவிராச பண்டாரம் பறங்கிச் சேனாதிபதி சமூகத்தில் கொண்டுவரப்பட்டு இராசதுரோகத்தின் நிமித்தம் தலையிழந்து சாக அவனுக்கு ஓர் கால் நூற்றாண்டு முன் இறந்தொழிந்தவனான சங்கிலியே வெட்டுண்டான் என்றதும் அச்சங்கிலியனையும் இவன் அரசையும் ஒன்றாக்கிக் கூறியது ஒரு மாறுபாடு. காக்கு எனும் சேனாதிபதி தன் மாமனான அரசனைத் தேடிப்போய் புத்தி கூறியதனை மாற்றி காக்கை வன்னியன் அரசனைப் பிடித்துக் கொடுத்தான் என்பது மற்றொன்று. காக்கு எனப் போர்த்துக்கேயர் காட்டுவது இயற்பெயரோ அன்றி பட்டப் பெயரோ அறிகிலோம். Gago என்பது அவர் பாஷையில் (போர்த்துக்கேய) கொன்னையன் என்பதாகும். கொன்னையன் எனும் பட்டப்பெயர் அரசனுக்கு இருந்ததோ? அப்படியாயின் காக்கு என்ற பரபாஷைச் சொல்லோடு ஒட்டியும் யாழ்ப்பாணத்தார் அவனை காக்கு கொன்ளையன் என்று அழைத்தமையால் காக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Uurundi Kottai - ஊருண்டிக் கோட்டை













## Hammenhiel Fort - கடற்கோட்டை













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியன் என்ற வந்ததோ? எது எவ்வாறாயினும் மயில்வாகனப் புலவர் அரசர்கள் பற்றி வரைந்து வைத்தது எல்லாம் தலைதடுமாற்றமான தப்பறைகளே அன்றி சரித்திரமல்ல." (யாழ் வைபவ விமர்சனம் 1928: 143, 144) என்பதிலிருந்தும், போர்த்துக்கேயரின் காலம் கி.பி 1505 - கி.பி 1658 வரையும் என்பதும், பண்டாரவன்னியன் காலம் கி.பி. 1750 - கி.பி 1811 என்றும் வரலாறுகள் மூலம் நிரூபிக்கப்படுகின்றன. எனவே காக்கை வன்னியன் என்று ஒருவன் இருந்தாலும் கூட அவன் போர்த்துக்கேயர் காலத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பதுடன் ஒல்லாந்தர் காலப்பகுதியின் இறுதியிலும் (கி.பி 1658 - கி.பி 1795), ஆங்கிலேயர் காலத்தின் முற்பகுதியிலும் (கி.பி. 1795 - 1948) வாழ்ந்தவனாகவே கொள்ள முடிகின்றது. எனவே காக்கை வன்னியன் கோட்டை என்பது முற்றிலும் தவறானதாகும். மேலும் காக்கை வன்னியன் பற்றிய வரலாற்றுக்குறிப்புக்களும் ஆய்வுக்குரியதே எனலாம். "பண்டார வன்னியன் காக்கை வன்னியனைக் காட்டிக் கொடுத்தான் என்பது செவி வழிச்செய்தியாகும், உண்மையில் காக்கை வன்னியன் என்ற பெயருடன் ஒரு வன்னியன் வரலாற்றில் இல்லை" என்கிறார் பண்டார வன்னியன் எனும் நாடகத்தை எழுதி நெறிப்படுத்திய முல்லைமணி என்பவர் (முல்லைமணி.சுப்பிரமணியம், வே.2007:52). எனவே காக்கைவன்னியன் கோட்டை என்பதும் காக்கை வன்னியன் என்ற ஒருவர் இல்லை என்பதும் யாழ்ப்பாண மற்றும் வன்னி வரலாறுகளை பூரணமாக ஆய்வு செய்பவர்களுக்கு இது புனைவு என்பது தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். அது தவிரவும் காட்டிக் கொடுப்பவர்களை எட்டப்பன் எனும் வழக்கு தென் இந்தியாவில் காணப்படுவது போன்று ஈழத்தின் வட பகுதியிலும் (வன்னி உட்பட) அப்படியானவர்களை காக்கை வன்னியன் என்பதும் மரபோ தெரியவில்லை. அது தவிரவும் ஊருண்டிக் கோட்டை யானது போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது என்பதனை லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வரும் போர்த்துக்கேயரது கீழ்த்திசைக் கோட்டைகள் பற்றி ஆய்வு செய்தவருமான வரலாற்று நிபுணரான C.R. Boxer என்பவரும் கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்று அறிஞரான திகிரி அபயசிங்கவும் கலாநிதி இராமகிருஷ்ணன் அவர்களும் இணைந்து நடத்திய ஆய்விலும் கூட ஊருண்டிக் கோட்டையானது போர்த்துக்கேயரது கோட்டை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கடற்கோட்டை (ஹமென்ஹீல்)

இன்று ஹமென்ஹீல் என்றும் கடற்கோட்டை என்றும் அழைக்கப்படும், உல்லாசப் பயணிகளதும் வரலாற்று ஆய்வாளர்களதும் கவனத்தை ஈர்த்திருக்கும் ஐரோப்பிய காலனித்துவ எச்சமான இக்கோட்டை பல வரலாறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. ஈழத்தில் காணப்படுகின்ற கடல் நடுவே கட்டப்பட்டிருக்கின்ற ஒரேயொரு கோட்டை இதுவே எனலாம். காரைநகரினதும் ஊர்காவற்றுறையினதும் இடையேயானதும் அவற்றைப் பிரிப்பதுமான ஆழமான ஒடுங்கிய நீர்ப்பரப்புகுள் (யாழ்ப்பாண நீரேரிக்குள்) உட்புகும் மற்றும் வெளியேறும் கப்பல்களை கண்காணிப்பதும் எதிரிகளின் படையெடுப்புக்களை, படைக் கப்பல்களைத் தடுப்பதும் இதன் பிரதான நோக்கமெனினும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களுக்கான சுங்கத்தீர்வை (ஆயவரி) போன்றவற்றை சீரான ஒழுங்கு முறையில் தவறாது வசூலிக்கவும் கண்காணிக்கவும் கூட இது பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஊர்காவற்றுறையில் இருந்து சுமார் 800யார் தூரத்திலும் இன்றைய ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து சுமார் 1 மைல் தூரத்திலும் அமைந்திருக்கும் இக்கோட்டையானது ஊருண்டிக் கோட்டையின் (தரைப்பகுதியிருந்து) கரையோரத்திலிருந்து சுமார் 1 கிலோமீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயத் தளபதியான அந்தோனியோ டி அமிறால் டெமென்சிஸ் என்பவரால் கடலிடையே இருந்த கற்பாறை மற்றும் மண் மேட்டினைச் சுற்றி இக்கோட்டை கட்டப்பட்டது. இக் கோட்டையைக் கட்டுவதால் உருவாகும் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் பல சாத்தியப் பாடான விடயங்களையும் முதன்மைப்படுத்தியே கடலின் நடுவே அமைந்த சிறு பாறையில் இது கட்டப்பட்டிருப்பினும் அத்தளபதியின் தீர்க்க தரிசனப் பார்வையே இதன் அமைவுக்கு காரண மாகியது எனலாம். கி.பி. 1629ம் ஆண்டளவில் கட்டப்பட்ட இக்கோட்டையானது தரையையும் கடலையையும் ஒருங்கே கண்காணிக்கும் வகையில் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் இதனை (cays) காயஸ் கோட்டை என்றும் (Fort aleza Real) போட் டலிசா றியல் அதாவது அரச கோட்டை என்றும், (Fortaleza de rio) போர்ட்டலி சாடி றியோ அதாவது ஆற்றின் கோட்டை என்றும் போர்ட்டலிசா (Fortaliza) என்றும் பல பெயர்களால் அழைத்தனர்.

நீள்சதுர வடிவிலும் சுமார் 20 அடி உயரமும் 16 அடி அகலமும் கொண்ட மதிற் சுவர்கள் சூழ்ந்ததாகவும் முருகைக்கல், சுண்ணக்கல் மற்றும் சர்க்கரை, சுண்ணாம்புச் சாந்துக் கலவைகள் கொண்டும் இக்கோட்டை கட்டப்பட்டதுடன் நான்கு மூலைகள் கொண்டதாகவும் இம் மூலைகளுடன் ஏனைய சுவர்கள் (மதில்கள்) அரைச் சந்திரவடிவில் (பிறைவடிவில்) இணைக்கப்பட்டும் கட்டப்பட்டிருந்தன. நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு பீரங்கிகளை அவற்றில் பொருத்தியும் மார்ச்லொக் என அழைக்கப்படும் திரித்துப்பாக்கிகள் தாங்கிய போர்த்துக்கேய மற்றும் மலபார் (கேரள) வீரர்களும் காவலுக்கும் நியமிக்கப்பட் டிருந்ததுடன் காப்பிரி அடிமைகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கி.பி1658ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்ாந்தர் தாக்க தரைமார்க்க மாகவும் கடல் மார்க்கமாகவும் வந்தபோது இவ் ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையானது சுமார் 15 நாள் முற்றுகையின் பின் 1658ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியடைந்திருந்தது. நார்டென் எனும் பாரிய புகழ் பெற்ற ஒல்லாந்த யுத்தக்கப்பலுடன் சுமார் 10க்கு மேற்பட்ட வேறு யுத்தக் கப்பல்களும் கப்பல் தலைவன் றோப் மற்றும் கப்ரன் வண்டாலியோன் (அட்றின் வன் லெனன்) ஆகியோர் தலைமையில் ஒல்லாந்தப் படையானது அப்போது சுற்றிவளைப்பில் ஈடுபட்டு இக்கடற்கோட்டையைக் கைப்பற்றியதுடன் அப்போது போர்த்துக்கேய கடற்கோட்டைத் தளபதியாகவிருந்த கப்டன் லெயிறோ நிமோ டி பய்வ் யுத்தத்தில் மரணமடைந்ததாகவும் அவனது சுதேச மனைவியான காரைநகரைச் சேர்ந்த ஒரு பெண் தனது குழந்தையுடன் அதன்போது கடற்கோட்டை மதில்மேல் ஏறி கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் அறியப்படுவதுடன் சுமார் 300 வரையான திரித்துப்பாக்கிகளும் 8 பீரங்கிகளும் ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியடையும் போது கடற்கோட்டையில் இருந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியடைந்த கடற்கோட்டையை ஒல்லாந்தப்படையின் வைஸ்க மாண்டராக இருந்த சின்ன ஒல்லாந்தேசு என யாழ்ப்பாணத்தவரால் அழைக்கப்பட்ட றைக்ளோப் என்பவன் திருத்தியும் புதுப்பித்தும் அமைத்தான். போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட நீள்சதுர வடிவிலான கோட்டை இரண்டு உள்நிலைகளைக் கொண்டதாகவும் மரத்தாலான மழைநீர் சேகரிக்கும் தொட்டியினைக் கொண்டதாகவும் இருந்தது. ஆனால் ஒல்லாந்தப்படைகளின் தாக்குதல் காரணமாக மழைநீர் சேகரிக்கும் தொட்டி சிதிலமடைந்து விட்டது. கோட்டையும் எண்கோண வடிவில் புதுப்பித்தும் சில பகுதிகள் திருத்தம் செய்தும் கட்டப்பட்டன. திண்ம வடிவிலான பவளப்பாறைகளையும் முருகைக்கற்கள் மற்றும் சுண்ணாம்புக் கற்கள் கொண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்ட இப் போர்த்துக்கேயக் கோட்டையானது ஒல்லாந்தரால் மீளக் கட்டப்பட்டபோது ஒல்லாந்த மற்றும் போர்த்துக்கேயக் கட்டடக்கலைகளையும் சுதேச கட்டடக்கலையையும் இணைத்த வகையில் கட்டப்பட்டதாகவும் காட்டுக்கற்களையும் முருகைக்கற்களையும் கொண்டு கட்டப்பட்ட துடன் கோட்டையின் மேற் தளங்களிலிருந்து அருகேயுள்ள ஏனைய தீவகத் துறைமுகங்களையும் கடற்பரப்புக்களையும் கண்காணிக்கக் கூடியதாகவும் யாழ்ப்பாண நீரேரிக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் வணிக ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள் ஏற்றிய கப்பல்களையும் கண்காணிக்கும் பரிசோதிக்கும் மற்றும் ஆய வரி அறவிடும் நடவடிக் கைகளுக்கும் ஏற்றவிதமாகவும். கட்டப்பட்டது ஹெமன்ஹீல் மற்றும் ஹமன்ஹீல் (Hammanheil) எனவும் இவர்களால் மீளக் கட்டப்பட்ட இக் கோட்டைக்கு இன்றுவரையும் பெயர் வழங்கி வருவதுடன் இது மறுபடியும் கட்டப்பட்டபோது தென்பகுதியில் வாசல் (நுழைவாயில்) கொண்டதாகவும் வடகிழக்கு பக்க மதிற்சுவர் முக்கோண நீட்சியைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. எண்கோண மூலைகளில் (கோண இணைப்புக்களில்) பீரங்கிகளும் பொருத்தப்பட்டிருந்ததுடன் போர்த்துக்கேயரைப் போலன்றி முற்றிலும் தமது நாட்டுப்படை வீரர்களைக் கொண்டே பாதுகாப்பினையும், கண்காணிப்பையும் மேற்கொண்டு வந்தனர்.

## ஆங்கிலேயர் வசமானது கடற்கோட்டை

கி.பி. 1795ம் ஆண்டு ஈழதேசத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதும் எவ்வித எதிர்ப்புமின்றி கடற்கோட்டையும் ஆங்கிலேயர் வசமானது. இவர்களது ஆட்சிக்குள் அதாவது நிர்வாகத்துக்குள் நாடு கொண்டுவரப்பட்ட பின்னர் தமது அரசுக்கு அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பல அபிவிருத்திகளையும் மேற்கொண்டதுடன் தொழிற்துறைகளிலும் கவனம் செலுத்திய ஆங்கிலேயர்;வீதி அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் அரச நிறுவனங்களின் கட்டிட அபிவிருத்தி போன்றவற்றிலும் துறைமுக அபிவிருத்தி போன்ற வற்றிலும் அதிக கவனம் செலுத்தினாலும் முன்பிருந்த கோட்டைகளை எதுவித மாற்றங்களும் செய்யாது அப்படியே பேணிவந்ததுடன் தமது நிர்வாக நடவடிக்கைகளை அங்கிருந்தே மேற்கொள்ள வேண்டி யேற்பட்டபோதும் கூட தம் விருப்பம் போல மாற்றியமைக்க முற்படவில்லை. எனவே கடற்கோட் டையானது இன்றும் கூட ஒல்லாந்த கட்டிடக் கலைப் பாணியிலேயே காட்சியளிக்கின்றது.

## பூதத்தம்பி கோட்டை :

கடற்கோட்டையை இன்றும் சிலர் பூதத்தம்பி கோட்டை என அழைப்பதனையும் இது பூதத்தம்பியால் கட்டப்பட்டது எனச் சிலரும் பூதத்தம்பி இங்கு சிறை வைக்கப்பட்ட படியால் பூதத்தம்பி கோட்டை என அழைக்கப்படுவதாக சிலரும் கூறி வருகின்றனர். ஆனால் இங்கு பூதத்தம்பி எனும் முதலி சிறைவைக்கப்பட்டதாகவோ அன்றி பூதத்தம்பி முதலியால் கோட்டையின் கட்டட வேலைகள் முகாமைத்துவம் செய்யப்பட்டதாகவோ ஒல்லாந்தரது இக்கோட்டை பற்றிய மற்றும் அதன் பின்னரான அவர்களது ஆட்சி பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களில் இது பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. என்பதுடன் இவை தவறான தகவல்கள் எனவும் அறிய முடிகின்றது. மேலும் பூதத்தம்பி அந்திராசி கதைகளும் இதில் இணைக்கப்படுவதால் அது பற்றியும் சிறிது நோக்கவே வேண்டியுள்ளது.

## பூதத்தம்பியும் அந்திராசியும்

யாழ்ப்பாண வைபவமாலை போன்ற யாழ்ப்பாண வரலாறுகளைக் கூறும் நூல்களில் புவிநாயக முதலியின் மகனான பூதத்தம்பி முதலி பற்றியும் மனுவேல், அந்திராசி முதலி பற்றியும் செய்திகள் இடம் பெறுகின்றன. மேலும் பூதத்தம்பி நாட்டுக்கூத்து மற்றும் அழகவல்லி நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றிலும் இவர்கள் பற்றி கூறப்படுகின்றது. பூதத்தம்பி முதலியின் மனைவியான அழகவல்லியின் அழகில் மயங்கிய அந்திராசி முதலி அவள் மீதான தனது ஆசை நிறைவேறாமையால் அவளது கணவனைப் பழிவாங்கும் பொருட்டு பூதத்தம்பி முதலியை சதி செய்து இராச துரோக குற்றச்சாட்டில் மாட்ட வைத்து ஒல்லாந்த தளபதியை நம்ப வைத்து அவர்களால் கொலை செய்விக்கப்பட்டதாகக் காட்டப்படுகின்றது. இவை பற்றிய நம்பகத் தன்மையும் கேள்விக்குரியதாகவே காணப்படுவதால் ஒல்லாந்த வரலாற்றுக் குறிப்புக்கள் தேடப்பட்டு ஆய்வு செய்யப்படுவதும் அவசியமாகின்றது. மேலும் பூதத்தம்பி - அந்திராசியின் இச் சம்பவமானது தம்மை உயர்குலம் என்றும் ஏனையோரை இடைநிலையினராகவும் சித்தரித்து ஒதுக்கி வைத்தவர்களது, சைவ மற்றும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான குறியீட்டுச் செய்தியாகவும் கூட இது இருக்கின்றதோ என்ற ஐயப்பாடுகளும் எழுகின்றது. எனவே இவை பற்றிய நடுநிலையான ஆரோக்கியமான தேடல்களே உண்மைகளை வெளிக் கொணர உதவும்.

## மனுவேல் அந்திராடே முதலியும் டொன் லூவிஸ் பூதத்தம்பி முதலியும் :

"யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கைப்பட்டு பலநாள் கழியுமுன் ஒல்லாந்தரைக் கொன்று வேரறத் தொலைக்க வேண்டுமென்னுமோர் அந்தரங்கச் சூழ்ச்சி யாழ்ப்பாணத்தாரிடமிருப்பதாக மனுவேல் அந்திராடோ என்னுஞ் சிங்களமுதலி கண்டு வெளிப்படுத்தினான். இச் சூழ்ச்சித் தலைவரான பதினான்கு பேர் கொலை செய்யப்பட்டனர். அவர்களுடன் டொன்லூவிஸ் பூதத்தம்பி எனும் முதலியாரும் இச் சதியாலோசனைத் தலைவராயிருந்தனர்". மயில்வாகனப்புலவர் கன்ன பரம்பரையை ஆதாரமாகக் கொண்டே பூதத்தம்பி கதையை எழுதியிருக்க வேண்டும். (முதலியார் இராசநாயகம் செ.19933:171:172) மேலும் முத்துதம்பிப்பிள்ளை அவர்களின் யாழ்ப்பாணச் சரித்திரத்திலும் (பக்.101-154) விரிவாகக் காணலாம் என்பதிலிருந்தும் அந்திராசி - பூதத்தம்பியின் சம்பவங்கள் தவறானவை என்றும் புனைவுகள் என்பதனையும் புரிந்து கொள்ள முடியும்.

## ஆங்கிலேயர் காலத்தில் கடற்கோட்டை

ஆங்கிலேயர் காலத்தில் இது அவர்களது விருப்பமான சுற்றுலாமையமாகவும் 2ம் உலக மகாயுத்தத்தின் போது கடல் ஆகாய மீட்பு நிலையமாகவும் ஆயுதக் களஞ்சியமாகவும் 1930ம் ஆண்டு காலப்பகுதியில் அத்துமீறிய குடியேற்ற வாசிகளை தடுத்து வைத்து பரிசோதனை செய்த பின் தடுப்பூசி வழங்கும் நிலையமாகவும், நோயாளிகளைத் தனிமைப் படுத்தும் நிலையமாகவும், இடையிடையே சிறைக் கூடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இராணுவ நடவடிக்கை களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் வட ஈழப்பகுதிக்குள் வரும் வெளிநாட்டு கப்பல்களும் இங்கு சோதனை செய்யப்பட்டு நுழைவுச் சீட்டுக்களும் வழங்கப்பட்டன. சுங்க வரியிலும் இத் துறைமுகம் பெரும் வருமானத்தை பெற்றது. அதாவது இலங்கையிலேயே 2ம் இடத்தில் காணப்பட்டது.

## ஸ்ரெயிசரின் வரைபடம் :

இராணுவ ஆயுதக்களஞ்சியசாலை ஓய்வு அறைகள் சிறைச்சாலை என்பவையுடன் காணப்படும் இக்கோட்டையை "ஸ்ரெயிசர்" என்பவர் தனது வரைபடத்தில் (ஓவியத்தில்) தென்கிழக்குத் திசையில் இருந்து வரைந்திருந்தார். இவருடைய ஓவியத்தில் கோட்டைக்கு முன்பாக சிறு இறங்கு துறையும் கோட்டையின் மையப்பகுதியில் துப்பாக்கிகளுடன் இணைக்கப்பட்ட காவலரண், கோபுரங்கள் அடங்கலாகவும் எட்டுப்பக்கங்களைக் கொண்ட தாகவும் இக்கோட்டையின் அமைப்புக் காணப்படுகின்றது. இது ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட கடற்கோட்டையின் அமைப்பினை நாம் அறிந்த கொள்ள உதவுவதுடன் தற்காலத்திலும் ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையானது எண் கோண அமைப்பினைக் கொண்டு காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இவ் வரைபின் மூலம் ஒல்லாந்தக் கோட்டையின் அமைப்பினை நன்கு அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. (திருமதி. நிருபா காசிநாதன் 2020:53) சிறுபாறைத்தீவில் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட இக்கோட்டையானது கி.பி 1695இல் ஒல்லாந்தரால் மீளவும் புதிப்பித்து கட்டி முடிக்கப்பட்டபோது சுமார் 15 அடி அதாவது 4 1/2 மீற்றர் உயரமாகவும் சுமார் 4.75 மீற்றர் தடிப்பம் கொண்ட மதில்களாலும் அரன் செய்யப்பட்டிருந்தது போன்றே இன்றும் காணப்படுவதுடன் வடகிழக்கு சுவர் நீட்சியுடன் எதிர் கோணக்கோடு 80மீற்றர்களுக்கு மேற்படாது சுவர்களும், கதவுகளும் அமைக்கப்பட்டு சுவரின் மேல் சீமேந்துக் கோபுரமும் மணியும் அமைக்கப்பட்டிருந்தமையும் முன்னர் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## நெல்சன் என்பவரது பார்வையில் கடற்கோட்டை :

திரு. நெல்சன் அவர்கள் தனது நூலில் கடற்கோட்டை பற்றிக் குறிப்பிடும் போது கி.பி 1930களில் இது நோயாளர்களைத் தனிமைப்படுத்தும் நிலையமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதுடன் இது பார்ப்பதற்கு மிகவும் ஈர்ப்பை வெளிக்காட்டக்கூடியதாகவும் கற்களாலும் சிவப்பு மேற் கூரையாலும் வேயப்பட்டு பச்சை மரங்களுடன் சூரியஒளிபட்டு கடலின் நடுவில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்கிறார். (தொன்ம யாத்திரை - மரபை அறிதலுக்கும் கொண்டாடுதலுக்குமான இதழ் பங்குனி . 2017 யதார்த்தன் - பிரிந்தா).

## நாடு சுதந்திரமடைந்ததன் பின்:

சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் இக்கோட்டைக்கு மிக அண்மித்தாக காணப்படும் காரைநகரில் கடற்படையினரின் தலைமையமாக (Naval Base) கடற்படைத்தளம் அமைக்கப்பட்டதன் பின் அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கும் இக்கோட்டை பயன்படுத் தப்பட்டு வந்தது 1990 இன் பின்னர் இக் கடற்கோட்டையை கடற்படையினர் தமது பாதுகாப்புத் தளமாகப் பயன்படுத்தி வந்தனர்.

## பாதுகாக்கப்பட்ட தேசிய மரபுரிமைச் சின்னம்:

தேசிய கலாசார மரபுரிமைகள் அமைச்சால் 2007.02.23ம் மற்றும் 2016.11.17 ம் திகதிகளில் அரச வர்த்தகமானிகளில் பாதுகாக்கப்பட்ட மரபுரிமைச் சின்னமாக இது பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

## வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் :

2018ம் வடமாகாண கல்வி பண்பாட்டு மற்றும் விளையாட்டு அமைச்சால் வெளியிடப்பட்ட வடமாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொகுதி - I எனும் வெளியீட்டில் பக்கம் 126 இல் யா/ 49 ஊர்காவற்றறை பிரதேச கிராமஅலுவலர் பிரிவில் ஹெமன் கீல் கோட்டையும், யா/50 பருத்தியடைப்பு கிராம அலுவலர் பிரிவில் ஊருண்டிக் கோட்டையும் குறிப்பிடப்பட்டிருக் கின்றது என்பதை அவதானிக்கலாம்.

## சுற்றுலாத் துறையில் இன்றைய நிலை:

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல் சான்றுகளாகவும் ஐரோப்பிய காலனித்துவத்தின் வரலாற்றைச் சொல்லும் மீதிகளாகவும் காணப்படும் இவ்விரு கோட்டை களும் இன்று சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மையங்களாகக் காணப்பட்டாலும் போதிய வழிகாட்டல்கள் மற்றும் தெளிவுகள் இன்மையாலும் சில நெருக்கடிகளாலும் சுற்றுலாக்களை மேற்கொள்வதில் தடங்கல்களும், நிறைவின்மையும், திருப்தியின்மையுமே காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊருண்டிக் கோட்டையை நோக்கும் போது :**

கோட்டையானது மென்மேலும் அழிவடைந்து வருவதுடன் சிறு சிறு புதர்களும், பற்றைகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. மேலும் பாதுகாப்பு வேலிகள் இன்றியும் துப்பரவு செய்யப்படாமலும் காணப்படுகின்றது. இவ் ஊருண்டிக் கோட்டை பற்றிய வரலாறுகளை அறியாதவர்களாகவும் அதனைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை உணர்வு சிறிதும் அற்றவர்களாகவுமே இக்கோட்டையின் அயலில் வசிப்பவர்களும் காணப்படுகின்றனர். மேலும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளுக்கும், வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் போதியளவு இக்கோட்டையின் வரலாறு பற்றிய மற்றும் மரபு சார்ந்த, பண்பாட்டியல் சார்ந்த அறிவூட்டல்களும் கிடைக்காத தன்மை காணப்படுகின்றது. இக்கோட்டையின் கற்களும் பல்வேறு தேவைகள் கருதி மக்களால் எடுத்துச் செல்லப் பட்டும் இருக்கிறன. இந்நிலை தொடருமானால் இக்கோட்டை தனது வரலாற்று இருப்பை தக்க வைக்க முடியாமலும் தகவமைத்துக் கொள்ள முடியாமலும் போவதுடன் காலனித்துவத்தின் எச்சத்தின் கதைகூறும் மீதிகளும் கூட மறைந்து போகக்கூடும்.

**கடற்கோட்டையை அவதானிக்கும் போது :**

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினதும் பிரதேச சபையினதும் நிர்வாகப் பகுதிக் குள்ளும் ஊர்காவற்றுறை பிரதேசம் எனும் கிராம சேவையாளர் பிரிவுக்குள்ளும் இது அடங்குமாயினும் இதனைப் பார்வையிடுவது எனின் காரைநகர் பிரதேச செயலக எல்லைக்குள் இருந்தே செல்ல வேண்டியுள்ளதுடன் இதற்கான செலவும் அதிகரித்தே காணப்படுவதுடன் சிற்சில வேளைகளில் கடற்படையினரது தலையீடும் காணப்படுகின்றது. இதனால் கடற் கோட்டைச் சுற்றுலா என்பதும் சிரமத்திற்குரியதாகவே காணப்படுகின்றது.

**தீர்வினை நோக்கி ......**

ஊருண்டிக் கோட்டைப் பிரதேசத்தினை அரசு பாதுகாக்க வேண்டும் எனும் வாதம் மிகச்சரியானதே ஆயினும் இங்கு காணப்படும் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது நிறுவனங்கள் மற்றும் பிரதேசசபை, பிரதேச செயலகம் ஆகியன இணைந்தும் அல்லது தனித்தும் சுற்றாடலைப் பாதுகாப்பதுடன் அவ்வப் போது தூய்மைப்படுத்தவும் எல்லையிடவும் வேலி அமைக்கவும் முயற்சி செய்ய முடியும் இலவசங்களையும், நிவாரணங்களையும் எப்போதும் எதிர்பார்த்துப் பழக்கப்பட்ட மக்களுக்கு, பிரதேச செயலகமானது சிரமதானங்களை ஒழுங்குபடுத்தியும் கிராம அலுவலரது ஒத்துழைப்புடன் இவற்றினை துப்பரவு செய்து எல்லையிட்டு பாதுகாக்கமுடியும். மேலும் அரசு நிரந்தரமான பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் வரையிலும் மேற் கூறப்பட்ட நிறுவனங்ளே பொது நிதியத்தை உருவாக்கி துப்பரவு செய்தலுக்கும் பாதுகாத்தலுக்கும் ஓரிரு பணியாளர்களை ஊதியம் கொடுத்து நியமனம் செய்வதும் பொருத்தமானதாகும்.

ஹெமன்கீல் கோட்டை விடயத்தில் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் இது தமது அதிகார வரம்புக்கள் காணப்படுவதனால் தமது உச்சக்கட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும் மாவட்ட செயலகம், மாகாண மற்றும் மத்திய சுற்றுலாத்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு என்பவற்றுடன் தொடர்பு கொண்டு இதனை தமது நேரடி நிர்வாகத்திற்குள் கொண்டு வருவதும் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோட்டைகள் பற்றியும் வரலாற்று முக்கியத்துவம் பற்றியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியங்கள் பற்றியும் சுற்றுலாத்துறையில் இவற்றின்வகிபாகம் பற்றியும் துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள், பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் கலை நிகழ்ச்சிகள், கதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் நடாத்துவதும் கூட சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் மாசடைதல் என்பவற்றின் விழிப்புணர்வை போன்று பயன்தரக் கூடும்.

இச்சுற்றுலா மையங்களை பிரபல்யப்படுத்துவதன் மூலம் இவற்றைப் பேணுவது மட்டுமன்றி உள்ளூர் பிரதேச வாசிகளுக்கும் வறுமைக்கோட்டுக்குள்ளும் வாழும் ஆண் தலைமைத்துவங்களை இழந்து தவிக்கும் குடும்பங்கட்கும் ஜீவனோ பாயத்தையும் உண்டு பண்ண முடியும். உள்ளூர் கைவினைப் பொருட்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை இவர்கள் விற்பனை செய்வதற்கான சிறுசிறு கடைகளையும் ஊருண்டிக் கோட்டையை அண்மித்த சுற்றுப் புறங்களில் மேற்கொள்ள முடியும். சுற்றுலாப்பயணிகளின் போக்கு வரத்துப் பாதையாகவும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தினை மாற்றி நயினாதீவு, நெடுந்தீவு வரையான கடற்போக்கவரத்து (உல்லாசப் பயணிகளுக்கான) தடத்தை உருவாக்குவதும் மிகவும் சிறப்பானதாக அமையும் எனலாம்.

## நிறைவாக

எனவே இவ்விடயங்களிலோ அல்லது உசிதமான வேறுபட்ட கோணங்களிலோ நன்கு சிந்தித்து ஆய்வு செய்து பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் பிரதேச பொதுசன அமைப்புக்கள் ஆகியன இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதே இக்கோட்டைகளை பாதுகாக்கவும் எதிர்காலச் சந்ததியினரிடம் வரலாறுகளுடன் இவற்றைக் கையளிக்க சாத்திய மானதாக அமையும் என்பதுடன் சுற்றலாத்துறையை ஊக்குவித்து இப்பிரதேச மக்களுக்கு ஜீவனோபாயத்திலும் உதவுவதும் அவர்களது தூர நோக்குகளுக்கு உட்பட்டதே என்றும் கூறி நிறைவு செய்வதுடன் கோட்டைகளது பெயர்களில் கூறப்படும் காக்கை வன்னியன் மற்றும் பூதத்தம்பி முதலியார் பற்றிய சம்பவங்களுக்கு ஆரோக்கியமான விமர்சனங்களும் ஆய்வுகளும் தேவை என்பதும் வரலாற்றாய்வாளர்களது கவனத்திற்கு விடப்படுகின்றது.

## உசாத்துணை

1. ஐரோப்பியர் பார்வையில் இலங்கை 1974. மயில்வாகனம். நா
2. யாழ் வைபவிமர்சனம் 1928. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.
3. ஊர்காவற்றுறையின் பண்பாட்டு மரபுரிமைத் தனித்துவமும் - பேணுகைசார் சவால்களும் 2020 திருமதி.நிருபா.கா.முதுநிலை ஆய்வு .
4. அடங்காப்பற்று வன்னி வரலாறு பாகம் I-V. 2004 , 2005, 2006, 2007, 2010 அருணா செல்லத்துரை.
5. யாழ்ப்பாண வைபவமாலை 1953. முதலியார் குலசபாநாதன் அவர்களது ஆய்வு.
6. யாழ்ப்பாணச் சரித்திரம் 1933 முதலியார் இராசநாயகம். செ.
7. கோட்டைகள் கூறும் வரலாறுகள் ஆய்வுக்கட்டுரை. 1980. அருட்பிரகாசம் செ.வி.
8. ஐரோப்பியர்காலக்கோட்டைகள் ஆய்வுக்கட்டுரை.1970. செபதேசு. நீ
9. பூதத்தம்பி விலாசம் நாட்டுக்கூத்து.1931. கந்தையாபிள்ளை சு.க.
10. கடல்கோட்டை (நாவல்) 1985. குணராசா.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை!

## (சிறுகதை)

செல்வி மல்லிகா செல்வரத்தினம்,
சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

இராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. இரண்டாம் சாமக்கோழிகள் அமர்க்களமாய்க் கூவுகின்றன. தூரத்தே தெருநாய்கள் ஓலமிட்ட வண்ணம் இருக்கின்றன. எஸ்தரின் வீட்டுக் கேற் தட்.... தட்.... தட்... என்று பலமாகத் தட்டப்படுகிறது. எஸ்தரின் அருகே படுத்திருந்த செரீனா, “அம்மா! யாரும்மா இந்த நேரத்தில்? பயமாக இருக்கும்மா....” என்று தாயை இறுக்கிக் கட்டிப் பிடிக்கிறாள். “பயப்பிடாதையம்மா.... கொண்ணையாத்தான் இருக்க வேணும். நீ அக்காவோட படு... நான் போய்ப் பாத்திட்டு வாறேன்” என்றவாறு எஸ்தர் கேற்றடிக்குச் சென்றாள். அங்கே எஸ்தரின் மகனான யோசுவா நிறை போதையில் தள்ளாடிக் கொண்டிருந்தான். கேற்றைத் திறந்து மகனை உள்ளே கூட்டி வந்த எஸ்தர், மீண்டும் அதனைப் பூட்டிவிட்டு வருகிறாள். “அம்மா.... அம்மா.... எல்லாரும் எங்கை போட்டினம்? நீமட்டும் தனிய வாறாய்?” என்று தாயை உலுப்பியவாறு யோசுவா கேட்டான். “சாமமாப் போச்சு மோனே.... சத்தம் சந்தடி வைக்காமல் உள்ளே வா...” என்று அவனை இழுத்து வந்து சாப்பாடு கொடுத்தாள். அவன் சாப்பாட்டுக் கிண்ணத்தில் கை வைப்பதும் தரையில் கை வைப்பதுமாய் சோற்றுப் பருக்கைகளைக் கொட்டுவதும் அள்ளுவதுமாகக் கொறித்துக்கொண்டிருந்தான். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

“அம்மா! வந்து படுங்கோவன்.... இவன் ஒருத்தனால தினமும் சிவராத்திரிதான். இவனைக் கொண்டுபோய் அங்கோடையில விடச் சொன்னன். கேட்டால் தானே....” என்று பொரிந்து தள்ளினாள் எஸ்தரின் மூத்த மகளான செலஸ்ரினா. “அடியே அக்கையாரே! என்னடி கதைக்கிறாய்? பொத்தடி வாயை....” யோசுவா இரைந்தான். “பொத்தடா வாயை... கதவின்ர பார்த் தடியால அடிச்சு மண்டை உடைச்சுப் போடுவன். உன்ர வருத்தத்திற்குக் குடிக்கக்கூடாது என்று சொல்லியும் கேட்கிறாய் இல்லை. தினமும் குடிச்சுப் போட்டு வந்து கூப்பாடு போடுறாய்....” என்று செலஸ்ரினா சீறினாள். “நீ கொஞ்சம் பொறு புள்ளை... போய்ப் படு... அவனைப் படுக்க வைச் சிட்டு வாறேன்...” என்றாள் எஸ்தர். “பாலைக் குடுங்கோ உங்கட அருமைப் பிள்ளைக்கு” என்று சினந்தவாறு அறைக்குள் நுழைந்தாள் செலஸ்ரினா. அங்கே மேசை மீதிருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து இரண்டு மிடறு குடித்துவிட்டு, படுக்கையில் உடலைச் சாய்த்தாள். நாளெல்லாம் வைத்தியசாலையில் நோயாளர்களுக்குச் சேவை செய்த அசதியை அவளது கொட்டாவி வெளிப்படுத்தியது. அருகே அக்காவைக் கட்டிப்பிடித்தவாறு செரீனா படுத்தாள். செலஸ்ரினாவை அறியாமல் அவளது கண்கள் பொல பொலவென நீரைப் பொழிந்து கொண்டிருந்தன. வெளிப்படையாகத் தம்பியைத் திட்டினாலும் உள்ளூர அவனுக்காக இரங்கினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசுவா உண்டு முடித்துப் புசத்திக்கொண்டிருந்தான். அவனைப் படுக்க வைப்பதற்குப் பெரும் பாடுபட்டாள் எஸ்தர். இரண்டு மணிநேரம் கழித்து ஒருவாறு யோசுவா உறங்கிவிட்டான். மகனை நினைத்து உருகிய தாயுள்ளமும் உறங்கச் சென்றது. ஆனால், அந்த உள்ளத்திற்கு உறக்கம் வரவில்லை. ஆட்டு மந்தையில் நோயாளி ஆட்டுக்குட்டியை அதன் மேய்ப்பன் கரிசனையோடு பராமரிப்பதைப் போல யோசுவாவை எஸ்தர் எனும் தாய்மை அன்போடு பராமரிக்கிறது. அவன் என்ன தான் அட்டகாசம் செய்தாலும், அவனும் பிள்ளைதான் என்று மனம் உருகுகிறது. பகல் முழுவதும் விட்டேத்தியாகத் திரிந்து குடிப்பதும் இரவில் நினைத்த நேரங்களுக்கு வருவதும் என்று அவன் பொழுதுகள் போய்க்கொண்டிருந்தன. வீட்டில் அதிக அட்டகாசம் செய்தால், தெல்லிப்பழை மனநல சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பார்கள். மற்றும்படி அவன் போக்கில் விட்டு விடுவார்கள். ஒரு காலத்தில் ஆனந்தம் விளையாடிக்கொண்டிருந்த தன் குடும்பம் இப்போது அவலப்பட்டுக்கொண்டிருப்பதை நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டாள் எஸ்தர். நிகழ்காலத்தில் இருக்கும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இறந்த காலத்தில்தான் வாழ்கின்றனர். இது பொதுவான ஒன்று. துக்கம் தன்னை அரிக்கும் நேரங்களில் எஸ்தரும் கடந்தகாலத்திற்கு ஓடிப்போவாள். அந்த இனிமையான நாட்களை மனதில் அசை போடுவாள். “அந்தக் காலம்.... அந்தக் காலம்.... என் வாழ்வின் வசந்த காலம்.....” என்று எஸ்தரின் உள்ளம் உச்சரித்துக் கொண்டிருந்தது. அவளது மனக்கண்ணில் இனிய நினைவுகள், அதன்பின் தொடர்ந்த துயர நினைவுகள் எல்லாம் திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தன....

அளவையூர் பெற்றெடுத்த திருமகன் ஜோசேப். உடல் அழகைப் போன்றே அவரது உள்ளமும் அழகானது. எப்போதும் அவரது முகத்தில் புன்னகை பூத்துக் குலுங்கும். தான் பிறந்த அதே கிராமத்தில் வசித்த எஸ்தரைக் காதலித்துக் கரம் பிடித்தார். அழகான கிறிஸ்தவக் குடும்பம். வாழ்ந்தால் ஜோசேப் போல வாழ வேண்டும் என்று ஊரார் மெச்சும்படி வாழ்ந்தார். அவர் தையல் கலையில் அதி திறமையாளர். கண் பார்ப்பதைக் கை செய்யும் என்பதற்குச் சிறந்த உதாரணம் இவர். சொந்தமாகத் தையல் கடை வைத்து, தொழிலுக்கு நால்வரை நியமித்துமுள்ளார். விடுதலைப் புலிகள் முதல் இராணுவத்தினர் வரை அனைவருக்கும் அவர் சீருடைகள் தைத்துக் கொடுப்பார். மாணவர்களின் பெற்றோர்கள் இவரது கடையிலேயே சீருடைகள் தைப்பதற்குக் கொடுப்பர். அந்தளவு நேர்த்தியாக இருக்கும் அவரது தையல். அவர் ஓய்வு ஒழிச்சலின்றித் தையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டேயிருப்பார். நாளுக்கு நாள் அவரது வருமானம் அதிகரித்துக்கொண்டே சென்றது. தன்னிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் மனம் கோணாதபடி சம்பளம் கொடுத்ததுடன், அவர்களுக்குத் தன்னாலியன்ற வேறு உதவிகளும் செய்தார்.

மனமொத்த தம்பதியரின் இல்லற வாழ்வின் பயனாக நான்கு பிள்ளைச் செல்வங்களை அள்ளிக்கொடுத்தான் ஆண்டவன். தாய்க்குத் தலைப்பிள்ளை செலஸ்ரினா. அடுத்து யோசுவா, ஜோன், கடைக்குட்டி செரீனா. யோசுவா என்றால், செலஸ்ரினாவுக்கு உயிர். அவனைத் தரையிலே இறங்கவிடாமல் எந்நேரமும் தனது இடுப்பிலே சுமந்து திரிவாள். பத்து வயதில், அவள் பக்குவப்பட்ட அன்னை போல தம்பி மீது பாசமழை பொழிந்தாள். பால் மணம் மாறாத பிஞ்சுகளான நால்வரும் தாய் தந்தையரை வளைய வருவர். தொழில் நேரம் போக, மீதி நேரம் முழுவதையும் தன் மனைவி பிள்ளைகளுடனே செலவிட்டார் ஜோசேப். மனைவியை ஒரு தாய் போலத் தாங்கினார். பிள்ளைகள் விரும்பிக் கேட்ட அனைத்தையும் வாங்கிக் கொடுத்தார். குடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமோ வேறெந்தக் கெட்ட பழக்கமோ அவரிடம் இல்லை. சந்தோசமாக அவர்களது வாழ் நாட்கள் கழிந்துகொண்டிருந்தன.

இலங்கையில் உள்நாட்டுப் போர் இடைநிறுத்தப்பட்டுச் சமாதானம் நிலவியபின், மீண்டும் யுத்தமேகம் கருக்கொண்ட காலம் அது. சகோதரச் சண்டையில், நாய்களைக் காட்டிலும் மனித உயிர்கள் மிகக் கேவலமாக வேட்டையாடப்பட்டுக்கொண்டிருந்தன. பல்லுக்குப் பல், இரத்தத்திற்கு இரத்தம் என்று துப்பாக்கிகள் கொக்கரித்துக்கொண்டிருந்தன. ஆட்களைக் கடத்துவதற்கு வெள்ளை வான்கள் அலைந்துகொண்டிருந்தன. வீதிகளில் பயணிப்பதற்கு மட்டுமல்ல, வீட்டில் வசிப்பதற்கும் மக்கள் அச்சமுற்றிருந்தனர். உண்பதற்கு மட்டுமே அவர்கள் வாயைத் திறந்தனர். வசதி படைத்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர்.

2007ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு முடிவுற்ற ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஜோசேப் குடும்பமாகத் தேவாலயம் சென்று வந்த பின்னர், வீட்டு ஹோலில் இருந்து பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தார். அப்பாவை யானையாக்கி அவரது தோளில் ஏறித் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தாள் இரண்டு வயதேயான கடைக்குட்டி செரீனா. அப்பாவையும் தங்கையையும் கலைத்துப் பிடித்து, கூகூகூ... என்று கத்தி மகிழ்ச்சிக் குரல் எழுப்பினர் மற்றவர்கள். எஸ்தர் சமையலில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஞாயிறு சமையல் என்றால், சற்று விசேடமாக இருக்கும். வீட்டுக்கு வருவோர் போவோருக்கெல்லாம் விருந்தோம்பல் செய்து மகிழ்வார் எஸ்தர். நேரம் முற்பகல் பதினொரு மணியிருக்கும். திடீரென சப்பாத்துக் கால்களுடன் இருவர் ஹோலுக்குள் நுழைந்து, “நீங்கள் தானா ஜோசேப்?” என்று கேட்டனர். அவர்களது முகத்தில் ஏதோ கலவரம் தெரிந்தது. முதுகிலிருந்த செரீனாவைத் தூக்கி செற்றியில் இருத்திவிட்டு, “ஓம், நீங்கள் யார் தம்பியாக்கள்?” என்று கேட்டார் ஜோசேப். அவர்களது கைத்துப்பாக்கி தான் அவருக்குப் பதில் சொன்னது. “டுமீல்... டுமீல்....” அந்தக் கைத் துப்பாக்கியால் அவரது நெற்றியில் இரண்டு தடவைகள் சுட்டுவிட்டு அவர்கள் மோட்டார் சைக்கிளில் விரைந்தனர். சத்தம் கேட்டு ஹோலுக்கு ஓடோடி வந்தாள் எஸ்தர். அடியற்ற மரம் போல இரத்த வெள்ளத்தில் கிடந்தார் ஜோசேப். உணர்வற்ற சிலைபோல வைத்த கண் வாங்காமல் ஜோசேப்பையே பார்த்துக்கொண்டிருந்தாள் எஸ்தர். வாயடைத்துத் திகைத்துத் நின்றான் யோசுவா. ஏனைய மூவரும் தந்தையின் நிலையைப் பார்த்துக் கூக்குரலிட்டுக் கதறினர். அவர்களது அழுகைக் குரல் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கே குழுமிவிட்டனர். அம்புலன்ஸுக்கு அழைப்பெடுத்து ஜோசேப்பை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். சுடப்பட்ட உடனேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் கூறினர்.

அவரது சடலம் வீட்டிற்கு எடுத்து வரப்பட்டது. எஸ்தர் அவரது சடலத்தைத் தொட்டுத் தொட்டுக் கதறி அழுதார். பிள்ளைகள் அழுது அழுது சோர்ந்தனர். முதிய பெண்கள் ஒப்பாரி வைத்து அரற்றினர். ஆனால், யோசுவாவின் கண்களிலிருந்து ஒரு துளி நீரும் வரவில்லை. எட்டு வயதுச் சிறுவனான அவன் விறைத்துப் போய்க் காணப்பட்டான். யார் கதை கேட்டாலும் கதைக்கிறான் இல்லை, உணவு எதுவுமே உண்கிறான் இல்லை. தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்று தெரியாமலே அவன் இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய மதச் சடங்குகளுடன் ஜோசேப்பின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டு, ஒரு மாதம் உருண்டோடி விட்டது. எஸ்தரையும் பிள்ளைகளையும் உறவினர்கள் தேற்றிய வண்ணம் இருந்தனர். மதகுருமாரும் அடிக்கடி அவர்களுடைய வீட்டிற்கு வந்து ஆறுதல் கூறிச் சென்றனர். ஆனால், காலம் என்ற மருந்துதான் காயப்பட்ட இதயத்திற்குச் சிறந்த மருந்து. யார் தேற்றியும் அமைதியுறாது தேம்பிய வண்ணம் இருந்தனர் எஸ்தரும் பிள்ளைகளும். அவர்களது துயரத்தில் பங்கெடுப்பது போல வாடிச் சோர்ந்திருந்தன அவ்வீட்டில் பூத்திருந்த சித்திரை மலர்கள். அவர்களுடன் சேர்ந்து சோகராகம் இசைத்தன மாங்குயில்கள்.

எவருடைய இழப்பைக் கண்டும் காலம் ஸ்தம்பிப்பதில்லை. அது இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும். ஜோசேப் உயிரிழந்து ஓராண்டு முடிந்தது. செரீனாவைத் தவிர மற்றைய பிள்ளைகளுக்கு ஜோசேப் மரித்துவிட்டார் என்பது புரிந்தது. அதனால் அவர்கள் அப்பாவைத் தேடுவதில்லை. ஆனால், "அப்பா எங்கே அம்மா?.... அப்பா எங்கே அம்மா?" என்று தன் மழலைக் குரலில் தினமும் எஸ்தரிடம் கேட்பாள் செரீனா. "அப்பா காசு உழைச்சுக் கொண்டுவர வெளிநாட்டிற்குப் போட்டார் அம்மா. சீக்கிரம் வந்திடுவார். வரும்போது, பிள்ளைக்கு நிறைய சொக்லேட் எல்லாம் வாங்கி வருவார்" என்று மனதைக் கல்லாக்கி அவளுக்குப் பதில் சொல்வாள் எஸ்தர். அப்பாவைப் பற்றிய செரீனாவின் கேள்விகளுக்கு, பொய்களையே பதில்களாய் சொல்லிக்கொண்டிருந்தாள் எஸ்தர். காலவோட்டத்தில் செரீனா வளர்ந்து ஆளாகிய பின்னர் தான் தெரியும்- அப்பாவை இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் சுட்டுக்கொன்ற உண்மை!

ஜோசேப்பின் மரணத்தின் பின்னர் ஓரிரு மாதங்கள் உறவாடிய உறவுகள் எல்லாம் அவர்கள் வீட்டுக்கு அடியோடு வராமல் விட்டனர். அவர்களைச் சுற்றியிருந்த சொந்தங்கள் எல்லாம் ஒன்றொன்றாகக் கழரத் தொடங்கினர். ஜோசேப்பின் சேமிப்பு நாளுக்கு நாள் குறையத் தொடங்கி, ஒரு கட்டத்தில் வீடே வறுமையின் கோரப்பிடிக்குள் ஆட்பட்டிருந்தது. பிள்ளைகளின் பசித்த வயிற்றுக்குப் பச்சைத் தண்ணீர் கொடுக்கக் கூட எவரும் முன்வரவில்லை. எஸ்தர்தான் கூலி வேலைகளுக்குச் சென்று பிள்ளைகளை வளர்த்தாள், நன்றாகப் படிப்பித்தாள். பகலெல்லாம் கூலி வேலை. இரவு நேரங்களில் தூள் வறுத்து இடித்துப் பொதியாக்கியும் மரக்கறி, மிளகாய் வற்றல் போட்டும் கடைகளுக்கு விற்றுப் பணமீட்டினாள். அல்லும் பகலும் தன்னை மெழுகாக்கிப் பிள்ளைகளை ஆளாக்கினாள். அவர்கள் தேவைகளை நிறைவேற்றினாள்.

அப்பா உயிரிழந்து பதினான்கு வருடங்கள் மறைந்துவிட்டன. அப்பாவின் மரணம் அந்த வீட்டின் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் பாதித்தது. அதில் அதிக பாதிப்புக்குள்ளானது யோசுவாதான். அப்பா சுடப்பட்ட அந்தக் கணத்திலேயே அவன் உளப் பேரதிர்வுக்குள்ளாகி, ஒரு உறைநிலை மனநோயாளி ஆகி விட்டிருந்தான். ஆனால், அது வெளியே யாருக்கும் தெரியவில்லை. அவன் படிப்பில் வலு கெட்டிக்காரனாக இருந்தான். க.பொ.த. உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகள் பெற்று, கண்டி பெரதேனியா பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானான். மாநிறமாக இருந்தாலும், அவன் பேரழகன். அவனது சுருள் முடி அவனுக்கு இன்னும் அழகை அள்ளிக் கொடுத்தது. பார்ப்பவரை மறுமுறை பார்க்கத் தூண்டியது. இருபது வயதில் அவன் கண்டிக்கு அடியெடுத்து வைத்தான். அங்கே தகாத பழக்கவழக்கமுடைய மாணவர்களுடன் சேர்ந்து போதை வஸ்துக்கு அடிமையானான். அவனுடைய போதைப் பழக்கம், அப்பாவின் மரணம் அளித்த பெருந்துக்கம் ஆகிய இரண்டும் இணைந்து - அவனை வேறோர் உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்க வைத்தது. பல்கலைக்கழகத்தில் திடீர் திடீரென்று கோபப்பட்டான். சக மாணவர்களுக்கு அடித்தான். பெண் மாணவிகளைத் துன்புறுத்தினான். நாளாக நாளாக அவன் ஒரு மனநோயாளி போலானான். அவனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தினர்.

வீட்டுக்கு வந்த யோசுவா, தெல்லிப்பழை மனநல சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான். அங்கிருந்த நோயாளர்களில் அவன் மிக மோசமானவனாகக் காணப்பட்டான். அவனை அவனுக்கே தெரியவில்லை. அவன் இந்தப் பூமியிலே இல்லை. அவனுக்குள் ஒருலகம். அவ்வுலகில் அவன் சஞ்சரித்துக்கொண்டிருந்தான். அவனுடைய பழக்கங்கள் கூட அசாதாரணமானவையாக இருந்தன. வைத்தியசாலையில் அவனைக் கதை கேட்டால், சிலநேரம் குழந்தை போலக் குழைவான். சிலநேரம் கோபத்தில் கொதிப்பான். சிலநேரம் மௌனத்தில் உறைவான். குந்தியிருக்கும் இடத்திலேயே மலம் சலம் கழிப்பான். கழித்த மலத்தைத் தன் கைகளில் ஏந்திச் சென்று மலசலகூடத்தில் போட்டுத் தண்ணீர் ஊற்றுவான். சிலநேரம் தன் காற்சட்டைப் பொக்கெற்றில் அள்ளி வைப்பான். உணவு உண்ண, மருந்து குடிக்க மறுப்பான். குழறிக் கூப்பாடு போடுவான். உடனே வைத்தியர்கள் "இன்யெக்சன்" போட்டுத் தூங்க வைப்பார்கள். வைத்தியசாலையில் அவனுடைய பெரும்பாலான நேரங்கள் இப்படித் தூக்கத்தில் தான் கழிந்து கொண்டிருந்தன.

ஒருநாள் யோசுவாவின் அக்காவை அழைத்த மனநல வைத்திய நிபுணர், யோசுவாவின் நோய்நிலை பற்றிய உண்மைகளை அவளிடம் கூறினார். "இதோ பாரம்மா, உன் மனதைத் தேற்றிக்கொள். உன் தம்பி பற்றிய சில உண்மைகளை நான் சொல்லியே ஆகவேண்டும். அப்பாவின் இழப்பைக் கண்ணால் பார்த்த அதிர்ச்சிதான் அவன் மனநோயாளி ஆகக் காரணம். பொதுவாக சிறிய வயதில் தாங்க முடியாத இழப்புகளைச் சந்திக்கும் மனிதர்கள், இருபது வயதுகளில் தான் மனநோயாளியாக வெளிப்படுவர். உன் தம்பி ஆரம்பத்தில் நோய் நிலையுடன் உலாவினான். இப்போது நோயாளி ஆகிவிட்டான். இதனை ஓரளவு மனநலச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். ஆனால் கஞ்சா, ஹெரோயின் முதலான போதைவஸ்துகளுக்கு அவன் அடிமையானதால், அவனுடைய மூளையில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் குணப்படுத்துவது கடினம். அவன் எம் மத்தியில் வாழ்ந்தாலும், வேறோர் உலகில் வாழ்வது போன்றிருக்கும். கடவுள் கிருபையால் அவனுடைய வாழ்க்கையில் அதிசயம் நிகழ்ந்து குணமடைந்தால் ஒழிய, காலம் முழுக்க அவன் இப்படியேதான் இருப்பான் அம்மா. கடவுளிடம் மன்றாடு அம்மா" என்றார் அவர். தம்பியின் நிலையை எண்ணி மனதுக்குள் வெதும்பினாள் செலஸ்ரினா.

ஒருநாள் வீட்டிலிருந்து தம்பிக்கு உணவு எடுத்துக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்ற செலஸ்ரினா, அவனுக்கு உணவு ஊட்டிவிட்ட பின்னர் அங்கிருந்த விருந்தினர் இருக்கையில் இருந்து தம்பியைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள். நோயாளர்களைப் பார்ப்பதற்கு உறவினர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். யாரையுமே கண்டு கொள்ளாமல் அவள் நீண்டநேரமாகத் தனிமையில் இருந்தாள். அவளைக் கவனித்த உளவளத்துணைப் பெண் உத்தியோகத்தர் ஒருவர் அவளை நெருங்கிக் கதைகொடுத்தார். "தங்கச்சி! என்னம்மா யோசனை?" என்று கேட்டார். சில நொடிகள் அவரை வெறித்துப் பார்த்த செலஸ்ரினா, பின்னர் பார்வையை வேறு திசையில் திருப்பினாள். அவளுக்கு அருகில் அமர்ந்த அந்தப் பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர், "இதோ பாரம்மா.... நான் ஒரு உள வளத்துணை உத்தியோகத்தர். உன்னை நீண்டநேரமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். நீ பெரியதொரு துன்பத்தில் இருப்பது தெரிகிறது. உன் துன்பத்தை என்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினால், சொல்லம்மா. மற்றும்படி நான் உன்னை வற்புறுத்தவில்லை" என்றார். அதுவரை இரும்பாய் இருந்த செலஸ்ரினாவின் உள்ளம் ஈயமாய் உருகியது. தன் தம்பிபற்றி அந்த உத்தியோகத்தரிடம் அவள் கூறிக் கண்ணீர் வடித்தாள். "என் தம்பி படிப்பில் நல்ல கெட்டிக்காரன். அவன் பெரதேனியா கம்பஸுக்கு படிக்கப் போன இடத்தில், அவனுடைய நண்பர்கள் சோடாவுக்குள் ஹெரோயின் பவுடர் கலந்து குடிக்கக் கொடுத்துள்ளனர். ஆனால், அதற்குள் அந்தப் போதைப் பவுடர் கலந்தது தம்பிக்குத் தெரியாது. அந்தப் பானம் அவன் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. அவன் அதற்கு அடிமையாகி விட்டான். இப்போது கஞ்சாவும் பாவிக்கத் தொடங்கிவிட்டான். அவனைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அவன் சின்னப் பிள்ளையாக இருந்தபோது, யாரோ இனந்தெரியாத ஆட்கள் வீட்டுக்கு வந்து அப்பாவைச் சுட்டுக் கொன்றுவிட்டனர். அதனைப் பார்த்த அதிர்ச்சியும் அவனது இந்த நிலைமைக்குக் காரணம்" என்று சொல்லி அழுதாள். தன் தொழில், மற்றத் தம்பி தங்கையர், தாயார் பற்றியும் - தன் குடும்பக் கதையை ஒன்றுவிடாமல் செலஸ்ரினா சொன்னாள். அவள் சொல்வதையெல்லாம் அமைதியாகச் செவிமடுத்து அவளைத் தேற்றிய அந்த உளவளத்துணை உத்தியோகத்தர் தன் கைபேசி இலக்கத்தைக் கொடுத்து, "நீ தைரியமாக இரும்மா. என்னுடன் கதைக்கனும் போல இருந்தால் எந்நேரமும் என்னுடன் பேசலாம். எல்லாம் ஒருநாள் மாறிவிடும். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார் அம்மா" என்று கூறி விடைபெற்றார்.

நாட்டில் இடம்பெற்ற போர் யோசுவா போன்ற ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை நிரந்தர மனநோயாளி ஆக்கிவிட்டது. போருக்குப் பின்னரான போதைப்பொருள் பாவனையும் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையை அடியோடு நாசம் செய்துவிட்டது. இவர்களுக்கான ஆற்றுப் படுத்தல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தாலும், அது போதாது. நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் செலஸ்ரினா போன்ற குடும்பங்கள் கதறும் ஓசைகள் காற்றோடு கலந்து, கலைந்து போகின்றன. உரிய அதிகாரிகள் இவர்களை இனங்கண்டு சேவையாற்ற வேண்டும். இவர்களுக் கான தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அந்த உத்தியோகத்தர் நினைத்தவாறு தன் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்தார்.

யோசுவா ஓரளவு குணமாகி வீட்டுக்கு வந்த சில நாட்களிலேயே அட்டகாசம் செய்யத் தொடங்கிவிடுவான். வீட்டுக் கதவைக் கோடரியால் கொத்துவது, யன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்குவது என்று பெரும் ரகளை செய்வான். உடனே பொலிஸாரின் உதவியுடன் அவன் தெல்லிப்பழை மனநல சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படுவான். இவ்வாறு வைத்திய சாலைக்குச் செல்வதும் வீட்டிற்கு வருவதுமாக அவனது காலங்கள் கழிந்தன. வீட்டுக்கு வந்தால், கஞ்சா கேட்டுத் தாயைத் தொந்தரவு செய்வான். காசு தருமாறு வற்புறுத்துவான். தாயார் காசு கொடுத்தவுடன், கஞ்சா பாவித்துவிட்டு இரவு நேரங்களில் வந்து வீட்டை இரண்டாக்குவான். யோசுவாவால் அந்தக் குடும்பம் தீராத் துயரில் ஆழ்ந்திருக்கிறது.

யோசுவாவின் செயற்பாடுகளால் எஸ்தர் வேலைக்குப் போவதை நிறுத்திவிட்டு, வழமையான சுயதொழில் மட்டும் செய்தாள். வீட்டு வருமானம் போதவில்லை என்பதால், க.பொ.த. உயர்தரம் படித்துக்கொண்டிருந்த ஜோன் படிப்பை இடைநிறுத்திவிட்டுக் கூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினான். அவனைப் படி படியென்று எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. செலஸ்ரினா தாதியக் கற்கை நெறி முடித்து, ஒரு தனியார் மருத்துவமனையில் தாதியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறாள். செரீனா க.பொ.த. சாதாரண தரத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள். கல்வியில் இவளும் கெட்டிக்காரி. ஆயினும், குடும்பநிலை அவளுக்குக் கற்பதற்குரிய சூழலைக் கொடுக்கவில்லை. போதாக்குறைக்கு கொறோனா அளித்த வறுமையும் அவர்களை வாட்டியது.

போதைப் பழக்கத்துடன், வெற்றிலை குதப்பும் பழக்கத்திற்கும் அடிமையானான் யோசுவா. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை போட்டு மென்று வீடெல்லாம் துப்புவான், வீட்டு முற்றத்தில் கோலம் போடுவான். வீட்டுக் கிணற்றுக்குள் கோழிகளைப் பிடித்துச் சென்று போடுவான். சமைத்த உணவுகளை எடுத்து நாய்க்குக் கொட்டுவான். இப்படி அவன் நாளாந்தம் செய்துகொண்டிருந்தான். இவனது நடவடிக்கைகளால் அக்கம் பக்கத்தினர் கூட இவர்களது வீட்டிற்கு வருவதற்குப் பயந்தனர். அவன் செய்யும் அனைத்தையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தாள் எஸ்தர்.

சிந்தனைகளால் அலைக்கழிக்கப்பட்டுக் களைப்புற்ற எஸ்தரின் உள்ளம் சோர்வுற்றது. கண்கள் உறங்குவதற்கு அடம்பிடித்தன. காலை புலர்ந்ததும் தெரியாமல் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். “அம்மா பாவம், படுக்கட்டும்” என்று நினைத்த செலஸ்ரினா, தம்பி தங்கையருக்குத் தேநீர் மற்றும் காலை உணவு தயாரித்துப் பரிமாறிக் கொண்டிருந்தாள். கண் விழித்துப் பார்த்த எஸ்தர், “நீண்டநேரம் உறங்கிவிட்டேனே...” என்று பதறியபடி எழுந்து அடுப்படிக்குள் சென்றாள். அங்கே பிள்ளைகள் காலை உணவு உண்டு கொண்டிருந்தனர். தாயாருக்குத் தேநீர் ஊற்றிக்கொடுத்தாள் செலஸ்ரினா. தேநீரைப் பருகியவாறு யோசுவாவின் படுக்கையருகே வந்தாள் எஸ்தர். அவன் மாத்திரைகள் குடிக்கமாட்டான். அவனுக்குத் தெரியாமல் சாப்பாட்டுக்குள்ளும் தேநீருக்குள்ளும்தான் அவள் மாத்திரைகள் கலந்து கொடுப்பதுண்டு. மாத்திரைக் கனதியாலும் போதைப்பொருள் மயக்கத்தாலும் அவன் அடித்துப் போட்டதைப் போல கை, கால்களை இடறியபடி படுத்திருந்தான். “ஆண்டவரே! என் பிள்ளை எப்போது குணப்படுவான்?” என்று இயேசுபிரானிடம் அவள் மனதுக்குள் மன்றாடிக் கொண்டிருந்தாள். “அம்மா! போட்டு வாறோம்” என்று பிள்ளைகள் மூவரும் தாயாருக்கு முத்த மிட்டனர். அவர்களுக்குப் பதில் முத்தம் கொடுத்துக் கடமைகளுக்கு அனுப்பி வைத்தாள் எஸ்தர்.

இப்படியே காலப்பெருவெளி சுழன்றுகொண்டிருந்தது. பாடசாலை நாட்கள் தவிர சனி, ஞாயிறு தினங்களில் செரீனா வீட்டில்தான் இருப்பாள். அக்கா, சின்ன அண்ணா வேலைகளுக்குப் போய் விடுவார்கள். அம்மா கடைக்குப் போகும் நேரங்களில், யோசுவா செரீனாவை தப்பான கண்ணோட்டத்துடன் நெருங்குவான். அவள் பயந்து ஓடினால், அவளை விட்டுத் துரத்துவான். அவளது உள்ளாடைகளைத் திருடித் தன்வசம் வைத்திருப்பான். அறைக்குள் அவள் படுத்திருந்தால், யன்னலால் அவளை எட்டிப் பார்ப்பான். இப்படித் தங்கையை வேட்டையாடத் தொடங்கினான். ஆரம்பத்தில் இதனை யாருக்கும் சொல்லாமல் மறைத்த செரீனா, பின்னர் தன் அக்காவிடம் சொல்லி அழுதாள். பயந்து நடுங்கினாள். “பயப்பிடாதை செரிம்மா, அக்கா இருக்கிறேன். அண்ணாவை குடிவெறுப்புச் சிகிச்சை நிலையத்தில் சேர்த்து விடுவோம். நீ தைரியமாக இரும்மா, நன்றாகப் படியம்மா” என்று ஆறுதல் கூறினாள். ஆனாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செலஸ்ரினாவும் சற்றுப் பயந்தாள். வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தங்கையை யோசுவா வன்புணர்வு செய்தாலும் செய்து விடுவான் போல என்று நினைத்தாள். இதுபற்றி ஒருநாள் இரவு அவள் தாயாருடன் கதைத்துக்கொண்டிருக்கும் போது, யோசுவா ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தான். "அம்மா! வர வர யோசுவாவின் போக்குச் சரியில்லை. அவனுக்கு எந்த மருத்துவ சிகிச்சையளித்தும் பலனில்லை. அவன் இந்த வீட்டிலேயே இருக்கட்டும். நாங்கள் அவன் கண்ணில் படாதவாறு வேறு எங்காவது வாடகை வீடு எடுத்துப் போய் விடுவோம். அதற்கு முதல் செரீனாவை கொஸ்டல்ல சேர்க்கணும். அவளென்றாலும் நன்றாகப் படிக்கட்டும் அம்மா" என்று தாய் மனது புண்படாதவாறு நாசூக்காகக் கூறினாள் செலஸ்ரினா. யோசுவாவின் நடவடிக்கைகளை எஸ்தரும் கவனித்துக்கொண்டுதான் வந்தாள். "சரியம்மா, ஆண்டவர் விட்ட வழி. நீ சொன்னபடியே செய்வோம். போய்ப் படுத்துத் தூங்கம்மா" என்றாள் எஸ்தர்.

செலஸ்ரினா அறைக்குள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, தாயார் அருகே வந்தான் யோசுவா. "அம்மா! செரீனாவை கொஸ்டல்ல சேர்க்கப் போறியளோ? என்னை விட்டு அவளை எங்கும் பிரித்துச் செல்லக்கூடாது. அப்படிப் பிரித்துச் செல்பவரைக் கொலைதான் பண்ணுவேன்" என்று கூறியவாறு றீப்பையால் தாயாரின் மண்டையை அடித்து உடைத்தான் யோசுவா. தாயாரின் அலறல் ஒலி கேட்டு வெளியே வந்த செலஸ்ரினாவும் ஜோனும் யோசுவாவுக்கு அடி அடியென்று அடித்தனர். செரீனா பொலிஸாருக்குத் தொலைபேசி மூலம் விடயத்தைக் கூற, அவர்கள் அங்கு விரைந்து வந்தனர். எஸ்தரை வைத்தியசாலையில் சேர்த்து விட்டு, யோசுவாவை விலங்கிட்டுப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். மறுநாள் அவனை நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்த, மீண்டும் யோசுவா தெல்லிப்பழை மனநல சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான்.

யோசுவா வைத்தியசாலை சென்று எட்டு நாட்கள் ஆகிவிட்டன. எஸ்தர் சிகிச்சை பெற்று வீட்டுக்கு வந்துவிட்டாள். எஸ்தருக்கு தலையில் பலத்த காயம். 12 இழைகள் போடப்பட்டிருந்தன. அவள் உயிர் தப்பியதே அபூர்வம் என்று வைத்தியர்கள் கூறினர். வீட்டுக்கு வந்தும் அந்தத் தாய்மனம் ஓய்வெடுக்கவில்லை. தனது வலியையும் பொருட்படுத்தாது, யோசுவாவுக்கு உணவு சமைத்து எடுத்துக்கொண்டு அவனைப் பார்க்க வைத்தியசாலைக்குப் புறப்பட ஆயத்தமானாள். "எங்கே கிளம்பியாச்சும்மா?" என்று செலஸ்ரினா கேட்க, "யோசுவாவை பார்க்கப் போறேன் புள்ளை" என்றாள் அவள். "உங்களைக் கொலை செய்யிற அளவுக்கு மாறி விட்ட அவனை ஒன்றும் பார்க்கப் போக வேண்டாம். பேசாமல் கிடவுங்கோ" என்று தாயாரைத் தடுத்தாள். எஸ்தர் கேட்கவில்லை, கேற்றைத் திறந்து கொண்டு பேருந்தைப் பிடிப்பதற்காகப் பொடிநடை நடந்தாள். "தாய்மை இத்தனை பலவீனமானதா அம்மா?" என்று தனக்குள் கேட்டவாறு கண்களில் நீர் வழியத் தாயாரையே பார்த்துக்கொண்டிருந்தாள் செலஸ்ரினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுமை பேணுவதில் மரங்களின் பங்களிப்பு

திரு. ச. பாஸ்கரகுரு,
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

மரம் வளர்ப்பு என்பது ஒரு கலை வெயில் காலம் வந்தால் சுட்டெரிக்கும் வெயிலில் உடனே நாங்கள் ஓடி வருவது மரநிழலில் தான் எங்களையும் எங்கள் மூதாதையறையும் வாழ வைத்தது இந்த மரம் தான். மரத்தால் நாம் அடைகின்ற பலாபலன்கள் எண்ணிலடங்காதவை நாங்கள் அந்த மரத்தை தறிக்கும் போது அந்த மரம் அழுவதாக உயிரியலாளர்கள் உறுதிபடக் கூறுகின்றார்கள். மரத்திற்கும் உயிர் உண்டு என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. நாங்கள் ஒரு மரத்தை தறிக்கிறோம் என்று சொன்னால் அதற்காக நிறைய மரங்களை நாட்டவேண்டும். இளந்தலைமுறையினரை மரவளர்ப்பு செயற்திட்டத்தில் ஈடுபடுவதற்கு அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊக்கப்படுத்த வேண்டும். இவர்களுக்கு பரிசில்களை வழங்கியோ அல்லது அரச வேலைவாய்ப்பு வழங்க முன்வருகிறபோது அவர்கள் எத்தனை மரங்கள் நாட்டியிருக்கிறார்கள் என்பதனை கவனத்தில் எடுக்க வேண்டும்.

சில திட்டங்கள் வெற்றி அடைவதும் வேறு சில திட்டங்கள் தோல்வி அடைவதும் அதனை செயற்படுத்துகிறவர்களின் ஆர்வத்திலும் அவர்களின் கையிலுமே இருக்கிறது. சில திட்டங்களில் ஈடுபடுவோர் படப்பிடிப்புக்கும் குறித்த நிகழ்வினையும் மையப்படுத்தியும் மரக்கன்றுகளை நட்டு விட்டு தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததால் கன்றுகள் நடப்பட்டது என்ற நிலைமைக்கு உள்ளாகிறது. இதனால் தான் இன்று சமூக ஆர்வலர்கள் பலரும் மரக்கன்றுகள் நடுகின்ற போது நன்றாக வளர்த்த மரக்கன்றுகளை நட்டு அவற்றை இரண்டு வருடத்திற்கு மேல் கண்காணித்து தொடர்ச்சியான வெற்றிகளையும் பெற்று வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு குழந்தையை தாய் பிரசவித்தல் மட்டும் போதாது அதற்குரிய நேரத்தில் பாலூட்டி சோறூட்டி கல்வி புகட்டி நல்லொழுக்கத்தினை கற்றுக் கொடுத்து சிறந்தவராக மாற்றுகிறாறோ அதேபோல் மரக்கன்றுகளையும் பிள்ளைபோல் பராமரித்தால் சிறந்த நற்பயன்களை தருகின்ற மரங்களாக மாறும் என்பதில் ஐயமில்லை. மனிதர்களுடன் அன்பாக பண்பாக பழகுகிறபோது எவ்வாறு மற்றவர்கள் நடந்து கொள்கிறார்களோ அதே போல் மரங்களுடனும் அன்பாக நடக்கிற பொழுது மரங்களும் நன்றாகவும் சிறப்பாகவும் வளர்ந்து சிறந்த பயன்களை தரும்.

தாவரவியலாளர்கள் காலத்துக்குக்காலம் மேற்கொள்கின்ற ஆய்வுகளில் பல உண்மை களைக் கண்டறிந்துள்ளார்கள். அந்த ஆய்வுகளில் குறிப்பிடும் படியான சிலமுடிவுகள் தாவரங்கள், இசையை மனிதர்கள் எவ்வாறு இரசிக்கிறார்களோ அவ்வாறு அவையும் இரசித்து சிறந்த பயனை மனிதர்களுக்கு வழங்குகிறது அதே போல் ஒரு கன்றை அன்பாக பராமரிக்கிற போது கன்றுகள் சிறப்பாக வளரக்கூடியதாகவும் ஏனோதானோ என்று பராமரிக்கின்ற கன்றுகள் செம்மையாக வளர்ச்சியடையாது பட்டுப் போகின்ற நிலைப்பாடுகளை தாவரவியல் ஆராய்ச்சி யாளர்கள் உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, நடைமுறையிலும் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொருவரும் கன்றுகளை நட்டால் மட்டும் போதாது. அதை திட்டமிட்டுப் பராமரிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்த கூடியதாக இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மரமும் எவ்வளவு விஷயங்களை தந்து கொண்டிருக்கின்றன. பிரதானமாக ஒட்சிசனை எடுத்துக் கொண்டால் சுவாசிப்பதற்கு இன்றியமையாத வாயுவாக காணப்படுகிறது. இவற்றை மரங்களைத் தவிர வேறு யாராலும் வழங்க முடியாது. அடுத்து நிழலை எடுத்துக் கொள்ளுங்கள் : இன்றை கால AC பாவனையில் எத்தனையோ விதவிதமான நோய்கள் மனிதனை பாழாக்குகிறது. ஆனால், மரங்களால் வருகின்ற குளிர்மைக்கு ஈடு இணை இல்லை மட்டுமன்றி சுவாசிப்பதற்குச் சிறந்த காற்றாக காணப்படுகின்றது.

மரத்தின் சிறப்பினை உணர்வதற்குப் பின்வரும் பாடலைக் கிராமங்களிலும் தெருக் கூத்துகளிலும் பாடுவார்கள்.

*மண்ணை நம்பி மரம் இருக்க*
*மரத்தை நம்பி கொப்பு இருக்க*
*கொப்பை நம்பி கிளை இருக்க*
*கிளையை நம்பி காய் இருக்க*
*காயை நம்பி கனி இருக்க*
*கனியை நம்பி நாம் இருக்க*
*உன்னை நம்பி நான் இருக்க*
*என்னை நம்பி நீ இருக்க*

சுயநலத்தின் பிடியில் சிக்கிய சமுதாயம் இயற்கையை அழித்து, மரங்களை வெட்டி, காடுகளைக் குறைத்து, தன் தலையில் தானே தீ வைத்துக் கொள்கிறது. இவ்வறிவற்ற செயலைத் தடுக்க வேண்டும். அந்தவகையில் 700 கோடி மரங்கள் நடும் திட்டத்தை ஐ.நா.சபை கொண்டு வந்து முதற் கட்டமாக 300 கோடி மரங்களை அமுல்படுத்தியுள்ளது. கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை மரங்களுக்கும், காடுகளுக்கும் மட்டுமே உண்டு. மாறாக காடுகள் அழிக்கப்படுவதனால் மனிதனால் உருவாக்கப்படும் கசியமில வாயு மொத்த கரியமில வாயு உற்பத்தியில் 20% பங்களிப்புச் செய்வதாக புள்ளிவிபரம் கூறுகிறது.

ஐ.நா. சபையின் சுற்றுச்சூழல் திட்டத்தின் கீழ் 2006இல் மரங்கள் நடுகின்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த மரங்கள் நடும் திட்டத்தில் பல்வேறு நாடுகள் கோடிக்கணக்கான மரங்களை நட்டு பராமரித்து வருகின்றன. இயற்கை அழிவுகள் என்றுமில்லாத வகையில் தற்காலத்திலே அதிகமாக காணப்படுவதனால் மரங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை பற்றி ஐ.நா.சபை உணர்ந்தது மட்டுமன்றி, பல்வேறு நாடுகளையும் அச்செயற்திட்டத்தில் ஈடுபடுத்தி வருகின்றது. இயற்கையை நாம் நேசிக்க நேசிக்க இயற்கை நமக்குத் தேவையான எல்லா விடயங் களையும் வழங்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு செயற்கையாக ஏற்படுத்தப்படும் அழகை விட, இயற்கையாக வருகின்ற அழகே உண்மையான அழகாகும்.

ஊர்காவற்துறை பிரதேசத்தை பொறுத்தவரை மிகவும் வரட்சியான பிரதமாக காணப்படுவதனால், புதிதாக மரங்கள் உற்பத்தியாவதும் நடுகை செய்வதும் மிகவும் குறைந்த மட்டத்திலே காணப்படுகிறது. குறிப்பாக பிரதேசத்தில் உள்ள வசதி படைத்தோரும் கல்வி மான்களும் வேறு பிரதேசங்களுக்கு குடியெர்ந்து செல்கின்றனர். இதனால் குறித்த பிரதேசத்தில் கல்வியறிவு குறைந்த சமூகம் தொடர்ந்து இருப்பதனால் புதிதாக வளர்ச்சியடைந்து வரும் மாணவர் சமூகமும் பாதிப்படைந்து வருகின்றது. இவற்றை கட்டியெழுப்ப வேண்டுமாயின், பல சமூக மட்ட அமைப்புக்கள் குறித்த சேவைக்கு முன்வரவேண்டும். இதன் மூலம் ஊர்காவற்றுறை பிரதேசத்தின் எதிர்கால சந்ததியையாவது குறித்த பிரதேசத்தில் தக்க வைத்து ஊர்காவற்துறையை பேண்தகு அபிவிருத்தியில் உச்சநிலைக்கு கொண்டு செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைக்காலங்களில் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பல கிணறுகளில் தண்ணீர் என்பது முற்றாக கிடையாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் பிரதேசம் வரட்சியான பிரதேசமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இதனால் இங்கு கன்றுகளை நட்டால் வளராது என்ற எதிர்மறை எண்ணத்தில் பலர் இருக்கின்றனர். இந்த எண்ணத்தை மாற்றியமைத்து ஊர்காவற்துறையில் புதிய புத்தெழுச்சி ஏற்பட வேண்டும் என்பது அனேகமான இயற்கை ஆர்வலர்களின் விருப்பம். இதனைச் செயற்படுத்த ஒரு சில தனிப்பட்ட ஆர்வலர்களும் சில அமைப்புகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக, பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் நந்தகுமார் பல இடங்களில் மரக்கன்றுகளை நடுகை செய்து வருகின்றார். அதேபோல் வைத்தியர் யதுநந்தன் பல்வேறு வகையான மரக்கன்றுகளை உரிய அமைப்புக்களுக்கு விநியோகித்து அவர்கள் ஊடாக நடுகை செய்து வருகின்றார். அதேபோல் தொன்மைக் குடிகள் என்ற அமைப்பும் பனை விதைகளை பிழரதேச செயலகத்துடன் இணைந்து நடுகை செய்து வருகின்றார். இப்படி ஏராளமான தனிப்பட்ட நபர்களும் சமூகமட்ட அமைப்புகளும் வெவ்வேறு இடங்களில் மரக்கன்றுகள் நடுகை செய்வது மட்டுமன்றி காணிகளைத் துப்பரவு செய்கின்ற போது கனரக வாகனங்கள் பாவிப்பதைத் தவிர்த்து கூலியாட்கள் ஊடாக செய்தால் இயற்கையாக உருவாகியுள்ள மரங்கள் பாதுகாப்பாக வளரக் கூடிய சூழல் ஏற்படும்.

இன்றைய காலத்தில் இந்தியாவின் பல பிரதேசங்களில் பல தனிப்பட்ட நபர்கள் இலட்சக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் மரங்கள் நாட்டி வருவதனை காணக்கூடியதாக உள்ளது. இந்த மரங்கள் செறிந்து வளர்ந்தால் மாத்திரமே நிறைய மழைவீழ்ச்சியை பெற்று ஒரு நாட்டின் விவசாய உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கும். இதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரித்து அவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்கு வழிவ;குக்கும்.

கடந்த காலத்திற்கு மழை வீழ்ச்சியின் கால இடைவெளி குறைவாக காணப்படுகிறது. இதனால் இன்று நல்ல தண்ணீருக்கு எங்கமே தட்டுப்பாடு நிலவி வருவதனை காணக்கூடியதாக உள்ளது. இதற்கான நிலத்தடி நீரில் நன்னீரின் அளவு குறைந்து சென்றமையே ஆகும். கடந்த காலங்களில் அதிக காலஇடைவெளியில் பெய்த மழைநீரை குளங்களில் மக்கள் சேமித்து வைத்து பாவித்ததோடு கிணற்று நீரை துலா அல்லது கைவாளி உதவியுடனே பெற்றிருந்தனர். இதனால் ஊறுகின்ற வேகத்தை விட எடுக்கிற வேகம் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது ஊறுகின்ற வேகத்தை விட எடுக்கின்ற வேகம் அதிகமாக இருக்கின்ற வகையில் மோட்டார் பயன்படுத்தப்படுகிறது. இதனால் தண்ணீர் உவர் நீராக இருக்கின்றது. அத்தோடு இன்றைய காலத்தில் குழாய் கிணறுகளின் பாவனை அதிகமாக இருக்கிறது. இக் குழாய் கிணறுகள் பூமியின் 70 அடி ஆழத்துக்கு அதிகமாக தோண்டப்படுவதனால் உவர்நீர் ஊற்றும், நன்னீர் ஊற்றும் காக்கப்பட வாய்ப்பிருக்கிறது. இதனால் நன்னீரை பெறுவது என்பது பாரிய சவாலான விடயமாக காணப்படும். இவற்றிலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டுமானால் மக்கள் குழாய்கிணறுகள் அடிப்பதை இயன்றவரை தவிர்க்க வேண்டும்.

மரங்கள் தியாகத்தின் முழு உருவங்கள் எனலாம். நிழல், மலர், மணம், காய், கனி என தம் இலை குழைகளையும் உணவாகத் தந்து நம்மை காக்கிறது. உணவுக்கு பின் தேவையானது உறையுள் அதாவது தங்கி வாழ இருப்பிடம் அந்த இருப்பிடத்தின் கூரையாகவும் கதவு, பலகணி, கட்டில், நாற்காலி முதலியவற்றுக்கான மூலப்பொருட்களையும் தருகின்றது. இலைகளையும், வேர்களையும், பட்டைகளையும் பிணி நீக்கும் மருந்தாக அளிக்கின்றன. ஏன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பிராண வாயுவையும் தருகின்றன. அதாவது தாமே தமது உணவைத் தயாரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் ஒருத் தொகுப்பு செயற்பாட்டின் மூலம் காபனீரொட்சைட்டு வாயுவை உள்ளெடுத்து ஒட்சிசன் (பிராணவாயு) வாயுவை வெளிவிடுகின்றன. தீ மூட்ட விறகாக உதவுகின்றன. பசுமையோடு உயிர் கொண்டும் அழிந்தும் அடி முதல் நுனி வரை உயிரினங்கள் வாழ்க்கைக்குத் தம்மை முழுவதுமாக கொடுத்து விடுகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தாவரங்கள் மனித செயற்பாடுகள் மூலம் அழிவுற்று வருகின்றது. இதற்கு உலகமயமாக்கலும், நகர மயமாக்கலும் பிரதான காரணம். இன்று நகர்ப் புறங்களில் மரம், செடி, கொடிகள் அழிக்கப்பட்டு சீமெந்தும் கட்டடங்களாக மாறி விடசூழல் மாசு, மழையில்லாமை, உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு கால்நடைகளுக்கு உணவில்லாமல் போதல் என ஏராளமான சூழல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

இதன் காரணமாக சரும நோய்கள், சுவாசம் தொடர்பான நோய்கள், புற்றுநோய்கள் என புதிய புதிய நோய்கள் மனிதர்களை வாட்டி வதைக்கின்றன. இதற்கு காரணம் நாம் தாவரங்களை அழித்து பூமியின் சூழல் சமநிலையை அழித்தமையாகும். எனவே இனியேனும் தாவரங்கள் அழிப்பதை தவிர்த்து அவற்றை பாதுகாப்புடனும் முடிந்தவரை நட்டு சிறப்பாக வளருங்கள். இதன் மூலம் எனது எதிர்கால சந்ததியாவது சிறந்த சூழலில் சிறப்பாக வர வழிவகுக்கும்.

*சாந்தனையும் தீயனவே*
*செய்திடினும் தாமவரை*
*ஆந்தனையும் காப்பர்*
*அறிவுடையோர் - மாந்தர்*
*குறைக்குந் தனையுங்*
*குளிர் நிழலைத் தந்து*
*மறைக்குமாங் கண்டீர் மரம்!*

(மூதுரை)

விளக்கம் : அறிவுடையோர் யார் என்றால், சாகும் வரையில் ஒருவர் கெடுதியையே செய்தலும் தன்னால் முடிந்த வரையில் அவரைக் காப்பாற்றுபவரே அறிவுடையார் ஆவார். மரம் தான் சாயும் வரையில் தன்னை வெட்டுபவனுக்கு குளிர்ந்த நிழலைத் தந்து அவன் குற்றத்தை மறைப்பது போல.

இவ்வாறான விழிப்புணர்வு ஆக்கங்கள் எவ்வளவு வந்தாலும் அவற்றினால் ஒரு சிறிய மாற்றத்தையே ஏற்படுத்த முடியும். இவ்வாறான செயற்திட்டங்களை பிரதேச சபை, பிரதேச செயலகங்களில் பாரிய அளவில் வெற்றிஅடைய வேண்டும் எனின் மக்களுக்கு ஏதாவது கொடுப்பனவு மேற்கொண்டு ஊக்குவித்தால் மாத்திரமே வெற்றி கிடைக்கும். இவற்றின் மூலம் சங்கத்தின் பேண்தகு அபிவிருத்தியின் நோக்கத்தை நிறைவு செய்ய பேருதவியாக இருக்கும். குறிப்பாக, சமுர்த்தி பயனாளிகளுக்கு மாதத்திற்கு ஒரு கன்று என்ற அடிப்படையில் நட்டு அவர்கள் இரண்டு வருடம் பராமரித்தல் மாத்திரமே அவர்களுக்கு ஏனைய சலுகைகள் கிடைக்கும் என்று நிபந்தனையின் அடிப்படையிலும் பிரதேச செயலக மட்ட அடிப்படையில் ஊக்கப்படுத்த முடியும். அதேபோல் பிரதேச சபைகளில் உள்ள வட்டார உறுப்பினர் தன்னுடைய மாதாந்த கொடுப்பனவில் சிறிய பகுதியை மர வளர்ப்புக்கு என செதுக்குதல் வேண்டும். இதனை விட வேறு வழிகளிலும் மக்களை ஊக்குவித்து, மர வளர்ப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல. 66 விஷாலினி

திரு. சின்னத்தம்பி இதயராசன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர். (ஓய்வு நிலை)

இன்று நேற்றல்ல சுமார் ஐம்பது வருடங்களாக இதே கடலில், இதே படகில் பயணம் செய்கின்றேன். ஆனால் எனக்குச் சொந்தமில்லாத அன்னிய தேசத்தில், முகங்களே தெரியாதவர்களுடன் தனித்து விடப்பட்டவன் போன்ற உணர்வு. ஏழாற்றுப் பிரிவின் நீரோட்டம் படகினை உலுக்குகின்றது. படகு இப்படியே கவிழ்ந்து விடாதா? அல்லது 'குமுதினிக்கு' நடந்தது போல ஒரு கொடூரம் நடக்காதா?! என்று மனம் விரும்புகின்றது. நான் நினைத்தால் மட்டும் அது நிகழ்ந்துவிடுமா? அதையும் தாண்டிப் படகு சீராகச் செல்கின்றது.

ஒரு நாளும் இல்லாமல் ஊரின் மீதும், அங்குள்ள மக்கள் மீதும் எதிர்மறைச் சிந்தனைகள் அலை அலையாக மூளையைக் கடுப்பேற்றுகின்றன. அவற்றினை நினைப்பினிலே அழித்துவிடுமாறு புத்தி சொல்கின்றது. இருப்பினும் என்னால் முடியவில்லை. ஏன் நான் என்னையே வெறுக்கின்றேன். எனது மன அழுத்தத்தினைத் தணித்து, ஒரு பறவைபோல் மேலிருந்து பிரச்சினைகளைப் பகுத்தாராய அறிவுக்கண் என்னைத் தூண்டுகின்றது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் பனை, தென்னை மரங்கள் சூழ்ந்த பசிய சோலை யுடனான எனது தீவு, என்னை வரவேற்பது போன்ற நிர்மலமான உணர்வு மெய்யினைச் சில்லிட வைக்கின்றது. சூடேறிய மண்டை குளிர்கின்றது. நான் நானாக யதார்த்தத்தினை எதிர்கொள்ளும் துணிவுடன் நீரலைகளில், நிதானித்துச் செல்லும் படகினை வேடிக்கை பார்க்கின்றேன். கடல் மீன்கள் சிறுவர்கள் போல, உயர உயர எழுந்து குத்துக்கரணம் அடித்து மகிழ்கின்றன. கடற் பறவைகள் அவற்றில் ஒன்றினையாவது தமக்கு இரையாக்கும் அடக்க முடியாத ஆர்வத்துடன், கடலையும் ஆகாயத்தையும் நோக்கிப் பறந்து வினோதம் புரிகின்றன. கிராமத்தின் கலாசாரத்தினை மீறியதோடு, கிராமத்தின் இயல்பு நிலைமைக்கு ஊறுவிளைவிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளதால், இக்கடிதம் கண்டவுடன் விசாரணைக்கு வரவும். செயலாளர், பிரதேச சபை என்பதே எனக்கு நேற்றுக் கிடைத்த கடிதம்.

எனது தந்தையார் கல்விகற்று அரச உத்தியோகம் பார்த்தவர். கிராமத்தவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர். அவரின் சொல்லுக்கு மந்திரம் போல் கட்டுண்டனர் ஊர்மக்கள். அவர்களுக்கு வரும் தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான கடிதங்களை வாசித்து, விடயங்களைத் தெளியவைப்பதோடு, பதில் கடிதம் எழுதுவதும் அப்பரின் பொதுத் தொண்டாகவே இறுதிவரை இருந்து வந்துள்ளது, ஊர் வழக்கில் சொல்வதானால், பெரியமனிசன் வம்புதும்புக்குப் போகாதவர்.

ஊரில் நடக்கும் அநீதிகளை, நிர்மலமாக நின்று நிதானித்து நோக்கி, காலத்தால் தீர்வுகிட்டும் என்று மக்களை அமைதிப்படுத்துவார் அப்பர். பின்னர் அவற்றினை உரிய இடங்களுக்கு மனுக்கள் எழுதித் தெரியப்படுத்துவார். சில தருணங்களில் அதிகாரிகள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மந்தப்பட்வர்களை விசாரிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்களை எச்சரிக்கை செய்வதுண்டு. ஆனால் ஒரு சில மாதங்களில் மீண்டும் எல்லாம் மறக்கப்பட்டு, அநீதிகள் அரங்கேறும். அப்பரின் இந்தச் செயற்பாடு எனக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை. நடக்கும் அநீதிக்கு எதிராக மக்கள் நேருக்கு நேர் கேள்வி கேட்கவேண்டும். அவர்களின் கொட்டத்தினை அடக்கவேண்டும் என்பதே எனது விடாப்பிடியான கொள்கையாகும்.

எனது கொள்கையும், பிடிவாதமும் தமது பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாக, அப்பர் மட்டுமல்ல குடும்பத்தவர் எல்லோரும் சேர்ந்து, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். விளைவு நான் பதினைந்து பதினாறு வயதளவில் ஊர்கடத்தப்பட்டு, அயல் தீவுக்குப் புலம் பெயர்ந்தேன்.

சும்மா சொல்லக்கூடாது, அங்கு போன பின்பு, எனக்கு நல்ல பேர். நான் திருந்திவிட்டேன் என்று பொருள் அல்ல, ஊரில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தினால், எனது போராட்ட அணுகு முறையினை மாற்றியமைத்தேன். பாதிக்கப்படும் பயனாளிகளை இனம்கண்டு, அவர்கள் போராடுவதற்கான உணர்வினையும், உரிமையையும் முளையாக விதைப்பேன். பின்னர் பயிர்தானகவே வளரும். நானும் மூன்றாம் நபராக அதில் பங்கு கொள்வேன். அதனால் நேரடியாக எனக்கு எந்தக் கெட்ட பேரும் ஏற்படவில்லை. ஊர்மக்களிடம் நல்ல பேரும், அப்பரிடமிருந்து பாராட்டும் கிடைத்தது.

நான் உயர்தரம் பயின்று சித்தியடைந்த போதிலும், நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழலால் எனது மருத்துவ பட்டப்படிப்புக் கனவு, கனவாகவே இன்றும். அதிருக்கட்டும், நான் கொழும்பு வாசியாகிப் பின்னர் சம்சாரியாகி, இன்று முதியவர் என்ற பட்டமும் கிடைத்த பின்பும், எனது போராட்ட குணாம்சம் மாறவில்லை. அதனால் இப்பொழுது விசாரணைக் கடிதம்வரை வந்துள்ளது.

ஊரில் எனது உறவென அக்கா மட்டுமே எஞ்சியுள்ளார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அக்காவைப் பார்க்க ஊருக்குச் சென்று வருகின்றேன். அக்காலங்களில் கண்ணில் படும் பிரச்சினைகளில் மூக்கை நுழைப்பது எனது பிறவிக்குணம். அதில் ஏதோ ஒன்றுதான் விசாரணைக் கடிதத்துக்குக் காரணம் என்று யூகித்தாலும், சுட்டிப்பாக ஏது என்று, மூளையைக் குடைந்ததன் விளைவு தான் நிதானமிழந்து, மன அழுத்தத்திற்கு உட்பட்டேன்.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து குடாநாட்டில் வசிப்போரின் நிலங்களைக் கள்ள உறுதிமுடித்து அபகரித்தல், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுதல், அதனால் கடல் நீர் ஊருக்குள் புகுதல், அனுமதியின்றி தமக்கு உரித்தில்லாத மரங்களை வெட்டுதல், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஜீவாதார உதவிகளை உண்மையான பயனாளிகளுக்குக் கிடைக்காமல் அபகரித்தல் போன்ற, இன்னோரன்ன பிரச்சினைகளைக் கண்ணுற்று மனம் பொறுக்காமல், சம்மந்தப்பட்ட இடங்களுக்கு புகார் எழுதுதல், ஊரில் பெரிய மனிதர்களாக வேடமிட்டு, அயோக்கியத்தனம் புரிவோரைத் தோலுரித்துக்காட்டுதல் என, எனது மக்கள் பணி விஸ்தாரமானது. இவற்றில் கடிதம் வரக்காரணம் யாதென்று, மூளையைக் கசக்கிப்பிழிகின்றேன்.

சொந்த மண்ணைத் தொட்டு, உறவுகளைக் கண்டு மகிழ்ந்து, ஒருவாறு இரவும் தாண்டிப் பகலாகிவிட்டது, அக்காவிடம் பேச்சுக் கொடுக்கின்றேன். விசாரணைக் கடிதத்துக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று. தெரியாது தம்பி என்னும் பொருளில், தலையை ஆட்டுகின்றார். சரி இன்னும் ஒரிரு மணித்தியாலங்களில் தெரியவரும் என்று சமாதானம் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபை அலுவலகம். பலரோடு நானும் ஒருவனாகக் காத்திருக்கின்றேன். ஆமை வேகத்தில், இல்லை நத்தை வேகத்தில் ஒவ்வொருவர் விவகாரமும் நகர்கின்றன. நூறு நோயாளிகளுக்கு அரைமணி நேரத்தில் மருந்தெழுதிக் கொடுக்கும் அரசாங்க வைத்தியசாலையை (வைத்தியர்கள் திறமையும், சாமர்த்தியமும் வாய்த்தவர்கள். அவர்களை விமர்சிக்கும் ஞானம் எமக்கு எங்கே?) இதனுடம் ஒப்பிட்டு வியக்கின்றேன்.

'டை' கட்டி, சப்பாத்து அணிந்து, விலை உயர்ந்த மூக்குக் கண்ணாடியுடன் ஆங்கிலேயர் பாணியில் கம்பீரமாக அமர்ந்திருக்கின்றார் செயலாளர். அவர் முன் சென்று, வணக்கம் சொல்கின்றேன். பதில் வணக்கமில்லை. ஆங்கிலேயர் போல வேடம்தரிக்க மட்டுமே தெரிந்தவர்களுக்கு, அவர்களின் பண்பு வெகுதூரத்தில். நிமிர்ந்து என்னைப் பார்க்காமல்

"என்ன விசயம்"

சொற் சிக்கனம். அதிகார நாற்காலியின், ஆணவ உச்சாணியின் இருப்பு.

நானும் சளைத்தவனா? வார்த்தைகளைத் தேக்கி, சலனமில்லா முகபாவத்துடன், கடிதத்தினைச் செயலாளர் முன் நீட்டுகின்றேன். கடிதத்தினைப் பார்த்த மாத்திரத்திலேயே,

"ஓ நீர்தான் அந்தப் புரட்சிக்காரனோ?"

என்னை அறியாமலே இரத்தம் சூடேறுகிறது. கஷ்டப்பட்டு நிதானத்தினை வருந்தி அழைக்கின்றேன். மரியாதைக்குக் கூட அமரச் சொல்லவில்லை. நிற்கவைத்தே வார்த்தைகளால் அவமானப் படுத்துகின்றார்.

"நீர் மாட்டுக்கு எப்பிடிக் குறி சுட்டீர்?"

மீண்டும் மரியாதை கலந்தது போன்ற நக்கல் கேள்வி. எனக்கு இப்பொழுதுதான் நான் செய்த கலாசார மீறல் புரிகின்றது.

ஊரில் உள்ள மாடுகளுக்கு ஒவ்வொரு குடும்பமும் குறிசுடுவது வழக்கம். ஆனால் அந்தக்குறியில் நீ எந்தச்சாதியான் என்பதைக் குறிப்பிடும் குறியீடு தனித்தனியாக இருக்கும். "பறத் தெமலே" என்றுதான் சிங்கள இனவாதிகள் குறிப்பிட்டு, பல இனக்கலவரங்களில் தமிழருக்குக் குறிசுட்டான்கள். அதன் பின்விளைவுதான் தமிழ்த் தேசிய எழுச்சி, தமிழ் இரத்தத்தின் இரத்தங்கள் என்ற கோஷங்கள் எல்லாம் ஒன்றுதிரண்டே ஆயுதங்களின் எழுச்சி. பின்னர் எல்லாம் பொய்யாகி ஒட்டுமொத்தத் தமிழரும் கையறுநிலையில், மடிப்பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும், 'திரிசங்கு' சொர்க்க நிலையில், சாதியை அடையாளப் படுத்தும் குறியை, மாடுகளுக்குச் சுடுவதை மாற்றித் தமிழரின் பெருமையையும், கலாசாரத்தினையும் சீரழித்தமை சாதாரண தண்டனைக்குரிய குற்றமா?! பிரதேச சபையின் அதிகார மையம் என்னைப் பஞ்சாயத்துப் பண்ணுகின்றது.

போன மாதம் எனது பிள்ளையுடன் ஊருக்கு வந்தபோது,

"கொஞ்ச நாளா எங்கட மாடுகள் களவு போகுது தம்பி, அதுகளுக்குப் பிள்ளையின்ர பேரில குறி சுடன்"

என்று அன்புக் கட்டளை இட்டார் அக்கா. எனது பிள்ளை கொழும்பில் பிறந்து வளர்ந்தவள். எனது மனைவியும் கொழும்புக்காரி. அவவுக்கும் சாதியள், குறியள் பற்றித் தெரியாது, பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையோ சொல்லத் தேவையில்லை!, கட்டாயம் பிரத்தியேக வகுப்பெடுத்தே விளங்கப்படுத்த வேண்டும். பத்து வயது பிள்ளையின் மனசில், நச்சு விதையை விதைத்து, "நாங்கள் தீண்டத்தகாதவர்களாம், மற்றவர்களை விட இழிவானவர்களாம்" என்ற தாழ்வு மனப்பான்மையினை ஏற்படுத்த விரும்பவில்லை.

குறிசுட வேண்டும். எப்படிச் சுடுவது, என்று யோசித்தேன். ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு சாதிக்குறி. 'ம' எழுத்துடன் இளம்பிறை வடிவமும் சேர்ந்த சின்னமே எமது சாதிக்கான குறியாம் அதனுடன் பெயரைச் சுருக்கமாக எழுதலாம். குறிசுடுவதிலிருந்து ஒவ்வொன்றுக்கும் காரணம் கேட்பாள் மகள். எப்படிப் பொய்யுரைப்பேன்.

எனக்குள் ஒரு திட்டம் உருவானது. உங்களை உயர் சாதியினராக் கருதும் நீங்கள் வேணுமானால் உங்கள் சாதிக் குறியைச்சுட்டு, தமிழரின் பண்பாட்டினைப் பேணிக் கொள்ளுங்கள். உங்களால் ஒடுக்கப்படும் சாதி நாம் என்பதைனையும், உங்களின் அடிமை, குடிமை என்பதனையும் இனியும் நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம், என்ற ஓர்மம் ஏற்பட்டது.

எமது வீட்டுக்கான குடிசன மதிப்பீட்டு இலக்கம் 66. அதுதானே எமது வீட்டு முகவரி. அதனையே மாட்டுக்குக் குறியாக்கத் தீர்மானித்தேன். அவ்வாறே குறிசுட்டேன். இதுதான் கலாசாரத்தினை மீறியதும், கிராமத்தின் இயல்பு நிலைக்கு ஊறு விளைவித்ததும்.

"என்ன காணும் கேள்விக்குப் பதிலைக் காணம்?"

செயலாளர் மிடுக்குடன் கேட்கிறார். சிந்தனை கலைந்த நான்,

"இல 66 விஷாலினி"

என்று பதிலிறுக்கின்றேன்.

"ஏன் அப்படிச் செய்தீர், உங்களுக்கெண்டொரு குறி இருக்கெல்லோ?"

செயலாளர் அதிகார தோரணையில் மிரட்டுகின்றார்.

"ஐயா! நான் சின்ன வயதிலேயே, ஊரை விட்டுப் போயிட்டன். அது என்ன குறி எண்டும் எனக்குத் தெரியாது"

மிகுந்த மரியாதையுடன் பவ்வியமாகக் கூறுகின்றேன்.

"தெரியாவிட்டால் சொந்தக்கரர், சாதிக்காரரிடம் கேட்டிருக்கலாம் தானே?"

மீண்டும் எரிச்சலுடனான அதிகார மிரட்டல். நான் மீண்டும் அடக்கமாகச் சொல்கின்றேன்,

"அப்படி எனக்கு யாரையும் தெரியேல்ல ஐயா!, மனிசனுக்கு சாதிபாத்தவை, இப்ப மாட்டுக்கும் பாக்கினமோ!?"

"என்ன குசும்பா"

மீண்டும் செயலாளர் சீறுகின்றார்.

எனது தன்மானம் இதற்கு மேலும் அடங்க மறுக்கின்றது.

"எப்படிக் குறிசுடவேண்டும் எண்டு, எழுத்தில தாங்கோ? என்ன செய்யிறதென்டு பாக்கிறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பணிவும் மரியாதையும் வெகுதொலைவுக்குச் சென்றுவிட்டது. கோபமாகப் பேசுகின்றேன். என்னைப் புழுவாகப் பார்த்த செயலாளர்,

“ஐயா ஏன் கோபப்படுகிறீர்? உம்மை விசாரணை செய்ய, அழைக்கவில்லை. ஊருக்கு எண்டு ஒரு சம்பிரதாயம் இருக்கெல்லே? அதைப் பேணிப் பாதுகாப்பது தமிழராகிய எமது கடமையல்லவா”

என்று, மிகவும் பணிவாகப் பேசுகின்றார். நெஞ்சை நிமிர்த்திக் கேள்வி கேட்டபொழுது, தமிழர் கலாசாரம் கெடடு விடுமாம். மனிசனை மனிசன் மதிக்காத நாசமாய்ப்போன சாதிக்கலாசாரம் யாருக்கு வேண்டும்.

பொதுசன சேவை நிலையம் என்று, அடக்கமாக ஒலித்த எனது குரல், உச்சஸ்தாயில் உயர்கின்றது.

“பாழாய்ப்போன தேசவழமைச் சட்டத்தையும், சாதியையும் இப்பவும் தூக்கிப்பிடித்தால், மனித உரிமை மீறல், ஒடுக்கு முறைக்கு எதிரான சட்டமீறல்”.. என்றெல்லாம் எனக்கும் தெரியும்.”

ஆக்கிரோசமாக, ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்திவிட்டேன்.

பிரதேச சபையே வாய்பிழந்து, செயலற்று........!

யாருடைய பதிலையும் எதிர்பாராமல் மிடுக்குடன் நடக்கின்றேன்.

---

## பேசாதே !! ஏற்றுக்கொள்!!!

அதிகமாப் பேசினால் அமைதியை இழப்பாய்
ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய்
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய்
வெகுநேரம் பேசினால் பெயரை இழப்பாய்
பெருமையாகப் பேசினால்
ஆண்டவனின் அன்பை இழப்பாய்....



- விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை : பெயர்க் காரணம்

திரு. S. சதீஸ்குமார்,
கிழக்குப் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்.

யாழ். மாவட்டத்தில் தீவகத்தின் இருப்பினை வெளிப்படுத்தி நிற்கின்ற ஒரு பிரதேசமாக ஊர்காவற்றுறை காணப்படுகின்றது. இன்று கரம்பொன், நாரந்தனை, புளியங்கூடல், தம்பாட்டி, பருத்தியடைப்பு, சுருவில், மெலிஞ்சிமுனை, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் இப் பிரதேசத்திற்கு இலங்கை வரலாற்றில் ஓர் தொன்மையான இடம் காணப்படுகின்றது. வரலாற்றில் ஊர்காவற்றுறை எனப்பெயர் ஏற்படுவதற்கு சில மரபுவழிக் கதைகளுடன் வரலாற்று ஆதாரங்களும் காணப்படுகின்றன.

இலங்கைக்குத் தென்னாசிய நாடுகளில் தொடர்ச்சியான ஓர் இலக்கிய மரபு காணப்படுகின்றது. அந்த வகையில் ஊர்காவற்றுறை எனும் இடப்பெயரும் வரலாற்றில் இடம் பெறுமளவிற்கு இயற்கையாக அமைந்த துறைமுகங்களில் ஒன்றாகவும் பதினாறாம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் செல்வாக்குப் பெற்ற இடமாகவும் இது காணப்பட்டது. தற்போது கைற்ஸ் ("Kayts") எனவும் அழைக்கப்படுகிறது.

ஆரம்பகாலங்களில் ஊர்காவற்றுறையானது ஏனைய தீவுகளை விட செல்வாக்குப் பெற்றிருந்ததோடு பிரதானமாக மற்றைய இடங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் காவல் செய்தது. இவ்வாறு தீவுகளையும் பல ஊர்களையும் காவல் செய்யும் துறைமுகமாக இருந்தமையாலோ என்னவோ இப் பிரதேசத்திற்கு ஊர்காவற்றுறை எனும் பெயர் அமைந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையில், மரபுவழிக் கதைகளில் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது. தீவுகளில் ஒன்றான வேலணையானது (லைடன் தீவு) சுயாதீனமான இனக்குழு ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்போது வேலன் என்பவன் இவ்வூரை வழிநடத்தி வந்தான். ஒரு சமயம் தனது அதிகாரத்தைத் தொடர்ந்து அந்நியரிடமிருந்து பாதுகாக்க விரும்பிய வேலன் தீவின் ஊரைக் காவல் செய்து வந்த துறைமுக ஆட்சி நிர்வாகிக்கு ஓலை ஒன்றை அனுப்பினான். அதில் தங்கள் காவலோடு இணைந்ததாக எனது பகுதியும் இருக்கட்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது. இவ்வாறு பல ஊர்களைக் காவல் செய்தமையால் காவலூர், ஊர்காவல்த்துறை ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டதாக கூறுகின்றனர். இப்பெயரே காலப்போக்கில் ஊர்காவற்றுறையாக மாறி வந்திருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஊராத்துறை என்பதே சரியானதென பாரம்பரியகதை ஒன்றும் குறிப்பிடுகின்றது. "ஊரா" எனும் சொல்லானது கடல்வாழ் உயிரினங்களில் ஊரும்கால்ப் பிராணிகளான சிற்பிகள், நத்தைகள், சங்குகள் என்பவைகளையே குறிக்கும் எனவும் இவை துறைமுகமாகக் காணப்பட்ட இக் கடற்கரைப் பரப்பில் அதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதால் ஊராத்துறை என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டதோடு இதுவே பின்நாட்களில் மருவி ஊர்காவற்றுறையாக அழைக்கப்படுகின் றதாகவும் குறிப்பிடுகின்றனர்.

மரபுக்கதைகளை விட இலக்கியங்களிலும் ஊர்காவற்றுறை என்ற பெயர் ஏற்பட்டது பற்றியும் அதன் விளக்கம் பற்றியும் கூறப்பட்டுள்ளது இலங்கையில் விஜயனுடைய இறுதிக்காலத்தில் அதாவது அவன் இறக்கும் தருவாயில் தன்னால் கட்டியெழுப்பப்பட்ட இலங்கை இராச்சியத்திற்கு பட்டத்திற்கு வர அரகுமாரர்கள் எவருமில்லை எனக் கவலை கொண்டான் இதனால் தனது பிறப்பிடமான வட இந்தியாவிலுள்ள சிங்கபுரத்திற்கு செய்தி ஒன்றை அனுப்பி தன் மருமகன் பண்டுவாசனை அழைப்பித்தான் அவன் இலங்கை வந்ததுடன் விஜிதபுரத்திலிருந்து அரசாண்டான்.

இருப்பினும் விஜயன் இயக்க குலப் பெண்ணான குவேனியை மணந்த பின் அவளை ஏமாற்றிக் கைவிட்ட துரோகம் அவனைக் கரும நோயாகச் சூழ்ந்தது அப்பொழுது தென் இந்தியாவில் அரசாண்ட மலைராசன் என்பவனை இந்திரன் தந்திரமாக அழைத்து (விஜயனது) அவன் நோயைக் குணமாக்கினான். எது எவ்வாறாயினும் மலைராசனது இராச்சியத்தில் இரகு என்பவனைப் பன்றியாக்கி விடவே அது அவன் இராச்சியத்திலுள்ள குடிகளைத் துன்புறுத்தியது இதனால் மலைராசன் பன்றியை துரத்திச் சென்றபோது அது கடல்வழியாக இலங்கைக்கு வந்ததாகவும் அவ்வாறு பன்றி கரையேறிய இடமே ஊரைத் தொட்ட எனப்பெயர் பெற்றதாகவும் இதுவே பிற்காலத்தில் மருவி ஊராத்தொட்ட" வாகியதாகவும் கூறப்படுகிறது.

சூளவம்சத்தில் இப்பெயரானது "ஊராத்தோட" அல்லது "ஸராத்தொட" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் "ஊரா" என்பது பன்றி என சிங்களத்தில் கூறப்படுவதோடு "தொட" என்றால் துறை எனவும் பொருள் கொள்ளப்பட்டு ஊராத்தொட "பன்றித்துறை எனவும் கூறப்படுகின்றது. அத்தோடு 13ஆம் நூற்றாண்டில் மகிந்தன், ஜெயபாகு போன்ற தமிழ் மன்னர்கள் வட இலங்கையைக் கைப்பற்றி கோட்டைத் தளங்களை அமைத்த இடங்களில் ஒன்று இவ்விடம் எனக் கூறுகிறது. இதில் "ஆசரம்", தித்தம்" என்பது மொழியில் முறையே பன்றி, துறை என்பனவாக அமைவதோடு ஊராத்துறையின் மாளி மொழிபெயர்ப்பே சூளவம்சம் கூறும் ஸராத்தொட எனக் குறிப்பிடலாம். மேலும் பன்றித் தோட்டத்தினையே ஊராத்துறை எனவும் அழைத்ததாகவும் கருத்து காணப்படுகிறது.

தற்போது ஆங்கிலத்தில் "Kayts" என அழைக்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது. ஆனால் ஆய்வுகளின்படி இது போர்த்துக்கேய சொல்லில் இருந்து மருவி வந்ததாக கூறப்படுகின்றது. போர்த்துக்கேய மொழியில் "Caes" என்பது துறைமுகம் எனப் பொருள்படும் இதிலிருந்தே பின்பாக (Kayts) கைற்ஸ் என்ற பதமாக மாறியதாக விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஊர்காவற்றுறைக்கான டச்சுமொழிப்பெயர் எதிரே காரைநகரில் உள்ள துறைமுகத்திற்கு இருந்த தாகவும் பின்னரே இவ்விடத்தினைக் குறித்ததாகவும் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் கத்தோலிக்க, இந்து சமயத்தவர்கள் வாழ்ந்து வருவதோடு இங்கு விவசாயமும், கடற்றொழிலும் ஜீவனோபாயத் தொழிலாக இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறை முகமானது வடகீழ், தென்மேல் பருவங்கள் இரண்டிலும் கப்பல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பிற்காக இயற்கையில் அமைந்த துறைமுகமாகக் காணப்பட்டது மேலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியின் ஆரம்பத்தில் சுங்கவரியை அதிகம் பெற்றுக் கொண்ட துறைமுகமாக இருப்புப் பெற்றதோடு சமயக் குரவர்கள் பலர் வந்து சமயப்பரப்புப் பணிகளைச் செய்த இடமாகவும் காணப்படுகிகிறது.

கி.மு 6ஆம் நூற்றாண்டிலிருந்தே துறைமுகமாக விளங்கிய இங்கு கடல்வணிக ரீதியாக இந்தியா மற்றும் தென்னாசியா வரையான நாடுகளுடன் பண்டமாற்று முறையிலான தொடர்புகளைக் கொண்டிருந்த துறைமுகமாகவும் காணப்பட்டது. இதன் செல்வாக்குக் காரணமாகவே பொலநறுவை பராக்கிரமபாகு மற்றும் கோட்டை ஆறாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் யாழ்ப்பாணத்தோடு இணைந்ததாக இத்துறைமுகத்தில் கவனம் செலுத்தியதாக கூறப்படுகிறது. மேலும் இத்துறைமுகத்தை மையப்படுத்தியதாகவே கடற்கோட்டை எனும் (ஹமன்ஹீல் கோட்டை) அதாவது பூதத்தம்பி எனும் பழங் கோட்டை கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கி.பி 1960ஆம் ஆண்டுவரை சப்ததீவு மக்களின் செயற்பாடுகள், போக்குவரத்துக்கள் இதனை மையப்படுத்தியதாகவே நகர்த்தப்பட்டது. பின்பு கண்ணகை அம்மன் துறை போன்ற குறிகாட்டுவான் துறைமுகங்களூடாக தீவுகளுக்கான போக்குவரத்துப் பயணங்கள் யாழ்ப்பாணத்தை நோக்கியதாக இன்றுவரை இடம் பெற்றுவருகின்றன.

இத்துறைமுகமானது 16, 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் மேலைத்தேயரான போர்த்துக்கேய, ஒல்லாந்த படையெடுப்புக்களாலும் தொடர்ந்து அதனால் ஏற்பட்ட பாதகமான ஆட்சியினாலும் இப்பிரதேசத்தின் முக்கியமான வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்பட்டதோடு இப்பகுதி மக்களும் அவற்றைப் பேணுவதிலும் போதிய ஆர்வம் காட்டவில்லை இதனால் தற்போது இத்துறைமுகம் கைவிடப்பட்ட நிலையினை நோக்கியதாகவும் பாராமரிப்பும் பயன்பாடும் குறைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**உசாத்துணைகள்**

01. குகபாலன்.கா, 2000, தீவகம் பல்துறை நோக்கு - புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

02. சிற்றம்பலம் சி.க. 1992, யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

03. சிவப்பிரகாசம். மு, விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு.

04. கணபதிப்பிள்ளை, 2001, ஈழத்து வாழ்வு வளமும், பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “கடல் வாணிபமே காவலூரின் பொற்காலம்”

**பெலிக்ஸ் அல்பேட் பேட்டி**

**நேர்காணல் – எஸ். மல்லிகா**

“இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகமான ஊர்காவற்றுறைத் துறைமுகம், மிகவும் பிரசித்தி பெற்றது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. வடகீழ்- தென்மேல் பருவகாலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறையாக இது விளங்குகின்றது. இத்துறைமுகத்தினூடாகத் தென்னிந்தியா முதல் தென்கிழக்காசிய நாடுகள் வரை காவலூர் மாலுமிகள் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். அக்காலம் காவலூரின் பொற்காலம். இன்று தன் பழம் பெருமைகளை இத்துறைமுகம் இழந்திருப்பது கவலையைத் தருகிறது” என்று கூறுகிறார் இம்மண்ணின் மைந்தனும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியரும் அகில இலங்கைச் சமாதான நீதவானுமாகிய திரு. மனுவல் பர்னாந்து பெலிக்ஸ் அல்பேட் (வயது-73) அவர்கள்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வருடாந்தம் வெளியீடு செய்யப்படும் “அலைமொழி” சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறந்த சமூகச் செயற்பாட்டாளரான இவர், ஆன்மீகத்திலும் ஈடுபாடுடையவர். ஊர்காவற்றுறை பிரதேசசபை முன்னாள் பிரதித் தவிசாளராக இருந்து சிறந்த சேவையாற்றியவர். ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபர் சங்கத் (YMCA) தலைவர், புனித அந்தோனியார் கல்லூரியின் “அந்தோனியன் நிதியத்தின்” ஸ்தாபகச் செயலாளர், புனித மரியாள் கல்வி அபிவிருத்திச்சபை ஸ்தாபக உறுப்பினர், புனித யாகப்பர் ஆலய நிர்வாக உறுப்பினர் எனப் பன்முகத்துடன் சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார். இனி அவரது நேர்காணலில் இருந்து....

**கேள்வி- தொல்லியல்- வரலாற்று அடிப்படையில் ஊர்காவற்றுறைத் துறைமுகம் பெறுகின்ற முக்கியத்துவம் தொடர்பில் கூறுங்கள்...**

பதில்- இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகமான ஊர்காவற்றுறைத் துறைமுகம், மிகவும் பிரசித்தி பெற்றது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. வடகீழ் - தென்மேல் பருவகாலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறையாக இது விளங்குகின்றது. இத்துறைமுகத்தினூடாகத் தென்னிந்தியா முதல் தென்கிழக்காசிய நாடுகள் வரை காவலூர் மாலுமிகள் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். அக்காலம் காவலூரின் பொற்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950களில் இங்கு கடல் வாணிபம் தழைத்தோங்கியது. இத்துறைமுகத்தினூடாக மியன்மாரிலிருந்து (இன்றைய பர்மா) அரிசிகள் இறக்குமதி செய்யப்பட்டன. தென்னிந்தியாவிலிருந்து பன்றிகள், யானைகள், வடக்கன் மாடுகள், செம்மறி ஆடுகள், கலிக்கட் ஓடுகள் முதலானவை இறக்குமதி செய்யப்பட்டன. பன்றிகள் ஏற்றிய துறை என்ற காரணத்தால் 'ஊறாதொட்ட' என அழைக்கப்பட்டு, பின்னர் ஊர்காவற்றுறை என்று பெயர் பெற்றது என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இத்துறைமுகத்தினூடாகச் சோழ மன்னர்கள் யானைகளை ஏற்றுமதி செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

இத்துறைமுகத்தினூடாகக் கொழும்புக்கு அடுத்தபடியாக சுங்கத்துறை வருவாயை ஈட்டியது. இங்குள்ள பலர் சுங்கத்துறையில் உத்தியோகத்தர்களாக இருந்தனர். கப்பல்கள், படகுகள், டிங்கிகள், தோணிகள் என்று துறைமுகம் மரக்கலங்களால் நிறைந்திருக்கும். பனைமர அளவுக்கு உயரமான பாய்மரங்கள் வானை முட்டி நிற்கும். பாரிய கப்பல்கள் எந்நேரமும் நங்கூரமிட்டுச் சரக்குகளை இறக்கிக்கொண்டிருக்கும். இக்காட்சியை நான் சிறுவனாக இருந்த காலத்தில் என் கண்களால் பார்த்தேன். இன்று தன் பழம் பெருமைகளை இத்துறைமுகம் இழந்திருப்பது கவலையைத் தருகிறது.

**கேள்வி- கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கிய ஊர்காவற்றுறைத் துறைமுகம் எப்போது வீழ்ச்சியுற்றது? அதற்கான காரணங்கள் எவை?**

பதில்- 1990களில் காவலூர்க் கடல் வாணிபம் முற்றாக ஆட்டம் கண்டது. பாய்மரக் கப்பல்கள் இல்லாமல் போனமை, நவீன கப்பல்களின் வருகை, காங்கேசன்துறைத் துறைமுகம் முதன்மை பெற்றமை, உள்நாட்டுப் போர் முதலான காரணங்களால் துறைமுகம் களை இழந்தது. போர்க்காலத்துடன் இங்கிருந்த சுங்க இலாகாவும் இல்லாமல் போய்விட்டது. பாதுகாப்புக் காரணங்களால் பயணிகள் படகுச் சேவையும் நிறுத்தப்பட்டது.

**கேள்வி- பயணிகள் படகுச் சேவை மூலம் மக்கள் எங்கெல்லாம் பயணித்தனர், அச்சேவைக்கு மக்கள் மத்தியில் இருந்த வரவேற்புப் பற்றிக் கூறுங்கள்...**

பதில் - ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலிருந்து "இராஜேஸ்வரி" இயந்திரப் படகுச் சேவை இடம்பெற்றது. இத்தொகுதியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினரான அல்பிறட் தம்பிஐயாவின் பாரியாரது பெயர்தான் இராஜேஸ்வரி. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து அவர் மக்களுக்குச் செய்த சேவைக்கு நன்றி பாராட்டும் முகமாக அவரது பாரியாரின் பெயர் இந்த இயந்திரப் படகுக்குச் சூட்டப்பட்டது. அவர்தான் இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்தார். இதன் மூலம் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளுக்கு மக்கள் பயணித்தனர். அத்தோடு, எட்வேட் இயந்திரப் படகும் சமகாலத்தில் சேவையில் ஈடுபட்டது. இச்சேவைக்கு மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பு இருந்தது.

சப்ததீவு மக்களும் இங்கிருந்தே யாழ்ப்பாணம் சென்று வந்தனர். இப்படகுச் சேவை, தீவகம்-நாவாந்துறை மக்கள் மத்தியில் திருமண உறவுகள் ஏற்படக் காரணமாக இருந்திருக்கிறது. இன்றும் இந்த உறவு தொடர்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று மச்சுவாய் மூலமும் மக்கள் போக்குவரத்துச் செய்தனர். இயந்திரம் வரமுன்னர் காலால் மிதித்து இச்சேவை இடம்பெற்றது. அதாவது, காரைநகர்- ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கிடையில் இடம்பெறும் "பாதை சேவை" இடம்பெற முன்னர் இச்சேவை இருந்தது. இதனை இங்குள்ள மாலுமிகள் பலர் தொழிலாகச் செய்தனர். இதன் மூலம் கணிசமானளவு வருவாய் ஈட்டினர். இங்குள்ள தொழிலாளர்கள்தான் இந்த மச்சுவாய்களை செய்தனர். போர்க்காலத்துடன் இதுவும் இல்லாமல் போய்விட்டது. தற்போது இந்தத் தொழில் தெரிந்தோரும் இல்லை.

**கேள்வி– இப்பயணிகள் படகுச் சேவை எதற்காக நிறுத்தப்பட்டது?**

பதில்- குறிகாட்டுவான் துறைமுகத்தின் வரவால், நெடுந்தீவு மற்றும் நயினாதீவுப் பயணிகள் அங்கிருந்து போக்குவரத்து மேற்கொண்டனர். அதேநேரம், அனலைதீவு மற்றும் எழுவைதீவுப் பயணிகளுக்கான படகுச் சேவைகள் தொடர்ந்தும் நடைபெற்றன. போர்க்காலத்தில் பாதுகாப்பின் நிமித்தம் இச்சேவைகள் கண்ணகையம்மன் துறைமுகத்திற்கு மாற்றியமைக் கப்பட்டன.

**கேள்வி– தற்போது இத்துறைமுகம் எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறித்துக் கூறுங்கள்…**

பதில்- போர்க்காலத்தில் இறங்குதுறை மண்டபம் தகர்ந்தும் துறைமுகப் பாலம் சிதைந்தும் போயின. இவை புனரமைக்கப்படாமல் இருப்பது பெருந்தவறு. இம்மண்டபம் புனரமைக்கப் படாமையால், மழைக்காலங்களில் பயணிகள் தங்குவதற்கு இடமின்றித் தத்தளிக்கின்றனர். அத்தோடு, கழிப்பறை வசதியின்மையாலும் சிரமப்படுகின்றனர். அதுபோல சுகாதாரச் சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன.

**கேள்வி– ஊர்காவற்றுறையின் தொல்லியல் சின்னங்கள், அவற்றின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கூறுங்கள்…**

பதில்-இங்குள்ள கடற்கோட்டை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட இக்கடற்கோட்டை "ஹமன்ஹீல்" என அழைக்கப்படுகிறது. இது பூதத்தம்பி காலத்தில் கட்டப்பட்டதால், "பூதத்தம்பி கோட்டை" என்றும் அழைக்கப்படுகிறது. இங்கிருந்து சர்வதேசக் கடல் எல்லை வரை கண்காணிக்கலாம். இக்கோட்டையிலுள்ள தண்ணீர்த் தாங்கியில் சிவப்பு நிற மின்குமிழ் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. இது எரிவாயு மூலம் ஒளிரும். மூன்று மைல் தூரத்திற்கு இதன் வெளிச்சம் பரவியிருக்கும். இது கடற்கலங்களுக்கு வழிகாட்டியாகவும் ஒளிகாட்டியாகவும் திகழ்ந்தது. போர்க்காலத்துடன் இது இல்லாமல் போய்விட்டது. 1990ம் ஆண்டுக்குப் பின் கடற்கோட்டை கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அதுபோன்று ஊருண்டி பழங்கோட்டை, அம்மைத் தொற்றுக்குள்ளானவர்களைத் தனிமைப் படுத்திய "அம்மை ஆஸ்பத்திரி" (IDH), சேமக்காலை, 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சமாதி, அதனையண்டியுள்ள பழைமையான கிணறு, துறைமுகத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடு, மாடுகளை மிருக வைத்தியர்கள் பரிசோதனை செய்த மாட்டுக்காளை, தீவகத்தில் குளிக்கும் சங்குகளைக் கொள்வனவு செய்யும் இடமாக இருந்த சங்குமால், கடல் வாணிபத்தில் ஈடுபட்டவர்கள் பொதிகளுடன் இளைப்பாறிய சுமைதாங்கிக்கல், அன்ரன் வில்லா இல்லம், 200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட பழைமை வாய்ந்த தேவாலயங்கள், நூற்றாண்டு கடந்த பாடசாலைகள் முதலானவை இங்குள்ள தொல்லியல்- வரலாற்றுச் சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆனாலும், உரிய முறையில் இவை பராமரிக்கப்படவில்லை. இவற்றுக்கான வழிகாட்டல் பெயர்ப்பலகைகள் கூட இல்லை. இவற்றில் துறைசார் அதிகாரிகள் கவனஞ்செலுத்தி, பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**கேள்வி- இத்தொல்லியல், வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடச் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனரா?**

பதில்- கடற்கோட்டையைப் பார்வையிடச் சுற்றுலாப் பயணிகள் ஓரளவு வந்து செல்கின்றனர். இதனைத் தொல்லியல் திணைக்களம் பொறுப்பெடுத்தாலும் கடற்படையின் கட்டுப்பாட்டிலேயே இன்னமும் இருப்பதால், அவர்களால் சுதந்திரமாகச் செல்ல முடிவதில்லை, நினைத்த நேரத்தில் செல்ல முடிவதில்லை- திரிசங்கு நிலையே காணப்படுகிறது. ஏற்கனவே சொன்னதைப் போன்று, சுற்றுலாத்தலங்கள் உரிய வகையில் வழிகாட்டல் செய்யப்படாமையாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி நிலையே காணப்படுகிறது.

இச்சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் மூலம் எண்ணற்ற நன்மைகள் கிடைக்கும். காவலூர்க் கடற்கரையோரம் சிறு சிறு படகுச்சவாரிகள் ஏற்படுத்தல், படகுச் சேவைகளை மீண்டும் இயக்கல், சிறுவர் பூங்காக்கள் அமைத்தல், பொழுதுபோக்கு மையங்களை அமைத்தல், கடற்கோட்டைக்கு காரைநகருக்குச் சென்று போகாமல் இங்கிருந்தே போகக்கூடிய வசதிகளை ஏற்படுத்தல்- இவற்றின் மூலம் பலருக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும், சுற்றாடல் அழகுபெறும், சுகாதாரம் பேணப்படும். இவற்றால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும், வருமானம் அதிகரிக்கும். பிரதேச செயலாளர் மற்றும் பிரதேசசபைச் செயலாளர் கூட்டாக இணைந்து, இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது எனது பெருவிருப்பம்.

**கேள்வி- தொல்லியல், வரலாற்றுச் சின்னங்கள் தவிர வேறெந்த வகையில் ஊர்காவற்றுறை முக்கியத்துவம் பெறுகிறது?**

பதில்- நாட்டுக்கூத்தில், யாழ். மாவட்டத்தில் பெயர் போன பிரதேசமாக ஊர்காவற்றுறை திகழ்கின்றது. “உடக்கு பாஸ்” அதாவது, இயேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சியைத் தத்ரூபமாக வடிவமைத்துக் காட்சிப்படுத்துவதில் இந்த மண் பெயர் பெற்றது. மிகச்சிறந்த கலைநுட்பங்களுடன் இக்காட்சியைக் கலைஞர்கள் (பின்னால் இருந்து) இயக்கம் கொடுத்து ஆற்றுகை செய்வர். “பசாம் வாசிப்பதும்” இங்கு பிரசித்தி பெற்றது. இம்மண்ணின் பிரபல அண்ணாவியாராக அருளப்பு திகழ்கிறார். சிறந்த கவிஞராக காவலூர் ஞா.ம.செல்வராசா திகழ்கிறார். இக்கவிஞர்தான் “ஞானசவுந்தரி” நாடகம் இயற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி- காவலூரின் கல்வி அன்றும் இன்றும் எவ்வாறுள்ளது?**

பதில் - அன்றைய கல்வியில், ஒழுக்கம் முதலிடத்திலும் கல்வி இரண்டாம் இடத்திலும் இருந்தது. இந்நிலையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பிரதம நீதியரசர் உயர்திரு. சர்வானந்தா அவர்கள், இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறை மாவட்ட முதலாவது தமிழ்ச் சுதேசிய ஆயர் மேதகு கலாநிதி எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, உலகெலாம் தமிழ்த்தூது சென்ற தனிநாயகம் அடிகளார் முதலானோர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர்கள். இவ்வாறு புகழ்பூத்த கல்விமான்களையும் பெருமைக்குரிய மகான்களையும் காவலூர் மண் உற்பவித்துள்ளது.

இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் தற்காலத்தில் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர். புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய (HNCE) மாணவர்கள், இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்குப் புலைமைப்பரிசில் வழங்குவதற்கென "அந்தோனியன் நிதியத்தை" ஆரம்பித்துள்ளனர்.அதன் செயலாளராக நான் இருக்கிறேன். இந்நிதியத்திலிருந்து, பல்கலைக்கழகக் கல்வி நிறைவுறும் வரை மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**கேள்வி- இந்த நேர்காணல் ஊடாக நீங்கள் இளைஞர்- யுவதிகளுக்குச் சொல்ல விரும்புவது என்ன?**

பதில் - எத்தனையோ வருட காலப் பழைமையும் பெருமையும் பெற்றது ஊர்க்காவற்றுறைப் பட்டினம். இதன் பழம் பெருமைகளில் பல இன்னமும் மறைக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொள்வோரும் குறைவு. ஆதலால், காவலூரின் பெருமைகளை வெளிக் கொண்டு வருவதற்கு இளைஞர் - யுவதிகள் அக்கறை செலுத்த வேண்டும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றுப் பல்கலைக்கழகங்கள் சென்று, ஆய்வுகளை மேற்கொண்டு, மறைக்கப்பட்ட- மழுங்கடிக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும்.

(முற்றும்)

---

**நூல்களைக் கற்கலாம்,**

**சொற்பொழிவுகளை கேட்கலாம்,**

**பல மணிநேரம் தொடர்ந்து பேசலாம்,**

**ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான்!**


**அதுவே உண்மையான கல்வி!**




**– விவேகானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வேற்றுக்கிரகம் நாடி ஓடிவிடு கொறோனாவே!

செல்வி ஆ. பத்மவினோதினி,
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

வெள்ளை அணுக்களில்
கொள்ளை வைரசாய் வந்த
கொறோனாவே!
சாமிக்கும் பூமிக்கும் உன்னால்
சங்கடங்கள் வந்தனவே!

விண்ணுக்கு ரொக்கெட்
விடத் தெரிந்த மனிதனுக்கு
கண்ணுக்குத் தெரியாத
உந்தனுக்கு
மருந்து காண முடியவில்லை!

இத்தாலி, ஸ்பெயின்
இங்கிலாந்து, அமெரிக்காவுடன்
உலகெலாம் பயணித்து
இலங்கையையும் பேருலுக்கு
உலுப்புகின்றாய்!

கடவுளுக்கு நிகரான
வைத்தியரும் இன்னும்
எத்தனையோ நல்லவரும்
உன்னால் மரணித்தனர்
உலகரங்கில்!

மரணங்கள், வன்முறைகள்
அலுவலகம், ஆலய மூடலென
தீமைகளை அள்ளித் தந்தாலும்
நன்மைகளும் உன்னால்
நடந்தனவிங்கே!

மனிதருடன் வாகனங்களும்
முடக்கம் ஆனமையால்
சுற்றாடல் தூய்மையானது!
மனிதநேயம் தழைத்து
பசித்தவர் துயர் துடைத்தது!

அடிக்கடி கை கழுவியதால்
முகக்கவசம் அணிந்தமையால்
வேண்டாத நோய்களெல்லாம்
விட்டோடிப் போக
மருத்துவமனைகள் ஓய்வெடுத்தன!

மூன்றாண்டுகள் உலகை
கலக்கிவிட்டாய் நீ!
இனிமேலும் இங்கிருக்காது
வேற்றுக்கிரகம் நாடி
ஓடிவிடு கொறோனாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200வது யூபிலி ஆண்டைக் கொண்டாடும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம்

திரு. I.L. அன்சிலின் பெகின்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

யாழ்ப்பாண கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் விசுவாசவாழ்வின் சாட்சியாகவும், அதிக கத்தோலிக்க விசுவாசிகளைக் கொண்ட பிரதேசமாகவும், 200 வருடங்கள் கடந்த கத்தோலிக்க தேவாலயங்களின் தொகுப்பை கொண்ட பிரதேசமாகவும் தொல்லிய வரலாற்று தொடர்ச்சியை தன்னகத்தே கொண்ட பிரதேசமாக ஊர்காவற்றுறை விளங்குகின்றது. கத்தோலிக்க திருச்சபைக்கு பல குருக்களை மட்டுமல்லாது ஆறு பேர் யாழ்ப்பாண மாவட்ட ஆயர் நிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள். இத்தகைய சிறப்புகளின் பின்னனியுடன் 200 வருடங்கள் வரலாற்று தொன்மை வாய்ந்த புனித அந்தோனியார் ஆலயம் இவ்வருடம் தனது 200வது வருட யூபிலி ஆண்டை கொண்டாடுகின்து.

**அறிமுகம்**

யாழ்ப்பாண வளைகுடாக் கடற்பரப்பில் காணப்படும் நவதீவுக் கூட்டங்களில் கடற்போக்கு வரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்த்த இடமாக பன்நெடுங்காலமாக ஊர்காவற்துறை துறைமுகம் விளங்கியுள்ளது. வீதிப்போக்குவரத்துக்களை காட்டிலும் கடல்பயணங்களே முன்னைய காலத்தில் அதிகமாகவும், முக்கிய போக்குவரத்து ஊடகமாகவும் விளங்கியது. அந்த வகையில் பாக்குவிரிகுடா வழியாக வரும் கடல் வழித்தடங்களின் திசைகாட்டியாக ஊர்காவற்றுறை விளங்கியுள்ளது. மற்றும், கடல் வழியாக குடாக்கடலுக்குள் ஊடுருவும் எதிரிப் படையை வழிமறித்து ஊரைக்காக்கும் துறைமுகமாக விளங்கியதால் ஊர்காவற்றுறை என்ற பெயர் வந்ததாக வாய்மொழி ஐதீகம் உள்ளது. போர்த்துக்கீசியர் Casi என்று அழைத்தார்கள் இதன் பொருள் கரையில் இருந்து கப்பலில் ஏறுவதற்கு கடலில் நீண்டிருக்கும் பாலத்தைக் குறிப்பதாக அமையும். அதாவது யாழ்ப்பாண நிலப்பரப்பில் இருந்து பெரிய கடற்கலங்களை வந்தடையும் பாலமாக இருப்பது என்ற பொருள்பட அழைத்தார்கள். இவர்கள் பின்வந்த டச்சுக்காரர்கள் Kayts என்று அழைத்தார்கள். காலனித்துவ காலத்தில் ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகப் பட்டணமாகவும் இராணுவத்தின் கடற்படைத்தளமாகவும் விளங்கியது.

**கத்தோலிக்க பின்னனி**

கத்தோலிக்க போர்த்துக்கீசிய கடல்வணிகர்கள் மற்றும் மிஷனரி பாதிரியார்கள் தமது கிறிஸ்தவ விசுவாசத்தை ஊர்காவற்றுறை மக்கள் மத்தியில் பரப்பினார்கள். ஊர்காவற்றுறைக்கு முதன்முதலில் விஜயம் செய்த அருட்பணியாளர் பிரான்சிஸ்கோ (Fr. Francisco) அவர்கள் தான் வந்திறங்கிய துறைமுகத்தின் கரையில் ஒரு திருச்சிலுவையை நாட்டிவைத்தார். அன்றைய யாழ்ப்பாண இராசதானியை ஆண்டுவந்த பரராஜசிங்கமன்னன் இவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதை விரும்பவில்லை. அதனைத் தொடர்ந்து வருகைதந்த அருட்பணியாளர் பெட்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீ பென்தன்கோ (Pedro De Pentancour) 1614ல் சென். ஜோன் என்ற சிறிய தேவாலயத்திற்கு அடித்தளம் அமைத்தார். அத்துடன் 1625 இல் குருமடம் ஒன்றும் கட்டப்பட்டது. இது போன்ற வரலாற்று தகவல்களை வரலாற்றாசிரியர் அருட்பணி ஞானப்பிரகாசியார் அவர்களின் எழுத்துக்களில் அறிய முடிகின்றது.

ஒல்லாந்தர் அல்லது டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் கிறிஸ்தவ பாதிரியார்கள் துரத்தப்பட்டு அவர்களால் கட்டப்பட்ட ஆலயங்களும் ஏனைய மடங்களும் இடித்தழிக்கப்பட்டன. டச்சுக்காரர்கள் துரத்தப்பட்டு இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்ததும் கத்தோலிக்கர்கள் சுதந்திரமாக தமது சமயக் கடமைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறையில் இயேசு சபைக்குருக்களே முதலில் பணியாற்றினார்கள் அவர்களில் குறிப்பிடத்தக்கோர் அருட்பணி பிறெட்டெறிக் றாபெடெல் (Fr.Frederic Rapatel) மற்றும் அருட்பணி வில்லெர்மட் (Fr. Vuillermet). அவர்களைத் தொடர்ந்து அருட்பணி கோர்டஸ் (Fr.Cortes) மற்றும் அருட்பணி சில்வைனஸ் (Fr.Silvainus) ஆவார்கள். இவர்கள் தமது பணியை 1852 அளவில் முடித்து கொண்டு சென்றுவிட்டார்கள்.

இவர்களைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை வருகைதந்த அமலமரித்தியாகிகள் மிஷனரிகள் தமது கத்தோலிக்க பணியை ஆரம்பித்திருந்தார்கள். அவர்களில் அருட்பணி ஜியோவானி விஸ்தராணி (Fr. Giovanni Vistarani) 1854 இல் சென் ஜோசப்ஸ் தேவாலயத்தின் முகப்பை கட்டி முடித்தார்கள். இக்காலப்பகுதியில் கத்தோலிக்கப் பணியானது கரம்பொன், நாரந்தனை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களுக்கு பரவியது. அருட்பணி ஜீன் பௌசைன் (Fr. Jean Pouzain) தனது நற்செய்தி போதனையின் ஊடாக இத்தீவுகளை ஒன்றினைத்தார். 1871 இல் அருட்பணி லூயிஸ் போயிசே (Fr. Louis Boisseau) ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள்.

**ஆலய வரலாறு**

அழகிய கடற்கரைச் சூழலில் கடல் அலை ஓசையில் இளம்தென்றலின் குளிர்ச்சியில் நகரத்து சலசலப்பு இல்லாத அமைதியான சூழலில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பல வரலாற்று நிகழ்வுகளின் சாட்சியாக பிரமாண்டத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது. மிக உயரமான கூரை அமைப்பு, மஞ்சள் வர்ணக் கண்ணாடி ஜன்னல்கள், மர பலிப்பீடம் மற்றும் ஆலயத்தின் வர்ணமாக புனித அந்தோனியார் அணிந்துள்ள துறவற ஆடையின் நிறங்களான மண்ணிறம் மற்றும் வெள்ளை வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளது. இரும்பு சட்டங்களால் அமைக்கப்பட்ட பெரிய ஆலய மணியைத் தாங்கிய கோபுரம் என்பன ஆலயத்தை வரலாற்று கம்பீரத்துடன் பார்க்க வைக்கின்றது.

இவ்வாலய வரலாறு 1820 ஆம் ஆண்டுக்கு முற்பட்டது. போர்த்துக்கீசியரின் ஆட்சிக் காலமான 1614 ஆம் ஆண்டு அருட்பணி பெற்றான்கோ (Fr.Petrango) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஊர்காவற்றுறையின் கத்தோலிக்க வரலாறு ஒல்லாந்தரது காலத்தில் (1658-1687) வரை மதஅச்சுறுத்தலுக்கு உள்ளானதுடன் ஆலயங்களும் அழித்தொழிக்கப்பட்டன. இங்குள்ள தொன்மையான வாய்மொழிக் கதைகளில் இருந்து அறியக்கூடியதானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரங்களில் கத்தோலிக்கர்கள் திருச்சொரூபங்களை கிணறுகளுக்குள் மறைத்து வைத்தார்கள் என்றும், பல காலத்திற்கு பின்னர் ஒரு மரம் வெட்டப்பட்டபோது அதன் உடற்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய சிலை கண்டுபிடிக்கப்பட்டது. இது கத்தோலிக்க விசுவாசிகளால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இத்தகவல் உள்ளூர் மக்களிடையே மட்டுமலலாது பல இடங்களிலும் பரவத்தொடங்கியது. பலரும் இவ்விடத்திற்கு வருகைதரத் தொடங்கினார்கள் மற்றும் புனிதரின் அற்புதங்கள் பற்றிய செய்திகளும் வடக்கு மாகாணம் முழுவதும் பரவின.

இந்த தேவாலயத்தின் சீமேந்து தளம் முதன்முதலில் 1911 இல் அருட்பணி ஓவன் வில்லியம் அவர்களின் காலத்தில் போடப்பட்டது. 1921 ஆம் ஆண்டில் தேவாலயத்தின் நூற்றாண்டு விழா அன்றைய யாழப்பாண ஆயர் மேதகு ஜீல்ஸ் பிரால்ட் (Rev. Jules Brault) அவர்களால் கொண்டாடப்பட்டது. 1970 இல் புனித அந்தோணியார் தேவாலயத்தின் 150வது ஆண்டு யூபிலி கொண்டாடப்பட்டது. 175 வது ஆண்டு விழா 1995 இல் நடைபெற்ற உள்நாட்டு போர் காரணமாக கொண்டாடப்படவில்லை. தற்போதும் 2020வது உலகெங்கும் கோவிட் 19 தொற்றுநோய் வைரஸ் பரவல் காரணமாக பொது முடக்கம், போக்குவரத்து தடை, நாடுகளுக்கு இடையிலான போக்கு வரத்து தடைகள் போன்ற பல நெருக்கடிகள் மத்தியில் யூபிலி கொண்டாட சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற சந்தேகம் நிலவியது. இருப்பினும் 2020 ஆனி 13 திகதி அன்றைய பங்குத் தந்தை அருட்பணி மேக் மயூரன் அவர்களின் வழிகாட்டலில் இவ்வாலயத்தில் சில புனருத்தான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இறை ஆசியுடனும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் 200வது யூபிலி ஆண்டு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**சில வரலாற்று பதிவுகள்**

- யாழ்ப்பாணத்தின் முன்னாள் ஆயர்களான ரெவ் ஹென்றி ஜீலைன் மற்றும் ரெவ ஆண்ட்ரெ மெலிசான் ஆகியோர் இவ்வாலயத்தின் பங்கு குருக்களாக பணியாற்றியவர்கள்.

- புனித அந்தோனியார் ஆலயத்தை சேர்ந்த முதல் குருவாக அருட்பணி விக்டர் ராஜநாயகம் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டார்.

- யாழ்ப்பாணத்தின் முன்னாள் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் அவர்கள் புனித அந்தோனியார் ஆலயத்தை சேர்ந்தவர்.

- போர்காலங்களில் இங்கு பணியாற்றிய பல அருட்தந்தையர்களில் அருட்பணி கிருபானந்தன் அவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர். இந்திய இராணுவத்தின் தீவுப்பகுதி நோக்கிய படை நடவடிக்கை காலப்பகுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வு, உணவுப் பற்றாக்குறை மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் போன்ற கடினமான நாட்களில் பல இன்னல்களை தன்னுள் தாங்கி ஊர்காவற்றுறையில் தஞ்சமடைந்த தீவக மக்களுக்கு ஊண் உறக்கம் இன்றி பணியாற்றிய சமூகத் தொண்டன். அன்று அவரினால் பசியாறியவர்கள் இன்று அவருக்கு ஒரு சிலை எழுப்பி இருந்திருக்காலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊர்காவற்றுறை மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதை தனது நோக்கமாக கொண்ட அன்றைய பங்குத் தந்தை அருட்பணி லூயிஸ் போயிசோ (Fr.Louis Boisseau) அவர்களால் 1872 ல் புனித அன்தோனியார் கல்லூரியானது ஆலயத்தின் முன்பாகவே நிறுவப்பட்டு கல்வி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

புனித அந்தோனியார் தேவாலயமானது ஊர்காவற்றுறையின் தொன்மையான அடையாளங்களில் முக்கியமானதாக விளங்குவது மட்டுமல்லாது கடந்த இரு நூற்றாண்டுகளாக பல தலைமுறை கத்தோலிக்கர்களின் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும் உள்ளது.

**உசாத்துணை**


1. Dishan Joseph, (2020), St. Anthony's Church, Kayts: 200 years of Christian witness,Colombo: Dailynews.
2. S.Raymond Rajabalan, (2017), A Historical Record of Kayts Island (Oorkavalthurai), Canada: Anton Rexi.




**புனித அந்தோனியார் தேவாலயம், ஊர்காவற்றுறை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய வாழ்வு

செல்வி மீரா கிருஷ்ணபிள்ளை,
ஓய்வூதிய உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

வலுவான உடல்நிலை, அமைதியான மனநிலை, சீரான மற்றும் மென்மையான உள்ளத்துடன் இருத்தலே ஆரோக்கியத்தின் வெளிப்பாடு வாழ்க்கைத்துடிப்பு, உற்சாகம், சந்தோசம் மன ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறன் மிக்க செயல் ஆகும். இத்தகைய ஆரோக்கிய வாழ்வுக்கு திறவுகோல் யோகா என்பது மிகையாகாது.

நல்ல ஆரோக்கியமான உடலும் தெளிவான மனமும் இருந்து, உங்கள் கடமைகளைச் சிறந்த முறையிலாற்ற முற்படுவீர்களேயாயின், வாழ்வில் மிகவும் உன்னதமான நிலையை நிச்சயம் அடையமுடியும். அதுதான் யோகாவின் மேன்மை.

01. பிராணயாமம், எளிமையான மூச்சு பயிற்சிகள் என்பன மூச்சில் பொதிந்துள்ள சக்தியை உணரச் செய்கின்றன.
02. யோகாசனங்கள் நம் உடலை திண்மையுடனும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகின்றன.
03. சாத்வீக உணவு, இது நமது உடலுக்கு சக்தியையும் மனதிற்கு தெளிவையும் சாந்தியையும் தரவல்லது.

**பிராணயாமம் ( எளிமையான மூச்சுப் பயிற்சி ):**

“பிராணா” என்பது பிரபஞ்சத்தின் உயிர்சக்தியை குறிக்கின்றது. “யாமம்” என்பது கட்டுப்படுத்தல் அல்லது நீடித்தல் மூக்கின் மூலம் பிராணாவை கட்டுப்படுத்துவதே பிராணயாமம். மூக்கின் வழியே சுவாசிப்பது பற்றிய நுட்பம் இதுவாகும். நாடி என்கிற ஆயிரக் கணக்கான சூக்சுமமான சக்திப்பாதை வழியாக மற்றும் சக்கரம் எனப்படும் சக்தி மையங்கள் வழியாக பிராணா பாய்கின்றது. பிராணனின் அளவு, தரம், நாடிகளிலும் சக்கரங்களிலும் பாய்கின்ற விதம் ஆகியவற்றை பொறுத்தே ஒருவருடைய மனநிலை ஆற்றல் என்பன அமைகின்றது. பிராணனின் அளவு அதிகமாகவும், தொடர்ச்சியாகவும், சமமாகவும் இருந்தால் மனம் அமைதியுடனும், நேரான எண்ணங்களுடனும் உற்சாகமாகவும் இருக்கும். அதன் மேல் தேவையான கவனம் இல்லாமல் இருப்பதால் மனிதனின் நாடிகளும் சக்கரங்களும் சீர்கெட்டு அடைபட்டு அதிக கவலை, பயம், உறுதியின்மை, பதட்டம் ஆகிய எதிர்மறையான இயல்புகள் அதிகரிக்கின்றன.

**யோகாசனம்** :

“யோகம்” என்றால் அலையும் மனதை ஓர் நிலைப்படுத்தும் செயல். “ஆசனம்” என்றால் உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட அளவு நேரம் இருக்கச் செய்தல். இத்தகைய யோகாசனத்தை காலையில் சில நிமிடங்கள் செய்வதால் அன்றைய நாளை மிகவும் வினைத்திறன் மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் பயன்படுத்தமுடியும். யோகாவினால் உயிரணுக்களில் உறுதியான உடனடியான தாக்கங்கள் ஏற்படுத்துகின்றன. மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்குரிய அணுக்களில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்த வல்லது. உடற்பயிற்சி எமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. எனினும் யோகாப் பயிற்சி உள்ளத்தின் வலுவையும் உடல் வலுவையும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கின்றது.

ஒழுங்கான பயிற்சியின்மையாலும், மன இறுக்கத்தாலும் இறுகிப்போன தசைகளை இளக்கி புத்துணர்வுக்குரிய ஓமோன்களை சுரக்க வைக்கும் ஆற்றலுடையது யோகா. அதே நேரம் மன அழுத்தத்திற்குரிய ஓமோன் (conrtizol) ஐ கட்டுப்படுத்தி வைக்கின்றது. இதனால் எமது உடலின் நீண்டகால ஆரோக்கியத்தை கட்டியெழுப்பமுடியும்.


**சாத்வீக உணவு:**

சாத்வீக உணவு என்பது மனதில் தெளிவையும் அமைதியையும் தரவல்லது. இவ்வகையான உணவுகள் எளிதில் ஜீரணமாகும். அதிகக் கொழுப்பு அற்ற புரதச்சத்து நிறைந்த தானியங்கள் மற்றும் பழங்கள், மரக்கறி, பால் என்பன ஆகும். இத்தகைய உணவுகள் அதி எண்ணை, அதிக உப்பு, அதிக உறைப்பு அற்று மிதமாக சமைக்கப்பட்ட உணவு எமது உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் இவை அதிகளவு இரசாயனப் பதார்த்தத்தை கொண்டிருப்பின் இவற்றில் உள்ள செயற்கை நிறமூட்டிகள், செயற்கைமண மூட்டிகள் அதிகளவு சேர்க்கப்படுகின்றன. இது விஷத்தன்மை உடையவை. இவை உடலில் இயல்பாக சுரக்கும் நல்ல ஓமோன்களை தடுத்து எமது உடல் மற்றும் மனதை மந்த நிலையடையச் செய்கின்றது. பொதுவாக பழவகைகள் எமது உடலில் உள்ள நச்சுத்தன்மையை நீக்கி உடலை தூய்மைபடுத்துகின்றன. கீரை வகைகள் எமது இரத்தத்தை சுத்திகரித்து ஆரோக்கியமில்லாத கொழுப்பை வெளியகற்றுகின்றன. “ஹேயம் துக்கம் அனாகதம்” என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பதஞ்சலி முனிவரின் கூற்று.

அதாவது உங்கள் வாயிலுக்கு நோய் வந்து கதவை தட்டும் முன்பாக தடுத்து விடுங்கள். இதனால் தான் ஐ.நா. சபையும் உலக சுகாதார ஸ்தாபனமும் ஒன்றிணைந்து உலக சுகாதார ஸ்தாபனமும் ஒன்றினைந்து உலக யோகா தினமாக யூன் 21ஐ பிரகடனம் செய்து மக்களை விழிப்படையச் செய்துள்ளது. மதங்கள், மொழிகளுக்கு அப்பாற்பட்டு உலகளாவிய ரீதியில் சென்றடைந்துள்ளது.

மாணவர்கள் தமது பாதையில் சிரத்தையுடனும், உறுதியுடனும் தமது இலக்கை நோக்கி வெற்றியுடன் பயணிக்க யோகாநெறி முறைகளை வாழ்வில் கடைப்பிடித்து உன்னதமான ஆரோக்கியம் மிக்க எதிர்காலத்தை உருவாக்குவது சாலச் சிறந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவேல மரமும் அதன் விளைவுகளும்

திரு. ஸ்ரீஸ்கந்தராஜா செந்தூரன்,
அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் அநேகமான கிராம அலுவலர் பிரிவுகளில் கருவேல மரம் காணப்பட்டாலும் அதிகளவில் நாம் கரம்பொன் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மெலிஞ்சிமுனை, கரம்பொன் போன்ற கிராமங்களில் இது அதிகளவு காணப்படுகினறது.அத்துடன் கரம்பொன் தென் கிழக்கு J/53 கிராம அலுவலர் பிரிவில் பாலக்காடு மற்றும் வட்டுவில் கிராமம் ஆகிய பகுதிகளில் இது படர்ந்து காணப்படுகின்றது அத்துடன் J/52 கிராம அலுவலர் பிரிவுகளில் காளிகோவில் மற்றும் வைத்தியசாலைக்குப் பின்புறமுள்ள பகுதிகளில் அதிகம் செறிவடைந்து காணப்படுகின்றது. அத்துடன் J/59 சுருவில் கிராம அலுவலர் பிரிவு மற்றும் நாரந்தனைப் பகுதிகளிலும் அதிகளவு காணப்படுகின்றது. அத்துடன் பருத்தியடைப்பு பகுதிகளிலும் ஓரளவு காணப்படுகின்றது.

எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகள் பெருமளவு வரட்சியால் பாதிக்கப்படுவதன் காரணமாக இக் கருவேல மரத்தினால் கிடைக்கின்ற நன்மைகளை விட அதிகளவு பாதிப்பினையே ஏற்படுத்தி வருகின்றது. அதனாலேயே 2017 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் வாரத்தினை முன்னிட்டு எமது பிரிவில் மெலிஞ்சிமுனை, கரம்பொன் தென்கிழக்கு போன்ற பகுதிகளில் கருவேல மரங்கள் அழிக்கப்பட்டன. ஆயினும் முழுமையாக அழிக்க முடியவில்லை.






இவற்றின் தோற்றம் மற்றும் பரவல் அவற்றின் பயன் மற்றும் தீமைகள் தொடர்பாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. பொதுவாக மரங்களை வெட்டக் கூடாது, மரங்களைப் பேணி வளர்க்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களது குரலாக உள்ளது. அதுதான் தற்போதைய தேவையும் கூட ஆனால் ஒருசில மரங்களை வெட்டி அழிக்கவும் பரவாமல் தடுக்கவும் வேண்டிய தேவை உள்ளது. அவற்றில் முக்கியமானது இவ் கருவேல மரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக கிராமங்களில் பட்டணத்திலிருந்து அயலூரிலிருந்து வருபவர்களை சீமையில் இருந்து வந்திருக்கிறார்கள் என்று சொல்வார்கள். அதுபோல இக் கருவேல மரங்களும் நம்மூரைச் சேர்ந்தவை அல்ல. நம் நிலத்திற்கும் ஆரோக்கியத்திற்கும், வளத்திற்கும் தீமை விளைவிக்கக்கூடிய இவை வெளிநாட்டிலிருந்து நம் ஊரிற்குள் துரதிஸ்டவசமாகப் புகுந்து தற்போது நமக்கு சவாலாக உருவெடுத்து வருகின்றன.

பயிர்களிற்கு வேலியாகவும் சமையலிற்கு விறகாகவும் பயன்படும் என்ற நம்பிக்கையில் 1950 களில் அவுஸ்திரேலியாவில் இருந்து சிறிதளவு விதையாக இது இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு 70 ஆண்டுகளில் வளர்ந்து பெருகிப் பரவி இன்று தமிழகம் முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது. இவ்வாறான நிலைமையிலேயே இலங்கைக்கும் பரவியிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. இந்த முள் மரம் அமெரிக்கா போன்ற பல வளர்ந்த நாடுகளில் வேளாண்மைக்கு எதிரான நச்சுத் தாவரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பல அரச மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இம் மரங்களை ஒழிப்பதில் முனைப்புடன் செயலாற்றுவதுடன் இம் மரங்களை தடைசெய்யக் கோரிப் பல போராட்டங்களையும் முன்னெடுக்கின்றன.

இம்மரமானது 12m உயரம்வரை வளரக்கூடியது. புளியமர இலைகளைப் போன்று சிறு இலைகளைக் கொண்டவை. மஞ்சள் நிற நீண்ட பூக்களினையும், முதிர்ச்சியில் மஞ்சளாக மாறிவிடும் பச்சை நிறக் காய்களை கொண்டது.இதன் வேரானது நிலத்தில் ஆழச் சென்று நிலத்தடி நீரினை உறிஞ்சக்கூடிய தன்மை கொண்டது. 175 அடி நீளம் வளரக் கூடியது. இதன் தண்டுப்பகுதியில் திரவ ஒழுக்கு காணப்படும்.

இது காட்டுக் கருவேல மரம்,சீமைக்கருவை,சீமை உடை, முட்செடி, டெல்லிமுள், வேலிக்கருவை என்ற பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றது. இதன் தாவரவியற் பெயர் Prosopis juliflora என்பதாகும்.

எந்த வரட்சியிலும் வளரக்கூடிய தன்மை கருவேல மரங்களிற்கு உண்டு. மழை இல்லாது போனாலும் நிலத்தடி நீரினை உறிஞ்சி தனது இலைகளை வாடவிடாமல் பார்த்துக் கொள்ளும். ஆழவேர் மட்டுமன்றி உறுதியான பக்க வேர்களினைக் கொண்டு வளர்வதனால் இவை மழை நீரை உறிஞ்சி நிலத்தடிக்குச் செல்வதனைத் தடுக்கின்றது. எந்த நோயினாலும் பூச்சித் தாக்கத்தினாலும் பாதிக்கப்படாது எந்த இடத்திலும் மற்றய தாவரங்களை அழித்துவிட்டு தான் மட்டும் செழித்துப்படர்கின்ற தன்மை இதற்கு உண்டு. இவை வாழும் இடத்தில் உற்பத்தி செய்யப்படும் நச்சுப் பொருட்களால் நிலத்தில் பிற செடிகள் வளர்வதைத் தடுப்பதுடன், காற்றின் ஈரப்பதனையும் உறிஞ்சுகின்றன. மேலும் கரியமில வாயுக்களினை அதிகளவில் வெளியிடுவதாலும் வளிமண்டலம் மாசுபடுத்தப்படுகின்றது.

வரட்சிக்காலங்களில் நிலத்தடி நீரினை இத்தாவரங்கள் உறிஞ்சிவிடுவதனால் ஏனைய தாவரங்களிற்குப் போதிய நீர் கிடைப்பதில்லை. பிற செடிகள் நிலத்தில் வளர்வதனைத் தடுக்கின்றன. நிழல் மரமாகவோ, கனிமரமாகவோ எவ்வளவு பசுமை யானதாகக் காணப்பட்டாலும் அடியுரமாக இடவோ, குறைந்தபட்சம் பறவைகள் அமர்ந்து கூடுகட்டுவதற்குக் கூட இத் தாவரம் பயன்படுவதில்லை. இவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் அளவிட முடியாதவை.

1. விவசாயம் மற்றும் ஏனைய செடிகள் தழைக்கா வண்ணம் நிலத்தினை வீணடிக்கின்றது.
2. அடர்ந்து வளர்ந்து பெரும்பகுதியை ஆக்கிரமிக்கக் கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நச்சுமிகுந்த முட்கள் பறவைகள், மனிதர்களிற்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடியன.
4. புற்களை அடியோடு வளரவிடாமல் கால்நடைகளிற்கு பாதிப்பினை ஏற்படுத்து கின்றது.
5. நிலத்தடி நீரினைக் குறைப்பதனால் சில அரிய மூலிகைகளின் இழப்பு.
6. விளைநிலங்கள் பாலைவனங்களாகின்றன.
7. சூழல் வெப்பநிலையினை அதிகரிக்கின்றது.

பொதுவாக நன்மை தருபவற்றை வளர்ப்பது நமக்கு எப்போதும் சவாலாகவே இருக்கும். ஆனால் தீமை செய்பவை எதுவாயினும் அது வேகமாகப்பரவும் என்று கூறுவார்கள் அதுபோலவே கருவேல மரங்களும் எளிதில் பரவக்கூடியன. இவற்றின் காய்களை சிலர் விலங்குகளிற்கு உணவாக அளிக்கின்றனர். இதனால் விலங்குகளின் கழிவுகள் மூலம் இம்மரங்கள் விரைவில் பெருகுகின்றன. இது குறித்த விழிப்புணர்வை நாம் கால்நடை வளர்ப்போரிடம் ஏற்படுத்த வேண்டும்.

இயந்திரங்களைக் கொண்டு இவற்றை வேருடன் பிடுங்கி அழித்துவிட முடியும். மேலும் பயன்பாட்டில் இல்லாத நிலங்களில் வேறு நல்ல மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் மீண்டும் இம் மரங்கள் முளைத்துவிடாமல் தடுக்க முடியும். இந்த மரங்கள் அழித்தாலும் மீண்டும் முளைத்து விடுகின்றன என்று பொதுவான கருத்து மக்களிடையே நிகழ்கின்றது. ஆனால் இந்த மனநிலை முற்றிலும் தவறு.முறையாக அகற்றினால் இம்மரங்கள் வளர்வதனைத் தவிர்க்கலாம்.





இக் கருவேல மரங்களின் நன்மைகளை நோக்கின்
1. இலைகள்,நெற்றுக்களை வெள்ளாடுகள் விரும்பி உண்ணும்.
2. இம் மரங்களில் ஒழுகும் பசைத்தன்மையான பதார்த்தம் தாள்களை ஒட்டும் தன்மை கொண்டது.
3. கருவேலங் குச்சிகள் பல் துலக்கப் பயன்படும்.
4. இவற்றின் காய்கள் பொட்டுத் தயாரிக்கப் பயன்படுத்துவர்.

இவ்வாறான நன்மைகள் காணப்படினும் இத் தாவரமானது எமது சூழலிற்குப் பெரிதும் தீமை பயப்பனவாகவே காணப்படுகின்றன. இம் மரங்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதோடு நேரடியாகக் களத்திலிறங்கி இவற்றினை அழிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஒவ்வொருவரும் தங்கள் குடியிருப்புக்களில், தெருக்களில், கிராமங்களில் உள்ள கருவேல மரங்களினை வெட்டி அகற்றுவதோடு பரவாமல் தடுத்து விட்டால் நம் சமூகத்திற்குச் செய்யும் முக்கிய செயலாக அது இருக்கும். இம் மரங்களினை வெட்டி அகற்றுவதோடு அல்லாமல் அந்த நிலங்களில் வேறு நன்மை பயக்கும் மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலமும் இம்மரங்கள் மீண்டும் பரவாமல் தடுக்க முடியும். என்பதுடன் வரட்சியற்ற குளிர்ச்சியான சூழலை உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துவரும் விவாகரத்துக்களும் உடைக்கப்படும் சமூகக் கட்டமைப்புக்களும்

செல்வி பிறிந்தியா தவராசா,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
புள்ளிவிபரக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

இலங்கை நீதிமன்ற வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளாக விவாகரத்து வழக்குகளே காணப்படுவதாகவும் நாளாந்தம் சுமார் 300 பேர் வரையில் விவாகரத்துப் பெறுவதாகவும் அண்மைய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மனிதனின் இருப்பு அச்சுறுத்தப்பட்ட போது யாரும் விவாகரத்துப் பற்றிச் சிந்தித்திருக்கவில்லை. ஆனால் தற்போது தனி மனித உரிமை, வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் விடுதலை போன்ற எண்ணக்கருக்கள் வலுப்பெறத் தொடங்கியதன் பின்னர் விவாகரத்து அல்லது திருமண முறிவு எனும் கருத்தாடல் சமூகத்தில் குடும்பக் கட்டமைப்புக்களை சிதறடித்துச் செல்லும் வகையில் மிக வேகமாக மாறி வருகின்றமையை எம்மால் அவதானிக்க முடிகின்றது. சட்டரீதியாக பல குடும்பங்கள் விவாகரத்துப் பெற்றுக் கொள்ளாது விடினும் கணவன் அல்லது மனைவி தனித்தனியாக வாழுகின்ற கடும் போக்கான நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றமையால் இது தொடர்பான தெளிவுபடுத்தல் மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

விவாகம் (திருமணம்) என்ற ஒரு நிகழ்வு இடம்பெற்ற பின்னர்தான் விவாகரத்து (திருமண முறிவு) என்கின்ற எண்ணக்கரு அர்த்தத்தினைப் பெற முடியும். விவாகம் என்கின்ற பந்தம் "ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் பல உள்ளீடுகளைக் கொண்டு குறிப்பாக ஒருவர் மற்றவரின் மெய்யைத் தீண்டி மகப்பேற்றைப் பெறுதல் என்பதும் இறுதிவரை இப்பந்தத்தில் இணைந்திருத்தல் வேண்டும்" என்பதும் இவ் ஒப்பந்தத்தின்படி முதன்மைக் கூறுகளாய் அமைய பெற்றிருந்தாலும் தற்காலத்தில் அது பல நிபந்தனைகளைக் கொண்டதாக மாற்றம் பெற்றுள்ளது.

1) விவாகம் எதிர்ப்பாலாருக்கு இடையில் இடம்பெறுதல் வேண்டும்.
2) விவாகம் என்பது ஒரு நிரந்தர இணைவு.
3) விவாகம் என்பது நிச்சயமானதும், தனித்துவமானதுமான வெளிப்படையான இணைப்பு ஆகும்.

பொதுவாக விவாகம் என்பது இயற்கைக்கு முரணான எல்லா விதமான பாலியல் நடத்தைகளும் மறுதலிக்கப்பட்டு ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் இடம்பெறும் நிகழ்வு என மட்டுப்படுத்தப்பட்டு அழுத்தம் பெற்று நிற்கிறது. இத்தகைய விவாகத்தால் நெருக்கமான, புரிந்துணர்வான குடும்ப அமைப்பின் தோற்றம் குறித்த எதிர்பார்ப்பு, பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒருமித்த வகையில் பாடுபடுதல், குழந்தைகளை நற் பிரஜைகளாக உருவாக்குதல் போன்றவைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. சமூகங்களும் இத்தகைய குடும்பங்களுக்கே உயர்ந்த அந்தஸ்தை அல்லது மரியாதையை காலங்காலமாக வழங்கி வருகின்றன என்பது நிதர்சனமான உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆனாலும் விவாக பந்தம் எதிர்பார்த்த விளைவுகளை நிறைவு செய்யாத போது விவாகரத்து எனும் எண்ணக்கரு விஸ்வரூபம் எடுக்கின்றது. விவாகரத்துக்கள் அதிகமாவதற்கு காரணம் என்ன என்று ஆய்வு செய்வோமானால் பல பிரச்சினைகளை இங்கு அவதானிக்க முடியும்.

**1. புரிந்துணர்வு இன்மை-**

இது வயது, விருப்பு, வெறுப்பு, அறியாமை, அவநம்பிக்கை, நோய், உறவினர், பிடிவாதம், வறுமை, சாதி, மதம் போன்றவற்றில் தங்கியுள்ளது.

பொதுவாக ஒரே வயதையொத்தவர்கள் மற்றும் அதிக வயது வித்தியாசத்தில் திருமணம் செய்தோர்களிடமே அதிக கருத்து வேறுபாடு காணப்படுவதுடன் விட்டுக் கொடுப்பிற்கும் புரிந்துணர்வுக்கும் இடமிருப்பதில்லை.

2. ஆண்மையற்ற தன்மை
3. பெண்மையற்ற தன்மை
4. பிறன்மனை நயத்தல் / கூடா ஒழுக்கம் / கள்ளக் காதல்
5. நீண்டகாலமாக ஒருவர் மற்றொருவருடன் எதுவித தொடர்புமின்றிப் பிரிந்திருத்தல்
6. திருப்தியற்ற தாம்பத்திய உறவு.
7. மகப் பேறின்மை
8. பொருளாதாரப் பிரச்சனை
9. வரதட்சணை
10. சந்தேகப்படுதல்
11. மதுபோதைக்கு அடிமையாதல்
12. மருமகள் - மாமியார் சச்சரவு
13. தீராதநோய் நிலைகள்
14. குடும்ப வன்முறைகள்



போன்ற காரணங்களைப் பொதுவாகக் கூறலாம். தற்காலத்தில் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சமூகவலைத்தளங்களின் அதிகரித்த பாவனை போன்றவற்றால் இரு தரப்பினரும்

1. கள்ளத் தொடர்புகளை பேணுதல்
2. புகைப்படங்கள் மற்றும் ஆபாசப்படங்களை அனுப்புதல்
3. முகம் தெரியாதவர்களுடன் இணையவழி அரட்டை அடித்தல்

போன்றவற்றிற்கு ஆளாவதாலேயே விவாகரத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

திருமண பந்தத்தில் மகிழ்வாய் வாழ வேண்டும் என ஒன்றுபட்டவர்கள் அந்த ஒன்று படலால் பெற்ற மகிழ்வைக் காட்டிலும் பிரிவு மகிழ்வைத் தரும் என்றால் திருமண பந்தத்தில் இருந்து ஏன் விடுபடக்கூடாது? என்கின்ற வினா எழுவது தவிர்க்கமுடியாததாகிறது. சிலகாலம் திருமண பந்தத்தில் இணைந்திருந்தவர்கள் சலிப்படைந்து தன்னிச்சையாக தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சிக்கும் போது சமயச் சட்டங்கள், அரச சட்டங்கள், சமூக விதிகள் ஏன் தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுகின்றன? அந்த வளமற்ற வாழ்வு ஏன் தொடர வேண்டும்? திருமண பந்தத்துக்குள் ஒருவித பரபரப்பு உணர்வினால் பாலியல் உந்தல் ஈடுபாட்டினால் கருத்து ஒருமைப்பாடின்றி நுழைபவர்கள் அந்தத் தவறைக் காலமெல்லாம் தமது மடமைத் தனத்திற்காக விதிக்கப்பட்ட தண்டனை என்று ஏற்றுக்கொண்டு தான் வாழ வேண்டுமா? இதனாலேயே இந்த இணைவிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் பொதுப்புத்திக்கு ஏற்புடையதாக அமைகின்றது.

ஆனால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமண பந்தத்திற்குள் நுழைய (18 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்) சுதந்திரம் வழங்கப்பட்டாலும் அதனை இரத்துச் செய்வதறற்கான சுதந்திரம் வழங்கப்படவில்லை. இரண்டு நபர்கள் தங்கள் விருப்பப்படி திருமண பந்தத்தை அறுத்துக் கொள்ள முடியாது. அதனால்தான் இந்த முடிவை சட்டம் நீதிமன்றுக்கு கொண்டு செல்கிறது.

இலங்கையில் பல்லின பல மதங்களைக் கொண்டவர்கள் வாழ்வதனால் அவர்களின் கலாசாரத்துக்கு அமைவாக விவாக, விவாகரத்து சட்டங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் எல்லோருக்கும் பொதுவான சட்டமாக பொது திருமண சட்டமும் (General Marriage ordinance) காணப்படுகின்றது. இலங்கையில் 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 34ஆம் இலக்க குடும்ப வன்முறைகள் தடுப்பு சட்டம் கணவன், மனைவிக்கு அல்லது மனைவி கணவனுக்கு எதிராக வன்முறைகளைப் பிரயோகித்தால் இந்த சட்டத்தின் மூலம் பாதுகாப்பை பெறமுடியும். இலங்கைச் சமூகத்தில் குடும்ப பொருளாதார பலம் பெரும்பாலும் கணவனிடமே தங்கியிருப்பதால் பெண்கள் துன்பங்களைச் சகித்துக் கொண்டு பொறுமையுடன் இருப்பதால் முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை. இன்னும் சிலர் விவாகரத்துக்கு செல்லாமல் பராமரிப்பு பணத்தை/ தாபரிப்புப் பணத்தை பெற்று குடும்பத்தை நடாத்தி வருகின்றனர். எப்படியிருப்பினும் சட்டத்தின் முன் கொண்டுவரப்படும் விவாகரத்து வழக்குகளில் கணவன் - மனைவியை பிரிக்காமல் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் சில வேளைகளில் அவர்களின் பிரச்சினைகள் உக்கிரமடையும் போது அதனை தீர்க்க முடியாமல் விவாகரத்துக்கள் வரை சென்றுவிடுகின்றன. வெறுமனமே கையெடுத்திடுவது, தாலி கட்டுவது என்றில்லாமல் சட்ட ஆவணங்கள், நீதிமன்றம், வழக்கறிஞர் கட்டணங்கள், காலநீடிப்பு ஆகியவற்றை வலியுறுத்தி திறந்த நீதிமன்றில் விவாகரத்து வழங்குகள் வழக்காடப்பட்டு வருகின்றமை விவாகரத்து விகிதங்களை குறைப்பதற்கான முயற்சியாகவே காணப்பட்டாலும் இன்னும் விவாகரத்து விகிதங்கள் குறைந்தபாடில்லை.

தற்கால சமூகத்தில் தனி அங்கத்தவர் குடும்பம், தனித் தலைவனை/ தலைவியை மட்டுமே கொண்ட குடும்பம், திருமண பந்தமின்றியே குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றவாறான சிந்தனையின் வெளிப்பாடுகள் குறைந்தளவிலான சமூக அக்கறைப்பாட்டினைக் காட்டி நிற்பதோடு பாரம்பரிய விழுமியங்களைக் கடைப்பிடித்தல் எனும் சிந்தனையைக் குறைத்து மதிப்பிட வழி செய்கின்றன. “தனி அடையாளம் மட்டுமே போதும்” என்கிற கருத்தாக்கம் வலுப்பெறத் தொடங்கியுள்ளது. அதனாலேயே இன்று விவாகமோ, விவாகரத்தோ அக்கறையற்ற எண்ணக்கருக்களாக மாறி வருகின்றன.

விவாகரத்து என்பது தனி மனித உரிமை என்கிற அடிப்படையில் அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்று எனினும் அதன் பின்விளைவுகள் கலாசார, பண்பாட்டு பாரம்பரியத்தையும், சமூக நல்வாழ்வையும், குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்தை குடும்பத் தகராறுகளுக்கு ஒரு தீர்வாகக் கருதுகிறார்கள். விவாகரத்துக்குப் பின்னர் அவர்கள் தங்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப விரும்புகிறார்கள். மனிதனின் சுய விருப்பை, சுய மகிழ்வை மையமாகக் கொண்டு அவை சரிவர நிறைவேறாத சந்தர்ப்பத்தில் திருமண பந்தம் என்பது அறுத்துக்கொள்ள முடியாத ஒன்று அல்ல. பிறருக்காகவோ அல்லது சமூகத்திற்காகவோ தன் வாழ்வினை மகிழ்வுடன் வாழாது காலமெல்லாம் நரக வேதனையில் உழலுதல் என்பது தேவையற்ற விடயமாகவே எண்ணத் தோன்றுகின்றது.

இருந்தாலும், ஒவ்வொரு திருமண பந்தமும் சில வகையான வலிமையான திருப்திப்பாடுகளை உள்ளீடாகக் கொண்டே இடம் பெறுகின்றன. கணவன் -மனைவி உறவானது புனிதம் என்பதை விட முன்மாதிரியானதாகும். குழந்தைகள் தாய் தந்தையரை வழிகாட்டியாகவே நினைத்து வாழப் பழகுகின்றனர். பெற்றோர்கள் சண்டையிடுவதனால் அல்லது பிரிந்து வாழ்வதனால் பிள்ளைகளின் உரிமைகள், கல்வி, ஆராக்கியம், பாதுகாப்பு, மனநிலை என்பன பாதிக்கப்படுவதுடன் பிள்ளைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படும். பிள்ளைகளின் நடத்தைகளிலும் மாற்றம் ஏற்படும். ஆய்வு முடிவுகள் உலகில் பயங்கரமான குற்றவாளிகள் அவர்களது பெற்றோர்களின் சண்டை சச்சரவுகள் அல்லது ஒற்றுமையீனத்தின் காரணமாகவே உருவாகின்றனர் என்று கூறுகின்றது.

ஒரு குடும்ப கட்டமைப்பு சரியாக இருந்தால்தான் அந்த சமூக கட்டமைப்பும் ஒழுங்குபடுத்தப்படும். இதற்கு குடும்பத் தலைவர்களிடம் ஒற்றுமை இருக்க வேண்டும். அற்ப சொற்ப காரணங்களுக்காக அதாவது தும்மினாலும், குறட்டைவிட்டாலும், குளிக்காவிட்டாலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டாலும் விவாகரத்துப் பெறும் காலமாக மாறிவிட்டது. திருமண பந்தத்திற்குள் நுழைவதற்கு முன்னர் பல தடவைகள் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். மனித வாழ்க்கையில் நிம்மதி, அமைதி, சந்தோசம் என்பன மிகவும் அவசியமானவை. அப்படி இல்லாத போது தகுந்த காரணத்துக்காக விவாகரத்து கோருவது சரியானதாக இருந்தாலும் மிகச் சிறிய தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்கும் கூட விவாகரத்தை கோருவது தான் மிகவும் வருத்தமாக அமைகிறது. விவாகரத்து என்பது விளையாட்டான விடயம் அல்ல. விளையாட்டில் தான் வாய்ப்புகள், சலுகைகள் என்பன நிறையவே காணப்படும். ஆனால் ஒரு தடவை விவாகரத்துப் பெற்று விட்டால் இருவரும் மனதார சேர்ந்தாலும் சட்டப்படி இணைவது மிகக் கடினமான விடயமாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

கணவன் மனைவி இருவரில் யார் பெரியவர் என்ற ஈகோ நான் ஆண்! நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும் என்கிற ஆணாதிக்க மனப்பான்மை பாமர மக்களிடம் மாத்திரமல்ல படித்த மக்களிடமும் வேரூன்றியுள்ளது. கல்வி மற்றும் தொழில் மட்டத்தில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமமாக பங்குபற்றத் தொடங்கியதன் பின்னரும் ஒருவர் மீது ஒருவர் அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதும் பல குடும்பப் பிரச்சினைகளுக்கு வித்திடுகிறது. இதனால் ஏற்படும் மனக்கசப்புக்கள் நிரந்தரப் பிரிவிற்கு வழிசமைக்கின்றன. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் பல பிரச்சனைகள் தவிடு பொடியாகிவிடும் கணவன் மனைவி எனும் பந்தத்திற்குள் ஏற்படும் பிரச்சினைகளில் இன்னொருவரின் தலையீடு இல்லாமல் தாங்களே பேசித் தீர்த்து சுமூகமான நிலையை ஏற்படுத்துவது சிறப்பாக அமையும் என கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தமிழர் கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் திருமணம் என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாட்டை அடித்தளமாகக் கொண்டமைந்துள்ளது. திருமண பந்தத்திற்கு என்று வலுவான அடையாளச் சின்னங்களும் உள்ளன. பெண்கள் நெற்றியில், உச்சியில், கழுத்தில் குங்குமத் திலகம் இடுதல், தாலிகட்டுதல், எழுத்து மோதிரம் அணிதல், ஆண்கள் ஒரு காலில் சிலம்பு அணிதல், மெட்டி அணிதல் போன்றவற்றை ஆரம்பகாலத்தில் கட்டாயமானதாகக் கொண்டிருந்தாலும் கலாசார மாற்றத்தினால் பெரும்பாலான தற்காலப் பெண்கள் நாகரீகம் என்ற போர்வையில் தாலி அணிவதில்லை, குங்குமத் திலகம் இடுவதில்லை. திருடனுக்குப் பயந்து தான் பொற்தாலியை அணியாது விடினும் குறைந்த பட்சம் ஒரு மஞ்சள் கயிறையாவது கட்டுவதில்லை. அதுபோலவே திருமணமான ஆண்களுக்கு என்று எந்த அடையாளமும் இல்லை. இதனால் தான் திருமணமான பெண்கள் யார், திருமணமான ஆண்கள் யார் என்று கண்டுபிடிப்பதில் ஏற்படும் சிக்கல் நிலையினால் பல இளம் வயதினர் அறியாமலே காதல் வலையில் வீழ்கின்றனர். பின்னர் அதிலிருந்து வெளியேற முடியாது தமது வாழ்க்கையை கேள்விக் குறியாக்குகின்றனர். இதனால் திருமணமான பல குடும்பங்களில் பிரிவுகள், சச்சரவுகள், திருமண முறிவுகளும் ஏற்படுகின்றன. இந்நிலையைக் கருத்திற் கொண்டு தமிழ்க் கலாச்சாரத்திற்குரிய திருமண அடையாளச் சின்னங்களை வலுவாகப் பின்பற்ற வேண்டும் என்பதே விவாகரத்துக்களைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த வழியாக அமையும் எனக் கருதுகிறேன்.

அதுமாத்திரமல்லாது இன்றைய நவீன யுகத்தில் கைத்தொலைபேசிகள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பாவனை தவிர்க்க முடியாதாயினும் முடிந்த வரை அத்தியாவசியமான விடயங்களுக்கு இவற்றில் நேரத்தைச் செலவு செய்து கொள்ள வேண்டும். இன்றைய இளைய சமூகத்தினர் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகி பெருமளவு நேரத்தை அவற்றிலேயே செலவிடுகின்றனர். வயதுக்கு மீறிய ஆபாசப் படங்களை, காணொளிகளைப் பார்க்கின்றனர். இதனால் அவர்களின் மனதில் பாலியல் ரீதியான ஓர் உணர்வு உந்தப்பட்டு தகாத உறவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் போதைப்பொருள் பாவனை, மதுப்பாவனை என்பன மிகச் சாதாரணமான விடயமாக மாறி வருகின்றன. இதனால் இளைஞர் யுவதிகள் தன்னிலை மறந்து தகாத உறவுகளில் ஈடுபடுகின்றனர். இவை வெளித்தெரிகின்றபோது குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

குடும்பம் என்கின்ற சமூகத்தின் சிறிய அலகு சரியாக இருக்குமானால் சமூகம் என்கிற கட்டமைப்பும் மிகச் சரியாக இருக்கும். குடும்பங்களின் சீர்குலைவுகளே சமூகச் சீரழிவுகளுக்கு காரணமாகின்றன. ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பிற்கு குடும்பங்களின் ஒற்றுமையே மிகப் பெரும்பலமாக அமையும் என்பதனை பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்வது அவசியமாகும். எத்தனை கடினமான சோதனைகள் ஏற்பட்டாலும் இடர்பாடுகளிலும், இன்னல்களிலும் சிக்கித்தவிர்க்க நேரிட்டாலும் “கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்” “ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற பழமொழிகளை ஒதுக்கித் தள்ளாமல் அவை வெறும் வார்த்தைகள் அல்ல வாழ்க்கைக்கான பாடம் என்பதைக் கருதிற்கொண்டு இல்லறத்தில் விட்டுக்கொடுப்பவர்கள் தோற்கிறவர்கள் அல்ல ஜெயிக்கிறவர்கள் என்பதை உணர்ந்து கணவன், மனைவி உறவை உயிராக மதித்து வாழப்பழகவேண்டும். இல்லற வாழ்க்கையென்பது முடிவு அல்ல அது வாரிசுகளின் வடிவில் தொடரும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து ஆரோக்கியமான சமூகக்கட்டமைப்புக்கு வழிசமைக்கவேண்டும் என கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் வெடியரசனின் ஆட்சி- ஒரு தேடல்

திருமதி யாழினி செண்பகவிநாயகம் (B.B.A)

ஈழதேசத்தின் வரலாறானது தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், நம்பொத்த, கோகில சந்தேஷிய மற்றும் பௌத்த ஜாதகக் கதைகள் போன்ற பல்வேறுபட்ட நூல்களின் மூலமாக சுமார் 2500 வருடங்கட்கு முன்பிருந்த வரலாறு தொடங்கி இன்றுவரை நீட்சியாகப் பேணப்பட்டு வருகின்ற போதும் (அவற்றின் நம்பகத்தன்மை, புனைவுகள், புரட்டுகளுக்கப்பால்), வட ஈழத்தின் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் வரலாறானது கி.பி 13ம் நூற்றாண்டிற்குப் பின்னரே அறியக்கூடியதாக இருக்கின்றது. கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்ற இவ்வரலாறுகள் வணக்கத்துக்குரிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் குலசபாநாதன், முதலியார் இராசநாயகம் மற்றும் பலராலும் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. மாதகல் மயில்வாகனப்புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையின் ஆய்வு நூல் ஒன்று முதலியார் குலசபாநாதன் அவர்களால் வெளியிடப்பட்ட போது அதன் அணிந்துரையில், "கர்ண பரம்பரையாக அறிந்த வரலாறுகளை கைலாயமாலை, வையாபாடல் என்ற நூல்களின் செய்திகளோடு இயைத்து யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை எழுதியுள்ளார் என்பது தெரிகின்றது இதிலுள்ள வரலாறுகள் யாவும் சரித்திர உண்மைகளாகக் கொள்வதற்கில்லையாயினும் இந்நூல் சரித்திர ஆராய்ச்சியாளர்கட்கு மிகவும் பயன்படத்தக்கது என்கிறார் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ச. நடேசபிள்ளை அவர்கள் இவர் போன்று பல ஆய்வாளர்களும் யாழ்ப்பாண வரலாறுகள் பற்றி பல்வேறுபட்ட விமர்சனங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். எனவே வட ஈழத்தின் வரலாறுகளின் நம்பகத்தன்மையும் ஆய்வுக்கும் கேள்விக்கும் உட்பட்டதே எனலாம். இந்நிலையில் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களின் வரலாறுகளை அறிய முன்பே தீவகத்தினை தனது ஆட்சி மையமாகவும் குடா நாட்டிலிருந்து தெற்கே சிலாபம் வரை தனது ஆட்சியதிகார ஆள்புல எல்லைகளாகக் கொண்டும் ஆட்சி செய்த வெடியரசனது வரலாற்றை, ஆட்சியை, ஆட்சிச் சிறப்பை வெளிக்கொணரும் முகமாகவும் வரலாற்றாசிரியர்களாலும், வரலாற்று ஆய்வாளர்களாலும், மறைக்கப்பட்டோ, மறுக்கப்பட்டோ இன்றும் அல்லது மறக்கப்பட்டோ கண்டு கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கும் வட ஈழத்தின் அதாவது தமிழ் பிரதேசத்தில் கிறிஸ்து சகாப்தத்தில் ஆட்சி புரிந்த மன்னனாக சான்றாதாரங்களுடன் அறியப்படும் வெடியரசனது ஆட்சி பற்றிய வரலாற்றை வரலாற்றியலாளர்கள் அல்லது வரலாற்று ஆய்வாளர்கள் அறிவு பூர்வமாகவும் தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் ஆய்வு செய்து வெளிக் கொணர வேண்டிய அவசியத்தையும் உந்துதலையும் உருவாக்குவதே இப்பத்தியின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

"ஈழத்து வரலாற்று நூல்கள் யாவும் நாகர்கள் பற்றிய செய்திகளுடனேயே ஆரம்பிக்கின்றன. கி.மு 6 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் மேற்குக் கரையில் வல்லமை வாய்ந்த நாக அரசுகள் நிலவின. அதனாலேயே வட இலங்கை நாகதீவு என அழைக்கப்பட்டது. நாகர் என்போர் ஆதித் திராவிடர், தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய நாகர்கள் இங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி வாழ்ந்தனர். இலங்கையின் கந்தரோடை, நாகர் கோயில், நயினாதீவு, களனி, மாதோட்டம் முதலான இடங்களில் நாகமன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். நயினாதீவில் விளங்கிய அரசு நிலைபேறு உடையதாகவும் அன்னை இராஜேஸ்வரியின் கோயில் அதன் தலைவாசலாகவும் விளங்கியது என்றும் கூறப்படுகின்றது. சிலாபம் - உடப்பு ஆகிய இடங்களுக்கு கிழக்கே பாயும் ப∴றுளி என்ற சிற்றாறும், தெதுறு ஓயா என்ற சிற்றாறும் பழந்தமிழரது நாகரிகத்துடன் தொடர்புடையன. (கலாநிதி பாலசுந்தரம் இ.2002; 396, 397). வட இந்தியர் இலங்கைக்கு குடியேறி வந்தபோது வட இலங்கையிலும், மேற்கு இலங்கையிலும் வாழ்ந்தோர் நாகர் என மகாவம்சம் கூறுகின்றது. அண்மையில் இலங்கையில் தொல்லியல் ஆய்வு நடத்திய அறிஞர் சிலர் வட இந்தியர் வருகைக்கு முன்பே சிறப்பாக யாழ்ப்பாணத்தில் திராவிடப் பண்பாடு நிலை பெற்றிருந்தது. என்ற முடிவுக்கு வந்துள்ளனர். சங்க காலத்திலும் அதற்கு முன்பும் திராவிடரிடையே சிறப்பாகக் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாடு இலங்கையின் பல பகுதி களிலும் காணப்பட்டதனை கலாநிதி சி.க சிற்றம்பலமும் (1980), ஆதித் திராவிடக் குடியேற்றங்கள் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றதனை கலாநிதி பொ. இரகுபதியும் (1983) எடுத்துக் காட்டியுள்ளனர்" என்கிறார் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களது இடப்பெயர் ஆய்வு எனும் நூலுக்கு மதிப்புரை வழங்கிய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் (பாலசுந்தரம், இ. 2002:). எனவே வட ஈழத்தில் நாகர்கள் பண்டைக்காலம் முதலே ஆட்சி புரிந்து வந்திருப்பது தொல்லியல் ஆய்வுகள் மூலமும், அறிவியல் ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளதனை அறியமுடிகின்றது.

காலம் காலமாக இலங்கையில் நடைபெற்ற தென் இந்தியப் படையெடுப்புக்களும் அதன் பின்னரான ஐரோப்பிய காலனித்துவ மேலாண்மை அரசியல் நடவடிக்கைகளும் அதற்கும் அப்பால் சோழர்களது, நாக அரசுகள் மீதான படையெடுப்புக்களும் இப் பிரதேசத்தின் குறிப்பாக தீவகம் சார்ந்த வரலாற்றுப் பெருமைமிக்க வரலாற்றுச் சான்றுகளையும் கலைச் செல்வங்களையும் அழித்துள்ள நிலையில் வரலாற்று ஆய்வு என்பதும் பெரும் சிக்கல்களையும் சவால்களையும் முகங்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையிலேதான் ஆதித் திராவிடர்களின் நாகர் அதிலும் குறிப்பாக முக்குளி நாகர் இனத் தலைவனான வெடியரசனது வரலாறு காய்தல் உவத்தலின்றி நடுநிலை நின்று சுருக்கமான கண்ணோட்டத்துடன் இங்கு தரப்படுகின்றது.

**வெடியரசன் வரலாறு**

கி.பி 1ம்-2ம் நூற்றாண்டு காலப்பகுதியில் திருவாசன் எனும் வெடியரசன் நெடுந்தீவினை பிரதான ஆட்சி மையமாகக் கொண்டு தீவுப்பகுதிகளையும் குடாநாட்டுப் பகுதிகளையும் தெற்கே பூநகரி, மன்னார் உள்ளடங்கலாக சிலாபம் வரையும் - ஆட்சி செய்தான். அவனுக்குத் துணையாக அவனது இளைய சகோதரர்களான வீரநாராயணன், வீரமார்த்தாண்டன், போர்வீரகண்டன் ஏரிலங்குருவன் ஆகியோர் அவனது ஆட்சியில் சிற்றரசர்களாக ஆட்சி செய்தனர். வெடியரசன் நெடுந்தீவைப் பிரதான தளமாகக் கொண்டும் வீரநாராயணன், பொன்னாலை, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை எனும் இடங்களிலும் விளங்குதேவன், திருவடிநிலை, சுழிபுரம் பகுதிகளிலும் ஏரிலங்குருவன் காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகளிலும் போர்வீரகண்டன் கீரிமலைப் பகுதிகளிலும் தத்தமது பிரதான கோட்டைகளை அமைத்து நிர்வாகம் செய்து வந்தார்கள் என்றும் அக்காலத்தில் இன்றைய யாழ்ப்பாணப் பிரதேசம் அதிக மக்கள் குடியேற்ற மற்ற பகுதியாக இருந்ததுடன் குடாநாட்டினையும் அதன் கரையோரப் பிரதேசங்களையும் பூநகரி, வன்னி மற்றும் மன்னார், சிலாபம் வரையான பகுதிகளையும் இவர்களது வம்சத்தைச் சேர்ந்தவர்களே இவர்களது நிர்வாகத்தின் கீழ் ஆண்டு வந்தார்கள் என்றும் வெடியரசன் பற்றிய வரலாறுகள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரிப்புப் (முசலிப் பிரதேசத்தை அண்மித்த) பகுதியில் அல்லிராணிக் கோட்டைப் பகுதியும் வெடியரசனின் கீழ் இருந்தது என்றும், அல்லிராணி என்பவளுடன் மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் அர்ச்சுனன் - அல்லிராணி தொடர்பான கதைகள் புனைவுகள் என்றும் இந்த அல்லிராணியும் வெடியரசனின் முத்துக் குளிப்பு, சங்கு குளிப்புத் துறைகளை நிர்வகித்து வந்தவள் என்றும் அவளது வம்சத்தைச் சேர்ந்த சந்திரவதனா என்பவளை வீரநாராயணன் மணந்தான் எனவும் பொன்னாலையில் இன்றும் மாளிகை அடைப்பு என்று அழைக்கப்படும் இடம் அவனது வசிப்பிடமாகவும் வீராவத்தை எனும் இடம் அவர்களது பூந்தோட்டமாகவும் பொன்னாலையில் விஷ்ணுவுக்கு ஏழ்நிலை மாடமமைத்து புனருத்தாரணம் செய்யப்பட்ட கோயிலே ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் எனவும் அறியமுடிகிறது. (சிவப்பிரகாசம். மு. வெடியரசன் வரலாறு மற்றும் யாழ்பாணச் சரித்திரம்).

ஈழத்தில் வாழ்ந்த ஆதித் திராவிடர்களான நாகர்கள் தீவகமெங்கும் பரந்து வாழ்ந்தனர் என்றும் அன்றைய காலகட்டத்தில் மிகவும் வருமானம் தரும் தொழிலாக சங்கு குளித்தல், முத்துக் குளித்தல் என்பன இருந்தனவென்றும் இந் நாகர்களில் முத்துக் குளிப்பவர்கள் முக்குளி நாகர் என்றும் சங்கு குளிப்பவர்கள் சங்குளி நாகர்கள் என்றும் (கடலில் மூழ்கி முத்தெடுப்பது முக்குளித்தல், மூழ்கி சங்கெடுப்பது - சங்கு குளித்தல்) அழைக்கப்பட்டனர். இவ்விதம் முத்துக் குளிக்கும் வம்சத்தில் வந்தவனே வெடியரசன் என்றும் எனவே முக்குளி நாகர்களை முக்குவர் என அழைப்பதாகவும் அறியமுடிகிறது என்றும் குறிப்பிடுகின்றனர். முத்துக் குளிக்கும் துறைகளும் சங்கு குளிக்கும் துறைகளும் முன்பு அதிகம் காணப்பட்டதாகவும் அவற்றைக் கொண்டு வந்து அங்கு தரம் பிரித்து பின் ஏற்றுமதி செய்வதும் அக்காலத்தில் பிரபல்யம் பெற்று இருந்தன. (செபதேயு.N).

அது மட்டுமல்லாது நாகமணிகள், இரத்தினக்கற்கள், மாணிக்கக்கற்கள், முத்துக்கள் பெறுமதி வாய்ந்த வலம்புரி மற்றும் பாஞ்ச சைன்னியம் போன்ற சங்குகளும் நிறைந்த களஞ்சிய சாலைகளும் நெல், மொண்டி, சாமை, வரகு போன்ற தானிய வகைகளும் கால் நடை உற்பத்தியின் பெருக்கமும் பால், தயிர், நெய் போன்றவையும் நிறைந்து விளங்கியதால் சுய தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்ட பிரதேசமாகவும் இவனது ஆட்சிப் பிரதேசம் காணப்பட்டதாகவும் அறிய முடிகிறது. இதனால் விலையுயர்ந்த மாணிக்கங்கள் வெடியரசனிடம் காணப்பட்டமையால் உரோம - கிரேக்க நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வந்ததுடன் பண்டமாற்றாகவும் பொன், இரும்பு, வெள்ளி போன்றவையும் அவர்களால் வெடியரசனுக்கு கிடைக்கப்பெற்று மிகவும் செல்வம் படைத்தவனாகவும் ஆட்சிபுரிந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

சீன, உரோம, கிரேக்க, வர்த்தகக் கப்பல்களும் ஏனைய பன்னாட்டு வர்த்தக வாணிப கப்பல்களும் வந்து போகக்கூடிய இடங்களாக நெடுந்தீவின் பெரியதுறை, அல்லைப்பட்டி, ஊர்காவற்றுறை, நயினாதீவு, சிலாபம் மற்றும் மன்னார் போன்றவை காணப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. வெடியரனின் செல்வச் செழுமையும் பிரபல்யமும் மற்றும் அவனிடம் இருந்த விலை மதிக்க முடியாத நவரத்தின மணிகள் காரணமாகவும் சோழர்களும் அவன்மீது பொறாமை கொண்டிருந்தனர் என்றும் அறியக் கிடைப்பதுடன் கண்ணகியின் காற்சிலம்புக்குப் பொருத்த மான பெறுமதி மிக்க நாகமாணிக்கற்கள் வெடியரசனிடம் இருப்பதனை அறிந்து காகுந்தி புதல்வன் எனக் கருதப்படும் மீகாமனை தென் இந்திய சோழ ஆட்சியாளன், வெடியரசனிடம் அனுப்பியதாக குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றன. (வின்சென்ற்- நீ).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் இலங்கைக் கஜபாகு மன்னனிடம் மரக்கலங்களுக்கான உதவிகளைப் பெற்றபின் மீகாமனை வெடியரசனிடம் அனுப்பியதாகவும் அவன் தர மறுக்கவே மீகாமனுடன் போர் நடந்ததாகவும் வெடியரசன் சிறைப்பட அவன் தம்பியான வீரநாராயணன் நயினாதீவின் மேற்குக்கடலில் படையெடுத்து வந்து மீகாமனுடன் போர் புரிந்ததாகவும் அதற்கிடையில் வெடியரசன் சிறைப்பட்டான் என்ற செய்தி கேட்டு அவன் மனைவி நீலகேசி உயிர் துறந்ததாகவும் வீரநாராயணன் போரில் இறக்க ஏனைய சகோதரர்களான வீரமார்த்தாண்டன், போர்வீரகண்டன், ஏரிலங்குருவன் ஆகியோர் போர் செய்து வெடியரசனை சிறைமீட்டதாகவும் ஒரு சமரசம் எட்டிய பின்னர் நாகமணியினை வெடியரசன் மீகாமனுக்கு கொடுத்தனுப்பினான் எனவும் வரலாறுகளிலும், இலக்கியங்களிலும் நாட்டார் கதைகளிலும் காணக்கிடைக்கின்றது. மேலும் கோவலன் கொலையுண்டதும் கண்ணகியால் மதுரை எரிக்கப்பட்டமையை அறிந்த வெடியரசனது குலத்தவர்கள் நாகமணியைத் தாங்கள் கொடுக்க மறுத்துப் போர் செய்தமையால் தமக்கும் கண்ணகியால் கேடு வரக்கூடும் என்று எண்ணி அதற்குப் பயந்தும் சோழப் படையெடுப்புக்களுக்கு தொடர்ந்து முகம் கொடுக்க விரும்பாதும் வெடியரசன் இறந்தபின் அப் பிரதேசங்களை விட்டு வெளியேறி மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வன்னிப் பிரதேசங்கட்கு குடியேறினர் என்றும் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பரந்து இவ்வின மக்கள் இன்றும் வாழ்ந்து வருவதும் மட்டக்களப்பின் பழுகாமப் பகுதியில் இன்றும் நெடுந்தீவுக் குடிகள் என அழைக்கப்படும் இவ்வினமக்களின் ஒரு சாரார் வாழ்ந்து வருவதும் நிதர்சனமானக் காணக்கூடியதாகவிருக்கின்றது. மேலும் மீகாமனுக்குப் பயந்து ஓடிப்போன வெடியரசன் எனும் முக்கியன் மட்டக்களப்பு நாட்டிலேயே போய் அங்கிருந்த இலந்தைக் காடெல்லாம் வெட்டி தனது நாடாக்கியிருந்தான் (வையாபாடல் 21,22ம் செய்யுள்: 30,53,54) என்பதும் மட்டக்களப்பில் அவன் வம்சத்தவர் போய் குடியேறியதனை உறுதி செய்வதாகின்றது.

**வெடியரசனது ஆட்சி பற்றி**

களபூமித் துறைமுக வரலாற்றில் வெடியரசன் காலம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. கி.பி 1ம், 2ம் நூற்றாண்டில் வெடியரசன் நெடுந்தீவைத் தனது ஆட்சிக் கோட்டையாகக் கொண்டும் காரைதீவின் களபூமித் துறைமுகத்தருகே ஒரு அரச மாளிகையையும் நீலங்காட்டில் வெடியரசனின் மனைவியான நீலகேசியின் அந்தப்புரமும் சூரியன் பிட்டியில் ஒரு மாளிகையும் பொன்னாலை, வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை, கீரிமலை, மயிலிட்டி, திருவடிநிலை போன்ற இடங்களில் களஞ்சியக் கோட்டைகளையும் நயினாதீவில் விலை உயர்ந்த நாகமணி மற்றும் நவரத்தினக்கற்கள் போன்ற செல்வங்களைக் கொண்ட களஞ்சியக் கோட்டையையும் வைத்திருந்தான். (டானியல் ஜோன்; யாழ்ப்பாணச் சரித்திரம்). எனவே வெடியரசனது ஆட்சி பற்றிய பல்வேறுபட்ட ஆதாரங்களும் இவற்றை நிரூபிக்கப் போதுமானவையாகவே காணப்படுகின்றன.

**வெடியரசனது காலப்பகுதியில் தீவகமும் ஊர்காவற்றுறையும்**

நெடுந்தீவைப் பிரதான தளமாகக் கொண்டு வெடியரசன் ஆட்சி செய்தாலும் அவனது பிரதான வசிப்பிடமாக அவனது மனைவியின் அந்தப்புரம் அமைந்த காரைநகரே காணப்பட்டது. இந்நிலையில் அவனது போக்குவரத்துத் துறையின் பிரதான மார்க்கமாக நெடுந்தீவு, ஊர்காவற்றுறை - கண்ணகி அம்மன் இறங்கு துறை காணப்பட்டதாகவும் ஊர்காவற்றுறை துறைமுகப்பகுதி அவனதும் அவனது படை வீரர்களதும் பாய்மரப் படகுகள், கப்பல்கள், தோணிகள் யாவும் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கும் துறையாகவும் வடகீழ் மற்றும் தென்மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவகால நிலைகளிலும் மற்றும் துணைக் காற்றுக் காலங்களிலும் மிகப் பாதுகாப்பு அரணாகவும் விளங்கியதாகவும் அறிய முடிகின்றது.

**குடிப்பரம்பல்**

ஊர்காவற்றுறையின் மிகவும் செழிப்பான பிரதேசமாகக் காணப்படும் செம்மண் பிரதேசமான ஊருண்டிப்பகுதி நன்னீர் வசதிகளுடன் காணப்பட்டமையால் அவன் காலத்தில் அங்கு செறிவான குடியிருப்புக்களும், பயிர்ச் செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதனை அண்டிய பகுதிகளில் மாட்டுக்காலை, பருத்தியடைப்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் தானியச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தொண்டி போன்ற இடங்களிலிருந்து நல்லின பசுக்கள் மற்றும் காளைகள் கொண்டு வரப்பட்டதாகவும் ஊர்காவற்றுறை மிகுந்த பால் வளமும் கொண்டிருந்ததாகவும் அறியமுடிகின்றது.

வெடியரசனது காலத்தில் நெடுந்தீவிலும் ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு போன்ற இடங்களிலும் அவனது கால்நடைகளின் பெருக்கம் மிகுந்து காணப்பட்டதாகவும் பால் உற்பத்திப் பொருட்களின் வளமும் நிறைந்திருந்தது எனவும் செ.வி. அருட்பிரகாசம் என்பவர், “தீவகத்தில் தன்நிறைவுப் பொருளாதாரமும் வெடியரசன் ஆட்சிக் காலமும்” எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் நெடுந்தீவு முன்னர் புட்கரம், கமலம் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டதாகவும் வெடியரசனது காலத்தில் பசுப்பெருக்கத்தாலும் பால் வளத்தாலும் பசுத்தீவு, பாற்தீவு, தயிர்த்தீவு என அழைக்கப்பட்டதாகவும் இப்பாற் பசுக்களின் பெருக்கம் காரணமாகவே போர்த்துக்கேயர் தமது மொழியில் அப்பொருள் தரும் வகையில் IL-has-das-vacas இல்காஸ்-டாஸ்-வகாஸ் என நெடுந்தீவை அழைத்தனர் என்றும், ஒல்லாந்தரும் தமது பாற்பண்ணை நகரினை நினைவூட்டும் வகையில் Delft (டெல்வ்ற்) என அழைத்தனர் என்று குறிப்பிடுவதுடன் இவ்வரசனது காலத்தில் அவனது பசுக்கள், ஆடுகள் போன்ற கால் நடைகளின் வளமான, செழிப்பான தன்மை காரணமாகவும் எப்போதும் இங்கு இக்கால் நடைகள் மேய்ந்து திரிந்து காணப்படுவதால் ஊர் + ஆ + துறை = ஊராத்துறை என வழங்கப்படலாயிற்று என்றும் (அதாவது பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கும் துறை), அவனது காலத்துக்கு முன் கந்தபுராண காலத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு யாவும் ஒரே தீவாகக் கொள்ளப்பட்டாகவும் அப்போது சூசை என அழைக்கப்பட்டதாகவும் வெடியரசன் காலத்தில் ஊராத்துறை என காரண இடுகுறிப் பெயரால் அழைக்கப்பட்டு பின் ஊர்காவற்துறையாகி இன்று காவலூராகக் காணப்படுகின்றது என்கிறார். இதனையே வெடியரசன் பற்றிய பல கட்டுரைகளை எழுதியவர்களும் உறுதிப்படுத்துகின்றனர். மேலும் வேலணை நெல்லாவில், ஆவுடையான்புலம், மண்டைதீவின் சூழப்பட்டி போன்ற இடங்களும் வெடியரசன் காலத்துப் பசுக்களது வளப்பம் நிறைந்த இடங்களாகவும் நெல் தானியங்கள் நிறைந்த இடங்களாகவும் மக்கள் சூழ்ந்து வாழ்ந்த இடங்களாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

நெல்லாவில் = நெல் + ஆ + வில் - நெற்களும், பசுக்களும் நிறைந்த அரைவட்ட வில் வடிவ குளத்தை அண்டிய பகுதி.

ஆவுடையான் புலம் = ஆ + உடையான் + புலம் (ஆ = பசு), (பசுப் பண்ணைக்கு சொந்தமானவனின் புலவு)

சூழப்பட்டி - மாட்டுப்பட்டிகளைச் சூழ்ந்து மக்கள் வசித்த பகுதி இவையாவும் வெடியரசனது பொருளாதாரச் சிறப்பினையும் செல்வச் செழிப்பு மற்றும் நிர்வாகச் சிறப்பினையுமே எடுத்துக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறைமுகங்கள்**

இவ் வெடியரசனது காலப்பகுதியில் போக்குவரத்துக்கான முக்கியமான தடங்களாக கடற்போக்குவரத்துப் பாதைகளே காணப்பட்டன. இவ்வகையில் நெடுந்தீவுவின் பெரியதுறை, வெல்லைத்துறை, குடவிலித்துறை, மாவிலித்துறை என்பனவும் புங்குடுதீவின் கழுதைப் பிட்டித்துறை, புளியடித்துறை, பெரியதுறை, குறிகாட்டுவான், குளத்துவான், பழையதுறை, சங்கு மாலடி என்பனவும் நயினாதீவின் படகுத்துறை, உவான்துறை, துடரிடைத் துறை, வாகையடித்துறை என்பனவும் ஊர்காவற்றுறை மற்றும் அதனை அண்டிய கண்ணகி அம்மன் இறங்குதுறை என்பனவும் காரைநகரின் களபூமித்துறை மற்றும் அராலித்துறை, நவாலி, நாவாந்துறை, அலுப்பாந்தி, பூநகரியின் கல்முனை என்பனவும் மன்னார், புத்தளம், சிலாபம் முதலான துறைமுகங்களுடன் சிறுசிறு துறைமுகங்களும் போக்குவரத்து ஏற்றுமதி, இறக்குமதித் துறைமுகங்களாகக் காணப்பட்டன என்றும் பெரும்பாலும் உள்நாட்டினரின் போக்குவரத்தானது தேவைகளை ஒட்டியதாகவும் குறைவானதாவுமே காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

விவசாயம் : கால்நடை விவசாயமும் பயிர்ச் செய்கையும் அதாவது தானிய உற்பத்தியும் பருத்தி போன்றவையும் பயிரிடப்பட்டு தன்னிறைவுப் பொருளாதாரங் கொண்ட ஆட்சிப்பகுதியாக காணப்பட்டது. மேலும் நெடுந்தீவில் கோதுமையும் பயிரிடப்பட்டதாகவும் இது போர்த்துக்கேயர் காலம் வரை நீடித்ததாகவும் அறியமுடிகிறது. எனினும் நெடுந்தீவில் ஒல்லாந்தர் வருகையின் ஆரம்பம் வரையும் வெட்டுக்களிப் பகுதியில் கோதுமை செழிப்பாக வளர்ந்தது என்பது போர்த்துக்கேய வரலாறுகளிலும் காணப்படுகின்றது.

பொருளாதாரம் : முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் என்பன பிரதானமாக நடைபெற்று வந்ததுடன் சங்கு, முத்து மற்றும் நவரத்தினங்கள் நிறைவாகவும் பெறுமதி மிக்கவையாகவும் காணப்பட்ட மையால் வெளிநாட்டு, நாணயங்களின் புழக்கமும், உலோகப் பொருட்களின் வரவு (தங்கம், வெள்ளி, இரும்பு) தாராளமாக இங்கு கிடைத்ததாகவும் எனவே பொருளாதாரத்தில் உச்ச நிலை இவ் வெடியரசனது காலத்தில் எட்டப்பட்ட தாகவும் அறியமுடிகிறது.

பாதுகாப்பு: கடல் ஓரப் பாதுகாப்புடன், கடல் மீதான ரோந்துகள் காணப்பட்டதாகவும் கச்சதீவு தொடங்கி அனலைதீவு உட்பட அனைத்து தீவுகளும் (சிறுசிறு தீவுகள் உட்பட) வெடியரசனது படையினரால் காவல் பரண் அமைத்தும் கோட்டைகள் அமைத்தும் காவல் பணிகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் 16ம் நூற்றாண்டில் வடபகுதிக்கு வந்த ஐரோப்பியர்களது கோட்டைகள் அமைந்த பகுதிகள் யாவும் வெடியரசனது காவற் பரண்கள் அமைந்த பகுதிகளே எனவும் (கடற்கோட்டை, ஊருண்டிக் கோட்டைப் பகுதிகள் உட்பட) அறியமுடிகின்றது.

விவசாயத்தில் குளங்கள் : வெடியரசனால் விவசாயத்தை மேம்படுத்த பல குளங்கள் வெட்டப்பட்டதாக வரலாறுகள் குறிப்பிடும் போதும் அவற்றில் நெடுந்தீவின் வெட்டுக்களி எனும் நீர்த்தேக்கமே வெடியரசனால் வெட்டப்பட்டதாக இனம் காணப்படுகின்றது இதனை R.H பசெற் என்பவர் வெட்டுக்களி எனும் பெரும் நீர்த்தேக்கத்தை வெடியரசன் வெட்டினான் என்றும் குறிப்பிடுகின்றார்.

**வெடியரசனின் மூதாதையர் பற்றி...**

சிங்கள மொழியிலமைந்த "உடரட்ட விடி" எனும் நூலில் தென் இலங்கை மன்னன் "பாதிக்கவாய" வட இலங்கையின் பொன்னாலைப் பகுதியை ஆட்சிசெய்த வெடியரசனின் மூதாதையருடன் போரிட்டான் எனவும் அவர்களது படை வலிமை, போர் வலிமை என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சிவப்பிரகாசம் (மு:1988 81) பாதிக்க அபயன் எனும் மன்னர் கி.பி 38-66ல் ஆட்சி புரிந்ததும் அவனது தம்பி மகாதாடிக மகாநாகன் கி.பி 66-78 வரை ஆண்டமையும் இலங்கை இடப்பெயர் ஆய்வு: 1992 கதிர் தணிகாசலம் என்பவரது நூலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதுடன் மகாதாடிக மகாநாகன் என்பவன் கூட நாகர்குல மன்னன் என்றும் அவர் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

**இவனது கால ஆலயங்கள்**

வேலணை அரிஹரபுத்திர ஐயனார் ஆலயம், காரைதீவு வியாவில் ஐயனார் கோவில், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், சரவணை மற்றும் அனலைதீவு, ஐயனார் கோவில்கள், புளியந்தீவு ஐயனார் கோவில், காரைநகர் ஸ்ரீ விஷ்ணு கோயில், திருத்தம்பலேஸ்வரர் திருத்தம்பலேஸ்வரி (சிவன் , பார்வதி) ஆலயங்களை கட்டியும் புனர்நிர்மானம் செய்தும் ஏழுநில மாடங்கள் அமைத்து வழிபட்டதாகவும் அறியமுடிகின்றது.

**வெடியரசன் சிறப்புப் பற்றி...**

*பூதலத்து வேந்தரெல்லாம் போற்றும் சிங்கம்*
*பொங்கரவ மணியுலவு புனித சிங்கம்*
*மாதவர்கள் புகழ்ந்து கலையோது சிங்கம்*
*மாட்சிபெறு மறையறிந்த நாத சிங்கம்*
*ஆதபனை நிகழ்த்து முடியணிந்த சிங்கம்*
*மடர்ந்து வலம்புரி முழங்க வருட சிங்கம்*
*வேதனுமோர் துணையாக விளங்கு சிங்கம்*
*வெடியரசனான சிங்கம் வெளிப்பட்டானே......*

என்ற பாடலடிகளுடன் தொடர்ந்து வரும் பல பாடல்கள் இவ் வெடியரசன் மேன்மையினை கட்டியம் கூறி நிற்கின்றன.

**வெடியரசனது காலம்**

சதுர எழுத்துக் காலமாகிய கடைச்சங்க காலத்தில் நான்மாடக்கூடல் ஆலவாய் உத்தர மதுரையில் சங்கம் நடைபெற்ற காலகட்டத்தில் வெடியரசன் வாழ்ந்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. (சிவப்பிரகாசம்.(மு. 1988).

அது மட்டுமன்றி இன்று கச்சதீவு என அழைக்கப்படுகின்ற பச்சைத்தீவிலும் அதாவது குஞ்சாட்டி (வளவிலும்) தீவிலும் நெல் மற்றும் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டதுடன் காவல் கோபுரங்கள் அமைக்கப்பட்டு பகைவரை கண்காணித்ததாகவும் சில வெடியரசன் பற்றிய கட்டுரைத் தொகுப்புக்கள் கூறுகின்றன.

**வெடியரசனது சமகாலத்தவர்கள்**

கி.பி 1ம்-2ம் நூற்றாண்டு அரசாட்சி செய்த இவனது சமகாலத்தவர்களாக,

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் - கி.பி 27 - கி.பி 85 - சேரநாடு
வரகுணபாண்டியன் (நெடுமாறன்) கி.பி 75 - கி.பி 115 - சோழநாடு
கனிஷ்கன் கி.பி 78 - கி.பி 120 வட இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜபாகு கி.பி 75 - கி.பி 115 இலங்கை, ஆகியோர் இவன் காலத்தில் மேலே கூறப்பட்ட பகுதிகளை அரசாட்சி செய்ததாக அறியப்படுகின்றது. (சிவப்பிரகாசர், மு.1988).

**வெடியரசன் வரலாற்றில் இடப்பெயர்கள் :**

"வரலாறு எங்கே அமைதி கொள்கின்றதோ அங்கே இடப்பெயர்கள் வாய்திறந்து பேசக் கூடும்" என்பர். ஓரினத்தின் வரலாற்றை மீளாய்வு செய்து எழுதுவதற்குரிய ஆவணங்களில் இடப் பெயர் ஆய்வுகளும் முதன்மை பெறுகின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றை அறிந்து கொள்வதற்கு தொல்பொருட்சான்றுகள், மானுடவியல் ஆய்வு, இடப்பெயர்வு ஆய்வு என்பன துணையாகின்றன" (பாலசுந்தரம், இ. 2002). அந்த வகையில் வெடியரசனுடன் தொடர்புடைய இடப்பெயர் ஆய்வுகள் இங்கு தரப்படுகின்றன.

1. நீலங்காட்டு துறை முகம்:- வெடியரசனது மனைவியாகிய நீலகேசியின் அரண் மனைக்கும் இராசாவின் தோட்டத்திற்கும் இடையில் அமைந்துள்ள பகுதியாகும். இத்துறைமுகம் இன்றும் பாவனையில் இருக்கின்றது.

2. நீலங்காடு, சேதுபதி மகாராஜாவின் மகளும் வெடியரசனது மனைவியுமாகிய நீல கேசியின் அரண்மனையும் அந்தப்புரமும் அமைந்த பிரதேசம்.

3. இராசாவின் தோட்டம்: வெடியரசனும் அவன் மனைவியும் ஓய்வு வேளைகளில் தங்கிய இடமும் சுற்றுலாத்தோட்டமும் அமைந்த பகுதி அரண்மனை இன்று சிதைவடைந்த நிலையில் உள்ளது.

4. வலந்தலை : தனது பரிவாரத்துடன் வெடியரசன் தனது வெற்றிகளைப் பிரகடனப்படுத்தும் இடம், (வலம் வரும் தலைவன் - வலம் வரும் தலை - வலந்தலை).

5. களபூமி : வெடியரசன் போர் செய்த இடம்.

6. பலிகாடு: குற்றவாளிகளையும், எதிரிகளையும் கொலை செய்யும் இடம் என்பதுடன் கொலை செய்யப்படவர்களது ஆவிகளுக்குச் சாந்தி செய்யும் இடமும்.

7. சங்குமாலடி: இது ஊர்காவற்றுறை பழைய கோட்டைப் பகுதியையும் புங்குடுதீவின் பல்லதீவுக்கருகே உள்ள இடத்தையும் குறித்து நிற்கிறது. இங்கு சங்குகளும், சிப்பிகளும் கொண்டு வரப்பட்டு தரம் பிரித்து (வெடியரசன் காலத்தில்) விற்பனைக்காக வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

8. அரசன்புலம் : அனலைதீவில் வெடியரசனது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இடமாகும்.

9. நாவாந்துறை : அவனது காலத்தில் படகுகள், தோணிகள் நிறுத்தி வைக்கப்பட்டும் பண்ணையை அண்டிய ஓர் துறைமுகமாகும்.

இதே போன்று வட்டுக்கோட்டை மற்றும் பல இடங்கள் வெடியரசனது காலத்தும் அவனது ஆட்சி நிர்வாகத்துடனும் தொடர்புடையனவாகவும் அவனது வரலாற்றை கூறும் மௌனித்த சாட்சிகளாகவும் இன்றும் காணப்படுகின்றன. மேலும் வெடியரசன் வீதி என்பது வெடியரசனது வம்சாவழியினர் காரைநகரில் செறிந்து வசித்து வரும் பகுதியாகக் காணப்படுவதுடன், அகில இலங்கை வெடியரசன் அறங்காவல் சபையானது இவர்களது கலை மற்றும் கலாசாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கும் அமைப்பாகவும் ஈழ வெடியரசன் கலாமன்றமானது 1954ம் ஆண்டு தொடங்கி அவனது பரம்பரையினரின் கலை, கலாசார கல்வி அபிவிருத்திகளை மேம்படுத்தும் அமைப்பாகவும் செயற்பட்டு வருகின்றது. எனவே இவையாவும் வெடியரசனது வரலாறுகளின் சான்றுகளாகவே கொள்ள முடிகின்றது.

**இலக்கியங்களில் வெடியரசன்**

சிலப்பதிகாரம் கடலாடு காதை மற்றும் கண்ணகி வழக்குரை காதை, கோவலனார் கதை போன்றவற்றிலும் தமிழ் நாடு அரச பாடப்புத்தகப் பதிப்பகத்தின் இந்தியச் சிறப்பு வரலாறு எனும் நூலிலும் வெடியரசன் பற்றிய சம்பவங்கள் இடம் பெறுகின்றன. மற்றும் யாழ்ப்பாணச் சரித்திரங்களைக் கூறும் நூல்களிலும் இவன் பற்றிய குறிப்புகள் காணப்படினும் அவை விபரமாக எழுதப்படவில்லை என்றே கருதப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண அரசனான செகராசசேகரன் எனும் கவிராச பண்டிதனால் (கி.பி 1370 - கி.பி 1417) கண்ணகி வழக்குரை காவியம் செய்யப்பட்டது என்பதுடன், இதிலும் வெடியரசன் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. மேலும் வெடியரசன் நாட்டுக்கூத்து, வெடியரசன் நாடகம் என்பனவும் இவன் பற்றிய விபரங்களைத் தருகின்றன.

**நடுகல்லும் வீரவணக்கமும்**

வெடியரசனின் தம்பியாகிய வீரநாராயணனின் நிர்வாகத்தின் கீழ் வேலணை, புங்குடுதீவு மற்றும் நயினாதீவுடன் தொல்புரப் பகுதியும் இருந்தமை முன்பே சுட்டிக் காட்டப்பட்டது. மீகாமனுடனான போரில் வெடியரசன் சிறைப் பிடிக்கப்பட்டமையை அறிந்துகொண்ட வீர நாராயணன் மீகாமனுடன் போர்தொடுத்து அப்போரில் இறந்த பின்னர் வேலணைத்தீவின் ஓர் குறிச்சியான நாரந்தனையில் இன்று 8ம் கட்டை என்று அழைக்கும் பகுதியில் வீரநாராயனயது வீரத்தை போற்றும் வகையில் நடு கல் அமைக்கப்பட்டு வீரவணக்கமும் குடிமக்களால் செலுத்தப்பட்டு வந்தது. அது வீரநாராயணன் கல், வீரன்கல் என்றும் அழைக்கப்பட்டது. போர்த்துக்கேயரது வருகையின் பின் அவர்களால் அது அழிக்கப்பட்டமையாலும் போர்த்துக் கேயர் மீதான பயத்தின் அடிப்படையிலும் மக்களால் அது நிறுத்தப்பட்டதாகவும் போர்த்துக் கேயர் வரும் வரையும் அஞ்சலி செய்வது நடைபெற்று வந்ததாகவும் கூறப்படுகின்றது. இன்று அக்கல் இருந்த வீதி "வீரன்கல் வீதி" என ஊர்காவற்றுறை பிரதேச சபையால் பெயரிடப் பட்டுள்ளதுடன் அவ்வீதி பாவனையிலும் உள்ளது. நாரந்தனையில் நடுகல் வணக்கம் நீண்டகாலம் இருந்தது என்கிறார் அ. சர்வநாதன் அவர்கள்.

**வெடியரசன் கோட்டை**

வெடியரசன் கோட்டையானது இன்று சிதைந்த நிலையில் கற்குவியல்களாக நெடுந்தீவின் மேற்குப்பகுதியில் கோட்டைக்காட்டுப் பிரதேசத்தில் கடற்கரையை அண்மித்துக் காணப்படுகின்றது. இக் கோட்டையை ஆய்வு செய்த பேராசிரியர் பொ. இரகுபதி அவர்கள், பெருங்கற்கால பண்பாட்டின் அடித்தள அமைப்பைக் கொண்டது என உறுதிப்படுத்தியுள்ளாரர். இதன் அண்மித்த பகுதிகளில் கற்தூண்கள் இருந்தமைக்கான குழிகளையும் காணக்கூடியதாக விருக்கின்றது. தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட கூரை ஓடுகள் இங்கு மாளிகை இருந்தமைக்கான சான்றுகளாகக் கொள்ளப்படுவதுடன் மாலை களுக்கான மணிகள் மற்றும் நாணயங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டு யாழ். தொல்பொருட் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெடுந்தீவு வரலாற்று பொக்கிஷங்கள் மறைந்து கிடக்கும் இடம் அங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் கி.மு 5000 ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்" என பேராசிரியர் புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இன்று வெடியரசன் கோட்டையானது வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவர்கள் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு 2018ம் ஆண்டு பதிவேட்டில் 123ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் வெடியரசனது அவனது தம்பியாகிய வீர நாராயணனுடனும் தொடர்பு கொண்ட இடங்களாக பின்வருவனவற்றையும் சான்றாகக் கொள்ளமுடியும்.

வழக்கம்பரை: வீரநாராயனது ஆட்சிப் பிரதேச மக்களது வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் இடமாகும். நீதி தேவதையாக கண்ணகியை (பெரியம்மனை) நினைத்து அம்பாள் சந்நிதானத்தில் இவ் விசாரனைகள் நடைபெற்றமையாலும் இவ்வாலயத்தை சூழவும் வெடியரசனது மக்கள் முன் வாழ்ந்து வருவதனாலும் இவ்வாலயத்தைச் சுற்றியுள்ள காணி உறுதிகள் யாவும் முக்குவர் தோம்பு என்றே காணப்படுகின்றனவாம்.

சத்தியக்காடு : நீதி விசாரணைகளில் சத்தியம் செய்யும் இடமாக இருந்து வந்துள்ளது.

காளாவிக்காடு : ஆதியில் வீர நாராயணனது அரண்மனைக் காவலர் குடும்பமாக வசிக்க ஒதுக்கிய இடமாகும்.

கோட்டையாவத்தை : வீர நாராயணது கோட்டை அமைந்த இடம்.

சித்தன்கேணி : படைக் குதிரைகள் மற்றும் கால்நடைகள் நீர் அருந்துவதற்காக வீர நாராயணனின் ஒரு படைவீரனான சித்தன் என்பவன் வெட்டிய கேணி என்கிறது. அவர்களது வரலாறு மேலும் சதுரங்கமணல் பொன்னகரியில் சமயக் கோட்டையும் (ஆன்மீக) நெல்லியான் எனும் இடத்தில் நெற்களஞ்சியமும் (கோட்டை) மேற்கே மிருஞ்சிமலை எனும் வேரப்பிட்டியில் மணலாலும் கற்களாலும் ஆன கோட்டையும் (வீர நாராயணன்பிட்டி என்பதே வேரப்பிட்டியாக இன்று மருவிற்று என்பர்). தெற்கே வட்டுடை தரித்த போர்வீரர்கள் அடங்கிய வட்டுக் கோட்டையையும் கிழக்கே ஆனைக்கோட்டையில் யானைகள், குதிரைகள் என்பவற்றை பாதுகாக்கும் கோட்டையும் (அதுவே ஆனைக் கோட்டையாயிற்று என்பர்) அமைத்து தொல்புரம் பகுதியை இரசதானியாகக் கொண்டு கோட்டையாவத்தை மாளிகையில் வீர நாராயணன் அரசாட்சி செய்ததாகவும் வேலணை உள்ளடங்கலான புங்குடுதீவு நயினாதீவு, மண்டைதீவு என்பனவும் இவன் கட்டுப்பாட்டில் இருந்தது எனவும் அன்று வேலணைத்தீவில் சாட்டி, அல்லைப்பிட்டி, மண்கும்பாண், மண்டைதீவு போன்றவை உள்ளடங்கியிருந்தது என்றும் ஊர்காவற்றுறை பிரதான பாதுகாப்பான இயற்கைத் துறைமுகமாக இருந்தமை யாலும் இப்பகுதிகளின் பாதுகாப்பு முக்கியத்துவம் கருதி வெடியரசன் தனது சகோதரரில் மூத்தவனான வீர நாராயணின் கீழ் இவற்றைக் கொடுத்திருந்தமையையும் அறியக் கிடைக்கிறது. இவனது காலத்தில் -

நாரந்தனை என்பது நாரம் + அந்தனை = நாரந்தனை
(நாரம் - நீர், அந்தனை - முடிவிடம்)
நாரந்தனை : நீர் முடிவடையும் இடம் என்று பொருள்பட நாரந்தனை எனவும்
வேலணை: (வேல் + அணை = வேலணை
வேல் - கடல் , அணை - கரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை என்பதே புலப்படுமாறு வேலணை என அழைக்கப்பட்டது என்றும் முன்னாளில் சூரபத்மன் என்பவன் சரவணை எனுமிடத்தில் இருந்த கோட்டையை வென்றமையால் சூரபத்மன் - அரவாணன் எனவே அரவாணன் அணை - அரவணை அதுவே பின் நாளில் சரவணை என் மருவியது எனவும் அறியமுடிகின்றது.

இவற்றுடன் மன்னாரில் இருந்து சுமார் 15 மைல் தூரத்தில் இருக்கும் சிலாபத்துறை, முசலி பிரதேசத்திற்குட்பட்ட அரிப்பிலிருக்கும் அல்லிராணிக் கோட்டையும் வீர நாராயணன் வசம் இருந்ததுடன் சிலாபம் வரையான கடற்கரைப் பிரதேசங்களிலும் முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் யாவும் இவர்களது கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட்டதாக தெரிகிறது. அராலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, நாவாந்துறை என்பவற்றிலும் வீரநாரயணனது கோட்டைகள் அமைந்திருந்ததாகவும் பல்வேறு நாட்டு வணிகர்களும் வர்த்தக கப்பல்களும் ஊராத்துறை துறைமுகத்தில் இந் நடவடிக்கைகளுக்காக வந்து போனமையும் அறியக் கிடக்கின்றது. புங்குடுதீவு, வேலணை, ஊராத்துறையின் பழைய கோட்டையை அண்மித்த பிரதேசம் ஆகிய பகுதிகளில் சங்குகள் தரம் பிரிக்கப்பட்டமையும் அவை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் நயினாதீவில் நவரத்தினம், பதுமராகம், கோமேதகம மற்றும் பலதரப்பட்ட உயர்ரக நாகரத்தினங்களும் தொண்டிமுத்துக்களும் அடங்கிய களஞ்சியங்கள் இருந்ததாகவும் இதுவே சிலப்பதிகாரத்தில் மணிபல்லவத்தீவு எனவும் மணிமேகலையிலும் கூறப்படுகிறது. ஆனால் மணிபல்லவத்தீவு எனவும் நாகதீவு எனவும் அழைக்கப்படுவது நயினாதீவு தான் என்பது கேள்விக்குரியதாக பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் கருதுகின்றார். அவரது இலங்கைத் தமிழர் வரலாறும் பண்பாடும் எனும் நூலில் இதனை நன்கு அவதானிக்க முடியும். (இலங்கைத் தமிழர் வரலாறும் பண்பாடும் தொகுப்பு நா தனுஜா வீரகேசரி கட்டுரை 04.04.2021).

எனவே தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்டதாகவும் அதேவேளை விலை மதிப்பற்ற உயர் ரக நாகமணிக்கற்களும், சங்குகளும், முத்துமணிகளும் நிறைந்த களஞ்சியங்கள் கொண்டதாகவும் விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் நிறைந்ததாகவும், கப்பல் கட்டுதல், கப்பல் ஓட்டுதல் மற்றும் படை வளங்கள் கொண்டிருந்ததுடன் சீன, உரோம, கிரேக்க மற்றும் அராபிய வர்த்தகர்களுடன் பெரும் சர்வதேச வணிக நடவடிக்கைகளுடன் வெடியரசனதும் அவனது தம்பிமாரதும் வட ஈழத்தின் குறிப்பாக தமிழ் ஈழத்தின் அரசாட்சி நடைபெற்று வந்ததனை உறுதிபடத் தெரிந்துகொள்ள முடிகிறது. பெருங்கற்கால பண்பாடு நிலவிய காலத்திலும் அதற்கு முன்னய வரலாற்று உதய மற்றும் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் இத்தீவுப்பகுதிகள் மனித குடியிருப்புக்களை கொண்டிருந்தமையும் புலனாவதுடன் அறியப் படுகின்ற மற்றும் தகவல்களைத் தெரிவிக்கின்ற வரலாற்றுக் குறிப்புக்களும் வட ஈழத்தில் நாகர் வாழ்ந்தமையை உறுதிப்படுத்துகின்றன.

“இலங்கையின் வடபகுதி நாகதீபம்” - ஜோன்

“நாகதீபம் பெரும் நிலப்பரப்பாக இருந்து கடலினுள் அழிந்து விட்டது நாகதீபம் என்ற பிரதேசம் இன்றைய வடமாகாணத்தைக் குறிப்பது” - கெய்கர்

“மதவாச்சிக்கு வடக்கே இருக்கும் பிரதேசம் நாகதீபம்” - செலிக்மன்

“இலங்கையின் வடபகுதியே நாகதீபம்” - பார்க்கர்
ஆகியோர் குறிப்பிட்டவற்றையும் கவனம் கொள்ளத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே பெருங்கற்கால பண்பாட்டின் போதும் அதற்கு முன்னரும் ஆதி திராவிடர்கள் என கருதப்படும் நாகர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் எங்கும் கொட்டியே கிடக்கின்றன. இந்நாகர் பரம்பரையில் வந்தவனான வெடியரசன் பலவித சிறப்புக்களுடன் நாகநீள் நகர் எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்ற நெடுந்தீவை மையமாகக் கொண்ட நாக நாட்டை ஆண்டமையும் அவனது ஆட்சியின் செம்மையும் இதனால் புரிந்துகொள்ள முடிவதுடன், மணிமேகலை போன்ற காப்பியங்களில் வரும் மணிபல்லவத்தீவு, நாகதீவு என்பவை நெடுந்தீவையே குறிக்கின்றமையும் ஈண்டு நோக்கத்தக்கது. ஏனெனில் நாகரத்தின மணிகள் கொண்டவனாகவும், மணிபல்லவ தீவின் அதிபனாகவும் காப்பியங்களிலும் வெடியரசன் குறிப்பிடப்படுகின்றான். இது நெடுந்தீவினையே குறிக்கும் எனலாம். இது பற்றி பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களது கருத்தினையும் இங்கு காணலாம். "நவீன காலத்து யாழ்ப்பாண புலமையாளர்கள் மணிபல்லவத்தை நயினாதீவு என அடையாளங்கண்டுள்ளனர். அதனை ஒப்புக்கொண்டுள்ள தென்னிலங்கைப் பௌத்தர்கள் அதை புனிதத் தலமாகக் கொண்டு விகாரைகளை அமைத்து வழிபாடு செய்கின்றனர். ஆயினும் மணிமேகலை குறிப்பிடும் மணி பல்லவம் நயினாதீவென்று அடையாளப்படுத்துவது கேள்விக்குரியது. நயினாதீவிலே புராதனமான பெரும் பௌத்த கட்டிடங்களின் அழிபாடுகள் கிடைக்கவில்லை. பௌத்த படிமங்களும், புத்தரின் பாத வடிவங்களும் அங்கு காணப்படவில்லை. பௌத்த சமயம் தொடர்பான தொல் பொருட் சின்னங்கள் கணிசமான அளவிலே நெடுந்தீவிலே தான் கிடைத்துள்ளன. அங்குள்ள துறைமுகம் மட்டுமே கடல் வழிப்பாதைகளின் தரிப்பிடமாக விளங்கியது. மணிபல்லவத்தின் அமைவிடம் பற்றிய குறிப்பும் அதற்கே பொருத்தமானது போலத் தெரிகிறது. அது இராமநாதபுரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கடல் வழிப்பாதையின் நடுவில் அமைந்துள்ளமையும் விசேட அம்சமாகும்". (பேராசிரியர் பத்மநாதன் எஸ். இலங்கையில் தமிழர் வரலாறும் பண்பாடும் தொகுப்பு நாதனுஜா 04.04.2021 வீரகேரி வாரமஞ்சரி கட்டுரை) எனவே வெடியரசனது ஆட்சிக் காலமும் அவனது ஆட்சிப் பரப்பும் பிரதேசங்களும் இக்கூற்று மூலம் மேலும் உறுதிப்படுத்தக் கூடியதாகவே அமைகின்றது. நெடுந்தீவில் காணப்படுகின்ற ஈச்சங்காடு, சீக்கிரியான் பள்ளம், அப்பாத்தை பள்ளம், சோரன்தொம்பு, கிழங்கன் தோட்டம், பெத்தான் வளவு, செம்பட்டையன் குளம், அல்லியன் கேனி, சுள்ளியன் குருசடி, கறுத்தப் பெரியான் தோட்டம் போன்ற காணிகளின் பெயர்களும் நெடுந்தீவில் நாகர்களின் செல்வாக்கைக் காட்டுகிறது எனலாம்.

**நாகரும் நயினாதீவும்**

"பண்டைக்காலத்தில் ஈழத்தில் நாகர்கள் வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். ஏறக்குறைய 14000 வருடங்கட்கு முன்பே நயினாதீவில் குடியேற்றம் இருந்திருக்க வேண்டும். அவர்களால் நிறுவப்பட்ட நாகபூசணி அம்மன் கோயில் மூலஸ்தானத்திலுள்ள நாகம் 14000 வருடங்களுக்கு மேற்பட்டது" என கட்டிடக் கலை மற்றும் சிற்பக்கலை, பொறியியல் நிபுணரான திரு எம். நரசிம்மன் கருதுகிறார். (ஐ. சரவணபவன்: 1972:25) எனவே கி.மு. பல்லாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே வெடியரசனின் முன்னோர் களான நாகர்கள் தீவகப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்ததும் இதன் மூலமும் உறுதிபடுத் தப்படுகிறது.

**தொல்லியல் சான்றுகளில் தீவகம்**

சாட்டி, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, காரைநகர், சூரியன்பிட்டி, நாரந்தனை, சந்திராந்தை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவகப் பிரதேசங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், தொல்புரம், பூநகரி போன்ற வெடியரசனது ஆட்சிக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் தொல்லியல் ஆய்வுகள் நடத்தி பல்வேறுபட்ட தொல்பொருட் சின்னங்களான நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், வளையல்கள், மணிகள், எலும்புக்கூடுகள் உள்ளடங்கலாக பலவும் பெறப்பட்டிருப்பதும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உரோம, சீன, கிரேக்க நாணயங்களும் இவற்றில் அடங்குகின்றன. மேலும் பெருங்கற்கால பண்பாட்டினை ஒத்தனவாகக் காணப்படும் தொல்லியல் மற்றும் வரலாற்று சான்றுகளும் கிடைத்திருப்பதாக ஆய்வாளர்களும் கருத்துக்கள் தெரிவிக்கின்றனர். இவை யாவும் கூட வெவ்வேறு காலகட்டங்களைச் சார்ந்திருப்பினும் தீவகத்தின் நாகரிகமடைந்த மக்கள் கூட்டமும் ஓர் நிலையான அதாவது குறுகிய அல்லது நீண்ட கால அரசுகள் காணப்பட்டதனையும் மறுதலிக்க முடியாதவையாகவே இருக்கின்றன. இந்நிலையில்தான் வெடியரசனது காலப் பகுதியில் காணப்படும் வெடியரசன் - மீகாமன் போர் என்பது ஈழத்தமிழர் அரசு மீது சோழ அரசுகள் கொண்டுள்ள வர்த்தக மற்றும் அரச மேலாதிக்கப் போட்டிகளையும் நிரூபிப்பதுடன் மரக்கலங்களுக்கான மரங்களையும் மேலதிக உதவிகளையும் கஜபாகு மன்னன் சோழர்கட்கு வழங்கியமையானது அவர்கள் இருவரதும் கூட்டுச் சேர்ந்த மறைமுகமான ஈழத்தமிழ் அரசனுடனான அவர்களது பொருளாதார மற்றும் மேலாதிக்க போருக்கான போக்கினையே பறைசாற்றி நிற்கின்றது. கஜபாகு மற்றும் சோழ மன்னனது மறைமுகக் கூட்டின் மூலம் ஈழத்தமிழ் மன்னன் மீது ஏவப்படும் யுத்த நிகழ்வும் கூட இன மத மொழி கடந்து அரச வம்சத்தவர்களிடையே பொருளாதார மற்றும் அதிகார நோக்கங்களை மையப்படுத்திய மேலாண்மையையே சுட்டிக் காட்டுகின்றது.

**வெடியரசன் கதை புனைவும் வரலாறும்**

பேராசிரியர் சின்னத்தம்பி சந்திரசேகரம் அவர்களின் (கிழக்குப் பல்கலைக்கழகம் - இலங்கை) வெடியரசன் கதை புனைவும் வரலாறும் பற்றி...

இக் கட்டுரையானது கூகுளில் வெடியரசன் பற்றிய தேடலின் போது கிடைக்கப்பெற்றது. அவரது கருத்தின்படி, "முக்குவர்கள் யாழ்ப்பாண சமூக அடுக்கமைவில் இடை நிலையினராக மதிக்கப்பட்டு வந்த சூழலில் தமது வரலாற்றுப் பெருமையினை வெளிப்படுத்தி அதனூடாக தம் சமூக அந்தஸ்தை நிலைநிறுத்த முனைந்தமையின் வெளிப்பாடாகவே வெடியரசன் கதை அமைந்துள்ளது. எனவே இந்தப் புனைவினுள்ளே சாதிய உணர்வுகள் வலுவாக இயங்கியுள்ள தனைக் காணமுடிகின்றது " என்கிறார்.

இதற்கு முன்னரே அதாவது 1971ம் ஆண்டில் நீ.செபதேயு என்பவரால் எழுதப்பட்ட வெடியரசனின் எழுச்சியும் வீழ்ச்சியும் எனும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட வினாப் போன்ற ஓர் பகுதியை இதற்குப் பொருத்தமானதாகக் கருதி இங்கு தரப்படுகின்றது.

"வெடியரசன் பற்றிய வரலாறுகளும் சின்னங்களும் மற்றும் சான்றுகளும் (கோட்டை உட்பட) பல கிடைத்திருப்பினும் வெடியரசன் ஆட்சி பற்றியும் அவனது வரலாறு பற்றியும் சரித்திர ஆசிரியர்கள் கவனம் செலுத்த விரும்பாதது ஏன் என்று புரியவில்லை. அநேகமாக தமிழர்களிடையே வந்து புகுந்து கொண்டுள்ள வருணாச்சிரம படிநிலைகள் காரணமாக இருக்கலாம் போலும் ஆனால் வெடியரசனது காலப்பகுதியில் சாதிப்பாகுபாடும் சாதியப் பிரிவினைகளும் நெடுந்தீவினை வந்து சேரவில்லை. இங்கு தன்னிறைவுப் பொருளாதாரமே நிலவிற்று. மேலும் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலேதான் சாதிமுறைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாக்கப்பட்டன. இம் மன்னர்களை தமிழ் மன்னர்கள் என்று வரலாறுகள் கூறினாலும் ஏன் அவர்கள் தம்மை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று பெயர் சூட்டிக்கொண்டனர்? ஆரிய மாயையாலும் அவர்களது வீண் பகட்டாலுமா? தமிழர்கள் எப்படி இவர்களை ஆரியர் என்று ஏற்றுக்கொண்டனர்? ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்திலும் அதன் பின்னரும் ஐரோப்பியர் வருகையின் பின்னரும் தம்மை மேட்டுக்குடிகள் என்றும் தம்மை உயர் சாதியினர் என்போரும் கல்வியறிவைப் பெற்றுக்கொள்ள ஏனையவர்கள் அதாவது இவர்களால் திட்டமிடப்பட்டு ஒடுக்கப்பட்டவர்கள் கல்வி அறிவு பெறாது தடுக்கப்பட்டனர். எனவே அப்படி அவர்களால் கல்வியறிவு மறுக்கப்பட்டவர்களால் வரலாறுகளை எழுத முடியாமல் போய்விட்டது. இருந்த ஆவணங்களும் திட்டமிட்டே அழிக்கப்பட்டுவிட்டன. எனவே தான் வெடியரசனது வரலாறும் வெளிவராமற் போனது" என்கிறார்.

வெடியரசன் பற்றிய தேடல்களின் போது சிதைந்த நிலையிலும், கையெழுத்துப் பிரதிகளாகவும் காணப்பட்ட அவ்வரசன் பற்றிய பல கட்டுரைகளின் தொகுப்பினை வாசிக்கத் தந்துதவிய திரு. ரத்னசூரி சின்னத்துரை என்பவரை இது பற்றிய தகவல்களை மேலும் கேட்டறிவதற்காக நேர் காணல் ஒன்றை அவரிடம் மேற்கொண்டபோது இப் பேராசிரியரது வெடியரசன் கதை புனைவும் வரலாறும் பற்றி கேட்ட போது...

வெடியரசன் வரலாறு சுமார் 2000 வருடங்களாகி விட்டதாகவும் அன்றிருந்தே அவரது வரலாறு பேசப்பட்டு வருவதுடன் சான்றுகளும் காணப்பட்டு வந்ததாகவும் கிரேக்க மற்றும் உரோமரைப் போன்று வரலாறுகளை எழுதி வைத்து பாதுகாக்கும் கலை அவர்களிடம் அன்றிருக்கவில்லை என்பதுடன் கடின உழைப்பாளிகளான அக்குலத்தவர்கள் தம்மை எப்போதுமே தரம் குறைந்தவர்களாகவோ, மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவோ எண்ணாது சமநீதி, சமூகநீதி படைத்தவர்களாகவே வாழ்ந்து வந்தவர்கள் என்பதாலும் அன்று சாதியப்பாகுபாடு இருக்கவில்லை என்றும் பொருளாதாரத்தில் அன்று உயர்ந்தநிலையில் அவர்கள் காணப்பட்டமையால் தம்மை உயர்த்த வேண்டிய தேவையும் இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டி இருந்தார். மேலும் வெடியரசன் ஆண்ட நிலப்பரப்பான தீவகத்திலும் குறிப்பாக நெடுந்தீவிலும் யாழ்ப்பாணச் சரிதங்களைக் கூறும் நூல்களிலும் காணப்படும் யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றிய செய்திகளை எவ்வித அறிவியல் ரீதியான ஆய்வுக்கும் உட்படுத்தாது ஏற்றுக்கொள்ளும் வரலாற்றியலாளர்கள் வெடியரசன் பற்றிய விபரங்களை கருத்திற் கொண்டு அறிவியல் ரீதியாக நடுநிலையான ஆய்வுகளை மேற்கொள்ள ஏன் முயற்சிப்பதில்லை என்றும் வினா எழுப்பியருந்ததுடன் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மாதகல் மயில்வாகனப்புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையை ஆய்வு செய்து யாழ் வைபவ விமர்சனம் எனும் நூலை வெளியிட்டதுடன் அதில் காணப்படும் யாழ்ப்பாணக் குடியேற்றம் தொடர்பான கைலாயமாலைக் குடிகள் பற்றி கூறும் போது, "முத்துராசக் கவிராயர் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தவர் அல்ல. இவற்றிற்குப் பல நூறு வருடங்கட்குப் பிற்பட்டவரே. அவர் தந்த குடியேற்றச் சரிதையும் பழஞ்சரிதையன்று தமது காலத்தார் சொல்லக் கேட்ட பரம்பரைக் கதையென்றே கொள்ள வேண்டியிருக்கின்றது. அவ்வவ்வூரில் விளங்கிய வேளாண் குடிகளின் மகத்துவம் துலங்க அவ்வவ் மூதாதையர்களுள் பிரசித்தி பெற்ற ஒவ்வொருவரை எடுத்துக்கொண்டு அன்னோ ரெல்லாம் ஆரியச்சக்கரவர்த்தியால் வரித்துக் குடியேற்றப்பட்டனர் என எடுத்திசைந்தனர் போலும் இவரது வரலாற்றையே மேற் கொண்ட மயில்வாகனப்புலவர் அதைத் தமது வழக்கப்படி சில மாற்றங்களோடு வைபவ மாலையில் பெயர்த்தெழுதியுள்ளார்". (யாழ் வைபவ விமர்சனம் 1928: 69) எனக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் நெடுந்தீவிலும் ஏனைய தீவுகளிலும் தனிநாயக முதலியின் பரம்பரையினர் வசித்து வருவதாக கூறப்படுவது, மறுக்கப்படுவதனையும் அக்குடியேற்றத்தில் கூறப்படும் நபர்களின் பெயர்ப்பட்டியலும் உண்மையல்லவென்பதனையும் வரலாற்று ஆய்வாளர்கள் புரிந்து கொள்ளமுடியும். இந்நிலையில் தென்னிந்தியாவில் இருந்து காலத்துக்குக் காலம் பலவித காரணங்களால் மக்கள் இடம் பெயர்ந்து வட ஈழத்தில் குடிறேியமையானது உண்மையெனினும் யாழ் குடியேற்றம் பற்றியவை புனைவுகள் என்பது புலனாகியுள்ளது. இக்குடியேற்றம் பற்றிய உண்மைத் தன்மைகளை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யாது அப்படியே ஏற்றுக்கொள்ளும் வரலாற்று ஆய்வாளர்கள் முக்குவத் தலைவன் திருவாசன் எனும் வெடியரசன் தீவகத்தின் அரசனாக இருந்ததனை சகிக்க முடியாத தன்மையாலேயே புனைவுகள், கற்பனைகள் என்று அதனைக் கடந்து செல்வதாகவும் இருட்டடிப்புச் செய்வதாகவும் கருத்துத் தெரிவித்தார்.

**இறுதியாக**

எம் இனத்தின் வரலாற்றை பண்பாட்டை கலாசாரத்தை அவர்களது வாழ்வியலை காய்தல் உவத்தலின்றி வெளிக்கொணர்ந்து எமது வருங்கால சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்கவேண்டியது அனைவரதும் கடமையாகின்றது. அந்த வகையில் ஈழத்தின் ஆரம்ப கால அரசனாக அறியப்படும் வெடியரசன் பற்றிய வரலாற்றை நடுநிலைநின்று அறிவியல் பூர்வமாக அம்மன்னனனது ஆட்சி பிரதேசங்களில் நவீனத்துவமான தொல்லியல் ஆய்வுகளை மேற் கொண்டு அதன் உண்மைத்தன்மைகளை வெளிக்கொணர்வதே நம்முன்னுள்ள பணியாகும். நிகழ்கால மற்றும் வருங்கால வரலாற்று ஆய்வாளர்களும், தொல்லியல் நிபுணர்களும் அத்துறை சார் பல்கலைக்கழக மாணவர்களும் இவை பற்றிய தேடல்களிலும் ஆய்வுகளிலும் தம்மைப் பூரணத்துவமாக ஈடுபடுத்தி மேலும் வரலாற்றை வெளிக்கொணர வேண்டும் என்ற கோரிக்கையுடன் எனது தேடலை நிறைவு செய்கின்றேன்.

**உசாத்துணை நூல்கள்**


1. இலங்கைத்தமிழர் வரலாறும் பண்பாடும் (பேராசிரியர் பத்மநாதன் எஸ் தொகுப்பு நா. தனுஜா 04.04.2021 வீரகேசரி கட்டுரை)
2. வெடியரசன் எழுச்சியும் வீழ்ச்சியும் (செபதேயு.நீ.1971)
3. இலங்கையின் இடப்பெயர் ஆய்வு - கலாநிதி பாலசுந்தரம்.இ. 2022)
4. விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு (சிவப்பிரகாசம் மு. 1988)
5. யாழ்ப்பாண வைபவமாலை ஆய்வு நூல் (முதலியார் குலசபாநாதன் - 1953)
6. வெடியரசன் ஓர் வரலாற்று நோக்கு. (வின்சென்ற் நீ. 1960 கட்டுரை)
7. யாழ் வைபவ விமர்சனம். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் - 1928
8. இலங்கை இடப்பெயர் ஆய்வு கதிர் தணிகாசலம்.1992
9. நாகர் குலமும் நெடுந்தீவும் (றொக்கேசியன் சந்திரகுமார்.எஸ். கட்டுரை 1984)
10. தென்இந்திய சிறப்பு வரலாறு (தமிழ் நாடு அரச பாடப்புத்தகப் பதிப்பகம்)
11. யாழ்ப்பாண சரித்திரம் (டானியல் ஜோன் 1895)
12. காரைநகர் தொன்மையும் வன்மையும் (பாலேந்திரன் ச.ஆ. 2002)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Mechanised Historian R.H பசெற்).

14. தீவகமும் அதன் வரலாற்றுப் பாரம்பரியமும் (செல்வி மங்கள ரூபி சிவகுமார் அலைமொழி கட்டுரை 2018).

15. சதாசிவம் சேவியர் ( சப்த தீவுகள் 1979).


16. தீவகத்தில் தன்நிறைவுப் பொருளாதாரமும் வெடியரசன் ஆட்சிக்காலமும் அருட்பிரகாசம் செ.வி 1989.

17. யாழ்ப்பாண வைபவமாலை முதலியார் குலசபாநாதன் 1953.

18. வையாபாடல் (செய்யுள்-வையாபுரி ஐயர்) - கலாநிதி க.செ. நடராசா. பதிப்பு 1980).

**வெடியரசன் கோட்டை**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனத்தை ஈர்த்து நிற்கும் அனலைதீவுக் கிராம அபிவிருத்தி

அனலை க. சௌந்தரராஜசர்மா
(இளைப்பாறிய நூலகர்)

ஐ.நா வின் ஓரங்கமான யுனெஸ்கோ அமைப்பின் ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "சுதந்திரம், அபிவிருத்தி மற்றும் சமுதாய முன்னேற்றம், தனிமனித முன்னேற்றம் என்பன அடிப்படை மனிதப் பெறுமானங்களாகும். நல்லறிவுடையோர் தமது ஜனநாயக உரிமைகளை உபயோகிப்பதன் மூலமும், சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிப்பதன் மூலமுமே இம் மனிதப் பெறுமானங்களை அடைதல் சாத்தியமானதாகும். திருப்திகரமான கல்வி மற்றும் இலவசமானதும், எல்லையற்றதுமான அறிவு, சிந்தனை, கலாசாரம், தகவல் என்பவற்றிலேயே ஆக்கபூர்வமான பங்குபற்றுதலும் ஜனநாயகத்தின் அபிவிருத்தியும் தங்கியுள்ளது"

- நன்றி : கலைமுகம்.

இரு கிராம சேவையாளர் பிரிவுகளுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக எல்லைக்குள் அடங்கும் நன்னீர் வளத்துடன் கூடிய - ஓரளவு ஏனைய தீவுகளிலும் பார்க்க விருப்பத்துக்குரிய பிரதேசமாக - இடுதுணைதீவுத் திட்டுக்களை நிருவாகப் பகுதியாகக் கொண்டு விளங்கும் தீவு அனலைதீவு ஆகும். ஆல், அரசு, வேம்பு, பூவரசு மிகுதியாகக் காணப்படும் அதேவேளையில் பனை, தென்னை என்பவற்றின் அடர் பரம்பலும் கூளா, மருதம், நாவல், போன்ற மரங்களும் இங்கு அவதானிக்கப்படக் கூடியதாகவுள்ளது. குடியிருப்பு மனைகளில் பயன்தரு மரங்கள், அழகுத் தாவரங்கள் பயன்கருதி வளர்க்கப்படுகின்றன. அனலைதீவு வடக்குப் பகுதியிலும் மேற்குக் கடற்கரையோரத்திலும் பற்றைக் காடுகள் இருந்தாலும் மனிதச் செயற்பாடுகளினால் அவை அழிக்கப்படும் நிலை இருக்கின்றது.

புறநடையாக புளியந்தீவின் பற்றைக்காடும் நடுத்திட்டியில் அமைந்துள்ள இயற்கைச் சூழலும் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றன. அதேவேளை, மாரிகாலத்தின் பின்னரான பசும்புற் போர்வை மழை பெய்தலைப் பொறுத்து பரந்திருக்கக் காணலாம். வறள் காலத்தின் புழுதிக் காற்று இடைக்கிடை வீசும். பொதுவாக வரண்ட காலநிலைப் பிரதேசமாக இருக்கும் அனலைதீவு ஏறத்தாழ 300 - 400 கிணறுகளைக் கொண்டதாகவும் பதினெட்டு வரையிலான கேணிகளையும் முப்பது வரையிலான சிறு குளங்களையும் கொண்டதாகவுள்ளது. வறள்காலத்தில் குளத்துநீர் திறந்த நிலையில் இருப்பதால் முற்றிலுமாக வற்றிவிடும். ஆனால் கேணிகள், கிணறுகள் பொதுவாக வற்றுவதில்லை. நிலக்கீழான சுண்ணாம்புப் படுக்கையில் மக்கி கலந்த மண் படைகளை அண்டி அமைந்திருக்கும் இக்கிணறுகள், கேணிகள் வரன் காலத்தில் பாசிகள் நிறைந்து பயன்படுத்த முடியாதவையாகக் காணப்படும். தோட்டக்காணிகள், வீட்டுக் காணிகளிலுள்ள கிணறுகளைக் குறைந்தது வருடத்தில் 2-4 தடவைகள் தூர்வாரி இறைத்துப் பயன்படுத்துவர். கேணிகள் ஆலயங்களில் பராமரிப்பிலுள்ளவை; பொதுக் கேணிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்றப் பராமரிப்பில் உள்ளவையென இருவகையிலுள்ளன. குளங்கள் விவசாயத் திணைக்களம் விவசாயிகளின் தேவைக்காகப் பராமரிக்கின்றது. வருடாந்தம் இவற்றின் பராமரிப்புக்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலேயே தூர்வாரி, குளக்கட்டைப் பலப்படுத்தி கூடிய நீரைச் சேகரிக்க முடியும். சிலவேளைகளில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற சிரமதான அடிப்படையில் இவற்றைத் தூர்வாரி, கட்டைப் பலப்படுத்தி மழைநீர்ச் சேகரிப்புக்கு உதவுகின்றன. ஆனால் சிரமதான முயற்சி 60% அளவிலேயே சாத்தியப்பாட்டை கொடுக்கின்றது.

நீரின் தரத்தைக் கணிக்கும் போது பொதுவாக இவை வன்னீராகவே இருக்கின்றன. மழைநீரால் கழுவப்பட்டு, தூசு, மாசு, குப்பைகூழங்கள், அவசியமான - அவசியமற்ற கனிப் பொருட்கள் எனப் பலவும் கேணி, குளம், கிணறுகளில் உள்ள நீரில் சேர்கின்றன. சூழலிலுள்ள மலக்கழிவு, விலங்குக்கழிவுகள் கூட கலப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இந்நிலைமை ஒரு வருடத்தில் தோன்றுவதல்ல. தொடர்ந்து பல வருடங்களில் ஏற்படும் தாக்கங்கள் பின்பு நிலையான மாற்றமாகி விடுகின்றன. தொடர்ந்து இறைக்கும் குடிநீர்க் கிணறு காலப்போக்கில் உப்புத்தன்மை கொண்ட நீரால் மாற்றீடாகிப் பயன்பாடற்றுப் போகின்றது.

சுற்றிவரக் கடல் உள்ளமையால் அனலைதீவு, எழுவைதீவு கிராமங்களில் இந்நிலைமை காணப்படுகின்றது எனலாம். மேலும் வருட மழைவீழ்ச்சி நீரின் பெரும்குதி வாய்க்கால் வழியோடிக் கடலில் கலப்பதும் அவசியமாக, அவசரமாகத் தடுக்கப்படவேண்டிய ஒன்றாகும். விரயமாகும் நீரைச் சேமிப்பதற்கான மார்க்கங்கள் பற்றிக் கருத்திற்கொள்ளும்போது, அனலைதீவில் மேலதிக மழைநீர் கடலுக்குச் சென்று கலக்குமிடங்களாக இரு இடங்களை அடையாளப்படுத்த முடியும்.

வாந்தல் என்னும் பகுதி மருத்துவமனைக்கு எதிரே 3ம் வட்டாரத்தில் உள்ளது. 3ம்,4ம்,5ம் வட்டாரப் பகுதிகளிருந்து உபரியான நீர் வாய்க்கால்களின் வழியாக இத் தரிசு நிலமான வாந்தலுக்கு வந்து அங்குள்ள ஓடை வழியாக கடலுட் செல்கின்றது. இப்பாதையில் கடல்நீர் ஊரின் உள்ளே வந்துவிடாமல் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற அமைப்பு 1ம் வட்டாரத்தில் மடத்தடி என்னும் இடத்திலுள்ளது. இங்கு தடுப்பணை கடல்நீர் ஊருக்குள் வந்துவிடாமலிருப்பதற்காகத் தொடராக அமைக்கப்பட்டுள்ளது. சேதமுற்றும் அழிக்கப்பட்டும் பாதிக்கப்பட்ட அணைப்பகுதியூடாகக் கடல்நீர் ஊருக்குள் வரக்கூடும். ஊரிலிருந்து உபரிநீர் இத் தடுப்பணைக்கு மேலாக கடலுட் கடத்தப்படும்.

இங்கு தற்போதுள்ள அமைப்பு நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமல் விடப்பட்ட காலத்தில் கடல்நீர் மருத்துவமனை வரை மாரிகாலத்தில் உள் வந்து அந்நிலத்தை உவராக்கியுள்ளது. இயற்கையாகவே உப்பு விளைவிக்கும் பாத்தி போன்று இப்பகுதி இயங்கி உப்பு விளைந்துள் ளமையும் உண்டு. 2வது உலக மகாயுத்த காலப்பகுதியில் மக்களின் உப்புத் தேவையை இதிலிருந்து பெற்றதாக முன்னோர்கள் குறிப்பிடுவர். எனவே முறையாக அணைக் கட்டமைத்து, மதகு அமைத்து நீரைக் கட்டுப்படுத்தித் தூய்மை செய்து தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்தடி நீரை புளியந்தீவு, அனலைதீவு இணைப்புப் பாலத்துக்கு இருபுறமும் காணப்படும் ஒடுங்கலான தரவைப்பகுதியில் மறித்து நீர்த்தேக்கமாக மாற்றிப் பயன்படுத்தலாம்.

1. குளக்கட்டுக்கள் அணைச்சுவரால் பலப்படுத்தப்படுவதால் அடிக்கடி குளக்கட்டுச் சேதமாவதைத் தடுக்கலாம்.
2. சேதமுற்றுள்ள குளங்கள், கேணிகள், கட்டுமானமுள்ள கிணறுகளைத் திருத்திப் புதுப்பித்து மழைநீர் சேமிப்பை அதிகரித்தல்.
3. குளக்கட்டுப் பகுதிகள், நீர்த் தேக்கப் பகுதிகளில் நிழல்மரங்களை நாட்டி நீர் ஆவியாதலையும் பசுமைச் சூழலினையும் பேணுதல்.
4. நீரிறைக்கும் இயந்திரப் பாவனையைக் குறைத்தல்.

அனலைதீவுக்கு தடையற்ற மின்சாரவசதி தற்போது கிடைத்திருப்பதால், அநேகமாக சகலரும் மின் மோட்டர் பொருத்தி, நீர்க்குழாய் பொருத்தி வருகின்றனர். கிணற்றின் நீரை நாள்தோறும் உறிஞ்சி நீர்ப்பாவனை அதிகரித்துள்ள நிலையில் வீண் விரயமாக்கும் நீர் அளவைக் கூட்டி இருக்கும் செயற்பாடு பெரும் சவால்களைத் தரப்போகின்றது. எனவே கணிசமான அளவு கூடிய விட்டமுடைய கிணறுகளை எதிர்காலத்தில் அமைத்து வீட்டுக் கிணற்றுச் சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய ஆய்வுப் பரிசோதகர்களின் உதவியுடன் மணிதரம், நீர்த்தரம் போன்றவற்றை அடிக்கடி பரிசோதித்துப் பொருத்தமான இடு பொருட் களைப் பாவனைக்கு உட்படுத்தலும் நிலம், நீர் உட்பாக்கத்தைத் தடுக்க விவசாயச் சங்கம் மூலம் தொடர் கண்காணிப்பும் ஆலோசனைகளும் நடைமுறைப்படுத்தல்.

இழக்கப்படும் விருட்சங்களின் தொகைக்கு மேலதிகமாக புதிய விருட்சங்களை, அங்கீகரிக்கப்பட்ட இனங்களைப் பொருத்தமான இடங்கள் தோறும் நாட்டிப் பராமரித்தல்.

மக்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஊட்டத் தேவையான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றல், பணிகளை ஒருங்கிணைத்தல், பொருத்தமானவர்களுக்கு நவீன விவசாய முறைகளைப் பயிற்றுவித்தல், இதற்கான பொது அமைப்பு ஒன்றினைச் செயலூக்கத்துடன் செயற்பட உருவாக்குதல் என்பனவும் சிந்திக்கப்பட வேண்டியவை.

நன்றி : ஆழ்வாப்பிள்ளை. பொ. ஊற்று 9 (4) 11-17 (1981) இக்கிராம மக்கள் அடிப்படையில் விவசாயிகளாக இருந்துவருவதால் பாரம்பரிய முறைமைகளை அனுசரித்து வருபவர்கள். இயற்கையுரமாக விலங்குக் கழிவுகளுடன் வன்னியிலிருந்து பண்ணைக் குழை கட்டுக் கட்டாகக் கொண்டுவந்து மண்ணில் புதைப்பர். நெடுந்தீவிலிருந்து காவோதிக்குழை, எரு, ஊரிலிருந்து புங்கம் குழை, பனையோலை போன்றன பண்படுத்தலுக்கு முன் நிலத்தில் புதைத்து உக்க விடப்படும். ஒரு தலைமுறைக்கு முன்னர் செம்மறியாடுகள், வெள்ளாடுகள், மாடுகள் போன்றன பண்ணை முறையில் பொருந்தொகையாக வளர்த்தவர்கள் இருந்திருக்கிறார்கள். தற்காலத்தில் விவசாய முயற்சிகள் தனித்தே செய்கின்றார்கள். தேவையான சாதனங்கள், கூலியாட்களை கூலிக்கு அமர்த்தி சொந்த முதலோ அன்றி கடனோ பெற்று விவசாய முயற்சியைச் செய்கின்றார்கள். இதனால் வரும் இலாபமோ, நட்டமோ அவரைச் சார்ந்ததாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு முறையில் பலர் கூடி மேற்கொள்ளும் போது வங்கிக் கடன் பெறுதல், காப்புறுதி செய்து அதன்மூலம் இழப்பீடுகள், அழிவேற்படும்போது அரச இழப்பீடுகள், மானிய உதவிகள் போன்றவற்றை கூடிய அளவிலும் பொறுப்பானவர்களின் வேலையாட்களின் நலனைப் பேணிப் பயனடைய முடியும். விலங்கு வேளாண்மை, விவசாயம், கைத்தொழில் சார்ந்து பலநோக்குக் கூட்டுறவு அமைப்புகளை முயற்சி சார்ந்து ஆரம்பிக்க முயலல் வேண்டும்.

கடற்றொழில் சார்ந்தும் பல நன்மைகளைப் பெறுவதற்கு அத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கூட்டுமுயற்சிகளைச் சிறு அளவிலாகிலும் தொடங்கி அனுபவம் பெற்ற பின்னர் விரிவாக்கம் செய்யலாம். படித்தால் மட்டும் வேலைவாய்ப்புக் கிடைக்காது. தொழில்சார் கல்விக்கான பயிற்சிக் கூடங்கள், அதன் பின் அதனை கொண்டு தொழில் முனைவோருக்கான முதலீடு உட்பட தொழில்துறை வசதிகள் ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் அவசியம். பனை, தென்னை சார்ந்த பல்வேறு தொழில் முயற்சிகளை வீடுகளில் இருந்தே மேற்கொண்டு பொருளாதார வளத்தைத் தேட முடியும். இவற்றைச் சாதிக்க சமூக சிந்தனை மிக்க மனிதர்களின் கூட்டு மிக அவசியம். மேலோங்கி வரும் வாழ்க்கைச் செலவீனங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க "தன்னிறைவான தீவு" என்ற நிலையை அடைய இலக்குகள் நிர்ணயித்துச் செயற்படுத்தல் அவசியம்.

கிராமிய பொருளாதாரம் உயர்வடைய மேற்கொள்ளப்படக்கூடிய பல செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்கும்போது, கிராம வளங்கள் சார்ந்த தகவல்களின் அடிப்படை அவசியமாகும்.

ஏற்கனவே நீர் முகாமைத்துவம், விவசாய விருத்திக்கான வழிவகை பற்றிப் பார்த்துள் ளோம். கல்வி, சுகாதாரமும் மருத்துவ சேவைகளும் மக்களின் வாழ்வியலில் அடிப்படை உரிமை சார்ந்த விடயங்கள். அதேவேளை, அரசாங்கம் நிறுவனமயப்படுத்தி இதன் நிருவாக ஒழுங்கை மேற்கொண்டு வருகின்றமையால் அதையிட்டு ஆராய்தலைத் தவிர்த்துள்ளோம்.

சுற்றுலா : அமைவிடம் சார்ந்து முக்கியத்துவம் பெறாத தீவாக இதைக் கருதலாம். ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் (புங்குடுதீவு) என்பன துறைமுக நகரங்களாகையால் போக்குவரத்து, உள்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தினால் தான் அப்பிரதேசத்தினூடாகப் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் திருப்தியான சேவைகளை வழங்க முடியும். ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோயிலடிப் பாலம் ஊடான போக்குவரத்து 1985ம் ஆண்டை அண்டி முனைப்புப் பெற்றது. கடலில் வரும் ஏதோ ஒரு கலம் (படகு, மரக்கலம், லோஞ்) கரையில் ஒரு பயணியை இறக்கிவிடும்போது, ஏற்றிவிடும்போது தொடர்ந்து அவரது இலக்கை அடையும் வரை பயணிக்கப் பாதை வசதி, நீர், இயற்கைக்கடன் வசதி, வாகன வசதி, தங்குமிட வசதி எனப் பலவும் ஒன்றிணையும் போதே வெற்றிகரமான அல்லது திருப்திகரமான சேவையைப் பெறுவதாக அமையும்.

இவ்வாறான நிலைமையை எழுவைதீவு, அனலைதீவுக்கான அபிவிருத்தியுடன் பொருத்திப் பார்த்தல் அவசியம். உள்ளூர் மக்களும் சரி, வெளியூர் மக்களும் சரி இவ்விடத்தை நாடி வரும் போது பெறும் சேவைகளினூடே பொருளாதாரம் இணைந்துள்ளது. சேவைக்கான கட்டணம் அல்லது வாடகை அல்லது நிதிசார் கொடுப்பனவு இருவழிப் பாதையானது. திருப்தியான சேவை, நியாயமான நிதிக் கொடுப்பனவு இவ் அடிப்படையில் கடல் வழி, தரைவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து தற்காலத்தில் பெருமளவு சீரடைந்துள்ளது. கடந்து ஊருக்குள் சென்றால் அங்கும் கிராமம் என்ற "பழி" நீங்கி நகர்ப்புற வசதிகள் கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

வீதிகளின் நிலை மோசம் என்பதை மறுப்பதற்கில்லை. நவீன வீதியமைப்புச் சாதனங்கள், தொழில்நுட்பங்கள் கடல்கடந்து வந்துவிட முடியும் என எதிர்பார்க்க முடியாது. ஆயினும் 1950 களில் கடைப்பிடித்த அதே தொழில்நுட்பங்கள் இன்னும் பிரயோகிக்கப்படும் போது புதிதாக ஏற்பட்ட விருத்தி கவனிக்கப்பட வேண்டும். உழவு இயந்திரம், பஸ் வண்டி, இருசக்கர வாகனங்கள், முச்சக்கர வாகனங்கள் மேலும் "பார" இயந்திர சாதனங்கள் இவ்வீதியைப் பயன்படுத்தும் போது அவற்றின் அழுத்தத்தை தாங்கிடவல்ல வீதியமைப்புப் பொறிமுறை அவசியமே.

மின்வசதி, நன்னீர் வசதி இருந்தபோதும் உறவினர் அல்லாத ஒருவர் ஊருக்கு வந்து தங்கி தன் கருமங்களை ஆற்றிச் செல்ல தங்குமிடம், உணவு, ஏனைய உபசரிப்புக்கள் கொண்ட கட்டமைப்பு 2020வது ஆண்டிலும் அமையாத நிலை இருக்கின்றது. வெளியூர் ஆசிரியர்கள், வெளியூர் மருத்துவமனைப் பணியாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தி னர், மின்சாரசபை பணியாளர்கள், ஆலயங்களுக்கான யாத்திரீகர்கள், சேவையாளர்கள் தினமும் வருகின்றார்கள், கடமைளை முடித்து உரியகாலத்தில் திரும்புகின்றார்கள்; தங்குமிட வசதி, உணவு வசதி, ஓய்வு வசதிச் சிரமங்களினூடேயே இந்நிலையில் ஊரின் அழகுகளை, ஆன்மீகத் தளங்களை அவற்றின் மகத்துவமிக்க திருநாட்களில் தரிசிக்க வருவோருக்கான "தூண்டுதல்" இவ் வசதியீனங்களால் பாதிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தின் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பை வேண்டின், பின்வரும் இடஞ்சார் விருத்தி அவசியமாகும்.

1. நயினாதீவு நாகேஸ்வரி ஆலயத்துடன் வரலாற்றுரீதியான தொடர்புடைய புளியந் தோப்பு நாகேஸ்வரன் கோயிலுக்கு நயினாதீவு அம்பிகை அடியார்கள் வந்து செல்லும் விதமாக இணைப்புப் படகுச்சேவை நயினாதீவு - புளியந்தீவு பாலங்களின் இடையே ஏற்படுத்துதல். புளியந்தீவு யாத்திரீகர் விடுதியைச் செயற்பாட்டில் வைத்திருத்தல்.

2. இதே பயணிகள் அனலைதீவு ஐயனார் ஆலயத்தைத் தரிசிக்கும் விதமாக உள்ளூர் பயண வாகன வசதி கிரமமாக ஆலய வழிபாட்டு நடைமுறைகளும் யாத்திரீகர் வருகைக்கு ஏற்ற விதமாக வசதிகளுடன்.

3. பருத்தித்தீவு பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் அவற்றை பிரதானப்படுத்தி மேற்கொள்ளக்கூடிய விருத்திகள்.

- ❖ அனலைதீவு - பருத்தித்தீவுக்கான சிறு மோட்டார் படகுச் சேவை.
- ❖ நட்சத்திர வசதிகளுடன் கூடிய விடுதி ஒன்றை அனலைதீவில் நிறுவுதல்.
- ❖ பிரதேசஞ் சார்ந்த பாரம்பரிய, நவீன உணவு வகைகைள எந்நேரமும் பெறுவதற்கான உணவுச்சாலை (கூட்டுறவுச் சங்கம் முன்னெடுக்கலாம்) அமைத்தல்.
- ❖ கடல்நீரில் நீந்துதலுக்கான ஒரு பகுதியை அணைமூலம் தடுத்து வாய்ப்பு ஏற்படுத்துதல்; கடலில் படகு ஓட்டி மகிழத்தக்க வாய்ப்புக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கடலிலேயே மிதக்கும் “படகுவீடு” வாடகைக்கு அமர்த்தித் தங்க வசதி ஏற்படுத்துதல். இரவில் தங்க அனுமதி கிடைக்கும் வரை பகலில் அறிமுகப்படுத்தி விரிவுபடுத்தலாம். குடும்பமாகவோ, தனியாகவோ இதில் அறை எடுத்துத் தங்குதல் முடியும்.

❖ சிறு குடில் போன்ற அமைப்புகளைப் பரவைக் கடலில் ஏற்படுத்தல். நிலவுக் காலங்களில் இவ்வாறான பின்னணியில் புகைப்படம், வீடியோ எடுக்க விரும்புவர்.


❖ இணையாக நல்ல மண்வளம், நன்னீர் வளம், சூழல் கொண்ட இடத்தில் அமைக்கப்படும் நந்தவனம், (பூஞ்சோலை) விசேட நிகழ்வுகளின்போது பலர் வருகைதர விரும்புவர்.

ஊரின் பனம் பொருள் சார்ந்த உற்பத்திக் காட்சிக்கூடம், விற்பனைக்கூடம் அமைத்தல். அத்துடன் பனைமரச் செதுக்கல்கள், கலைப்பொருட்கள் உற்பத்தி ஊரி, கிளிஞ்சல், சோகி, போன்ற கடல்சார் விலங்குகளின் இறந்த பகுதிகள் அலங்கரிப்பு, தெங்குப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் அழகுக் கலைப்பொருட்கள்.

( சிரட்டை, ஓலை, பாளை)

இனி கட்டுரையின் ஆரம்பத்தில் தரப்பட்ட யுனெஸ்கோ வாசகத்தின் அர்த்தத்தை இக் கட்டுரையுடன் இணைத்துப் பார்ப்போம்.

“இவ்வூரின் அபிவிருத்தி கருதிய ஒவ்வொரு செயற்பாடுகளினூடாகவும் பயன்பெற்று மேனிலையடைய விரும்பும் ஒவ்வொரு தனிமனிதனும் அவர் இணைந்த அச் சமுதாயமும் தமது அடிப்படை நல்வாழ்வுக்கான முயற்சிகளில் ஜனநாயக ரீதியாக உரிமையுடையவர். அதேசமயம் ஆக்கபூர்வமாகக் கல்வி பெற்றுச் சிந்திக்கும் நல்லறிவுடையோராக விருத்தியடையும் சுதந்திரமான சூழ்நிலையில் ஒவ்வொருவரினதும் பங்கேற்பும் பங்களிப்பும் கொண்ட நிலை பேறான அபிவிருத்தி, தன்னிறைவாக அவ்வூரில் அமையும்”



குறிக்கோளை அடையும்
முயற்சியில்தான் மகிமை இருக்கிறது
அந்த குறிக்கோளை அடைவதில் இல்லை
- மகாத்மாகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் போயிற் சாதல்!
# (சிறுகதை)

திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்

உதயசூரியனின் வருகையால் மொட்டவிழ்த்துச் சிரித்தன பூக்கள். அவற்றில் தேனருந்திக் களித்த பின் ரீங்காரம் இசைத்துக்கொண்டிருந்தன வண்டுகள். அந்தப் புலர்காலையில் வதனியின் வீட்டார் சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருந்தனர். வதனியின் முகத்தில் கொஞ்ச நாட்களாகச் சிரிப்பையே காணமுடியவில்லை. ஏதோ ஒரு சோகம் அவளது ஆழ்மனதுள் புதைந்து கிடக்கிறது. அவளின் உற்ற தோழியான சாந்தி எத்தனையோ தடவைகள் துருவித் துருவிக் கேட்டதற்கு, "நேரம் வரும்போது சொல்கிறேன்" என்று மழுப்பி விட்டாள். அவள் தனது தமையனுடன் படித்த ராஜனை மனதினுள் விரும்பி, நேசித்து, பேசி, சிரித்து இருந்த உறவில் - நாட்டின் அரசியல் சூழல் பல மாற்றங்களைத் தோற்றுவித்தது.

ராஜன் தற்போது மூன்று வருடங்களாகச் சிறையில் இருக்கிறான். தமையனின் நண்பன் மாத்திரமல்ல, படிப்பில் கெட்டிக்காரனாகவும் தோற்றத்தில் அழகனாகவும் அவளது மனதில் ஆழப் பதிந்துவிட்டான். அவனது குரல் வளமும் பாடசாலையில் மாணவ முதல்வனாக அவன் செய்யும் பணிகளும் அவன்பால் அவளுக்கு ஈர்ப்பை ஏற்படுத்தின. கண்கள் மட்டுமே அன்பையும் மரியாதையையும் பகிர்ந்தன. நண்பனின் தங்கை என்கிற முன்னுரிமையையே தன் காதல் உணர்விற்கு முன் நிறுத்தினான் ராஜன். அதே உணர்வை வதனியும் கடைப்பிடித்தாள். அத்துடன், அவனுடைய தகப்பன்தான் அவளுடைய உறவைச் சார்ந்தவர். தாய் (யாழ்ப்பாண வழக்கில்) வேறு சாதியைச் சேர்ந்தவள். இந்த விபரங்கள் அவளது வீட்டில் தெரிந்தால், அவளது காதலை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில், தங்கள் சாதி மரபுக்குள்ளேயே சாதிக்குள் சாதி பார்க்கிற தடிப்பு நிறைந்த 'முதலி' பரம்பரையில் பிறந்துவிட்டாள் அவள். அவளது தாத்தா முற்போக்கான கொள்கை உள்ளவர். பாட்டியோ குடும்பத்தில் பேரப் பிள்ளைகளுக்குச் சம்பந்தம் வரும்போது, "உயர் குடும்பத்தை உரசிப்பாத்துத் தான் சம்பந்தம் செய்த பரம்பரையில் பிறந்தவள் நான்" என்று வீறாப்புப் பேசத் தயங்கமாட்டாள். "என்ன செய்வது? அவனும் தன்னைப் போல ஒரு ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்டால், நாலைந்து வருடங்களின் பின்னர் வேறு மாகாணத்திற்கு மாற்றல் எடுத்துச் சென்று அங்கு திருமணத்தை முடித்துக்கொண்டு வாழலாமென" தன் உள் மனதுள் பல கற்பனைகளைப் புதைத்து வைத்திருந்தாள். காலங்கள் ஓடின. நாட்டில் இனவாதம் புற்றெடுக்க, இளைஞர்களும் யுவதிகளும் போராளிகளாகினர். இயல்பிலேயே தனித்துவமுள்ள ராஜன் தன் அரசியல் அறிவாலும் பேச்சு வன்மையாலும் அடக்கு முறையின் அவலத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட ஆரம்பித்தான். அணி அணியாகப் போராளிகளை உருவாக்க ஆரம்பித்தான். காதல் நினைவுகளுக்குக் கடிவாளமிட்டு, தன் கடமைகளில் மூழ்கினான். ஒருநாள் அவன் தன் வீட்டை விட்டே வெளியேறியதை அவள் அறிந்துகொண்டாள்.

அவன் பற்றிய ஒவ்வொரு சிறு துணுக்கையும் மற்றவர்கள் ஊகிக்காதவாறு வதனி அறிந்து கொண்டாள். அதில் ஒரு வேடிக்கை, அவள் அண்ணனும் ராஜனுடன் இணைந்து போராளியாக மாறினான். ராஜன் படித்து வேலைக்குச் செல்வான் என்ற கனவு தகர்ந்தது. கடவுள்தான் அவனைக் காப்பாற்றித் தன்னிடம் சேர்க்க வேண்டுமென எல்லா விரதமும் பிடிக்க ஆரம்பித்தாள் வதனி. ஆயிரம் கேள்விகள் கேட்டு, புத்திமதி சொல்பவர்களை விட- தன் காதலின் நியாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமொழியில் புரிந்துகொள்ளும் கடவுள் அவளது நெருக்கமான நண்பரானார். ஆனால், ஒன்றுமே நடக்கவில்லை. “உள்நாட்டில் ஏற்பட்ட இனமோதலால் சிறைக் கைதிகளைக் கொன்றனர்” என்ற வானொலிச் செய்திக்குப் பின்னர் பல இளைஞர்கள் வீடு விட்டுக் காணாமற் போய்விட்டார்கள். அவர்களுள் அவனும் ஒருவனாகி விட்டான். இந்தியாவில் பயிற்சி பெற அவன் படகேறிப் போன கதை கேட்டும், கண்ணீருடன் காத்திருந்தாள். அவள் பாவம். அவளது தாய் படுக்கையில் கிடக்கும் நோயாளி. தாயின் பணிவிடைகள், தனது ஆசிரியக் கடமைகள்- இவற்றிடையே கோவிலுக்குச் சென்று அவனது பெயர், நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்விக்கத் தவறமாட்டாள். அது, ஒரு உயிரை இன்னொரு உயிர் நேசிக்கும் “தெய்வீகக் காதல்” என்றுதான் கூறவேண்டும். அவள் அவனை நேசிக்கும் பற்றுறுதி போல் அவனது மனதில் தனது இனம், தனது தோழர்களுக்குத்தான் அவன் முன்னுரிமை கொடுத்திருந்தான். இந்த விடயத்தில் அவள் ஊமையாகவே வாழுகிறாள். அவன் ஊர் திரும்பிய போதெல்லாம், அவனது ஒற்றைப் பார்வைக்காகப் பல ஒழுங்கைகள் தனி நடை நடந்தாள். அவனை இராணுவம் கைது செய்தது பற்றி அறிந்து அவள் பட்ட துன்பம் ஆறாதது. அவளின் தனிமையையும் சோர்ந்த முகத்தையும் கண்ட நண்பி சாந்தி, மெதுவாக அவளின் உள்ளாந்திரத்தை அறிந்துகொண்டாள். சாந்தியின் சகோதரி தன்னுடன் படிக்கும் ராஜனின் தங்கையின் நண்பியிடம் இக் கதையைச் சொல்ல, அவள் ராஜனின் தங்கையிடம் சொல்ல- பலர் வாய் கடந்து வந்தது அக்காதல். ராஜனின் தங்கை சிறையில் இருக்கும் அண்ணனது தொடர்பு முகவரியைக் கொடுக்க, தபால் இலாகா அவர்களது காதலை வளர்த்தது. மூன்று வருடங்கள் இராணுவ முகாமில் பல சித்திரவதைகளையும் தனிமையையும் அனுபவித்த ராஜனுக்கு, தான் நேசித்தவள் தன்னையும் நேசித்துக் காத்திருப்பது பெருமகிழ்வைத் தந்தது. சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதனால் கடிதப் போக்குவரத்தை அனுமதித்து இருந்தார்கள்.

இப்படியே வருடங்கள் ஓடின. அவளது பிரார்த்தனை தெய்வங்களின் காதில் விழுந்தது போலும். நாட்டின் ஜனாதிபதியும் பாரதப் பிரதமரும் செய்துகொண்ட சமாதான உடன் படிக்கையின் படி, சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். அவனது விடுதலையை அறிந்து சகல தெய்வங்களுக்கும் அர்ச்சனை செய்வித்த வதனி, அதன் பின்னர்தான் தன் கதைகளைச் சக ஆசிரியர்களுக்குக் கூறினாள். ராஜன் மேல் மதிப்பும் அன்பும் வைத்திருந்த சக ஆசிரியர்கள் மிக மகிழ்ந்து, அவளுக்கு ஆதரவாக இருந்தனர். அவளின் மைத்துனி, தூரத்து உறவினர்கள் வதனியின் புரட்சிகரக் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. “உனக்கு எத்தனையோ முறை மச்சான்மார் இருக்கினம். நீ ஏன் நிறைவேற்ற முடியாத காரியத்தை நினைக்கிறாய்? உன்ரை சொந்தங்கள் உன்னை வாழ விடாதுகள். இதை இன்னொரு தரம் யோசித்துப் பார்” என்று பல புத்திமதிகளைக் கூறினர். தனது கொள்கையில் உறுதியாக இருந்த வதனி, தன் மனதில் உள்ளதை ராஜனின் பெற்றாரிடம் நேரில் சென்று தெரிவித்தாள். இதற்கிடையில், அவன் தங்கியிருக்கும் முகவரிக்கு வதனி கடிதம் எழுதி, தனது வைராக்கியத்தையும் சில உறவுகளின் அழுத்தங்களையும் வெளிப்படுத்தியிருந்தாள். ஆரம்பகாலத்தில் அவளது காதலை அவள் யாருக்கும் தெரியப் படுத்தவில்லை. அவனது விரல் நுனிகூட அவளது மேனியில் பட்டிராத காதல், அவன் விடுதலை பெற்ற பின்னர் அவனது நண்பர்கள், தோழர்களின் ஒத்துழைப்புடன் பதிவுத் திருமணத்தில் முடிந்தது. சிலநாட்கள் சென்ற பின் அவளது நடவடிக்கையைக் கவனித்த வீட்டார், அவளுக்குப் பலமாக அடித்ததாக அயலவர்கள் கூறினர். அவளுடைய ஊர்த் தேரிலன்று அவள் தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். அவளது மரணத்தைக் கூட மறைத்த வீட்டார், இறுதிக் கிரியையையும் அவசரமாகச் செய்து முடித்துவிட்டனர். அவள் எழுதிய கடிதங்கள் நீண்ட காலமாக அவனிடம் இருந்தன. அவனும் மறைந்தபின் அக்கடிதக் கோவைகள் இன்றும் அவனது வீட்டில் உயிரோடு இருந்து, இருவரின் தெய்வீகக் காதலை நினைந்து கண்ணீர் வடிக்கின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்தீவும் புனித காணிக்கை மாதா ஆலயமும்

திரு. அன்ரனி ஜோசெப் யொனிற்றன் ஜோசெப்,
எழுவைதீவு.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பருத்தித்தீவினை முக்கியமான இயற்கை மரபுரிமைத் தீவாகக் கொள்ளலாம் இத்தீவானது அனலைதீவுக்கும் எழுவைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் சுமார் 0.2 சதுரக் கிலோமீற்றரில் அழகிய கற்பாறை தொடர்களுடன் இணைந்த மலைச்சாரல் கரையமைப்பைக் கொண்டமைந்துள்ளது. இத்தீவானது பருத்தி மரங்களை அதிகம் கொண்டமைந்த காரணத்தினால் காரணப் பெயராக பருத்தித்தீவு எனப் பெயர் பெற்றது. இது குடியேற்றமற்ற தனித்தீவாக காணப்படுவதனால் வேற்று நாட்டுப் பறவைகள், வேறு வகையான புதிய உயிரினங்கள் அதிகளவு தரித்துச் செல்கின்றன. ஆதலால் அருகிச் செல்லும் பறவைகளைக் கண்டு களிக்கும் இயற்கை அருங்காட்சியமாகக் கண்களுக்கு விருந்தளித்து நிற்கின்றது இத்தீவு. இது "பறவைகள் சரணாலயங்களின் தீவு" என்று வர்ணிக்கப் படுகின்றது.

இங்கு ஆடுகள் அதிகளவு தரித்து நிற்கும் இடமாகவும் தரித்து நிற்கும் உயிரினங்கள் கடல் நீரையே பருகி உயிர் வாழ்வதும் சிறப்பம்சமாக அமைகின்றது. இங்கு ஆரம்பகாலங்களில் விவசாய செய்கை வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டதுடன், தென்னை மரங்கள் அதிகளவு தற்போது காணப்படுகின்றமையும் இதனை எண்பித்து நிற்கின்றன.

இங்கு 1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டுவரை எழுவைதீவைச் சேர்ந்த 11 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. 11 வீடுகளும் 03 கிணறுகளும் சுவாமிப்பிள்ளை குருசுமுத்து தலைமையில் ஒருவர் ஒருவரின் பாரிய ஒத்துழைப்புடன் வீடுகள் அமைக்கப்பட்டன. மேலும் முழுமையாக பற்றைகளாக காணப்பட்ட பருத்தித்தீவு இவர்களின் குடியேற்றத்தால் புத்துயிர் பெற்றது. இது அனலைதீவு 2ஆம் வட்டாரத்தில் பதிவுக்குட்பட்டாலும் தற்போது வரை எழுவைதீவு கிராம மக்களால் பாரமரிக்கப்பட்டு வருகின்றது. இங்கு 1953ஆம் ஆண்டு சுவாமிப்பிள்ளை குருசுமுத்து அவர்களால் புனித காணிக்கை மாதா திருச்சொரூபம் வைக்கபட்டு சிறிய ஆலயமாக அமைக்கப்பட்டது. 1953ஆம் ஆண்டு வைக்கப்பட்ட மரத்திலான காணிக்கை மாதா திருச்சொரூபம் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. 1953 ஆம் ஆண்டிலிருந்து வழிபாடுகள் தனித்து நடத்தப்பட்டாலும் 2000 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை பங்குத் திருச்சபையோடு இணைந்து எழுவைதீவு பங்கு மக்களும் பங்குத்தந்தையும் இணைந்தவர்களாக வருடா வருடம் மாசி மாதம் நற்கருணை வழிபாடு மற்றும் திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

இத்திருவிழாத் திருப்பலியில் எழுவைதீவு பங்கு மக்களால் படகுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஊர்காவற்றுறை மற்றும் மெலிஞ்சிமுனை, அனலைதீவு மக்களின் பங்குபற்றலுடன் அன்னையின் திருவிழா மிகவும் கோலாகலமாக இடம்பெறுவதுடன், படகுச்சவாரிப் போட்டியும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்தி பெற்றதாக இடம்பெறுகின்றன. இத்தீவு கடற்றொழிலாளர்களின் காவலரணாகவும் திகழ்வதுடன், தொழிலாளர்களின் தரிப்பிடமாகவும் அமைந்திருக்கிறது. அன்னையின் அருளுக்காக தனிப்பட்ட முறையில் வருகை தருவது இயல்பு. தனிமையைப் போக்க இதமான தென்றலுடன் கதை பேசி ஆலமர நிழலில் ஆனந்தம் கொண்டு அன்னையுடன் உறவாடும் இன்பத் தரிசனமாகவும் பருத்தித்தீவு திகழ்கின்றது. மாதத்தில் ஒருதடவை எழுவைதீவு பங்கு இளைஞர்களால் சிரமதானப்பணிகள் மேற்கொள்வது வழமையாகக் காணப்படுவதுடன், பங்குனி மாதத்தில் ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் தியான நிகழ்வுகளும் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் மூப்பர் கட்டமைப்பில் நிர்வாகச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட் டிருந்ததுடன், சிறந்த ஒன்றிணைந்த நிர்வாகக் கட்டமைப்பு அமைந்திருந்ததை அவர்களின் வார்த்தை பகிர்வின் மூலமும் ஆதாரங்கள் மூலமும் அறியமுடிகின்றது. தற்போது எழுவை தீவுப் பங்கின் ஆளுகையில் அருட்பணிச்சபையும் பங்குத் தந்தையர்களும் வழிப்படுத்துகின்றனர். பருத்தித்தீவு கரையோரத்தில் மீன்வளம் நிறைந்து காணப்படும் புண்ணிய பூமியாகும். அழகும் அம்சமும் இணைந்த இனிய தீவாகவும் இது திகழ்கின்றது. ஆனால் இன்று மக்கள் எவரும் இல்லாத போதிலும் மந்தைக் கூட்டங்கள் தாமாகவே இனத்தைப் பெருக்கி வாழ்ந்து வருகின்றன. இத்தீவானது 1973 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி "பறவைகள் சரணாலம்" என்று வன ஜீவராசி பாதுகாப்புத் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இது இலங்கைத் தீவின் மறக்கப்பட்ட ஒரு சுற்றுலா மையமாகும். இதை வளப்படுத்துவதன் மூலம் இலங்கையின் அன்னியச் செலாவணியை மேம்படுத்துவதுடன், தீவகங்களுக் கிடையிலான இணைப்பின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் உயர்வினைத் தரக்கூடிய ஒரு வளமாகவும் காணப்படுகின்றது. எனவே இதனை வளப்படுத்துவோம், வளம் பெறுவோம்.



**பருத்தித்தீவின்**
**கரையோரப் பாறைகள்**



**இங்கு 1953ம் ஆண்டு சுவாமிப்பிள்ளை குருசுமுத்து அவர்களால்**
**புனித காணிக்கை மாதா திருச்சொரூபம் வைக்கப்பட்டு சிறிய ஆலயமாக அமைக்கப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம நாமங்கள்



செல்வி கிருசாந்தினி நாகராசா,
சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

"ஊர்காவற்றுறை, கரம்பொன் நாரந்தனை
உற்ற நற் புளியங்கூடல்
மேர்மிகு சரவணை, வேலணை, மண்கும்பான்
பெருமைசொல் மண்டதீவல்லைப்பிட்டி
சேர்ந்தே லைடன் தீவெனும் நிலமாம்
சீர்மிக்கான் பூதத்தம்பி தென் மன்னன்
போர் அரண் கடல்கோட்டைகள் இன்றும்
பொலிவுடன் விளங்குதல் புகந்திடல் இனிது
நேர்மை சிறப்பும் நிறைந்ததாம்
லைடன் நிலத்தின் பெருமை நினைப்பதும் நிறைவாம்"

எனத் தீவகத்தின் பெருமையினை இப்பாடல் எடுத்தியம்புவதுடன் இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்லியல் ஆய்வுகள் மூலம் இப்பகுதிகளில் கிடைக்கப்பெற்று வருகின்ற தொல்பொருட்களும், ஐதீகங்கள், மரபு வழிக்கதைகள் மற்றும் இதிகாசங்களும், பாரம்பரியங்களும் தீவகத்தின் பெருமையினை உணர்த்துவனவாகவே உள்ளன. பெருங்கற் காலப் பண்பாடு நிலவிய காலத்திலேயே ஆரம்பிக்கின்ற தீவக வரலாறானது பல்வேறுபட்ட சுவாரசியமான கதைகளைத் தன்னுள்ளே தாங்கியுள்ளது. இராம, இராவண யுத்தத்திலே மயங்கிய இராமனைச் சுயநினைவுக்கு கொண்டு வர அனுமனால் தூக்கி வரப்பட்ட சஞ்சீவி மலையிலிருந்து உதிர்ந்த துகழ்களே தீவுக்கூட்டங்கள் என்பது இந்து பாரம்பரியக் கதையாகும். இக் கதையின் படி பெருந்தீவுகளான சப்த தீவுகளை உள்ளடக்கியும் மேலும் சின்னஞ்சிறு தீவுகளையும் கொண்டதாகவும் இத் தீவகப் பிரதேசம் காணப்படுவதுடன் நெடுந்தீவு, தீவகம் தெற்கு (வேலணை), தீவகம் வடக்கு (ஊர்காவற்றுறை), காரைநகர் என நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டுள்ளது.

ஈழ தேசம் அன்னியரிடம் இருந்து விடுதலை பெற்று பல தசாப்தங்கள் கடந்த விட்ட போதும் அவர்களால் பேசப்பட்ட அவ் அந்நிய மொழிச் சொற்கள் எங்கள் நாவில் இருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. அந்த வகையில் தீவகம் வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட் பட்ட கிராமங்களின் நாமங்கள் தோற்றம் பெறுவதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படு கின்றன. அவ்வகையில் அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு, கரம்பொன், மெலிஞ்சிமுனை, நாரந்தனை, தம்பாட்டி, புளியங்கூடல், சுருவில் போன்ற கிராமங்களின் நாமங்கள் எவ்வாறு உருவாகியும் மருவியும் ஒவ்வொன்றும் தனித்துவத்துடன் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டு துலங்குகின்றன என்பதும் புலப்படக்கூடியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வகையில் ஒவ்வொரு கிராமத்தினதும் நாமங்கள் தோற்றம் பெறுவதற்கு பல வேறுபட்ட காரணங்களை முன்வைக்கின்றனர் நம் மூத்தசந்ததியினர். அவ் வகையில் யாழ் குடாநாட்டின் தென்மேற்கு திசையில் சப்த தீவுகளுக்கு மத்தியில் அமைந்துள்ள அனலை தீவானது அருட்பொழிவும் ஆன்மீகச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் இயற்கை எழிலுடன் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றி வாழும் மக்களின் புண்ணிய பூமி ஆகும். அனலைதீவு எனப் பெயர் வரக்காரணமாக பலர் பலவற்றை கூறியுள்ளார்கள். ஆதியில் முனிவர்கள் அக்கினி (அனல்) வளர்த்து தவம் செய்தபடியால் அனலைதீவு என அழைத்தார்கள் என யோகி சச்சிதானந்த யோகீஸ்வரர் கூறியுள்ளார். தீவைச்சுற்றி கற்பாறைகள் இருப்பதனால் காலப் போக்கில் அணை என்பது "அன" என மாறியதாகவும் கூறுவர். அனல் என்ற பெண்ணரசி ஆட்சி செய்தபோது டொனரா அயிலண்ட (Donallare Island) எனவும் 1656 இன் பின் ஒல்லாந்தரால் ஹட்டர்பம் எனவும் இது அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர் இதனை அனலைதீவு என அழைத்தார்கள். கந்தபுராண காலத்தில் கோமேதகம் என்றும் காலனித்துவ ஆட்சியில் சைவமணித்தீவு என்ற காரணப்பெயரும் இதற்கு உண்டு என்பர். பருத்தித்தீவு, புளியந்தீவு, அனலைதீவு ஆகிய இம் மூன்றும் சிவபொருமானின் முக்கண்களாக உருவகிக்கப்படுகின்றது. அதாவது அனலைதீவு - அக்கினித்தீவு நெற்றிக்கண், பருத்தித்தீவு - சூரியன் உதயமாகும் வலக்கண், புளியந்தீவு - அம்புலியின் இடக்கண்.

அனலைதீவு: தற்பொழுது அனலைதீவு வடக்கு, அனலைதீவு தெற்கு என இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு: கற்பக தருக்கள் உயர்ந்து எழில் கொஞ்சுவதுடன் மீன்வளம் பாடும் தேன் தீவாகவும் காணப்படுகின்றது. இக் கிராமத்தின் பெயர் தோற்றம் பெறுவதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. இந்து சமுத்திரத்தில் இருந்து வருகை தருகின்ற வேளை முதன்மையுடனும் எழிற்சியுடன் தென்படுவதாலும்
2. எழுமரங்கள் அதிகளவு காணப்பட்டதாலும்
3. எலுவா என்றால் சிங்கள மொழியில் ஆடு என்பதும் ஆடுகள் அதிகளவு காணப்பட்டதனாலும் எழுவைதீவு என்ற பெயர் தோற்றம் பெற்றது என்று குறிப்பிடுகின்றனர்.

போர்த்துக்கேய மொழியில் எழுவைதீவை Ilha Deserta (பாலைவனத்தீவு) என்றும் கந்தபுராணத்தில் இலவு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தீவானது இந்தியாவிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கி வருபவர்களுக்கு கிழக்குத் திசையில் முதல் தெரிவதால் இதற்கு எழுவைதீவென பெயர் வந்ததாகவும் கூறுவர். எழுவைதீவு J/39 கிராமசேவையாளர் பிரிவாக காணப்படுகின்றது.

ஊர்காவற்துறையானது இந்து சமுத்திரத்தின் "நித்திலம்" என புகழப்படும் இலங்கையின் வடபால் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றாக விளங்கும் வேலணைத்தீவின் மேற்குப் பகுதியாகும். ஊர்காவற்றுறை எனும் பெயரை நோக்கும் போது "உறவு" அல்லது "உறு" என்பது கப்பல் துறை அதாவது கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் அல்லது கப்பல் கட்டும் இடம் என்ற பெயர் வழங்கலாயிற்று. அதிலிருந்து தான் ஊர்காவற்றுறை என்ற பெயர் உருவாகியது. ஊரைக்காவல் செய்கின்ற வகையில் இந்த துறைமுகம் அமைந்திருந்தமையால் அவ்வாறு பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது என்பர். ஊரான் தோட்டம் என முன்பு வழக்கில் இருந்து சிங்களத்தில் “ஊறாதோட்ட” என வந்தது என்பர். பன்றிகள் ஏற்றிய துறை என்ற காரணத்தால் ஊறாதோட்ட எனப்பெயர் வந்தது என்று சொல்பவருமுளர். ஆனால் யானைகள் இத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இப்பொழுது ஆங்கிலத்தில் கயிற்ஸ் என வழங்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது என்பர். ஆனால் ஆய்வுகளின்படி இது போர்த்துகேய சொல்லில் இருந்து மருவி வந்துள்ளது எனத்தெரிகிறது. போர்த்துக்கேய மொழியில் கேயிஸ் என்றால் துறைமுகம் என்பது பொருள். அதிலிருந்து பின் கயிற்ஸ் என்ற பதம் ஆங்கிலத்தில் மாற்றி அமைக்கப்பட்டிருக்கலாம் என்று விளக்கம் தரப்படுகிறது. ஆனால் கந்தபுராண காலத்தில் ஊர்காவற்றுறையானது சூசை என்று அழைக்கப்பட்டது. (டானியல் ஜோன் 1875-34:35)

போர்த்துக்கேயர் ஊர்காவற்றுறைக்கு “Kayts” என்ற பெயர் இட்டனர். இச் சொல் துறைமுகம் அல்லது துறைமுக மேடை எனப்பொருள்படும். ஒல்லாந்தர் வசம் ஆட்சி மாறியதன் பின்பாக ஒல்லாந்தர் அதனை இன்றைய வடிவில் கட்டினார்கள். இக் கோட்டையானது பன்றியின் கால்வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் அதற்கு இட்ட பெயர் ஹன்மென்கீல் இக் கோட்டையானது எதிரி நாட்டுக்குள் ஊடுருவாமல் கண்காணிக்க கேந்திர நிலையமாக ஒல்லாந்தர் பாவித்தனர். இவர்கள்தான் ஊர்காவற்றுறைக்கு லைடன்தீவு என்று பெயரும் இட்டனர்.

பொலநறுவையை ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமாபாகுவின் (கி.பி1153-1186) ஊர்காவற்றுறைக் கல்வெட்டு முக்கியமானது.அக்காலத்தில் பெரும் துறைமுக நகரமாக விளங்கிய ஊர்காவற்றுறையில் குதிரை, யானை போன்ற மிருகங்களைக் கொண்டு வரும் கப்பல்கள் சேதமுறும் போது அவற்றுக்கான இழப்பினை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பது பற்றிய தகவல் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ஊர்காவற்று “ஊராத்துறை” என்றே குறிப்பிடப்படுகின்றது.

ஊர்களை மாத்திரமன்றி சப்ததீவுகள் யாவற்றையுமே காவல் செய்யும் ஊராய் விளங்கியதால் ஊர்காவற்றுறை “காவலூர்” என்றும் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் படைப்பாளிகள், கலைஞர்கள் தமக்கான அடையாளமாக ஊர்காவற்றுறை என்பதை காவலூர் என தமது பெயர்களுக்கு முன்பாக எழுதத் தொடங்கினர். ஊர்காவற்றுறையை அலங்கரித்த தீந்தமிழ் பாவலர் ஞா.ம. செல்வராசா அவர்களே முதன் முதலாக தமது பெயருக்கு முன்னால் காவலூர் என்ற அடைமொழியை வரித்துக்கொண்டவர். ஊர்காவற்றுறை J/49 கிராமசேவையாளர் பிரிவாக காணப்படுகின்றது.

பருத்தியடைப்பு ஒரு காலத்தில் தேவன்கணை என்று அழைக்கப்பட்டு இருக்கலாம். இதன் அயல் கிராமங்கள் வீரநாராயணன் படைத்தளபதிகளான நாரயணன் வேலன், சரவணன் ஆகியோரின் தானை நின்ற இடம் என்று கூறப்பட்டு படைத்தளபதிகளின் பெயரை முதன்மையாக கொண்டு நாரந்தனை, வேலணை, சரவணை என அழைக்கபடுவதால் இங்கும் தேவன் எனும் தளபதியின் படை நின்று இருக்கலாம் அதனால் இந்த இடமும் தேவன்கணை என்று அழைக்கப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அதற்கு ஒரு ஆதாரமாக இன்று உள்ள தேவன்கணை பிள்ளையார் கோவிலை கூறலாம்.

பருத்தியடைப்பு என்ற பெயர் போர்த்துகேயர் காலத்துக்குப் பின்னர் வந்ததாகவே கருதப்படுகின்றது. இந்த பெயர் எவ்வாறு வந்தது என்பதை பற்றி பார்ப்போமானால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துகேயர் தெற்காசிய நாடுகளை ஆக்கிரமித்த பொழுது பருத்தி ஒரு முக்கிய பணப்பயிர் என்ற உண்மையை உணர்ந்தார்கள். தமது ஐரோப்பிய நாடுகளில் செம்மறி ஆட்டு கம்பளி உடைகளை பயன்படுத்திய அவர்கள் பருத்தி மூலம் செய்யப்படும் ஆடைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தார்கள். அதனால் தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் நெசவு தொழிற் சாலைகளை அமைத்து பருத்திச் செடியை பயிரிட்டு அப்பணப்பயிர் மூலம் பெரும் செல்வம் ஈட்ட முயற்சித்தார்கள். அந்த வகையில் ஈழத்தில் வாழ்ந்த காலத்தில் ஊர்காவற்றுறையில் ஒரு நெசவுத் தொழிற்சாலையை அமைத்து பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கினார்கள். அந்த நெசவு நிலையத்தின் தேவைக்கான பருத்திப் பஞ்சு மூலம் பெறப்பட்ட நூலினை பெற்றுக் கொள்வதற்காக தங்கள் காலனித்துவ நாடுகளில் இருந்து பருத்தி செடியை கொண்டு வந்து காவலூருக்கு அண்மையில் இருந்து இந்த கிராமத்தில் பயிரிட்டார்கள்.

அந்த காலத்தில் வேலணைத் தீவின் சகல கிராம மக்களும் கால்நடை வளர்ப்பிலும் அதிக ஆர்வம் கொண்டவர்களாய் இருந்ததால் பருத்தி செடியை கால் நடைகள் தாக்கி உணவாக உண்டு சேதம் விளைவிக்கும் என்பதால் இந்த பெரும் பிரதேச பகுதியை வேலி அடைத்து பாதுகாத்து பருத்திப் பயிர் இட்டதால் இந்த இடம் பிற்காலத்தில் பருத்தியடைப்பு என்று பெயர் பெற்றது. இங்கு பருத்தியை பயிரிட்டு அதன் பஞ்சில் இருந்து நூலினை தயாரித்து பல்வேறு வகையான ஆடைகளை இங்குள்ள தொழிலாளர்களின் உழைப்பினை சுரண்டி தயாரித்து தமது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும் செல்வம் ஈட்டினார்கள். அத்துடன் ஆழ்கடல் மீன் பிடிக்கான வலைகளையும் வடிவமைத்து கடல் வளங்களையும் சுரண்டி செல்வம் ஈட்டி தங்கள் நாடுகளுக்கு அனுப்பினார்கள். தற்பொழுது பருத்தியடைப்பு J/50 கிராமசேவையாளர் பிரிவாக காணப்படுகின்றது.

கரம்பொன் அதன் எல்லைகளாய் அமைந்திருக்கும் அயற்கிராமங்களைப் பின்வரும் பாடல் அழகாகச் சித்தரிக்கின்றது.

*"நிட்டை விட்டெழுகின்ற விருடியென வலம்புரிகள்*
*நித்திலம் முதிர்ந்ததென்று*
*நீள்கடலி னாழத்திருந்து பறை யறைகின்ற*
*நெய்தலைக் குடபாலதாய்க*
*கட்டவிழ்ந் திட்டநீர் மற்றையூர்க் கிட்டுவருங்*
*கவின்நாரந்தனை குணக்காய்க்*
*கடலினிடைக் கோட்டையொடு கப்பல்பல நிற்கின்ற*
*காவலூர் தனைவடக்காய்*
*அட்டதிக் கெங்கனு மன்ன தானத்திலே*
*அதிமேன்மை பெற்றிலங்கும்*
*அறவோர்கள் சூழ்சுருவில் அவாசி திசையெல்லையாய்*
*அமைந்தவூர் கரம்பொனூரே*

கரம்பொனூர்க் கவிஞர் அ.யுவக்கீம்பிள்ளை அவர்களால் புண்ணியப் பொன்னூர் எனும் கவிதையில் விபரிக்கப்படும் கரம்பொன்னூர் கிராமத்தின் பெயர் பற்றி நோக்கும் போது (கரம்பொன் பங்குமலர் - 1972) கரம்பைக்காடு அதாவது முட்பற்றைகளும், புதர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்திருந்தமையால் அவ்வூர் கரம்பைக்காடு என முன்னர் அழைக்கப்பட்டது.தென் இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் "திருக்கரம் பொனூர்" என்ற கிராமம் இருப்பதால் அங்கிருந்து வந்து இங்கு குடியேறிய திருநெல்வேலித் தமிழர் தம் ஊர்ப்பெயரை மறவாது அதை இங்கும் சூட்டினர் என்பாரும்முளர். இன்னும் இவ்விடத்தை ஆண்ட நிலப்பிரிவின் ஊனக் கரத்திற்கு பொன்னாற் செய்த கரம் பொருத்தியிருந்ததால் இவ்விடத்திற்குக் "கரம்பொனூர்" என பெயர் வழங்கியது என்பர்.

கரம்பன் கிராமம் பற்றிக்கூற வந்த யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியர் க.வேலுப்பிள்ளை "தீவுப் பற்றைச் சேர்ந்த இச்சிற்றூரின் பெயரும் மலையாளத்திலே உள்ள ஓர் சேரிப்பெயராகும்" எனக்குறிப்பிடுவார்.

கதிரன் என்ற பிரதானியின் அதிகாரத்தினுள் இருந்தமையால் கரம்பொன் என்ற பெயர் வந்தது என்றும் சிலர் கூறுவர்.

புரதான காலம் தொடக்கம் முருக வழிபாடு இருந்து வந்துள்ளது.பழந்தமிழர் தாம் வாழ்ந்த இடங்களுக்கு தமது வழிபாட்டு கடவுள் பெயரை இட்டு வழங்கி வந்துள்ளனர். இதற்கமைவாக முருகப்பெருமானின் பெயர்களில் ஒன்றாகிய கடம்பன் என்ற பெயரைத் தாம் வாழ்ந்த கிராமத்துக்கு சூட்டி மகிழ்ந்தனர். நாளடைவில் கடம்பன் என்பது கரம்பன் என மருவி வழங்கப்படலாயிற்று.

இவ்வூரின் கிழக்கிலும் மேற்கிலும் முருகமூர்த்தி கோவில்கள் உள்ளன. கரம் பன்னிரண்டு உடையான் அருள்பாலிக்கும் இடம் இது என்றும், கரம் + பன்னிரண்டு என்ற சொற்களின் அடியாகவே கரம்பன் என்ற இடப்பெயர் தோன்றியது என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது.

கரத்தால் பொன்னையும் கொடுக்கக் கூடிய மனம் கொண்டவர்கள் இருந்ததால் இக் கிராமம் கரம்பொன் என்றும் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

கரம்பை, கரம்பு என்பது சிறு அளவில் புற்களை கொண்ட இடத்தினை இது குறிப்பதனாலும் கரம்பொன் என்ற பெயர் வந்துள்ளது.

கரம் தொட்டால் பொன்னாகும் வளம் நிறைந்த மண்ணை கொண்ட கிராமம் தான் கரம்பன் என்று சொல்லப்படுவதும் உண்டு. ஈழத்தில் கத்தோலிக்கத்தின் வருகைக்கு பின்னர் இந்த இடம் குட்டி வத்திக்கான் என்றும் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பொன்(னை) கரம் தனிலேந்தி பாலக யேசுவை தரிசித்து காணிக்கை செலுத்தச் சென்ற ஞானி களிலொருவரை நினைவிற் கொள்வதற்காகவும் இருக்கலாம் என எண்ணக் கூடியதாகவுள்ளது.

இது கரம்பொன் J/51, கரம்பொன் கிழக்கு J/52, கரம்பொன் தென் மேற்கு J/53, கரம்பொன் மேற்கு J/54 போன்ற பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

மெலிஞ்சிமுனை என்ற பெயர் வருவதற்கான காரணம் முப்பாட்டன் காலத்தில் எம் உறவுகள் கரம்பொனிலும், நாரந்தனையிலும், ஊர்காவற்றுறையிலும் வசித்து வந்தார்கள். அப்போது கடல்தொழில் தான் உறவுகளை ஒன்றிணைப்பதற்கான மூல காரணமாக இருந்தது. இவ்வூர் கடலை தரை உள்நோக்கி காணப்படுவதால் அதன் பெயர் முனை என்பதையும், முப்பாட்டன் அவ் இடத்துக்கு கடல்தொழிலுக்கு செல்லும் போது அவ் இடமானது ஓர் காடாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே நிறைய மெலிஞ்சி முட்கள் நிறைந்த இடமாகவும் காணப்பட்டதால் எம் முப்பாட்டன் காலத்தில் அக்காடுகள் அழிக்கப்பட்டு எமக்கான ஊராக அமைப்பதற்கு தெரிந்து எடுத்தார்கள். அப்பொழுது தலைவராக லுக்கேஸ்ரீ என்ற முப்பாட்டன் இருந்து செயற்பட்டார். அயல் ஊர்களில் இருந்து எம் உறவுகள் அனைவரும் ஒன்றாக இணைந்தார்கள். அப்பொழுதான் மெலிஞ்சியார் முனை என்ற பெயர் சூட்டப்பட்டது. காலங்கள் மாறி மாறி வரும்போது தான் மெலிஞ்சிமுனை என்று மாற்றி அழைக்கப்பட்டது.

தமிழில் மெலிஞ்சியர் எனும் சொல் கோயில் காப்பாளர் எனும் அர்த்தத்தைக் கொண்டதாக இருக்கிறது. இந்த அர்த்தம் பொய்த்துப்போகாத தன்மை கொண்டதாக மெலிஞ்சிமுனை நீண்டு வருவதையும் அவதானிக்க முடியும். தேவாலயங்களைக் கட்டும் பணிகளில் ஈடுபட்டு பங்குதாரர்களாகவும், மெலிஞ்சிமுனையில் குடியேறிய பின்னரும் செல்லுமிடமெல்லாம் ஆலயம் கட்டும் மனஆர்வத்தைக் கொண்டவர்களாகவும் இருந்து வந்ததற்கு தீவகத்தின் வெவ்வேறு ஆலயங்கள் இன்றும் சாட்சிகளாக நிற்கின்றன. இது கரம்பொன் தெற்கு J/54 கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கிராமமாக காணப்படுகின்றது.

யாழ் - ஊர்காவற்றுறை மற்றும், புங்குடுதீவு - வேலணை (தாம்போதிகள்) கடற்பாதைகள் அமைக்கப்படாத காலபகுதியில் காரைநகர்ப் பாலாவோடை, தம்பாட்டி, விறாட்டி முனைக்கு இடைப்பட்ட கடல் நீரேரி வழியாக முன்னைய காலங்களில் யாழ் கிட்டங்கிக்கு வத்தைகள் (இழுவைப்படகுகள்) மூலம் எடுத்துச் சென்று களஞ்சியப்படுத்தப்பட்டமையும், அப்படி இவ்வழியாக வரும் கப்பல்கள் இழுவைப் படகுகட்கு கலங்கரை விளக்காக விறாட்டி முனைக் கடற்கரையில் தீபக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்த காரணத்தினால் “கம்பங்காட்டி” என ஊரின் பெயர் உண்டானதாகவும் காலப்போக்கில் “தம்பாட்டி” என பேச்சு வழக்கில் மாறியதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் மோட்டார் வாகனங்கள் அல்லாத அக்காலங்களில் சகல தீவுகளிலும் இருந்து வத்தை எனும் பாய்கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டு மாடுகளின் சாணவிறாட்டி எம்மூரின் வடமேல் முனையில் இறக்குமதி செய்தமையாலும் இம் முனைக்கு விறாட்டி முனை எனப் பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. இது நாரந்தனை வடமேற்கு J/56 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராமமாகும். இக் கிராமத்தின் ஒரு குறிச்சி அம்பலப்புலமாக அழைக்க கூறப்பட்டு வருகின்றது. ஊர்காவற்றுறையில் மக்களில் பிரமுகர்களாக விளங்கிய ஒரு சிலர் தம் ஆதி சமயத்தை கைவிடாமல் சமய வைராக்கியர்களாக இருந்தார்கள். அவர்களில் முதன்மை வாய்ந்தவர்கள் அண்டி அம்பலரும், ஐயப்பனாரும் ஆவர். தற்போது அம்பலப்புலம் என அழைக்கப்படும் பகுதி முழுவதும் அக்காலத்தில் ஆண்டி அம்பலருக்கே சொந்தமாக இருந்ததது. அதனாலேயே “அம்பலர் - புலம்” அம்பலப்புலமாக மாறிய தெனலாம்.

வடக்கே தம்பாட்டி மற்றும் பரவைக்கடலையும், தெற்கே கரம்பொனையும் கிழக்கே சரவணையையும் மேற்கே ஊர்காவற்றுறையையும் எல்லையாகக் கொண்ட மருதநிலப் பிரதேசமே நாரந்தனையாகும். நாரந்தனை எனும் பெயர் வருவதற்கு பல காரணங்கள் கூறுகின்றனர். அதாவது முல்லை நிலத்தெய்வமான திருமால் வந்து அணைந்ததால் அதாவது திருமாலின் மறுபெயராகிய நாராயணன்தானை நாரந்தனை என்று மருவியதாக கொள்கின்றனர்.

நெடுந்தீவை ஆண்ட வெடியரசன் மன்னனின் சகோதரன் வீரநாரயணனால் ஆளப்பட்ட பிரதேசம் என்ற காரணத்தால் நாராயணன் தானை என்பது நாரந்தனை என வழங்கப்படுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நம்பகமான கருத்தும் இருக்கின்ற அதேவேளை இப்பெயர் ஆரிய சக்கரவர்திகளின் காலத்தில் இடம்பெற்றதாக வண்ணைதெய்வம் என்பவர் தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளர்.

"இது வேலணைத்தீவின் ஒரு பகுதியாகவும் ஆரியசக்கரவர்த்திகள்காலத்தில் யாழ்ப்பாண அரசு 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பிரிவு தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கி இருந்தது. ஊர்காவற்றுறையில் வீரசிங்கன் தலைமையில் நாற்படையும் வைக்கப்பட்டிருந்தன. ஊர்காவற்றுறை காவற்படைத் தளபதியாக நாராயணன் நியமிக்கப்பட்டான். அவனுக்கு கீழ் வேலன் என்பவன் தானர் தலைவனாக்கப்பட்டான். நாரயணன் தானையும் அவனது ஆட்சியும் நிலை பெற்றிருந்த இடம் நாரந்தனை எனவும் வேலன் தானை இருந்த இடம் வேலணை எனவும் வழங்கிவருகின்றன." (வண்ணை தெய்வம் 2001)

அதேவேளை "தோடை தோட்டம்" என்பது சிங்களத்தில் "நாராங்தெணிய" சிங்களத்தில் "நாராங்தெணிய" என்ற அடிப்படையில் வந்திருக்க வேண்டும் என யாழ்ப்பாண வைபவ கௌமுதியின் ஆசிரியர் க.வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார். சிங்கள மக்களின் இருப்பிடமாக இப்பிரதேசம் எக்காலத்திலும் இருந்ததற்கு ஆதாரம் இல்லாமையாலும் வண்ணை தெய்வம் அவர்களின் "யாழ்ப்பாணச் சரித்திரத்தினை" அடிப்படையாகக் கொண்டு கூறிய கருத்தின்படி அதுவே ஏற்புடையதாகலாம்.

மேலும் அ.சர்வநாதன் அவர்கள் வெடியரசனின் தம்பியான் வீரநாரயணனுக்கு நாரந்தனையில் நடுகல் வணக்கம் நீண்டகாலம் இருந்ததாகவும் "வீரன்கல்" என அது அழைக்கப் பெற்றதாகவும் காலனித்துவ காலத்தின் பின்னரே அந்தகல்லும் இடமும் அடையாளம் காண முடியாமல் போனதாகவும் குறிப்பிடுகின்றார்.

தற்போது நாரந்தனை எட்டாம் கட்டைக்கு அண்மையில் உள்ள யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் இருந்து தெற்குப்புறமாக செல்லும் வீதி "வீரன்கல் வீதி" என அழைக்கப்பெறுவதுடன் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பல காரணப் பெயர்களைக் கொண்ட சிறப்புக்குரிய பிரதேசமாக நாரந்தனை காணப்படுகின்றது.

நாரந்தனை என்பது நாரம், தனை என்ற இரண்டு சொற்களால் ஆனதாகும்.நாரம் நரந்தம் நாரங்கம், நாரத்தை என்பன தோடைமர வகைகளில் ஒன்றாகும். தனை, தானை என்பன இலங்கைத் தமிழ் வழக்காற்றில் இடத்தைக் குறிக்கும் நாரந்தனை என்பது பண்டைய காலத்தில் நாரம் மரம் இருந்த நிலையை அடையாளமாகக் காட்டப்பயன்பட்டு காலப்போக்கில் அதனைச் சூழ்ந்து அமைந்த குடியிருப்புகளுக்கான பெயராக மாறி பின்னர் கிராமத்தின் பெயராக உருவாகியிருக்கின்றது. நாரந்தனை, நாரந்தனை தெற்கு, நாரந்தனை வடக்கு, நாரந்தனை வட மேற்கு என கிராமசேவையாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது இப் பிரிவுகளில் இன்னும் சில குக்கிராமங்கள் காணப்படுகின்றன.

நாரைகள் குளிர்காலத்தில் அதிகளவில் இவ்விடத்தில் சேருவதனால் இப்பெயர் ஏற்பட்டது. நாரை என்பது நீர்ப்பறவையாகும். சங்க இலக்கியங்களில் இப்பறவை பற்றி குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

புளியங்கூடல் புளியமரங்கள் நிறைந்து கூடலாக காணப்பட்டதால் இக்கிராமத்திற்கு புளியங்கூடல் என்ற காரணப்பெயர் வந்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. முன்பு புளிய மரங்கள், நாவல் மரங்களும் நிறைந்து காணப்பட்ட இக்கிராமம் காலப்போக்கில் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமைக்கான அடையாளமே தெரியாமல் அருகி விட்டது.இக் கிராமம் கூடலூர் எனவும் செல்லமாக அழைக்கப்பட்டு வருகின்றது.

சுருவில் கிராமம் வளைந்த வில்வடிவில் இருப்பதால் சுருவில் என்று பெயர் பெற்றதாக வரலாறுகள் சொல்கின்றன. இந்த கிராமத்தில் பல செல்வந்தர்கள் இருந்தார்கள் என்ற காரணத்தால் "குட்டி அமெரிக்கா" என்றும் அண்மைக்காலமாக அழைத்து வருகின்றனர்.

சுருவிலில் சேறுகள் (சுரி) நிறைந்த குளங்கள் இருப்பதனாலும் சுருவில் என பெயர் வந்தது எனவும் கூறப்படுகின்றது. குமளந்தனை, சுருவில் குளம், வண்ணாங்குளம், வெள்ளக்குளம் எனும் நான்கு குளங்களைக் அழைக்கப்படுகின்றன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக கீதத்திலும் இக்கிராமங்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம் ஊர்.... எனத் தொடரும் அடிகளில் மூலம் இதனைக் கண்டு கொள்ளலாம்.

லைடன் தீவின் கிராமங்களைப் பற்றியொரு பாடல்

*ஊர்காவற்றுறை கரம்பொன்*
*சுருவில்*
*உற்றநாற் புளியங்கூடல்*
*நாரந்தனை*
*பேர்மிகு சரவணை, வேலணை*
*மண்கும்பான*
*பெருமை சொல்*
*மண்டைத்தாவல் லைப்பிட்டி*
*சேர்ந்தே லைடன் தீவெனும்*
*நிலமாம்* (கவிஞர் சக்தி அ.பால ஐயர்)

இவ்வாறாக இக் கிராமங்களுக்கு நாமங்கள் மருவி புதிய வடிவங்கள் உருவாகியுள்ளன. இவ் அடிப்படையில் பார்க்கின்ற போது ஒவ்வொரு காலப்பகுதியிலும் வாழ்ந்தவர்கள் தமது கலை கலாச்சாரங்கள், சமயங்கள் மற்றும் மொழிகளை பரப்புவதற்காகவும் வரலாற்றில் தடம்பதிப்பதற்காகவும் மீண்டெழும்பும் காலங்களில் உரிமை கோருவதற்காகவும் தமது காலப்பகுதியில் தமது மொழிநடைக்கு ஏற்ப நாமங்களை புனைந்துள்ளார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.


நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் லாம்பு

திரு. தோமாஸ் லலித்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.



எண்ணெய் லாம்பு காலங்களை
கடந்து வந்த பின்னும்
அந்த வெளிச்சம் விரட்டாத– "இருள்"
இன்றும் எம்முடனே வருகின்றது!

லாம்பு வெளிச்சத்தில் தெரியும்
அன்பின் "முகங்கள்"
இன்னுமிருக்கிறது என் கண்களுக்குள்
காலாவதியாகாமல்!

எண்ணெய் தீர்ந்து போனபோது
தீ கருகிய திரியின் வாசனை
"வடுவாய்"இருக்கிறது நாசியில்
அதை ஆற்றும் எண்ணமும் இல்லை!

இருட்டின் ஆக்ரோசத்தையும்
வெளிச்சத்தின் தார்ப்பரியத்தையும்
மனங்களின் "மதிப்பையும்"
உணர்த்தி போன காலங்கள் அவை!

மின்சார வெளிச்சம் பரவி–தேய்ந்த இருளில்
நான் விட்டு வந்த காலத்தின் இருள்கள் இன்னும் இருக்கின்றன!
இராத்திரியின் இருள்கள் மேல் ஒளியாய் எழுந்த லாம்புகள்
நம் வாழ்க்கை சுழற்சியின் "சூரியன்"


இரவு தாத்தாவின் வழித்துணைக்காக கொடுத்தனுப்பியது
அந்த இரு பொக்கிசங்களும் திரும்ப வரவில்லை
தாத்தாவோடு இறந்து போனது
"லாம்பும் அதன் வெளிச்சமும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறளும் எனது பார்வையும்



செல்வி ஹம்சிகா தவஞானச்செல்வம்,
கனிஸ்ட மென்பொருள் அபிவிருத்தியாளர்,
O 2 O Events.

அகிலம் போற்றும் மிக உயர்வான நூல்கள் மிகச் சிலவேயாயினும் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்ற திருக்குறள் இவற்றுள் முதன்மை பெறுகின்றது. வேதங்கள், ஆதி கிரந்த், குர்ஆன், திரிபீடகம், பகவத்கீதை, விவிலியம் என்பவற்றை இன்று உலகம் மிக உயர்வான நீதி நூல்களாக ஏற்றுக் கொண்டிருப்பினும் இவையாவும் மதம் சார்ந்தவையாகவே காணப்படு கின்றன. எனவே இவற்றைத் தவிர்த்து நோக்கும் போது திருக்குறள் ஒன்றேதான் காலத்தை வென்றும் நாடு, மொழி, இனம், மதம் என்ற வரையறைகளைக் கடந்தும் அறநெறி மற்றும் ஒழுக்க நெறி சார்ந்த நீதி நூலாகவும் பகுத்தறிவுப் பாதையில் நடைபோடும் நன்னெறி நூலாகவும் மிளிர்கின்றது. இந்நிலையில் மானுட வாழ்வில் அறநெறியும் ஒழுக்க நெறியும் சார்ந்த செயற் பாட்டை வலியுறுத்துவதுடன் அன்பு, ஒழுக்கம், அறம் என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு மானுடத்தை உலகில் வாழ்விக்க எழுந்த வாழ்வியல் நூலான திருக்குறளானது பெண்ணடிமை, பெண்இழிவு, சாதியப்பகுப்பு, கருத்துமுதற்கோட்பாடு போன்றவற்றை மறுத்துரைத்துப் புரட்சி செய்வதனையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்நிலையில் குறட்பாக்கள் மூலம் வள்ளுவர் கூற வந்த செய்தியானது இதுவரையில் திருக்குறளுக்கு காணப்பட்ட தெளிவுரைகள் மூலம் பூரணத்துமடைந்ததா என்பது பற்றிய மிகச் சிறியளவிலான தேடலே இப்பத்தியின் நோக்கமாகும்.

தருமர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் உட்பட சுமார் இருநூற்று எழுபதுக்கும் மேற்பட்டோர் திருக்குறளுக்கு இதுவரையில் உரைகண்டிருப்பினும், கலைஞர் மு. கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், பாவாணர், புலவர் குழந்தை, பாரதிதாசன், வ.சு.ப மாணிக்கம், மு.வரதராசனார், போன்றோர் கண்ட உரைகளே குறிப்பிடத்தக்கவையாகக் கொள்ளப்படுகின்றன. திருக்குறளுக்கு உரைகண்டவர்கள் தத்தமது மதம் சார்ந்தும், தத்தமது கொள்கைகள் சார்ந்தும், அவர்கள் வாழும் காலத்திற்கும் ஏற்பவுமே உரை கண்டிருப்பதனை குறள் மீதான ஒவ்வொருவரதும் தெளிவுரைகளை அல்லது விளக்கவுரைகளை கருத்தூன்றி வாசிப்பதன் மூலமும், ஒவ்வொன்றுடனும் ஒப்பீடு செய்வதன் மூலமும் நன்கு புரிந்து கொள்ள முடியும். திருக்குறளுக்கான சிறந்த தெளிவுரையாகப் பலராலும் போற்றப்படுகின்ற பரிமேலழகரது உரையை நோக்கும் போது, அவர் வாழ்ந்த 12ம் அல்லது 13ம் நூற்றாண்டு கால தென்னிந்தியச் சூழலுக்கும் அவர் சார்ந்த மதக் கருத்துக்கட்கும் ஏற்பவே அவரது தெளிவுரை அமைந்திருப்பதனைக் காண முடிகின்றது. இருப்பினும் திருக்குறளை அதிகாரங்களாகவும், முப்பாலாகவும் ஒழுங்குபடுத்தியமையும் அவற்றிற்குப் பொருத்தமான தலைப்புகளைக் கொடுத்துப் பெரும் பங்காற்றியமையும் பரிமேலழகருக்கே உரிய தெனினும் அவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிடப்பட்ட கடவுள்வாழ்த்து அல்லது இறைவணக்கம் என்பதும் பரிமேலழகரது கருத்தாகவே காணமுடிகின்றது.

திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேழலகர் பற்றி .....

*தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்*
*பரிலேழகர் பருதி - திருமலையார்*
*மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர்*
*வள்ளுவர் நூற்கெல்லை யுரை செய்தார் இவர்*

என்றும்

*பாலெல்லாம் நல்ஆவின் பாலாமோ*
*- பாரிலுள்ள*
*நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமே*
*- நூலிற்*
*பரித்தவுரையெல்லாம் பரிமேலழகன்*
*தெளித்தவுரை யாமோ தெளி*

எனவும்

தொண்டை மண்டலச் சதகம் கூறுவதிலிருந்து அவரது திருக்குறளுக்கான தெளிவுரையின் சிறப்பும் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் ஆற்றலும் புலப்படுவதாயினும் குறளுக்கு இவர் கண்ட தெளிவுரையானதும் பரிமேலழகரது இறை நம்பிக்கை சார்ந்த பார்வையாகவே காணப்ப டுவதனை அவதானிக்க முடிகிறது.

ஏனெனில் அறம், ஒழுக்கம் மற்றும் வாழ்வியலுக்கான நீதி பற்றி கூற வந்த வள்ளுவர் தனது குறட்பாக்களில் கடவுளை வலியுறுத்துவதனை எங்கும் காண முடியவில்லை. "தெய்வம் தொழார்"...., "தெய்வத்தால் ஆகாதெனினும்"...., போன்ற ஒரு சில குறட்பாக்களின் தொடக்கத்தை நோக்கும் போதே அவர் தெய்வ நம்பிக்கையினை உடைப்பவராக ஓர் பகுத்தறிவாளராகவே தன்னை வெளிக் காட்டுகின்றார். மேலும் அவரது குறட்பாக்களில் காணப்படும் தெய்வம் என்ற பதத்தைக் கூட மனிதன் ஒழுக்கம், அறம் மற்றும் நீதி சார்ந்து வாழும் போது அம் மனிதருக்கே வழங்குகின்றார். "வையத்துள் வாழ்வாங்கு..." எனும் குறள் இதனைத் தெளிவாகப் புரிய வைக்கின்றது.

திருக்குறளில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் காணப்படுவதால் இது சைவ சமயம் சார்ந்த நூலென்றும், வைணவர்கள் தமது சமய நூலென்றும், ஜைனதீர்த்தங்கர் மாவீரரின் கொள்கைகள் காணப்படுவதால் இது ஜைன மத நூலென்றும் (திருக்குறள் - ஜைன உரை என்ற நூலும் காணப்படுகின்றது), கிறிஸ்தவமதம் சார்ந்த புலவர் தெய்வநாயகம் என்பவர் திருவள்ளுவர் கிறிஸ்தவர் என்றும் கூறி ஒவ்வொருவரும் தத்தமது சமய முலாமிட முனைவதுடன் சைவர்கள் வள்ளுவ நாயனார் எனப் பெயர் சூட்டி அவரை நாயன் மார்களுள் ஒருவராக கொண்டாடி வருவதும் கூட பகுத்தறிவுடன், அறநெறி மற்றும் ஒழுக்க நெறி சார்ந்த மானிட வாழ்வியலுக்கான நூல் தந்த திருவள்ளுவரை அவர் கொள்கையிலும் வழிகாட்டலிலும் நின்று விலகி மதச்சாயம் பூசி அவரை குறுகிய வட்டத்துள் அடைப்பதாகவே கருதமுடிகின்றது. எனவே தான் இவையாவற்றுக்குள்ளும் திருக்குறளை எல்லைப்படுத்தி விடாது திருக்குறளை அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியே விட்டு விடுவதும் திருக்குறளுக்கான தெளிவுரையை மதக் கண்ணோட்டத்துடன் நோக்காது பகுத்தறிவு கொண்டு உரை காண்பதுவுமே சிறப்பானதாகும். வள்ளுவர் திருக்குறளை எழுதத் தூண்டிய வாழ்வியல் சூழ்நிலைகள் என்ன?, அகப் புறக் காரணிகள் எவை? குறட்பாக்கள் எழுந்தமையின் இலக்குத் தான் யாது?, இது தமிழர் வாழ்வியலுக்கும் மற்றும் விழுமியங்கட்கும் ஏற்புடையதாய் அமைகின்றதா? என்பன போன்ற வினாக்களுடன் வள்ளுவர் வாழ்ந்த கால சூழ் நிலைகளையும் ஆய்வு செய்வதன் மூலமே திருக்குறளுக்கான மிகச் சரியான விளக்கவு ரைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவே இவற்றை கருத்திற் கொண்டு விளக்கவுரை அல்லது தெளிவுரை காண்பதே திருக்குறளுக்கான உண்மையானதும் பொருத்தமானதும் வள்ளுவரது சரியான கருத்துக்களை தருவதுமான தெளிவுரையாக அமையும்.

திருக்குறளின் அனைத்துக் குறட்பாக்களையும் நுணுகி ஆராய்வதன் மூலமே வள்ளுவரது அகமன நிலையையும் புரிந்து கொள்ள முடியும். அவர் வாழ்ந்த கால அதாவது சமகால வேளிர்கள், குறுநில மன்னர்கள் மற்றும் மூவேந்தர்களிடையே ஏற்பட்ட பொறாமைகளும் ஆதிக்கப் போட்டிகளும் போர்களும் அதற்கான சூழல்களும் அதனால் உருவான இன அழிவும், விவசாய, கால்நடை அழிவுகளதும் மற்றும் அதனால் எழுந்த பொருளாதார அழிவுகளும் அதனூடான ஏழ்மைநிலைகளும், பரத்தமை போன்றவைகள் ஒரு புறமும் ஆரியரின் வருணாச்சிரமக் கோட்பாடுகளும், அவர்களின் மதம் மற்றும் கடவுள் சார்ந்த ஏமாற்றுக்கள், பொய்ப்பித்தலாட்டங்கள், கயமைத்தனமான போலியான மந்திர தந்திர, மற்றும் சமயச் சடங்குகளும், வட மொழிதான் தேவபாஷை என்ற புரட்டும் ஆரியரைவிட மற்றவர் இழிவானவர்கள் என்ற புனைவுகளும் தென்னிந்தியரிடையே பரவுதலைத் தடுக்க வேண்டிய தேவைகள் மறுபுறமும் காணப்பட்டமையுமே திருக்குறள் எழுந்தமைக்கான பிரதான நோக்கம் எனத் துணியலாம். இயற்கையை நேசிப்பதும் அதனுடன் இணைந்து வாழ்வதும், உழுது பயிரிட்டு பசிப்பிணி அகற்றி வாழ்தலுடன் அறமும் அது சார்ந்த ஒழுக்க நெறியுடன் மனிதன் வையகத்தில் வாழ, வாழ்விற்கு வழிவகுக்கும் நீதிக் கருத்துக்களை உரத்துக் கூறி நிற்கும் குறளானது. அதன்படி நடக்கும் ஒழுகும் மனிதனை மற்றும் அறிஞனை தெய்வம் எனவும் அத்தகைய மனிதர்களை பிற மனிதர்கள் போற்றுவதும் மதிப்பதும் புகழ்வதுமே தொழுதல் அல்லது வணங்குதல் எனவும் பொருள் கொள்கின்றது அல்லது சுட்டி நிற்கின்றது என்பதனை சந்தேகமின்றிப் புரிந்துகொள்ள முடியும்.

வள்ளுவரது குறட்பாக்கள் அனைத்துக்கும் விளக்கவுரையோ தெளிவுரையோ எழுதுவதும் ஏனையோர் கண்ட குறளுக்கான உரைகள் மீது குறை காண்பதும் இப்பத்தியின் நோக்கமல்ல என்பதனையும் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டும் வேளையில் இங்கு ஒரு சில குறட்பாக்களுக்கான கருத்தினை எனது நோக்கில் தருவதன் மூலம் வள்ளுவரது கருத்தும் இதுவாகத்தான் இருக்கமுடியும் என்பதே எனது நம்பிக்கையாகும் எனவே சில குறட்பாக் களுக்கான எனது பார்வையும் இங்கு தரப்படுகின்றது. மேலும் கல்விப் புலமையுள்ளோர் மற்றும் அறிஞர்கள் திருக்குறளை நடுநிலை நின்று ஆய்வு செய்து அதற்கான தெளிவுரையை தர வேண்டும் என்பதும் எனது பணிவான ஆவலான எதிர்பார்ப்பாகும் இதுவே தமிழ் கூறும் நல்லுலகுக்கும் மானிட சமூகத்துக்கும் இன்று அவசியமானதும் தேவையானதுமாகும்.

1. *கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்*
   *நற்றாள் தொழாஅர் எனின் (02)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இறை வணக்கம் - தன்நிகரில்லாத் தலைவனை வணங்குதல்)

வாலறிவன் - ஆசிரியன், குரு, அறிஞன்

தொளா - மதிக்காத, போற்றாத, செவிமடுக்காத

ஒருவன் அறிவிற் சிறந்த தனது ஆசிரியனை அல்லது குருவை சமுதாயம் போற்றும் அறிஞனை மதியாது, போற்றாது அல்லது அவனது அறிவுரைகளைக் கேட்டு நடக்காது விட்டால் அவன் கல்வி கற்றதனால் பயன் ஏதும் இல்லை என்பதாம். ஏனெனில் தனது ஆசிரியனை மதிக்காதவன் எவனையும் மதிக்கமாட்டாதவனாவான் எனவே அவனையும் வேறு எவரும் மதிக்க மாட்டார்கள். ஆகவே அவனது கல்வியால் அவனுக்கும் சமுதாயத்தும், உலகுக்கும் கூட பயன் விளையாது எனப் பொருள் கொள்ள முடியும்.

2. *தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
   *பெய்யெனப் பெய்யும் மழை (55)*

(வாழ்க்கைத் துணைநலம் - மனைவியின் சிறப்பியல்புகள்)

தொழுமெழுவாள் - மதிப்பவள், போற்றுபவள் - (ஆனால் அடி பணிபவள் எனும் பொருள் தராது).

இறைவனை வணங்காதவள் பகுத்தறிவுப் பெண்ணாகவே காணப்படுவாள். அத்தகைய ஓர் பெண் தனது கணவனை தனது அறிவின் காரணமாக மதித்து அவனுக்கு தான் வாழ்க்கைத் துணையானவள் என்ற ரீதியில் அவனது தேவைகளை நன்குணர்ந்து அதன்படி நடப்பதுடன் அவனது குணவியல்புகளையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அவதானித்து அதற்கேற்றபடி நடந்து கொள்பவளாகவும் இருப்பாள். அவளால் கணவனது தேவைகளை அவனது குறிப்பறிந்து நடக்க முடிவதனைப் போலவே தான் வாழும் சூழலையும் நன்கு அவதானிக்கும் ஆற்றலும் அறிவும் உடையவளாகவே இருப்பாள். எனவே அவள் தனது அறிவின் காரணமாகவும் அநுபவ அறிவின் காரணமாகவும். தனது சூழலையும் காலநிலையையும் கூட நன்கு அவதானிக்கக் கூடியவளாக இருப்பாள். ஆகவே மழை பெய்யக் கூடிய நிலைமைகள் தோன்றக் கூடிய காலநிலை, சூழல் மற்றும் அதற்கிசைவான உயிரினங்களின் நடத்தைக்கோலங்களையும் நன்கு அவதானித்து இன்று மழை பெய்யும் என தனது பகுத்தறிவின் காரணமாக அனுமானித்து அப் பெண் மழைவரும் எனக்கூறினால் மழை பெய்யும் என்பதே அதன் பொருளாகும்.

3. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
   *நிற்க அதற்குத் தக (39)*

(கல்வி - கற்றலின் சிறப்பு)

"கல்வி கரையில கற்பவை நாட் சில" என்பது ஆன்றோர் வாக்காகும். அதே போன்று நாமும் கற்கும் கல்வி என்பது மிகவும் குறைவானது சிறியது தான் நமது ஆயுட் காலத்துக்குள் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளவும் முடியாது இவ் உண்மை நிலையில் தான் நாம் கற்கும் கல்வியினை அத் துறை சார்ந்து அதனை ஐயந்திரிபறக் கற்க வேண்டும். அதே போன்று கற்ற கல்வியின் துறைசார் அறிவுக்கு ஏற்ப அத்துறைசார்ந்தே பணிபுரிந்து தான் கற்ற கல்வியின் மூலம் உலக மானுட சமூகத்துக்கு பயன்தர வேண்டும் என்று பொருள் கொள்ளலாம். இன்று அரச, மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் வழங்கும் போது அவ்வவ் துறைகளுக்கு பொருத்தமல்லாத அதாவது வேறு துறைகளில் கல்வி கற்றவர்களை அவர்களுக்கு சம்பந்தமில்லாத வேறு துறைகளில் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதனையும் ஈண்டு நோக்குதல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
*எல்லா உயிருந் தொழும். (260)*
(புலால் மறுத்தல் - புலால் உணவைத் தவிர்த்தல்)

தனது உணவுக்காக பிற உயிரினங்களைக் கொல்லாதவனை உலக மானுட சமூகம் போற்றும், வாழ்த்தும் மதிப்பளிக்கும் என்பதாகப் பொருள் கொள்ள முடியும். அதாவது தனது உணவுக்காக உயிரினங்களைக் கொல்லாதவன், புலால் உணவைத் தவிர்ப்பவன் ஜீவகாருண்யம் மிக்கவனாகக் காணப்படுவான். எனவே அவன் பிற உயிர்களை நேசிப்பது போன்றே சக மனித உயிர்களையும் நேசிப்பான். எனவே அவனால் மனித சமூகத்துக்கு கேடு விளைவிக்கவோ மனித உயிர்களைக் கொலை புரியவோ முடியாது. அவன் அனைவருடனுடம் அன்பாகவே நடந்து கொள்வான். எனவே அவனால் ஒருபோதும் தங்கட்கு துன்பம் வராது என்பதனை உணர்வர் அதனால் அனைவரும் அவனுடன் பகையின்றி அன்புடனும் நட்புடனும் அவனை மதித்துப் போற்றி வாழ்வார்கள் என்று பொருள்படும்.

5. *தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (619)*
(ஆள்வினையுடைமை - விடாமுயற்சி)

விடாமுயற்சியுடன் கடினமாக உழைக்கும் போது தான் அம்முயற்சிக்கு பலன் கிடைக்கும். தெய்வத்தால் அல்ல என்று பொருள் கொள்ளலாம். எனவே வீணாக கடவுளை வேண்டுவதால் எவ்வித பயனுமில்லை. உடலை வருத்தி வேலை செய்வதே பயன்தரும் என்று கொள்ளப்படும்.

6. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)*
( இல் வாழ்க்கை)

உலகில் வாழும்போது மானுடத்தை நேசிக்கும் மாந்தனாக அறநெறி மற்றும் ஒழுக்கநெறி ஆகியவை சார்ந்து வாழ்பவனையே வானுறையும் தெய்வமாக கருதலாம், அதனைவிடுத்து தெய்வம் என்பது வேறு ஒன்றல்ல என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட ஒரு சில குறட்பாக்களை இங்கு நாம் நுணுகி ஆராயும் போதே வள்ளுவரது அறம், ஒழுக்கம், பண்பு மற்றும் பகுத்தறிவு சார்ந்த மானுட வாழ்வியலுக்கான நெறிகளை நுகர முடியும் போது, குறட்பாக்கள் அனைத்தையும் ஆழமாக ஆய்வு செய்வதன் மூலம் திருக்குறளுக்கான பொருத்தமான விளக்கவுரைகளை இத்துறை சார்ந்த புலமையினோர் வெளிக் கொணர முடியும் என்பதே என எதிர்பார்ப்பாகின்றது.

"வள்ளும் என்னும் குறள் அமிர்தம் - அதை
யாவர் செவிகளும் நுகர்ந்திடட்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா,
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதே செயலகம், ஊர்காவற்றுறை.


# பெண்ணினமே விழித்தெழு!

அன்பான அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து
அன்புள்ளம் படைத்த உயிர்போன்ற பெண்ணினமே!
விண்ணிலும் வீட்டிலும் விந்தைகள் புரியும்
உமக்கேன் இன்னமும் விடிவில்லை?

மணமகனைத் தேட நாற்றிசையும் அலைவர்
பொறுப்புள்ள தந்தையர்– ஆனால்
மாப்பிள்ளை வீட்டாரோ பெண் பார்க்க வந்து
வெறுங்கையை விரிப்பர்!

பெண்ணுக்கு அழகிருந்தும் பொறுமை நன்கிருந்தும்
பொன்னும் பொருளும் கொடுப்பது போதவில்லை
மாடிமனையும் சீதனமாகக் கொடுக்கவில்லை
என்று சொல்வர் மாப்பிள்ளை வீட்டார்!

பெண்ணொன்று எடுப்பதென்றால் தலை முதல் கால் வரை
அலங்கரிக்கும் பொன் வெள்ளி இத்தோடு
சுகபோகமாக வாழ இலட்சங்கள் பலவும்
கூசாது கேட்பார் மாப்பிள்ளை வீட்டார்!

பெண் பெற்ற தந்தையர் இவை பெற்றுச் சீதனமாய்
பெண்ணுக்குக் கொடுப்பதற்கு எங்குதான் செல்வாரோ?
பெண்பிள்ளை பெற்றது பெரும்பாவம் என்று
பெற்றவர்கள் அழுதழுது உயிரை மாய்ப்பாரோ?

சீதனம் வாங்கிப் பெண்ணை மணந்தவர்கள்
சுகபோக வாழ்வாலே மதுவெனும் அரக்கனுக்கு
அடிமையாகி அதில் தினம் குளித்து
மனைவியர்க்கு ஆக்கினைகள் செய்கின்றார்!

அவனே தெய்வமென்று எள்ளளவும் துன்பத்தை
மனதில் எடுத்துக்கொள்ளாது உயிருள்ளவரை
கொண்டவனுக்கு அடிமையாய் பொறுப்புடன் வாழ்கின்றாள்
அன்னைக்கொரு மாற்றென்று சொன்ன மனைவி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனோ பெண்ணை அடிமையாய் படைக்கவில்லை
ஆணுக்கு அடங்கி வாழ வேதம் உரைக்கவில்லை
ஆணும் பெண்ணும் சமமாகி மண்ணில்
சரிதங்கள் படைக்கும்படி இருவரையும் படைத்தான்!

சொத்துடைமைச் சமுதாயம் பெண்ணடிமை பேசி
தப்பிழைத்தால் அவளுக்கு வைத்த பெயர் வேசி!
ஆணுக்கும் மேலான அதிசயங்கள் படைக்கும்
பெண்ணினமே விழித்தெழு வானகமும் வாழ்த்தும்!

## கலாசாரப் பேரவைச் சின்னம் பற்றிய விளக்கம்

நீண்டகாலத்தின் பின்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசாரப் பேரவைச் சின்னமானது இன்று பிரதேச கலைஞர்களின் ஏகமனதான விருப்புக்களைப் பெற்று வெளியிடப்படுகின்றது.

இச்சின்னமானது இப்பிரதேசத்தின் பௌதீக, பண்பாட்டு அம்சங்களையும் மரபுரிமைசார் அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. எல்லா உயிர்களின் இயக்கத்திற்கு முதலானதும், காலச்சக்கரத்தை தீர்மானிப்பதுமான சூரிய, சந்திர அடையாளங்கள் ஒன்றிற்குள் ஒன்றாகக் காணப்படுகின்றன. நெடும் பனைமரமானது இப்பிரதேசத்தின் பனை வளத்தினையும், மண்ணின் மைந்தர்களின் மன உறுதியையும் பிரதிபலிக்கின்றது. இத்தீவின் கடல் வளத்தை கடல் அலையும், விவசாயத்தை நெற்கதிர்களும் அடையாளப்படுத்துகின்றன. பாய்மரக் கப்பலும், படகோட்டியும் கடல் வணிகத்தில் இப் பிரதேசம் வகித்த கேந்திர முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது.

மேலும், இப்பிரதேசத்தின் கலை, பண்பாட்டின் அடையாளங்களாகக் கூத்துக் கலைஞனின் ஒப்பனை முகம் பாரம்பரியக் கூத்துக்களையும் ஸ, ரி, க, ம என்ற சுரவரிசை தாளம், உடுக்கை, மத்தளம் என்பன சங்கீதம், நடனம் உள்ளிட்ட கவின் கலைகளையும் பிரதிபலிக்கின்றன. பின்னணியில் வட்டத்தின் மையத்தில் வெள்ளை நிறத்தில் ஆரம்பித்து ஆரையில் இளம் நீல நிறத்தில் கலக்கிறது. இது பரந்து விரிந்த வானத்தை அடையாளமாகவும் உள்ளுறையாக கலையின் வியாபகத் தன்மையையும் காட்டுகின்றது. அதற்கும் மேலாக தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை - ஊர்காவற்றுறை என்ற பெயரையும் தாங்கிய இப் பேரவைச் சின்னத்தை வெளியிடுவதில் ஊர்காவற்றுறை கலாசாரப் பேரவை பெரு மகிழ்வடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஜெயக்குமாரின் வாழ்வும் கலைப்பணிகளும்



திரு. பொன். சந்திரவேல், M.A, Dip. in Edu, Dip. in counseling,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

யாழ். மாவட்டத்திலுள்ள தீவகம் வடக்குப் பிரதேசத்தின் கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டு வளர்ச்சிக்கு காலத்திற்கு காலம் பல கலைஞர்கள் தோன்றி அரும்பெரும் சேவைகளை யாற்றியுள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகளினால் இப்பிரதேசம் பாரம்பரிய கலைகளுக்குரிய சிறப்பான இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர்கள் பூலோக பிரமாக்கள் அவர்கள் உருவாக்கப்படுவதில்லை, பிறக்கின்றார்கள். தமக்கென வாழாது கலைக்காக வாழ்ந்து வரலாற்றில் தடம்பதிக்கின்றார்கள். அத்தகைய சிறப்பு மிகு கலைஞர்கள் வரிசையில் அமரர் கூத்துக்கலைஞர் கனகசுந்தரம் ஜெயக்குமார் அவர்களும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒருவர். தம்பாட்டிக்குரிய தனித்துவமான கலைப்பாணியை தேசிய ரீதியில் வெளிப்படுத்திய அமரர் ஜெயக்குமார் அவர்களின் வாழ்வும் கலைப்பணிகளும் குறித்த பதிவினை ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தம்பாட்டிக் கிராமம்

ஈழமணித்திருநாட்டின் வடபால் விளங்கும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் தென்மேற்கே அமைந்து விளங்குகிறது தீவகம். இத்தீவகத்தின் வடதிசையில் கடலும் கமுழமென வளம் கொழிக்கும் பூமியாக விளங்குவது ஊர்காவற்றுறை பிரதேசம். இக்காவலூரின் வடகிழக்குத் திசையில் அமைந்ததே தம்பாட்டிக்கிராமம். இக்கிராமத்தின் வடக்கு மற்றும் மேற்குத் திசைகள் கடலால் சூழப்பட்டுள்ளன. அருள்மிகு நுனிபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை நிலைக்களமாகக் கொண்டு இங்கு சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் நிறைவாகப் பேணப்பட்டு வருகின்றன. சமயமும், கலையும் இக்கிராம மக்களின் வாழ்வியலோடு இணைந்தது. கடற்தொழிலையும், விவசாயத்தையும் ஜீவனோபாயமாகக் கொண்ட இக்கிராம மக்கள் தமது ஓய்வு நேரங்களில் உள்ளத்துணர்வின் மகிழ்ச்சியைத் துள்ளிக்குதித்துக் கூத்தாடி வெளிப்படுத்தினர். வாழ்வின் பல்வேறு அனுபவங்களைக் கூத்தினூடாக வெளிப்படுத்தினர். இன்றும் பல கலைகளால் இம்மண்ணின் பெருமையை உலகறியச் செய்தவண்ணம் உள்ளனர்.

## பிறப்பும் இளமைக் காலமும்

அமரர் கனகசுந்தரம் ஜெயக்குமார் அவர்கள் 1968.08.13ம் திகதி பிறந்தார். கனகசுந்தரம் பூமலர் தம்பதியரின் இளைய மகனாக இவர் இப்பூவுலகில் அவதரித்தார். இவர் பெற்றோரின் செல்லப்பிள்ளையாக இருந்தமையால் செல்வம் என அழைக்கப்பட்டார். கருவிலேயே திருவுடையவராக கல்விப்புலமையும் கலையாற்றலும் கொண்டிருந்த இவரை பெற்றோர் தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்விக்காகச் சேர்த்தனர். இடைநிலைக்கல்வியை நாரந்தனை கணேசா வித்தியாலயத்தில் கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது பள்ளிப்பருவத்திலே சிறந்த பேச்சாற்றலும் நடிப்புத்திறமையும் மிக்கவராக விளங்கினார். பலரது கவனத்தையும் தன்பால் ஈர்த்தார். நகைச்சுவையாக நடிப்பதிலும் வல்லவர். கவிதை எழுதும் ஆற்றலையும் இளமையில் இருந்தே வளர்த்துக் கொண்டார். இளமைக் காலத்தில் தந்தை இறந்துவிட, குடும்பப்பொறுப்பைத் தானே ஏற்றவர். ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வேலைவாய்ப்பைப் பெற்று, அவ்வருமானத்தைக் கொண்டு குடும்பச் செலவை ஈடுசெய்தார்.

## இல்லற வாழ்வு

அமரர் ஜெயக்குமார் அவர்கள் திருமண வயதை அடைந்த போத அராலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த சீவரத்தினம் செல்லமுத்து தம்பதியினரின் இளைய மகளான கங்காராணியை கரம்பற்றிக் கொண்டார். இவர்கள் இருவரும் இணைந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தியதன் பயனாக பிரதீகா, பிறேமினா, சர்ப்பகேசன், அறிவாளன் என்னும் நான்கு புத்திரர்களையும் பெற்றனர். தந்தையின் கலையுணர்வும் வழிகாட்டலும் பிள்ளைகளையும் கலையின் பால் ஈர்த்தன. இதனால் இவரது பிள்ளைகள் பாடசாலை, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசில்கள் பெற்றனர்.

## கலைப்பணி

அமரர் ஜெயக்குமார் அவர்கள் தனது அறிவு, ஆற்றல், ஆளுமையைக் கொண்டு சமூக, சமய, கலை, இலக்கியப்பணிகளை ஆற்றினார். அவற்றுள் அவரது கலைப்பணிகள் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதாகும். கூத்து கலையுணர்வையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினார். தான் எடுத்துக் கொண்ட பாத்திரத்தில் முழுமையாக ஆழ்ந்துபோய் ஆற்றுகையை வெளிப்படுத்துகின்ற தன்மை அவருக்குத் தனித்துவமானதாகும். கலை கலைக்காக அல்ல அது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தது. வாழ்க்கை வேறு, கலை வேறு அல்ல. வாழ்வோடு இணைந்ததே கலைகள் என்பதை தனது வாழ்வியல் அனுபவத்தின் ஊடாக உணர்த்தியவர்.

தம்பாட்டி காந்திஜி நாடகமன்றத்தைத் தளமாக கொண்டு பல கலைப்பணிகளை நீண்டகால நோக்கோடு முன்வைத்தவர். இக்கிராமத்தில் உள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு கலையுணர்வை ஊட்டினார். அவர்களும் கலை வளம் பெற்று ஏனைய மாவட்ட மாணவர்களுடன் போட்டியிட்டு மாவட்ட, மாகாண, தேசிய மட்டம் வரை சென்று சாதனைகள் படைத்தனர். தம்பாட்டிக் கிராமத்திற்கும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்தனர்.

கூத்துக்கலையினுடைய நுட்பங்கள் பலவற்றை அறிந்திருந்த அமரர் ஜெயக்குமார், தம்பாட்டி ஓர் கலைக்கிராமம் என்பதைத் தனது கலையாற்றலாலும் ஆளுமையாலும் வெளிப்படுத்தினார். ஊர்காவற்றுறை பிரதேச யாழ் மாவட்ட கலாசார பேரவை, கலாசார அதிகார சபை என்பவற்றின் செயற்குழுவில் அங்கம் வகித்த இவர், அவற்றைத்தளமாகக் கொண்டு தமிழர்களின் கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தவர். காந்திஜி நாடகமன்றத்தின் செயலாளராக, தலைவராக இருந்து தம்பாட்டிக்குரிய தனித்துவமான கலைவடிவத்தைத் தம்பாட்டியின் கலைமாணி என்று ஏனைய பிரதேசத்தவர்கள் கூறுமளவிற்குத் தனது ஆற்றுகைகளை வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் சிவன், சின்னான் போன்ற பாத்திரங்களிலும், அதியரசன் வடமோடிக் கூத்தில் மந்திரியாகவும் அரிச்சந்திர மயான காண்டத்தில் காலகண்ட வேதியராகவும், பண்டார வன்னியன் தென்மோடிக் கூத்தில் வெள்ளைக்காரத்துரையாகவும் நடித்துள்ளார். இராஜராஜசோழன் போன்ற கூத்துக்களிலும் பல பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். கூத்துத்துறையில் தேர்ச்சி பெற்றமையால் "கூத்துகலையரசு" என்ற விருதையும் பெற்றார்.

தனது எழுத்துத் திறமையாலும் படைப்பாற்றலாலும் பல நாடகங்களை எழுதி இயக்கினார். சிவந்தமண், குடிக்காதே, வணங்காமுடி, U.K மாப்பிள்ளை, சுமைதாங்கிகள், வாழ்வு வளம் பெறும் போன்ற நாடகங்கள் இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன.

## சிறந்த நிர்வாகி

அமரர் ஜெயக்குமார் அவர்கள் சிறந்த நிர்வாகியாகவும் செயற்பட்டவர். ஆலய, சமூக, கலை அமைப்புக்களில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுத் திறமையுடன் செயற்பட்டவர். தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக செயற்பட்டவர். தம்பாட்டி காந்திஜி நாடக மன்றத்தின் தலைவராக, செயலாளராக இருந்து கலை வளர்ச்சியை ஏற்படுத்தியவர். தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்தின் ஆலோசகராக இருந்து விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். தம்பாட்டி கிராமிய கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவினார்.

தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையின் உபதலைவராகவும், தீவகம் வடக்கு கலாசார அதிகாரசபையின் செயலாளராகவும் இருந்து கலைப்பணிகள் பல புரிந்தவர். யாழ் மாவட்ட, கலை கலாசார பேரவையின் யாழ். மாவட்ட கலாசார அதிகாரசபை என்பவற்றின் செயற்குழு உறுப்பினராக இருந்து நல்லபல ஆலோசனைகளை வழங்கிச் சேவைகள் செய்தவர். இடம் பெயர்ந்து வன்னியில் வசித்த காலப்பகுதியில் பல கலை அமைப்புக்களிலும் அங்கம் வகித்தவர். அக்காலப்பகுதியில் எத்தனையோ கலை நிகழ்வுகளைத் தலைமைதாங்கி நடாத்தி வெற்றி கண்டவர்.

இவ்வாறாக கலையுலகில் சிறந்த கூத்துக்கலைஞனாக நாடக, நடிகனாக, நெறியாளனாக, ஒருங்கிணைப்பாளனாக கலைத்துறைப் பன்முகவகிபாகம் கொண்ட இவரின் கலைப்பணிகளை எழுத்துக்களில் அடக்கி விடமுடியாது. கலைத்துறை சார்ந்த விருதுகளைத்தான் பெறவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டாது தனது கலைஞர் கூட்டம் பெறுவதையே விரும்பினார். கலாபூணம், யாழ்முத்து, கலைவிழுது போன்ற அரச விருதுகளைப் பொருத்தமான கலைஞர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் திருப்தி பெற்றவர். கலை வளம் பெறவேண்டும் என்பதற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். அன்னாரின் இழப்பு அவரின் உறவுகளுக்கு மட்டுமன்றி, கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். இருந்தும், அவரின் கலைப்பணிகளை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்பதே நாம் அவருக்குச் செய்யும் உயர்ந்த அஞ்சலியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கச்சதீவு :
# ஒரு மீள்பார்வை

செல்வி ரோஜின் ஹர்ஷனி, N. வரதராஜன்,
கணினி மென்பொருள் பொறியியல் பீடம்,
இறுதியாண்டு - SLIIT

இந்து மகா சமுத்திரத்தின் தென்னாசிய நாடுகளாகவும் அதேசமயம் அயல் நாடுகளாகவும் காணப்படுகின்ற இந்தியாவையும் இலங்கையையும் அதிலும் குறிப்பாக தொப்பூழ்கொடி உறவு என விசேடமாகக் குறிப்பிடப்படுகின்ற, மொழி ரீதியாகவும் மற்றும் கலாசார ரீதியாகவும் ஒன்றுபடுகின்ற தமிழர் வாழ்விடங்களான தமிழகத்தையும் ஈழத்தின் வட பிராந்தியத்தையும் பிரிக்கின்ற பாக்குநீரிணையின் மையப்பகுதியில் ஜலசந்தியில் அமைந்திருக்கின்ற மிகச்சிறிய தீவே கச்சதீவு. இத்தீவானது இவ்விரு நாடுகளிடையேயும் குறிப்பாக, இவ்விரு தமிழ்ப்பிரதேச மீனவர்களிடையேயும் முரண்பாடுகளையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்திருப்பதுடன், சுமார் 60 வருடகால பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் இன்றும் சர்வதேச ரீதியிலும் பேசுபொருளாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் இக் கச்சதீவின் உண்மை வரலாற்றையும் பிரச்சினையையும் ஒரு மீள்பார்வை செய்வதே இப்பத்தியின் நோக்கமாகும். எனினும், கச்சதீவானது இலங்கைக்குச் சொந்தமானதா அல்லது இந்தியாவுக்கு சொந்தமானதா என்பதனை நிரூபிக்கும் வகையிலான நோக்கத்தை இது கொண்டிருக்க வில்லை.

### தீவுகள்

ஈழத்தின் வடபாகத்தில் அமைந்துள்ள யாழ். குடாநாட்டை அண்மித்தும் கடல் இடைக் குறைகளாகவும் காணப்படும் தீவுக் கூட்டங்களை பொதுவாக தீவகம் என அழைப்பினும், ஒவ்வொரு தீவுகளும் தம்மிடையே சில விசேடமான அல்லது சிறத்தலடைந்த தன்மைகளுட னேயே காணப்படுகின்றன. மண்டைதீவு, வேலணைத்தீவு, காரைதீவு (காரைநகர்), எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு மற்றும் இரணைதீவு என்பன மக்கள் வசிக்கும் தீவுகளாகக் காணப்படும் அதேவேளை பாலைதீவு, கற்கடதீவு, குருசடித்தீவு மற்றும் கச்சதீவு ஆகியவற்றில் மக்கள் வசிக்காத அதேவேளை அவை புனித அந்தோனியார் ஆலயங்களைக் கொண்டமைந் தனவாகவும் தபக்கால யாத்திரைத் தலங்களாகவும் காணப்படுகின்றன பருத்தித்தீவு மற்றும் புளியந்தீவு போன்று மேலும் சில சிறிய தீவுகளும் காணப்படுகின்றன. இத்தீவுகளில் இன்று சர்வதேச ரீதியில் இலங்கை - இந்திய நாடுகளிடையேயும் மீனவர்களிடையேயும் முரண்பாடு களைத் தோற்றுவித்திருக்கின்ற களநிலனாக கச்சதீவு காணப்படுகின்றது.

### சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்க்கும் ஏனைய சிறுதீவுகள்

இலங்கை - இந்திய நாடுகளிடையே காணப்படும் சிறிய தீவான கச்சதீவின் உரிமைப் பிரச்சினை போன்று சீனா மற்றும் வியட்நாம் நாடுகளிடையே "ஸ்பாட்லி தீவு" விடயமாகவும் முன்னாள் சோவியத் ஒன்றியம் மற்றும் யப்பான் நாடுகளுக்கிடையே "குறைல் தீவு" விடயமாவும் உரிமைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. கச்சதீவும் கூட 1974ம் ஆண்டு இலங்கைக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியது என இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே உடன்படிக்கை செய்யப்பட்டாலும் கூட தமிழக மீனவர்களும் தமிழக மற்றும் இந்திய அரசியல் வாதிகளும் மீண்டும் மீண்டும் கச்சதீவு பற்றிய சர்ச்சைகளைத் தோற்றுவித்த வண்ணமே உள்ளனர்.

**அமைவிடம்**

சர்வதேச உலக வரைபடத்தில் 9.25 வட அகலாங்குக்கும் (அகலக்கோடு), 79.30 கிழக்கு நெட்டாங்குக்கும் (நெடுங்கோடு) இடையில் அதாவது சந்திக்கும் இடத்தில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் சுமார் ஏறக்குறைய 1மைல் (1.6km) நீளமும் 300யார் (275m) அகலமுள்ள இச்சிறிய தீவானது அமைந்திருக்கின்றது. 3.4கிலோமீற்றர் சுற்றளவும் சுமார் 285 ஏக்கர் (82 ஹெக்ரேயர்) பரப்பளவையும் கொண்டிருக்கும் இத் தீவானது நெடுந்தீவின் தென்மேற்கே 12 கிலோமீற்றர் தூரத்திலும் இராமேஸ்வரத்திலிருந்து வடகிழக்கே சுமார் 17.7 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந் துள்ளது. கடல்சார் நீள அளவீடுகளின்படி கடற்கரை ஓரத்திலிருந்தே அளவீடுகள் செய்யப்ப டுவதுடன் அவை நார்டிக் கல்மைல்கள் எனவும் குறிக்கப்படுகின்றன. இதன்படி நெடுந்தீவு மேற்கு கடற்கரையில் இருந்து கச்சதீவு 8நார்ட்டிக் கல்மைல் தூரத்திலும் இராமேஸ்வரத்திலிருந்து 12 நார்டிக்கல் மைல் தூரத்திலும் அமைந்திருக்கின்றதுடன் இலங்கையின் தலைமன்னார் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களில் இருந்து 1 1/2 மணி நேரத்திலும் இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து 2 1/2 மணிநேரத்திலும் கச்சதீவினை சென்றடையக் கூடியதாக விருக்கின்றது

**தரைத்தோற்றம்**

கிழக்கே முருகைக்கற்களையும் மணற்தரையையும் கொண்டிருக்கும் இத்தீவானது மேற்குக் கரைப்பகுதியில் சிறுசிறு மணியுருவான கற்களைக் கொண்ட கடற்கரையையும் தென் மற்றும் தென்கிழக்கு கடற்கரையில் கற்பாறைகளையும் கொண்டிருக்கின்றது. மத்திய பகுதியில் ஆங்கிலேயர் கால சிதைவடைந்த கலங்கரை விளக்க கட்டிட இடிபாடுகளுடன் மண்மேடாகவும் காணப்படுகின்றது. இத்திட்டில் இருந்து தீவு முழுவதனையும் காணக்கூடியதாகவிருப்பதுடன், சூரியோதயம் மற்றும் சூரிய அஸ்தமனம் ஆகிய இரண்டையும் இத்திட்டிலிருந்தே கண்டுகளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. கண்டல் மற்றும் வறள்நிலத் தாவரங்கள் பற்றைகளும் முட்புதர்களும் நிறைந்து காணப்படுவதுடன், மரங்கள் குட்டையாகவும் வளைந்தும் குகை போன்றும் காணப்படுவது இங்கு வரும் பயணிகள் தங்குவதற்கான விடுதி அமைக்க மிகவும் அனுகூலமாகவும் காணப்படுகின்றது. மாறிவரும் காலநிலைகளுக்கேற்ப இங்கு மழைவீழ்ச்சி மிகவும் குறைவானமையால் குடிநீர் கிடைப்பது அரிதென்பதுடன் நீரும் உவர் நீராகவே காணப்படுகின்றது.

**பச்சைத்தீவும் வாலித்தீவும்**

இங்கு காணப்படும் பற்றைகள், புதர்கள், மரங்கள், பாம்புகள், ஓணான்கள் மற்றும் நகருயிர்கள், ஆமைகள் யாவும் முன்னர் பச்சையாகக் காணப்பட்டதாகவும் (இதனை சுமார் 50, 60 வருடங்கட்கு முன்னர் கச்சதீவுக்கு சென்று வந்தவர்களும் உறுதிப்படுத்துகின்றனர். அதாவது தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் யாவும் பச்சையாகக் காணப்பட்டது என்று. அதனால் இது பச்சைத்தீவு எனப்பட்டது.) அதனால் இத்தீவு பச்சைத்தீவு என அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தின் படி இராமருக்கும் வாலிக்கும் இடையே போர் நடந்த இடமே இத்தீவு எனவும் இதனால் அது வாலித்தீவு என்றும் 1973.07.23ம் திகதி நடைபெற்ற இந்திய ஒன்றிய (இந்திய நாடாளுமன்ற) அரசின் பாராளுமன்றத்தில் கச்சதீவு பற்றிய விவாதத்தின்போது அன்றைய குவாலியர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் இந்திய முன்னாள் பிரதமருமான மறைந்த தலைவர் திரு அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் பேசியிருந்தார்.

**வாலித்தீவு**

கச்சதீவு இந்தியாவுக்கே உரிமையானது என ஆதாரங்களை முன்வைக்கும் கட்டுரை ஒன்றில், கி.பி 1480ல் இராமேஸ்வரம் பகுதியில் ஏற்பட்ட புயல் மற்றும் கடல் கொந்தளிப்பின் போது அப்பகுதியைச் சுற்றி சிறுசிறு தீவுக்கூட்டங்கள் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது. அவையாவன:

1. இராமேஸ்வரம் தீவு
2. புனல்வாசல் தீவு
3. குந்துவாசல் தீவு
4. முயல் தீவு
5. பூமரிசான் தீவு
6. முல்லைத்தீவு
7. மணல் தீவு
8. வாலித்தீவு
9. அப்பா தீவு
10. நல்ல தண்ணீர்த் தீவு
11. உப்புத் தண்ணீர்த் தீவு
12. குருசடித் தீவு





இந்த 12 தீவுகள் பற்றி தமிழின இளைஞர் அணி (Tamil.young stors June 2016) வெளியிட்ட கட்டுரை ஒன்று விபரம் தருகின்றது. அதன்படி பார்த்தால் கச்சதீவு அதாவது அவர்களது வாலித்தீவு கி.பி 1480ல் தோற்றம் பெற்ற பின்தான் இராமாயண யுத்தம் நடைபெற்றதா என ஐயம் எழுகிறது. எனவே கச்சதீவு பற்றிய மேற்படி ஆதாரங்களின் உண்மைத்தன்மையை வாசகர்களின் தீர்மானத்திற்கே விட்டு விடுவோம்.

**கச்சதீவின் வளங்கள்**

இந்தியாவின் தென்முனையிலுள்ள வோர்ஜ் கண்டமேடையும் இலங்கையின் குடாநாட்டின் வடபகுதியிலுள்ள பீட்று கண்ட மேடையும் இணைகின்ற நீர்ப்பரப்பில் கச்சதீவு அமைந்திருப்பதுடன் பவளப்பாறைகள், கடலடித்தள மேடைகள் மற்றும் கண்ட மேடைகள் யாவும் இங்கு காணப்படுவதால் இது மீன்வளமும் மீன் இனப்பெருக்கமும் மிகுந்து காணப்படும் இடமாக இனம் காணப்படுகின்றது. மேலும் சங்குகள், அட்டைகள் போன்றவையும் இப்பகுதியில் மிகுந்து காணப்படுவதுடன் இங்கு இறால், நண்டு போன்றவற்றின் வளமும் மேலோங்கிக் காணப்படுகின்றது. அது மாத்திரமல்ல புயல், மழை, வெள்ளம் மற்றும் காற்றுக்கள் அதிகரிக்கும் போது பாதுகாப்பு நிறைந்த இடமாகவும் மீனவர்களுக்கும் அவர்களது படகுகள் மற்றும் உபகரணங்களுக்கும் இயற்கைச் சீற்றத்தின்போது பாதுகாப்பான இடமாகவும் கச்சதீவு காணப்படுகின்றது. இங்கு முன்பு சங்கு மற்றும் முத்துக் குளித்தலும் சிறப்பாக நடைபெற்று வந்தமையை ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கச்சதீவானது 2ம் உலக மகாயுத்த காலத்தின் போது பிரிட்டிஷ் படையினரின் விமானக் குண்டுவீச்சுப் பயிற்சிக் களமாகவும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக் களமாகவும் விளங்கியது. போர்த்துக்கேயரது காலத்தில் கோவாவில் (இந்தியா) இருந்து இலங்கைக்கு ஆன்மீகப் பணியாற்ற வரும் குருக்கள் கச்சதீவு வழியாகவே வருவது வழக்கமாகவும் இருந்தது. வெடியரசன் காலப்பகுதியில் நெல் மற்றும் தானியங்கள் பயிரிடப்பட்டு வந்ததுடன், அவனது கால் நடைகளான மாடுகள், ஆடுகள் என்பவற்றின் பண்ணையாகவும் இது காணப்பட்டது என வரலாறுகள் கூறுகின்றன.

**சர்ச்சைகளின் தோற்றுவாயின் முன்**

இலங்கை - இந்திய மீனவர்கள் தமது மீன்களைப் பதப்படுத்தும் அதாவது, உப்பிட்டு கருவாடு காயப்போடும் இடமாவும் வலைகளைக் காயப்போட்டுப் பழுது பார்க்கும் இடமாகவும் படகுகளுக்குச் சிறுசிறு திருத்த வேலைகள் செய்யும் இடமாகவும் வலைகளை கடலிலே போட்ட பின்னர் திரும்பவும் வலை இழுக்க பல மணித்தியாலங்கள் ஆகும் என்பதால் கரைக்கு வந்து ஓய்வுகொள்ளும் இடமாகவும் கச்சதீவைப் பயன்படுத்தி வந்தனர்.

**கச்சதீவும் இலங்கை அரச நிர்வாகமும்**

கச்சதீவானது 1974ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி இலங்கைக்கே உரியது எனினும், அதற்கு பல்லாண்டு காலங்கட்டு முன்பே இலங்கையின் நிர்வாக எல்லைக்குட் படுத்தப்பட்டிருந்தது. விசேடமாகக் குறிப்பிடுவதாயின் 1974ம் ஆண்டிற்கு முன்னரே நெடுந்தீவின் மேற்குப்பகுதி கிராம அலுவலரின் கீழ் அது கொண்டுவரப்பட்டிருந்தது. நெடுந்தீவின் மீனவர்கள் கச்சதீவில் தங்கி தமது தொழில்களை மேற்கொள்ளும் போது நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் அக்காலத்தில் அங்கு சென்று வாக்காளர் அட்டை விண்ணப்பப் படிவங்களை விநியோகித்து பூர்த்தி செய்து கொண்டு கருவாட்டுடன் திரும்பிய வரலாறுகளும் நினைவு கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.



**இலங்கையின் நிர்வாகத்தின் கீழ்...**

கச்சதீவு
- கிராம அலுவலர் பிரிவு – நெடுந்தீவு மேற்கு
- பிரதேச செயலகப் பிரிவு – நெடுந்தீவு
- நீதி, நிர்வாகப் பிரிவு – ஊர்காவற்றுறை
- பொலிஸ் பிரிவு – நெடுந்தீவு
- மாவட்டம் – யாழ்ப்பாணம்
- தேர்தல் தொகுதி – ஊர்காவற்றுறை

**கத்தோலிக்க திருச்சபை ஆலய நிர்வாக பங்குத்தளம் நெடுந்தீவு ஆகவும் காணப்படுகின்றது.**

**கச்சதீவு வரலாறு பற்றி....**

கி.பி 1818ம் ஆண்டின் ஆவணி மாத இறுதிப்பகுதியில் நெடுந்தீவு தூய யாகப்பர் ஆலய பங்கினைச் சார்ந்த அந்தோனி, போஞ்சி (பிரான்சிஸ்), குப்புசாமி (குப்பு) ஆகிய உறவினர்களான மூவரும் தூண்டில் வலையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது மழை, காற்று, மற்றும் நீரோட்டம் காரணமாக நெடுந்தீவுக் கடல் பிராந்தியத்துக்கு அப்பால் அவர்களது தோணியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுமரம்) இழுத்துச் செல்லப்பட்டது. அப்போது தாங்கள் உயிர் தப்பிப் பிழைத்தால் புனித அந்தோனியாருக்கு திருச் சொரூபம் வாங்கி வைப்பதாக (நேர்த்தி ) வேண்டுதல் செய்தனர். பல மணித்தியாலத்திற்குப் பின்னர் அவர்கள் ஒரு சிறு தீவில் கரையொதுங்கி சில தினங்கள் அங்கு கிடைக்கும் ஆமைகள் மற்றும் மீன்கள் அவரை இனக் காய்கள் போன்றவற்றை பக்குவம் பண்ணாமலே புசித்து உயிர் வாழ்ந்தனர். இவர்களைக் காணாது கடற்கரையெங்கும் தேடி அலைந்த உறவினர்கள் சில தினங்கள் கழிந்துவிட்டமையால் இனி அவர்கள் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை எனக்கருதி அவர்களுக்கான மரணச் சடங்குகளை மேற்கொண்டு அவர்களது வழக்கப்படி 9ம் நாள் செலவு கொடுத்தல் எனும் (எச்சில் கழித்தல்) விருந்து நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கும் போது அவர்கள் திரும்பி தமது வீட்டுக்கு வந்திருந்தனர். மிகவும் மகிழ்வும் ஆச்சரியமும் அடைந்த உறவினர்கள் அவர்களிடம் இது பற்றி விசாரித்த போது கச்சான் திசையில் ஒரு தீவு இருப்பதாகவும் அங்கு தாங்கள் நீரோட்டத்தாலும் காற்றாலும் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறியிருந்தனர். இதுவே அவர்களால் கச்சான் திசைத் தீவு, கச்சான்தீவு என அழைக்கப்பட்டு இன்றுவரை கச்சதீவு என அழைக்கப்படுகின்றது. (மீனவர்கள் திசைகளை; காற்றுக்களை், நீரோட்டங்களை் மற்றும் கடல் வற்று, பெருக்கு போன்றவற்றை வைத்து அறிந்துகொள்ளும் வழிமுறைகளும் அன்று முதல் இன்றுவரை காணப்படுகின்றது. வாடை, சோளகம், கொண்டல், கச்சான் எனும் காற்றுக்களில் கச்சான் காற்று என்பது தென்மேற்கில் இருந்து வீசுவதாகும். எனவே தான் நெடுந்தீவுக்கு தென்மேற்கே அத்தீவு இருப்பதனை அவர்கள் கச்சான் திசைத்தீவு, கச்சான் தீவு, கச்ச தீவு என்றனர்.) தாங்கள் உயிர் பிழைத்தால் அந்தோனியாரது திருச்சொரூபம் வாங்கி வைப்பதாக நேர்ந்து கொண்டதாவும் தாங்கள் அவரது அருளால் உயிர் பிழைத்து வந்து விட்டதாகவும் கூறினார்கள்.

**புனித அந்தோனியார் திருச் சொரூபமும் ஆலய வழிபாடு ஆரம்பமும்**

கடலில் இழுத்துச் செல்லப்பட்ட அம் மூவரும் தாங்கள் வேண்டிக் கொண்ட படியே புனித அந்தோனியாரது திருச்சொரூபத்தை கச்சதீவில் வைத்து தமது வேண்டுதலை (நேர்த்திக்கடனை) பூர்த்தி செய்ய விரும்பினர். ஆனால் அவர்களது ஆலயங்கள் யாவும் ஊர்காவற்றுறைப் பங்கிலே அன்று உள்ளடக்கப்பட்டு இருந்தன. எனவே அன்றைய பங்குத் தந்தையாகவிருந்த வணக்கத்துக் குரிய செல்வந்தோர் பியந்திசுவுடன் இது பற்றிக் கதைக்கப்பட்டது. அவரது ஆலோசனையின் படியும் வழிகாட்டலின் படியும் இதற்கு முன்னர் ஊர்காவற்றுறை பங்குத்தந்தையாக இருந்த சம்மனசுச் சுவாமியார் என அழைக்கப்பட்ட வண. விஸ்திரிணி அடிகளாரிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரது முயற்சியின் பயனாக புனித அந்தோனியார் சொரூபம் பெறப்பட்டு 1819ம் ஆண்டு இவர்கள் மூவருடனும் அவர்களது உறவினர்கள் உடனும் மற்றும் வேறுபலருடனும் கச்சதீவுக்குச் சென்று சுண்ணச் சுதையால் சிறு தூண் வடிவமைக்கப்பட்டு சொரூபம் (ஆசீர்வதிக்கப்பட்ட சொரூபம்) வைக்கப்பட்டு மேலே தென்னங்கீற்றால் நிழற் குடை வேயப்பட்டது. அதன் பின்னரே வருடா வருடம் இவர்கள் கச்சதீவு சென்று வழிபட்டு வந்தனர். இவர்கள் சென்றடைந்த ஆவணிமாத இறுதிப்பகுதியிலேயே ஆண்டுதோறும் சென்று வருவது வழக்கமாகும்.

**கச்சதீவின் இவ் வரலாற்று நாயகர்களைப் பற்றி...**

கச்சதீவில் கரையொதுங்கிய இர்களில் ஒருவரான குப்புசாமி (குப்பு) என்பவர் வேலணைத்தீவினைச் சேர்ந்தவர். நெடுந்தீவின் தூய யாகப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த பெண்ணொரு வரைத் திருமணம் செய்திருந்தார். 1902ம் ஆண்டிற்கு முன்னர் நெடுந்தீவானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை ஆலய கத்தோலிக்கப் பங்குடன் இணைக்கப்பட்டிருந்தது. 1902ம் ஆண்டு புங்குடுதீவு, எழுவை தீவு என்பன நெடுந்தீவுடன் இணைக்கப்பட்டு நெடுந்தீவுப் பங்கு என அழைக்கப்பட்டது. 1908ம் ஆண்டே நெடுந்தீவு தனி ஆலயப் பங்காக மாறியது.

கி.பி 1543 அளவில் யாழ்ப்பாண அரசன் சங்கிலியனை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எண்ணிய போர்த்துக்கேய படையினர் கோவாவில் போர்த்துக்கேய கவர்னராகவிருந்த மாத்திம் அல்போன்ஸ்ஸோ டீ. சூசா தலைமையில் படையெடுத்து வந்த போது காற்று காரணமாக நெடுந்தீவுக் கரை பிடித்து ஒதுங்கிருந்த போது இப்பகுதி மக்களுடன் நெருக்கமாகப் பழகியிருந்தனர். எனவே அதன் காரணமாக ஆதிச் சைவர்களாக இருந்த இம் மக்களிடம் அவர்களுடன் வந்த கத்தோலிக்க தமிழ் மொழி பேசும் ஒருவர் மூலம் அவர்களுடன் ஒரு குருவானவர் தம்முடன் வந்து பேசி புனித யாகப்பர் சொரூபத்தைக் கொடுத்து அவரை வழிபடக் கூறியதாகவும் அதன் பின் கத்தோலிக்க சமயம் பற்றி எதுவும் அறிந்திராத நிலையிலும் திருச்சபை இலங்கையில் நிறுவனமயப்படுத்தப்படாத அக்காலத்தில் அச்சொரூபத்தினை வைத்து வழிபட்டு வந்ததாகவும் இலங்கையில் அவர்களே முதன்முதலில் யாகப்பர் வழிபாட்டினை மேற் கொண்டவர்கள் என்பதும் ஒல்லாந்த ஆட்சியின் போது பல துன்புறுத்தல்களையும், சித்திரவதைகளையும் அநுபவித்த போதும் இன்றுவரை உறுதியான கத்தோலிக்கர்களாக அவர்கள் வாழ்ந்து வருவதாகவும் அறியக் கூடியதாகவிருக்கின்றது.

கி.பி 1545ல் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்ட தூய பிரான்சிஸ்கு சவேரியார் நெடுந்தீவுக்கு வந்தபோது இம்மக்களை சந்தித்தார் என்பதும் இலங்கையின் புனிதராக (திருத்தூதவராக) பாப்பரசரால் பிரகடனம் செய்யப்பட்ட வண. ஜோசேப் வாஸ் அடிகள் நெடுந்தீவு வந்து திருமுழுக்கு கொடுத்தபோது இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 56 பேர் வரையில் அவரிடம் திருமுழுக்குப் பெற்றதாகவும் அறியமுடிகின்றது.

**புதிய ஆலயம் அமைத்தல்**

1907ம் ஆண்டில் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திரு யோசப் சின்னத்துரை ஆசிரியரும் அவரது தந்தையும் மரிய புரவி” எனும் வத்தையில் (பாய்மரப்படகு) சில தளபாடங்கள் மற்றும் கட்டிடடப் பொருட்கள் போன்றவற்றைக் கொண்டு சென்று அவர்கள் அழைத்துச் சென்ற சில உதவியாளர்களுடன் சுமார் 25 அடி நீளமான ஆலய கட்டிடம் அமைத்தனர். 1917 ஆண்டில் வண.வாஸ் அடிகளார் புதிய ஆலயம் அமைக்க அடிக்கல் நாட்டினார்.

**திருச்சபையின் பதிவுகளின் படி**

இலங்கைத் திருச்சபையின் பதிவுகளின்படி 1913ம் ஆண்டு கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது தபக்கால யாத்திரைத்தலமாக அங்கீகரிக்கப்பட்டது. வருடந்தோறும் தபக் காலத்தின் 3ம் ஞாயிறு சிலவேளைகளில் 2ம் ஞாயிறு கச்சதீவு அந்தோனியார் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. முன்னர் 1வாரம் வரை நீடித்த இவ் விழாவானது இன்றைய கால கட்டத்தில் இரண்டு தினங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தபக்காலத்தின் 3வது அல்லது 2வது சனிக்கிழமையே விழாவும் கொண்டாடப்படுகின்றது.

“1913ம் ஆண்டிற்கு முன்பு ஆவணிமாத பிற்பகுதியிலேயே வருடந்தோறும் யாகப்பர் பங்கு ஆலய மக்கள் செல்வது வழக்காமவிருந்தது. ஏனெனில் ஆவணிமாத இறுதியில் தான் அவர்கள் கச்சதீவில் கரை ஒதுங்கிய காலமாகும். ஆனால் ஆவணி மாதப் பகுதிகளில் படகுகள் கச்சதீவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைசேரும் போது ஆடி, ஆவணி மாதங்களில் வீசுகின்ற காற்றுக் காரணமாக பிரயாணிகள் படகிலிருந்து இறங்குவதிலும் ஏறுவதிலும் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதாலேயே மாசி, பங்குனி மாதங்களில் திருவிழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது" (பாய்மர ப்படகு உரிமையாளர் சந்தியோகு ஞானப்பிரகாசம்)

### ஆலய நிர்வகிப்பு

கடந்த 1980 காலப்பகுதி வரையும் கச்சதீவின் அந்தோனியார் கோயிலை அமைக்கவும் வழிபடவும் மூல காரணமாக அமைந்த அந்தோனியின் குடும்பத்தினரே தொடர்ந்தும் சங்கிஸ்தானாக இருந்து வந்தனர். அதேபோல் மூப்பர்களாகவும் முன்னர் தூய யாகப்பர் பங்கினைச் சார்ந்தவர்களே பங்காற்றி வந்தனர். வண. ஆசீர்வாதம் அடிகள் என அழைக்கப்பட பெனடிக்ற் அடிகள் நெடுந்தீவுக்கு பங்குத்தந்தையாக வந்த பின்னர் நெடுந்தீவு கிழக்கு புனித சவேரியர் ஆலய பங்கைச் சார்ந்தவர்கட்கு கச்சதீவு அந்தோனியார் கோவிலின் மூப்பர் பதவியைக் கொடுத்ததுடன் புனித யாகப்பர் பங்கு மக்களால் வருடாந்தம் கச்சதீவு அந்தோனியார் பெருவிழாவின் போது நடத்தப்பட்டு வந்த திருவிழா விருந்துபசாரத்தையும் நிறுத்தும்படி உத்தரவிட்டார். இது மக்களின் மத்தியில் பெரும் தாக்கத்தையும், விசனத்தையும் உருவாக்கியது. சொரூபத்தை முதன்முதலில் கச்சதீவில் வைத்து வருடாவருடம் வணங்கி வந்த முன்னாள் சங்கிஸ்தானின் பரம்பரையினர் இன்றும் வாழ்ந்து வருகின்றமையும் நினைவுகூரத்தக்கது. அந்தோனி - சுலியான் - அருளப்பு - சந்தியோகு - மத்தேயு (மத்தியாஸ்) கிரகோரி - அலேஸ்-தவராசா, வயன் (அமீர்) என்று அப்பரம்பரை இன்றும் தொடர்கின்றது. அலேஸ் என்பவரின் பின் சங்கிஸ்தான் பதவி வேறு இடம் மாறி விட்டது. கச்சதீவில் ஆரம்பத்தில் வைக்கப்பட்ட ஆரம்பகால சொரூபங்களில் ஒன்று அலேஸ் அவர்களது வம்சத்தைச் சார்ந்த திருமதி பிலோமினா சூசைப் பிள்ளை (வவி) என்பவரால் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு காட்டின் ஓர் மரத்தில் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. அதுவே இன்று மல்லிகைத்தீவு அந்தோனியார் ஆலயமாக வளர்ச்சியடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பரம்பரையினர் "காண்டை" கோத்திரத்தார் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

### அறுவடைத் திருவிழாவும் கூடாரத் திருவிழாவும்

யூதர்களது (நீண்டகால பாலைவன அகதி வாழக்கையை) அறுவடை மற்றும் கூடாரத் திருவிழாக்களை இக்கச்சதீவு திருவிழா ஒத்திருப்பதாக விவிலியப் பின்னணியில் இதனை நோக்குபவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் சுமார் 6 மாதங்கட்கு முன்னரே சோளம், பனிஅவரை போன்றவற்றை விதைத்துவிட்டு வந்து பின் திருவிழாக்காலத்தில் போய் முற்றிய பின் அவற்றைச் சேகரித்து வரும் முறையும் முன்பு காணப்பட்டது. இன்றும் கூட திரு விழாவுக்குச் செல்வோர் அங்கு கௌப்பியிலும் பார்க் இரு மடங்கு பெரிதான அவரை விதைகளைச் சேகரித்து வருகின்றனர். இந்த சுவையும் புரதச்சத்தும் நிறைந்த அவரை விதைகளை அங்கு சேகரித்து வந்து பிறருடன் பகிர்ந்து உணவாக உட்கொள்வதும் இன்றும் கூட நெடுந்தீவில் காணமுடிகின்றது.

### தென்னை மரங்களும் பனை மரங்களும்

நெடுந்தீவின் பங்குத் தந்தையாகவிருந்த வண. மொன்பேர்ட் அடிகள் அங்கு தனது பணிக்காலத்தில் தென்னங்கன்றுகள் மற்றும் பனை விதைகளை நட்டு வளர்த்திருந்தார். இன்று அவை வளர்ந்து விருட்சமாகக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீண்டும் புதிய ஆலயம்**

இலங்கை அரசினதும் கடற்படையினரதும் ஒத்துழைப்புடன் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயமானது 2010ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இலங்கை - இந்திய மக்கள் வருடந்தோறும் இணைந்து திருவிழாக்களில் பங்குபற்றுவதுடன் இரு நாட்டு திருச்சபையின் ஆயர்கள் மற்றும் அருட்தந்தையர்களால் ஐக்கியத்துடனும் மகிழ்வுடனும் ஆன்மீக ரீதியான திருவிழாச் சடங்குகள் கூட்டாக நாடாத்தப்பட்டு வருவது சமாதானத்தில் நிரந்தரமான நிலைத்த தீர்வைக் கொண்டுவர உதவக்கூடும்.

**இந்தியர்கள் பற்றி**

இந்தியாவின் இராமேஸ்வரம் ஓடைக் குடலைச் சார்ந்த அந்தோனி பட்டங்கட்டி, மற்றும் (இராமேஸ்வரம்) தொண்டி நம்புத்தாளையைச் சார்ந்த சீனிக்குப் படையாட்சி ஆகியோர் 1913ம் ஆண்டு கச்சதீவின் ஓர் பகுதியில் அந்தோனியார் சொரூபத்தை நிறுவியதாகவும் அறியப்படுவதுடன் மேலும் பல மீனவர்கள் தீவின் பலபாகங்களிலும் தத்தமது விருப்பப்படி அந்தோனியார் மற்றும் செபஸ்தியார் சொரூபங்களை நிறுவியிருப்பதனையும் காணமுடியும். மேலும் 1905ம் ஆண்டில் இந்திய தொண்டியைச் சேர்ந்த சீனிக்கருப்பன் படையாட்சி கச்சதீவு கோயிலைக் கட்டியதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். ஆனால் இவை தவறான தகவல்களாகக் கொள்ளப்படுகின்றன.

**முரண்பாட்டின் ஆரம்பம்**

1920 ஆண்டில் இலங்கையானது கச்சதீவு தமக்கே உரிமையாது எனக் கூறத்தொடங்கியது. அதைத் தொடர்ந்து இந்தியா 1956ம் ஆண்டின் பின்பகுதியில் தனது கடல் எல்லைக் கோட்டை (ஆள்புல எல்லை) 3 கடல் மைல்களிலிருந்து 6 கடல் மைல்களாக விரிவுபடுத்தியதுடன் மீன்பிடிக்கும் உரிமையை 100 கடல் மைல்களாக விரிவுபடுத்தியது. இது உண்மையிலேயே கச்ச தீவினைக் கைப்பற்றும் நோக்கமாக இருக்கலாம் என இலங்கை கருதியது. அதேவேளையில் கச்சதீவு உற்சவ காலங்களில் இலங்கையில் இருக்கும் மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களது உறவினர்களும் ஏனைய இந்திய வம்சாவழியினரது உறவினர்களும் கச்சதீவு திருவிழாவின் போது இலங்கைக்குள் ஊடுருவுவதும், பொருட்கள் கடத்தப்படுவதும் இலங்கை அரசால் அவதானிக்கப்பட்டு அவை தமது இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருப்பதனையும் உணர்ந்துகொண்டது. எனவே இலங்கை அரசும் தமது கடல் எல்லையை விரிவுபடுத்துவதாக அறிவித்தது. இதனால் 1960ம் ஆண்டு கச்சதீவுத் திருவிழா நிறுத்தப்பட்டது. திருவிழா நிறுத்தப்பட்டமையானது இலங்கை மீனவர்களிடையே அச்சத்தையும் பதற்றத்தையும் தோற்றுவித்ததுடன் தமது ஜீவனோபாயத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் கச்சதீவுக் கடற் பிராந்தியத்தில் தொழிலுக்குச் செல்வதற்கும் அஞ்சினர். எனவே இலங்கை அரசானது தம் நாட்டு மீனவர்கட்கு பாதுகாப்பையும் உயிர் மற்றும் தொழில் உத்தரவாதத்தையும் வழங்க இந்தியாவுடன் ஓர் உடன்பாட்டிற்கு வரவேண்டியதாயிற்று.

இப்பிரச்சனையைத் தீர்வுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியம் காரணமாக இலங்கை கச்ச தீவானது தனக்குச் சொந்தமென நிரூபிக்கும் வகையிலான சான்றுகளையும் தேடத் தொடங்கிய துடன் பாதுகாப்பு அமைச்சும் வெளிநாட்டு அமைச்சும் இதில் இணைந்து செயற்படத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்வினை நோக்கி**

யாழ் அரச அதிபராக இருந்த திரு வேர்ணன் அபயசேகர, இராணுவ அதிகாரி கேர்ணல் மொறிஸ் ஜயவீர மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. எமிலியானுஸ்பிள்ளை ஆகியோருடன் ஆலோசித்து ஆவணங்களை சேகரிக்கத் தொடங்கியது. இலங்கை அரசால் இதன் பயனாக 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப்பட்ட சில ஓலைச் சுவடிகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. பண்டிதர் R.C.S நவரட்ணம் எழுதிய வடபுல தீவுகளின் வரலாறு என்ற ஆங்கில மொழி நூலும் தேடப்பட்டது. கி.பி 12ம் - 17ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இத்தீவு யாழ்ப்பாண அரசுக்கு சொந்தமாக இருந்தமைக்கான ஆதாரங்களையும் இலங்கை அரசு நிருபித்துக் காட்டியது. நெடுந்தீவின் மேற்கைச் சேர்ந்த மணியகாரரின் கண்காணிப்பில் கச்சதீவு இருந்தமையும் நெடுந்தீவு மேற்கு உடையார் வேலாயுதம் அவர்கள் தமது மகள் குஞ்சியடி (குஞ்சாத்தை) என்பவருக்கு கச்சதீவின் 1/2 பகுதியை சீதனமாக வழங்கிய ஓலைச் சுவடிகளும் கொண்டு வரப்பட்டன. (கச்சதீவுக்கு குஞ்சாட்டி தீவு எனும் பெயரும் உண்டு).

1966ம் ஆண்டு ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததும் இடைக்கிடையே நெடுந்தீவு பங்குத் தந்தையும் பங்கு மக்களும் கச்சதீவு சென்று வந்தாலும் வழைபோல் சிறப்பானதாக அது அமையவில்லை.

**இலங்கைக்கு உரிமையானதன் பின்**

1974ம் ஆண்டில் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க மற்றும் இந்திராகாந்தி ஆகியோரின் உடன்படிக்கையின் மூலம் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதுடன் இருநாட்டு மீனவர்களும் கச்சதீவை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடிக்கவும் திருவிழாக்காலங்களில் இருதரப்பினரும் இணைந்து விழாவில் கலந்து கொள்ளவும் தீர்வு காணப்பட்டது. 1976ம் ஆண்டும் இரு நாடுகளுக்கிடையான ஓர் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அது ஒரு நாட்டின் கடல்பரப்புக்குள் மறுநாட்டு மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டுமாயின் முன் அனுமதி பெறவேண்டும் என்பது சம்பந்தப்பட்டதாகும்.

**போர்க்காலச் சூழல்**

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் எழுந்த ஆயுதப் போராட்ட சூழ் நிலையும் அதனைத் தொடர்ந்து வந்த பாதுகாப்பின் பொருட்டான கடல் வலயத் தடைச் சட்டங்கள் காரணமாகவும் இலங்கை மீனவர்களால் அப்பகுதியில் மிக நீண்டகாலமாக மீன்பிடியில் ஈடுபட முடியாமல் போனது.

**மீண்டும் முரண்பாட்டின் உச்சக்கட்டம்**

இச் சூழ்நிலையை தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்ட தமிழக மீனவர்கள் இலங்கையின் வடகரைக்கு அண்மித்தும் கூட மீன்பிடியில் ஈடுபட்டும் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகள் (ரோலர்) மற்றும் மடி வலைகளைப் பயன்படுத்தியும் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதுடன் போர்காலச் சூழல் முடிவடைந்த பின்னரும் ஈழத் தமிழ் மீனவர்களின் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அவர்களது வலைகள் போன்றவற்றை வெட்டியும் நாசமாக்கியும் வருவ துடன், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பாவித்து மீன் பிடிப்பதால் மீன் குஞ்சுகள் மற்றும் மீன் முட்டைகள் யாவும் அழிக்கப்படுகின்றன. வளங்களும் அழிக்கப்படுகின்றன. சில வேளை களில் சுமார் 500, 600 படகுகளில் கூட்டாக சேர்ந்து வரும் இவர்கள் ஈழத்தமிழர்கள் மீது வன்முறை யையும் பாவித்து தாக்குதலில் ஈடுபட்டு வந்தமையையும் அறியக் கூடியதாக விருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிரந்தரமான தீர்வினை நோக்கி

இப்பிரச்சினைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் தமிழக அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும் ஏன் சிலசமயம் இந்திய அரசாங்கமும் கூட தமது இருப்பினையும் வாக்கு வங்கிகளையும் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியில் இப் பிரச்சினைக்கு மென்மேலும் உரமிட்டு வருவதனையும் அவதானிக்க முடிகிறது. இந்தியத் தரப்பினர், ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தின் படி 1802ம் ஆண்டில் இராமநாதபுரம் ராஜாவுக்கு கச்சதீவு அரசுடமையாக்கப்பட்டதாகவும் 1947ம் ஆண்டு இராமேஸ்வரம் ராஜேந்திர சேதுபதியிடமிருந்து மண்டபத்தைச் சார்ந்த வீ. பொன்னுச்சாமிபிள்ளை மற்றும் K.S மொகம்மாது மீர் சாய்பு மரைக்காயர் ஆகிய இருவராலும் குத்தகைக்கு எடுக்கப்பட்டதாகவும் கூறுவதுடன் கச்சதீவினை மீளப்பெறவேண்டும் எனவும் பிரச்சினைகளை வலிந்தும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

### ஐ.நாவின் கடற்சட்டங்கள்

கடல் வளங்களைப் பாதுகாப்பதும் பயன்படுத்துவதும் தொடர்பாக சர்வதேச ரீதியில் புதிய சட்டங்களை அமுல்படுத்தும் முகமாக ஐ.நா அமையமானது கடற்சட்ட தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது. இதன்படி ஆரம்பகாலத்தில் 12கடல் மைல்களை (நார்டிக் கடல் மைல்) எல்லையாக வகுத்து இருந்த நிலையில் இன்று 200 கடல் மைல்கள் (நார்டிக் கல் மைல்கள்) வரை கடலினதும் கடலடியினதும் வளங்களை பயன்படுத்த முடியுமாக விருக்கின்றது. இதன் விளைவாக பல நாடுகள், முன்னர் யாருக்கும் உரிமையில்லை என்று கருதப்பட்ட கடற் பரப்புக்களை தமக்குச் சொந்தமாக்கியுள்ளன. சில நாடுகளோ தமது ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த கடற்பரப்புக்களை இழக்க வேண்டியதாகிவிட்டது.

எடுத்துக்காட்டாக ஐஸ்லாந்து - ஐரோப்பிய நாடுகளை கொள்ளமுடியும். ஐஸ்லாந்து தனது பொருளாதார வலயத்தை விஸ்தரிக்க முற்பட்ட போது அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுடன் முரண்பட வேண்டியதாயிற்று.

### இறுதியாக

கடற்தொழில் சார்ந்த சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் என்றும் வட்டம், வாரியம் ஒன்றியம் என்றும் நாட்டுக்கு நாடு இத்தொழிலாளர்கள் சார்பாக பல அமைப்புக்கள் கட்டமைக்கப்பட்டிருப்பினும் தத்தமது நாட்டு மீனவர்கட்கிடையேயும் சரி, அயல்நாட்டு மீனவர்களிடையேயும் சரி அவை ஐக்கியத்தையோ, புரிந்துணர்வையோ அல்லது விட்டுக் கொடுப்பையோ உருவாக்க முடியவில்லை அல்லது அவை சார்ந்து அறிவியல் ரீதியாக சிந்தித்து செயற்படக்கூடிய எவ்விதமான வேலைத்திட்டங்களையும் குறைந்த பட்சம் கூட முன்னெடுக்கத் தயாராகவில்லை. இலங்கை அரசும் கூட இதனை மீனவர் சமுதாயப் பிரச்சினையாக கருதாது இனரீதியாக நோக்குகின்றதா என்ற ஐயப்பாடும் எழுகின்றது.

இருபக்கமும் காணப்படுகின்ற மிகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தமிழ் பேசுபவர்களாகவும் தமிழர்களாகவும் இருப்பினும், ஈழத் தமிழர் பிரச்சினையில் அக்கறை யோடும், ஆர்வத்தோடும் ஆதரவு தந்து குரல் கொடுக்கும் தமிழகத்து தமிழ் மீனவர்கள் இப் பிரச்சினையில் பெரும்பான்மையாகப் பாதிக்கப்படுவது [illegible] ஈழத் தமிழ் சகோதரர்கள் சிந்திக்காது செயற்படுவது வேதனைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநாட்டு அரசுகளும் இம் மீனவர்களது பிரச்சனை பற்றி நன்கு ஆராய்ந்து நிரந்தரமான இணக்கப்பாட்டை காணத்தவறிடினும் கூட தமிழக மற்றும் ஈழத்து மீனவர்களும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் தங்கள் தங்கள் அமைப்புக்களூடாக தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டு இருதரப்பு பிரச்சினைகளை புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்புடனும் ஐக்கியத்துடனும் செயற்படுவதே இப்பிரச்சினைகளில் நிரந்தரத் தீர்வை கொண்டுவர உதவும். அண்மையில் கூட இந்தியத் தூதுவர் திரு பாக்லே அவர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் பேச்சு நடத்தியதாக தெரிகிறது. அதுவும் கூட தீர்வினை நோக்கியதாக அமையலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


01. கச்சதீவு வ. சூசைதாசன் விரிவுரையாளர் புவியியல்துறை, யாழ்ப்பாணம். (நடமாடும் துவிச்சக்கரவண்டி வெளியீடு - August - 1995).

02. வேரைத் தேடும் விழுதுகள். செல்வி அன்ரன் லூர்த்து றோஸ். செ. (1989 - கச்சதீவு வரலாற்றுக் கட்டுரை).

03. கச்சதீவு: உடன்பாடும் முரண்பாடும்: அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் (வரலாற்றுக் கண்ணோட்டம் 1700-2002).

04. எனது டயறிக் குறிப்பில் இருந்து. தொ. அந்தோனி (கையெழுத்துப் பிரதி - 1910 முன்னாள் பொலிஸ் கொஸ்தாபல்).

05. நெடுந்தீவின் தூய யாகப்பர் வரலாறும் கச்சதீவுத் தொடர்புகளும், நீ.வின்செனற் 1961.

06. வாய்மொழிக் கதைகள் : Mrs. எலிசபேத் செபதேயு (கையெழுத்துப்பிரதி, 1974).

07. இலங்கை - இந்திய நாடுகள் இணைந்து கொண்டாடும் கச்சதீவுப் பெருவிழா - அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை (சூரியகாந்தி சஞ்சிகை 18 பெப்ரவரி 2018).

08. கச்சதீவு வரலாறும் ஆலய வழிபாடும், திரு. ஜேக்கப் அருளானந்தம் (ஈழநாடு வார இதழ்-1972).

09. தகவற்துணுக்குள் மற்றும் புகைப்படங்கள் உதவி. (ஆசிரியர் திரு பாக்கியநாதர் டிகால், யா/ வேலணை நடராஜர் வித்தியாலயம்).

10. புகைப்படங்கள் உதவி , திரு. அருட்பிரகாசம் கொன்சியஸ்.

11. xxv years catholic progress 1925. (1893-1918) Rev.Fr.S.Gnanapragasar O.M.I.

12. கச்சதீவு வரலாறு செ.ராசு (கொங்கு ஆய்வுமையம் 1997).

13. கச்சதீவு - தமிழ் விக்கிபீடியா.

நேர்காணல்

1. சந்தியோகு ஞானப்பிரகாசம் ("மரிய புரவி"- பாய்மரப்படகு உரிமையாளர்)
2. செல்வி. றூபிமலர் செ.
3. திருமதி. ரதனி அருள்தாஸ்.


ஆசை பக்தியை அழிக்கிறதுகோபம் அறிவை அழிக்கிறது

ஆகையால் இந்த கெட்ட குணங்கள் அழிக்கப்பட வேண்டும்

- ஸ்ரீ சத்ய சாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் வீணை செய்து...

செல்வி பானுசிறி ஸ்ரீகந்தராசா,
முகாமைத்துவ சேவை உதவியாளர்.
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

மாற்றம் ஒன்றுதான் இந்த ஜகத்தினுள் மாற்ற முடியாதது என்ற நோக்கோடும் போக்கோடும் வாழ்ந்துவரும் இன்றைய மானிட சமுதாயத்தின் மிகப்பெரும் உயர்சக்தி "இளையோர்" இளைஞர் என்றால் யார்? என்று கேட்டால் பலரும் பல விதமாய் பொதுப்படையாக கூறுவர். இளவயதினை உடையோர்தான் இளைஞர் என்பர் ஒரு சிலர். குதிக்கும் வயதில் குரங்குச் சேட்டை செய்வோர்தான் இளைஞர் என்பர் வேறு சிலர்.

கட்டிளம் காளையராக காத்திரமான உறுதியோடும் சாத்திரம் பலவற்றை சாதாரனமாய் தூக்கியெறிந்து சரித்திரம் படைக்கும் இளைஞர் யுவதிகள் நமது சகாப்தம் ஈன்றெடுத்த சாதனை மணிமுடிகள். சில சம்பவங்கள் சில முதியோரின் துணையுடன் நடந்திருக்கலாம். ஆனால் சரித்திரங்களும் புரட்சிகளும் எல்லை இல்லா மாற்றங்களும் பல இளைஞர் யுவதிகளின் இரும்புக்கரங்களினால் போராடி வென்றெடுக்கப்பட்டவை. அவை தான் இன்றும் காலம் கடந்து தடம் பதித்து நிலைத்து நிற்கின்றன. ஆரம்பத்திலேயே ஒரு விடயத்தை ஆழமாக பதிவு செய்ய விரும்புகின்றேன். "இளையோர் சக்தி இந்நூற்றாண்டின் ஈடு இணையற்ற சக்தி".

ஒரு நாட்டினதும் பிரதேசத்தினதும் மகத்தான வளர்ச்சிக்கு இளைய தலைமுறையின் கடுமையான அர்ப்பணிப்புடன் கூடிய சேவை மிக அவசியமானது இளையவர்களின் காத்திரமான பங்களிப்பு இன்றி மனிதகுலம் விடிவு பெற முடியாது. "Youth as are agents of possivtive and Constructive changes" என இந்திய அறிவியல் மேதை டாக்கடர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் குறிப்பிட்டுள்ளார். எமது நாட்டினை பொறுத்தவரை அண்ணளவாக 21 மில்லியன் மக்கள் தொகையில் 5 மில்லியன் தொகையினர் இளையோராக காணப்படுகின்றனர். மொத்த சனத்தொகையில் 1/4 பகுதியினர் இப்படியாக இருப்பது வரப்பிரசாதம். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட இவ்வாறு இல்லை. மொத்த சனத் தொகையில் பெரும்பங்கினர் இள இரத்தமாக அமைவதென்பது நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பாக அமையும். இதனை சரியாக பயன்படுத்துகின்றோமா?

ஊர்காவற்றுறை போன்ற அபிவிருத்தியிலும் கல்வியிலும் நலிவடைந்து நிற்கும் பிரதேசங்கள் இளைஞர் சக்தியை சரியான விதத்தில் கையாள்கின்றனவா? இத்தகைய பின்தங்கிய பிரதேசங்களில் இளைஞர்களாகிய நாம் பொறுப்புக்களை சரிவர உணர்ந்துள்ளோமா? வரலாற்று ரீதியாக ஊர்காவற்றுறை பிரதேசம் புகழ்மிக்கது. உழைப்பினையே உரமாகக்கொண்ட விவசாயிகள், தொழிலாளர்கள், கலை கலாசாரத்தில் ஊறிப்போன அண்ணாவிமாரும் கலைஞர்களும் வாழ்ந்து போன புண்ணிய தேசம் ஊர்காவற்றுறை. தற்காலத்தில் ஊர்காவற்றுறை பிரதேசத்தின் அபிவிருத்தி சந்தேகக்கோடுகளினால் நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றது. ஓர் பிரதேசத்தின் அபிவிருத்தியை அளவு செய்வதற்கான அடிப்படை அளவு கோளாக கல்வியும் பொருளாதாரமும் திகழ்கின்றது. கல்வியை கைவிடுவோமேயானால் நமது எதிர்காலம் பலத்த ஏமாற்றங்களுக்கு இட்டுச் செல்லும். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடு கையில் இங்குள்ள மாணவ சமுதாயம் அனுபவிக்கும் துயரங்கள் மிகவும் துன்பகரமானவை.

போதிய வளங்கள் இன்றிய பாடசாலைகள். ஆசிரியர் பற்றாக்குறை, ஊர்களுக் கிடையேயான போக்குவரத்து வசதிகள் இன்மை, வறட்சி, அடிப்படை வசதியான நீர் கூட இன்றிய மோசமான நிலைமை, அதிகூடிய வெப்ப சூழ்நிலை என இலங்கையில் வேறெந்த பிரதேசங்களும் சந்திக்காத சவால்களை இத்தீவக மாணவ சமுதாயம் அனுபவித்து வருகின்றனர். இங்குள்ள பெருமளவிலான மாணவர்கள் திறமையானவர்கள். அவர்களிடம் சாதிப்பதற்கான தகுதிகள் நிறையவே உண்டு. இருப்பினும் அவர்களுக்கான வாய்ப்புக்கள் மிக சொற்பமாகவே காணப்படுகின்றது.

சம காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ கல்வியின் இலக்கு என்பது பரீட்சைக்கான வெற்றி எனவும் நல்ல பொருளாதார ஈட்டத்தினை தரக்கூடிய "white color job" ஒன்றினை அடைவதே என எமது ஊர் மாணவ சமுதாயமும் இளையவர்களும் கனவு காண்கின்றனர். இலங்கையின் கல்விக்கொள்கைகள் பற்றி காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் மாணவர்கள் மதிப்பெண்களை வாங்கும் எலிகள் போல உருவாகுவதனையே தாரக மந்திரமாக கொண்டுள்ளார்கள்.

எந்தவொரு கல்வி நிறுவனமும் நல்ல மனிதர்களை உருவாக்குவதனையே நோக்காக கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, வங்கியாளர்களாக, அரசாங்க உத்தியோகத்தர்களாக, விஞ்ஞானிகளாக, விவசாயிகளாக, விளையாட்டு வீரர்களாக வருவது தனிப்பட்ட விதி மற்றும் திறமையின் பாற்பட்டது. ஆனால் கல்வி நிறுவனங்களின் கொள்கையானது நற்பிரஜைகளை உருவாக்குவதாகும். ஆசிரியர்கள் அருவியாக ஓடினால் மாணவர்கள் நீர்வீழ்ச்சியாக விஸ்வரூபம் எடுப்பார்கள் என்பது புதுமொழி. மாணவன் ஒருவன் இது மாதிரி இருக்க வேண்டும் என ஆசைப்படும் ஆசிரியர் அல்லது உத்தியோகத்தர்கள் இந்த சமூகத்திற்கு கிடைத்த வரம். ஆனால் தற்காலத்தில் நல்ல முன்மாதிரியான மனிதர்கள் இல்லாமையும் இச் சமூகத்திற்கான சாபக்கேடே.

எது எவ்வாறாக இருப்பினும் மனிதர்களாகிய நாம் மிருகங்களில் இருந்து பிரித்துக்காட்டுகின்ற ஆறாவது அறிவான பகுத்தறிவினை கொண்டிருக்கின்றோம். ஒன்றிலிருந்து ஒன்றினை பிரித்து காட்டுவதுதான் பகுத்தறிவு. சாதாரன மனிதர்களின் பகுத்தறிவை விட விஞ்ஞானிகளின் பகுத்தறிவு ஆழமானது கண்டு கொண்ட தண்ணீரை வடிகட்டிக்குடிப்பது மனிதனின் பகுத்தறிவு. காணாத தண்ணீரை கண்டுபிடிப்பது விஞ்ஞானியின் பகுத்தறிவு. மிருகங்கள் பக்கவாட்டில் வளர்கின்றன. மாறாக உயர்ந்து மேல்நோக்கி வளர்கின்ற மனிதன் மற்ற பிராணிகளை காட்டிலும் மேலான பண்புகளை கொண்டிருக்க வேண்டும். இவ்வாறாக நடந்துகொண்டால் சகல ஜீவராசிகளை விட அதிக சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் நடைமுறையிலோ அவற்றை விட அதிகமான துன்பத்தையே அனுபவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளைஞர்கள் சகல சுகங்களையும் உடனுக்குடன் அனுபவிக்க வேண்டும் என ஆவல் கொள்கின்றார்கள். எந்த வித்தும் விழுந்தவுடனேயே மரமாகி விடுவதில்லை என்ற ஏதார்த்தத்தினை உணர மறுக்கின்றார்கள். இதனையே பாரதி மிக அழகாக சொல்கின்றார்.

*"பக்தி உடையார் காரியத்தில் பதறார்*
*வித்து முளைக்கும் தன்மை போல மெல்ல செய்து பயனடைவார்."*

ஓர் வரண்ட நிலத்தில் வித்து விழுந்து விட்டது. மழை இல்லை. அவ்வித்து மழைக்காக காத்திருக்கிறது. அமைதியாக இருக்கிறது. அது ஒரு தவம் என்றோ ஒருநாள் மழை வருகிறது. மழைத்துளி பட்டவுடன் இவ்வித்து கொஞ்சம் ஊறி பருத்து கொஞ்சம் கொஞ்சமாக இப்பூமியை பிளந்து மேலே வருகிறது. எத்தனை போராட்டங்கள்? எத்தனை வேதனைகள்? எத்தனை தண்டனைகள்? அதன் பின் மரமாக நிற்கிறது. "மரமாக வந்தபின் மழையை பூமிக்கு கொண்டு வரும் காரணியாக இருக்கின்றது".

இங்கு வித்து மாணவர்களாகிய இளைய சமுதாயத்தினை குறிக்கிறது. மழை கல்வி செல்வத்தினை குறிக்கிறது. மாணவர்களாகிய நாம் கல்வியினை கற்று எமது பிரதேச வளர்ச்சிக்கு வித்திட வேண்டும். ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நலிவுற்று இருக்கும் மற்றொரு விடயம் பொருளாதாரம் விவசாயம், மரக்கறி பயிர் செய்கை, புகையிலை தோட்டம், மீன்பிடி, சிறு கைத்தொழில் என்பன ஊர்காவற்றுறை பொருளாதாரத்தின் முதுகெலும்புகள். ஆனால் இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் ஊர்காவற்றுறை பிரதேசம் பொருளாதார அபிவிருத்திக்கேற்ப தன்னை நெகிழ்வாக்கம் செய்துள்ளதா? இன்றைய பொருளாதார அபிவிருத்தி மூளையை தொழில்நுட்ப விருத்தியுடன் சரியான விதத்தில் பயன்படுத்தலில் தங்கியுள்ளது. ஊர்காவற்றுறையின் முதுகெலும்பு விவசாயம் என்றால் தொழில்நுட்ப அறிவுடன் எப்படி விளைச்சலை அதிகரிப்பது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அபிவிருத்தி கண்டுள்ள விவசாய ஆராய்ச்சிகளால் எப்படி சூழலுக்கு பாதகமின்றி குறைந்த செலவில் குறைந்த கால அளவில் நிறைந்த வருமானம் பெறும் அறிவை நுகர்ந்து பிரயோகிக்க வேண்டும்.

எமது காவலூர் மண் பல சமூக விஞ்ஞானிகளையும் விவசாயம் சார் ஆராய்ச்சியாளர்களையும் பிரசவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப் பட்டுள்ளது. நிலத்தடி நீரினை பெறுவது மிகவும் சிரமமான நிலையில் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். அன்றைய மன்னர்கள் மழைநீரை சேமித்தார்கள். இன்றைய விஞ்ஞானிகள் கடல் நீரை குடிநீராக மாற்றுகின்றனர். இவ்வியூகங்களை தீட்டக்கூடிய பொறியியலாளர்கள் இப் பிரதேசத்தில் மலர வேண்டும். புவியியல் அறிவு, கணனி அறிவு, தொழில்நுட்ப அறிவு வினைத் திறனாகக் கொண்ட இளைஞர் சந்ததி நமது மண்ணுக்கு மிக அத்தியாவசியம். உயர்தரத்தில் கணித விஞ்ஞான பாடங்களை படிப்பது அவசியமாகின்றது. படிப்பது சமூக அந்தஸ்து என்ற நிலைமை மாறி சமூக கடமையாக எழுச்சி பெற வேண்டும்.

ஊர்காவற்றுறை மண்ணிற்கு வைத்தியர்களும், பொறியியலாளர்களும் எவ்வளவு அவசியமோ அத்துணை அவசியம். நல்ல சட்டத்தரணிகள், முகாமைத்துவ கணக்கியல் அறிஞர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் இத்தகையவர்கள் பிரசவிக்கப்பட வேண்டுமேயானால் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் அவர்களை ஊக்குவிப்பதற்கான பொருளாதார துணையும் அவசியமாகும். இத்தகைய பொறுப்பை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைகளின் துணையுடன் இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இளைஞர் கழகங்கள் என்றால் என்ன? ஊர்காவற்றுறையில் உள்ள இளைஞர் கழகங்களின் வகிபாகம் இதுவரை எப்படி உள்ளது? கழகங்களுக்கிடையேயான உதை பந்தாட்டப்போட்டி, வருடத்தில் ஓர் முறை இளைஞர் பாராளுமன்றத்தேர்தல் என்ற அளவில் மட்டுமே உள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றம் இளைஞர் கழகங்களினூடாக ஆற்றும் பணிகள் ஏராளம்! தாராளம்! இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர் விவகார அபிவிருத்தி அமைச்சு என்பன இளைஞர் கழகங்களை சட்டரீதியாக வழிப்படுத்தும் அதிகாரத்தை கொண்டுள்ளன.

1983ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் சக்தியை உச்சளவில் பயன்படுத்துவதனையும் இளைய தலைமுறையினரிடையே ஒழுக்கம், அர்ப்பணிப்பு, ஒற்றுமை, சகோதரத்துவம், இன மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வினை கட்டியெழுப்புவதனை தனது பாரிய இலக்காக கொண்டுள்ளது. இளைஞர் பாராளுமன்றத்தினை நடாத்துதல், பிரதேச அபிவிருத்திக்காக "கிராமசக்தி" உதவித்திட்டம், வருடாந்த இளைஞர் தேசிய விளையாட்டு விழா, youth got tatint விழா, இளம் கலைத்துறை சார்ந்தவர்களை விருது வழங்கி கௌரவிக்கும் கலாசார விழா, யோன்புர எனும் சர்வதேச இளைஞர் விழாவை ஆண்டு தோறும் 10000க்கு மேற்பட்ட இளைஞர் பங்களிப்புடன் நடாத்துதல், ஒவ்வோர் மாவட்டத்திலிருந்து 5 இளைஞர்களை அவர்களின் திறமை அடிப்படையில் தெரிவு செய்து வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கு அரச செலவில் அனுப்பி வைத்தல் போன்ற பாரிய வேலைத் திட்டங்களை பாரிய நிதி அனுசரனையில் மேற்கொள்வதென அவர்களின் சேவை விரிந்து செல்கின்றன.

இவ்வாறானவற்றை இளைஞரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தாது அதற்குரிய அதிகாரிகளின் குறைபாடே. எனினும் தென்னிந்திய திரைப்படங்களை அலசி ஆராயும் நாம் எமக்குரிய உரிமைகளை நாம் அறிந்திராதது இளைஞர் ஆகிய நமது குறைபாடுமேயாகும். இவ்வாறாக பல இயற்கையானதும் சில செயற்கையானதுமான வளப்பற்றாக்குறைகளை அனுபவிக்கும் இளையோராகிய நாம் எப்போதும் எம்மைச் சுற்றியுள்ள குறைகளையே சுட்டிக் காட்டுகின்றோமே ஒழிய நம்மில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பலவற்றை மறந்து விட்டோம். இல்லை, மறைத்துக் கொண்டிருக்கின்றோம்.

நம் கண்முன்னே காணும் வெற்றியாளர்களின் வெற்றிகளும் சாதனைகளும் அவர் பெறும் பராட்டும் மரியாதைகளும் வெகுமதிகளுமே மட்டுமே நம் கண்ணுக்கு புலப்படுகின்றன. ஆனால் எவ்வளவு துரோகங்கள், அவமானங்கள், தோல்விகள், கண்ணீர், வேதனைகள், வெட்கங்களை சந்தித்திருப்பார்கள். திறக்கும் என நினைத்த எத்தனை கதவுகள் மூடப்பட்டிருக்கும். நடக்கும் என எதிர்பார்த்த எத்தனை வாய்ப்புக்கள் நழுவியிருக்கும். இவை அனைத்தையும் தாண்டி எவன் ஒருவன் எனக்கான பணி என்ற ஒன்று உண்டு என பயணிக்கின்றானோ அவனே வெற்றியாளன். அவனே நாளைய வரலாற்றின் கதாநாயகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை ஒன்று ஞாபகம் வருகிறது. இராம கிருஷ்ண பரமாத்மா இறந்த பின்னர் அவரது மனைவியான சாரதாதேவி ராமகிருஷ்ண மடத்தின் காப்பாளர் ஆகின்றார். இவர் தனது ஆச்சிரம வேலைகளை முடித்துக்கொண்டு தனது தாய் வீட்டிற்கு சென்று வீட்டுப்பணிகளை செய்துவருவது வழக்கம். இவர் போகும்போதெல்லாம் இவரது அண்ணாமார், அவர்களது மனைவிமார் குழந்தைகள் இவரிடம் பணம் கேட்டு குடும்பச்சண்டை செய்வது வழக்கம். Mad House "முட்டாள் வீடு" போல் இருக்குமாம். இவற்றை எல்லாம் சாரதாதேவி அம்மையார், பொருட்படுத்த மாட்டாராம். ஒருநாள் இவரது சீடர் ஒருவர் இவருடன் வீட்டுக்கு சென்றபொழுது இவ் சண்டை சச்சரவுகளை பார்த்து மனம் நெகிழ்ந்து போனார். அம்மையார் தன் கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டின் பின்புறமுள்ள ஆலமரத்தின் கீழ் தியானத்தில் அமர்ந்தார். அங்கு சென்ற சீடன் பொறுக்கமுடியாமல் தாயே! என்ன இது? நீ எப்பேர்ப்பட்ட ஆள்? ராமகிருஷ்ணரின் மனைவி! விவேகானந்தரின் அன்னை! ராமகிருஷ்ண மடத்தின் பெரும் தலைவி! உன்னை சுற்றி எத்தனையோ சீடர்கள்! எந்த அருமையும் தெரியாமல் இப்படி பேசுகிறார்கள், கஷ்டம் கொடுக்கிறார்கள். ஏன் பொறுத்து இருக்கின்றாய்? சாரதாதேவி அம்மையார் மெல்ல கண் திறக்கிறார். "இந்த உலகம் இப்படித்தான் இருக்கும். இந்த மனிதர்கள் இப்படித்தான் இருப்பார்கள். இவர்களுக்கு நடுவே நின்று கொண்டுதான் நாம் செய்ய வந்த பணியை நாம் செய்து முடிக்க வேண்டும் என்று அன்னை சொன்னதாக அச்சீடர் பதிவு செய்கிறார்.

எம்மைச்சுற்றி உள்ள உலகம் சிக்கல் நிறைந்ததுதான். எம்மைச்சுற்றி உள்ள மனிதர்கள் நம்மை பல நேரங்களில் நோகடிப்பார்கள்தான். ஆனாலும் இவ்வாறான பாதையில் பல மனிதர்கள் பலவிதமான வெற்றிகளை பெற்றுள்ளனர் என்றால் நாமும் நமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நல்ல சொற்களோடும் புன்னகையோடும் சந்தோசத்தோடும் நம்மால் ஏன் செய்ய முடியாது?

வீழ்ந்தது நம் தவறில்லை வீழ்ந்ததும் எழாமல் அப்படியே சோர்ந்து கிடக்கின்றோமே அதுதான் நாம் செய்யும் நிகழ்காலத்தவறு. வீழ்ச்சியை எழுச்சியாக்குகின்ற, தளர்ச்சியை மலர்ச்சியாக்குகின்ற, தோல்வியை வெற்றியாக்குகின்ற பணியை இன்றைய இளைஞர்களின் இன்றியமையாத முதற்பணியாக அமைதல் வேண்டும். ஆனால் இன்றைய நம் சமுதாய இளைஞர்கள் நம் சமூகத்திற்கு செய்யும் பெரும் சேவைகள்தான் இவை.

* கல்லூரிகளுக்கிடையேயான துடுப்பாட்டப் போட்டியின் போது ஏற்பட்ட கலவரத்தில் 50 இளைஞர்கள் ஒன்றிணைந்து ஓர் இளைஞனை அடித்துக் கொலை.
* நகரின் பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் 500 பக்கெற் கஞ்சா மீட்பு.
* குடிபோதையில் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் மின்சார கம்பத்துடன் மோதி தலை சிதறிப்பலி.
* இரண்டு குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டு மோதலில் ஐவர் படுகாயம் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி.
* Face book காதலால் யுவதி தூக்கிட்டு தற்கொலை.
* பட்டப்பகலில் இளைஞர்கள் வீடு புகுந்து கைவரிசை காட்டியதில் 50பவுண் நகை பல லட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இளம் யுவதியின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு.
* மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களால் சங்கிலி அறுப்பு.
* பிறந்தநாள் கொண்டாடச் சென்ற இளைஞர் மூவர் கடலில் மூழ்கிப்பலி.
* வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் பல்கலைக்கழக மாணவன் வீதி விபத்தில் பலி

இவை போன்றவைதான் நமது தற்கால இளைஞர்கள் நமது சமூகத்திற்கு செய்யும் பொறுப்பான சேவைகள்.

"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே..." தரம் 05 : வயது 10 வரை பெற்றோர் தம் அரவணைப்பில் வளர்த்து பின் அரச பாடசாலைகளின் அனுசரணையில் வளர்ந்து பல்கலைக்கழகங்களில் வீரநடை போட்டு பட்டம் பெற்று வெளி வந்த பின்னரும் அரசு வழங்கும் வேலை வாய்ப்பிற்காகவே காத்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கு மரபு ரீதியான கல்விக் கொள்கைகளே காரணம் என நான் எண்ணுகின்றேன். சவால்களை எதிர்நோக்க நமக்கிருக்கும் துணிவின்மையும் இதற்கு காரணமாகலாம்.

அந்த வகையில் இலவசக்கல்வியும் இலவச மருத்துவமும் பெறக்கூடிய நாட்டில் பிறந்தது நாம் பெற்ற வரம். உலகின் சில நாடுகளில்தான் இலவசக்கல்வி முறைமை நடைமுறையில் காணப்படுகின்றது. ஒருசில ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பக்கல்விப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசக்கல்வி முறைமை உள்ள போதிலும் இடைநிலைப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவ்வாய்ப்பு வழங்கப்படவில்லை. கொடுப்பனவு செலுத்தியே கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது. இருந்தபோதிலும் ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை இலவசகமாக வழங்கும் பிரேசில், மொறிசியஷ் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய நாடுகளில் வரிசையில் இலங்கையும் ஒன்றாகும். 1940ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக்கல்வி வாய்ப்பின் மூலமே இலங்கை மக்கள் எழுத்தறிவு மிக்கவர்களாக உள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளின் சனத்தொகையில் 98.1% எழுத்தறிவு கொண்ட மக்களை கொண்ட நாடாக இலங்கை திகழ்கிறது. நாடு பூராகவும் 10194 பாடசாலைகளில் 4165955 மாணவர்கள் இலவசக் கல்வியின் பயனை பெறுகின்றனர். 235999 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இலவசமான கல்விப் போதனை மாத்திரமின்றி இலவச பாடநூல்கள், இலவச சீருடை, மதிய உணவு, மருத்துவ காப்புறுதி, கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு காலணி, ஒரு கிளாஸ் பால் என இலங்கை கல்வி அமைச்சின் சேவை அளப்பெரிய வரப்பிரசாதம். இதனால் பிள்ளைகளின் கற்றலுக்கான பணச்செலவு, பொருளாதாரச்சுமை பெற்றோர்களுக்கு குறைந்திருக்கிறது என்பதனை யாரும் மறுக்க முடியாது. இது மட்டுமன்றி புலமைப்பரிசில் உதவித்திட்டங்கள், 5ம் தர புலமைப்பரிசில் உதவி அதிதிறமை மிக்க மாணவர்களுக்கான புலமைப்பரிசில், மகாத்மகாந்தி புலமைப்பரிசில், டயலொக் புலமைப்பரிசில், சுஜாதா தியனிய புலமைப் பரிசில், செலிங்கோ திலிதறு புலமைப்பரிசில், ஸ்ரீலங்கா டெலிகொம், மக்கள் வங்கி மற்றும் சிங்கர் இலங்கை அனுசரணை புலமைப்பரிசில் என அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மாணவர்களை பொருளாதார ரீதியான தேய்வில் இருந்து காக்க முன்வந்த வண்ணமே உள்ளன. ஆனால் எம் இளைஞர் சமுதாயமோ எழுந்து முன்வர தயங்கிய வண்ணமே உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் குறைந்தது 2 வருடகால இலவசக்கல்வியை பெறும் ஒவ்வொரு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் பிரஜையும் இவ் இலங்கை மண்ணிற்கு கடமைப்பட்ட வர்களே. ஆனால் நடைமுறை வாழ்விலே வாகன சாரதிகளாகவும், வீடுவீடாக சென்றும் சந்தைப்படுத்தும் முகவர்களாகவும், வியாபார நிலையங்களில் விநியோஸ்தர்களாகவும், நடிகர்களாகவும், வெளிநாடு செல்பவர்களாகவுமே உள்ளனர். இவ்வாறான நிலைப்பாட்டிற்கு மக்களின் வரிப்பணத்தில் பல மில்லியன் ரூபா செலவிலான இலவசக்கல்வி முதலீடு அவசியம் தானா? என்ற கேள்வி எழுகின்றது.

இலவசக் கல்வியில் கற்ற கோட்பாடுகளையும் சமன்பாடுகளையும் வரை விலக்கணங்களையும் நடைமுறைப்படுத்துவோமேயானால்!

* குடிசைகள் அடுக்குமாடித்தொடர்களாக வான் எட்ட உயர்ந்திருக்கும்.
* பற்றைக்காடுகள் வயல்வெளிகளாகவும் விளைச்சல் நிலங்களாகவும் செழித்திருக்கும்.
* வெட்ட வெளிகளில் கைத்தொழில் பேட்டைகளும் தொழிற்சாலை நிறுவனங்களும் நிறைந்து காணப்பட்டிருக்கும்.
* வேலையற்ற இளைஞர் யுவதிகளை இனங்காண முடியாமல் போய் சிந்தனை யாளர்களையும், புரட்சியாளர்களையும், ஆராய்ச்சியாளர்களையும், புதிது புனைபவர்களையும் பரிணமித்திருக்கும்.
* புதுப்புது கண்டுபிடிப்புக்களாலும் வியூகங்களாலும் நாடு விருத்தியடைந்திருக்கும், தரமான உள்நாட்டு உற்பத்திகள் அதிகரித்து இறக்குமதிகள் நலிவடைந்து ஏற்றுமதிகள் அதிகரிக்கும்.
* குடிமக்கள் தன்னிறைவினை அடைந்திருப்பார்கள்.
* நாடு நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும்.

இவ்வாறு சொல்லில் அடங்கா எத்தனையோ பரிமாணங்களில் பயணித் திருப்போம். ஆனால் ஜதார்த்த வாழ்வில் சிந்தித்து செயலாற்ற வேண்டிய இளைஞர்கள் சிதறிக் கிடக்கின்றார்கள். இதனால் நாடும் நாட்டு மக்களும் சிதறிக்கிடக்கின்றார்கள்.

*"நல்லதோர் வீணை செய்தே - அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?*
*வல்லமை தாராயோ, இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே?"*

**எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து**
**மகிழ்ச்சி கொள்ளவில்லையோ,**
**அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது**

**- ஜேம்ஸ் ஆலன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுரிமைச் சின்னங்களின் சுரங்கம் - ஊர்காவற்றுறை

**செல்வி விதுஷா தேவதாஸ்,**
செயற்கை நுண்ணறிவு மற்றும் பொறியியல் கற்கைகள் பிரிவு,
MUVE (Pvt) Ltd

மரபுரிமைச் சின்னங்களை இனம் காண்பதிலும் பேணிப்பாதுகாப்பதிலும் அந்த மரபை வாழ்ந்து பார்ப்பதிலும் கொண்டாடித் தீர்ப்பதிலும் பெருமை கொள்வதிலும் அண்மித்த சில தசாப்தங்களாகத் தான் நமது நாட்டில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் குறிப்பாக பெருங்கற்கால பண்பாட்டின் போதே சிறத்தலடைந்த பண்பாட்டு வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்த நாகரீகமடைந்த மக்கள் சமுதாயம் ஒன்று வாழ்ந்திருந்தமைக்கான சான்றாதாரங்களையும் அவர்களது பண்பாடுகளையும் கொண்டிருக்கும் தீவகப்பிரதேசத்தில் காணப்படும் மரபுரிமைச் சின்னங்களை வெளிக் கொணர்வதிலும் பாதுகாப்பதிலும் அதனுடன் தொடர்புபட்ட பிரதேசங்களை துல்லியமான தொல்லியல் ஆய்வுக்குட்படுத்தி அவற்றைப் பிரகடனப்படுத்துவதிலும் இதுவரை அத்துறை சார்ந்த திணைக்களங்களோ நிறுவனங்களோ அல்லது அரச நிர்வாக மையங்களோ போதிய ஆர்வம் செலுத்தியதனைக் காணமுடியவில்லை. இந்நிலையில் தான் பெருங்கற்காலப் பண்பாட்டில் தொடங்கி, தீவகம் முழுவதனையும் ஆண்ட வெடியரசன் காலப்பகுதி உள்ளடங்கலாக ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி வரையும் அவற்றின் வரலாறுகளைப் பேசக்கூடிய தொல்லியல் சின்னங்களும் பண்பாட்டு மரபுரிமைச் சின்னங்களும் மறைந்தும் பரந்தும் சில இடங்களில் வெளித்தெரியக் கூடியதாகவும் தீவகமெங்கும் காணப்படுகின்றது. எனினும் ஊர்காவற்றுறை நிர்வாக எல்லைப் பரப்பிற்குள் இப்பிரதேசத்திற்கே உரித்தான மரபுரிமைச் சின்னங்களை இனங்கண்டு வெளிக் கொணர்வதும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதுமே இப் பத்தியின் எண்ணக்கருவாகும்.

**மரபுரிமை:**

மரபுரிமை என்பது; ஓர் மக்கள் குழுமம் ஆனது தலைமுறை தலைமுறையாக குழுவாக இணைந்து தாம் கற்றுக்கொண்ட நடத்தைகள், வாழ்வியல், சுற்றுச்சூழல், பின்பற்றிவந்த சமய நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் தொழில்கள், தொழில் நுட்பங்கள் உணவுப் பழக்கவழக்கங்கள், கலைகள் முதலான அம்சங்களைக் குறித்து நிற்கின்றது. மீண்டும் பொருத்திப் பார்க்கமுயாத இம் மரபுரிமைகள் ஓர் நாட்டினை அல்லது பிரதேசத்தினை அல்லது இனத்தினை அடையாளப்படுத்திக்காட்டும் வரலாற்றுப் பொக்கிஷங்களாகின்றன. ஓர் நாட்டின் அல்லது பிரதேசத்தின் அல்லது இனத்தின் பண்பாடானது இன்னொரு நாட்டு மக்களின் பண்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் போது அப்பண்பாட்டு அம்சங்களை அம்மக்கள் தொடர்ந்து பின்பற்றி வருவார்களேயானால் அவற்றையும் அவ்வின மக்களுக்குரிய மரபுரிமையாகக் கொள்ளலாம் என்பது மரபுரிமை சார்ந்த அறிஞர்களின் கூற்றாகவிருக்கின்றது. எமது மூதாதையர்களிடம் இருந்து வந்த உருவமற்ற சொத்து கலை அல்லது சம்பிரதாயத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டடங்கள், சமூகம் கலாசாரம் போன்றவற்றைக் குறிக்கும் இம் மரபுரிமைகளாவன வரலாற்றுச் சூழலில் ஒரு உள்ளீட்டு அம்சமாகக் கொள்ளப்படுவதுடன் இம் மரபுரிமைகள் இயற்கை மரபுரிமை கலாசார மரபுரிமைகள் எனவும் பகுத்தறியப்படுகின்றன.

**இயற்கை மரபுரிமைகள்**

பண்பாட்டில் இயற்கையானவையாகவும் நீண்ட பாரம்பரியங்களைக் கொண்டவையுமான ஆறுகள், மலைகள், நதிகள், தீவுகள் புராதன இடங்கள், மரங்கள், வனங்கள், (வனப் பிரதேசங்கள்) மற்றும் இயற்கைத் துறைமுகங்கள் என்பவற்றை இவை குறித்து நிற்கின்றன.

**கலாசார மரபுரிமை**

மக்களது வாழ்வியல் நடைமுறைகளில் பயன்படுத்தப்பட்டு வந்த தொன்மையான அனைத்துப் பொருட்களும் இதனுள் அடக்கப்படுவதுடன் இவை

1. பொருள்சார் பண்பாடு (தொட்டுணரக்கூடிய)
2. பொருள் சாரப் பண்பாடு (தொட்டுணர முடியாத)

எனவும் பகுக்கப்படுகின்றது. பொருள் சார் பண்பாட்டில் (தொட்டுணரக் கூடிய) மக்களின் வாழ்வியலில் பயன்படுத்தப்பட்டு வந்த வாழ்விடங்கள் வழிபாட்டிடங்கள், கிணறுகள், கேணிகள், குளங்கள், துறைமுகங்கள், புழங்கு பொருட்கள் என்பன அடங்குகின்றன. பொருள் சாரா (தொட்டுணர முடியாத) காலாசார மரபுரிமை அம்சங்களில் இலக்கியங்கள் சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள், மந்திரங்கள், மாந்தீரிகங்கள், வைத்தியம் மற்றும் கலைகள் போன்றவை அடங்குகின்றன.


**தொட்டுணர முடியாத மரபுரிமைச் சின்னங்கள்**

தொட்டு உணரமுடியாத பண்பாட்டு மரபுரிமைச் சின்னங்கள் எனும் போது குறித்த சமூகங்கள் மற்றும் குழுக்கள் தமது பண்பாட்டின், பாரம்பரியங்களின் பகுதிகளாக இனம் காணும் நடைமுறைகள் வெளிப்படுத்தல்கள், திறன்கள், அறிவு, என்பவை சார்ந்ததாகும். எடுத்துக் காட்டாக வாய்மொழி மரபுகள், ஆற்றுகைக் கலைகள், சுதேச மருத்துவ அறிவு, மரபார்ந்த திறன்கள் என்பவற்றைக் குறித்து நிற்கின்றது.

**மரபுரிமைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்**

மரபுரிமைகளைப் பற்றி மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு உலக மரபுரிமைகளைப் பற்றியும் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட அவை கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் என்ன என்பது பற்றியும் அறிந்திருப்பதுடன் நமது நாட்டின் மரபுரிமைச் சின்னங்களாக யுனெஸ்கோவால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்டவை பற்றியும் அறிந்து கொள்வதும் பயனுள்ளதாகும் எனவே அவை பற்றியும் சுருக்கமாக இங்கு நோக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Pigeon House - புறாக்கூடு


Sumaithangikkal - சுமைதாங்கிக்கல்


Light House - வெளிச்சவீடு


Aavuranchikal - ஆவுரஞ்சிக்கல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக மரபுரிமைகளும் யுனேஸ்கோ வகிபாகமும்**

உலகெங்கும் மரபுரிமைகளையும் அவை சார்ந்த சின்னங்களையும் பேணிப் பாதுகாப்பில் ஐக்கியநாடுகள் அமையத்தின் ஓர் அங்கமான யுனெஸ்கோ (UNESCO) வின் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலகின் மிகச் சிறந்த அமைவிடங்கள் யுனெஸ் கோவினால் உலகமரபுரிமை என பெயர்குறிப்பிடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கு நிகரற்ற சர்வதேசப் பெறுமதியும் காணப்படுகின்றது.

உலக மரபுரிமைகளில் ஒன்றாக அல்லது உலக மரபுரிமை சின்னங்களில் ஒன்றாக ஏதாவதொன்றை அங்கீகரித்து பட்டியலில் இணைத்துக் கொள்ள வேண்டுமாயின் அதனை அங்கீகரிக்க சுமார் 10 வகையான வரையறைகள் அதாவது அளவு கோல்களை யுனிசெப்பின் மரபுரிமைக்கான குழு வெளியிட்டிருப்பதுடன் குறைந்தபட்சம் அதில் ஒன்றையேனும் அம் மரபுரிமைச் சின்னம் கொண்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலக மரபுரிமைப் பட்டியலில் இணைத்துக் கொள்வதற்கான அமைவிடங்கள், உலகின் மிகச்சிறந்த பெறுமதி மிக்க இடங்களாக இருப்பதுடன் மேலே கூறப்பட்டது போல் பத்து அளவு கோல்களில் குறைந்தபட்சம் ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவையாவன;

1. மனிதப்படைப்பாளியான மேதையின் தலைசிறந்த படைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துதல்.
2. ஓர் முக்கியமான மனித விழுமியத்தைப் பரிமாறிக் கொள்ளுதல்.
3. நீண்ட காலத்திற்கு முற்பட்ட அல்லது உலகின் கலாசார பிரதேசத்திற்குள் உள்ள கட்டிடக் கலையின் அல்லது தொழில் நுட்பத்தின் அபிவிருத்தியைப் பற்றிய தாயிருத்தல்.
4. நினைவுச் சின்ன கலைகள் நகர திட்டமிடல் அல்லது நிலத்தோற்ற வடிவமைப்புக்கள்.
5. கலாசார பாரம்பரியத்தின் தன்னிகரற்ற தன்மைக்கு அல்லது குறைந்தபட்சம் விதிவிலக்கான தன்மைக்கு சான்று பகர்தல் அல்லது வாழ்ந்து கொண்டிருக்கின்ற அல்லது மறைந்து போன நாகரீகம் என்பவற்றைக் கொண்டிருத்தல்.
6. மனித வரலாற்றில் குறிப்பிடத்தக்க படிமுறைகளை வெளிப்படுத்துகின்ற ஓர் கட்டிடத்தின் வகை, கட்டிடக்கலை அல்லது தொழில்நுட்ப சேர்க்கை அல்லது நிலத்தோற்றம்.
7. கலாசாரத்தை அல்லது கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாரம்பரிய மனித குடியேற்றம், காணிப்பயன்பாடு அல்லது கடல்பயன்பாடு அல்லது சூழலுடன் மனித ஊடுருவல், குறிப்பாக மாற்ற முடியாத மாற்றங்களின் கீழ் வந்துள்ள விடுபடும் நிலைபற்றிய மிகச்சிறந்த உதாரணம்.
8. உலகில் குறிப்பிடத்தக்க சிறப்புள்ள இலக்கியப்படைப்புக்கள் மற்றும் கலையம் சங்களுடன் கருத்துக்களுடன் அல்லது நம்பிக்கைகளுடன் நேரடியாக அல்லது உணரக் கூடிய வகையில் நிகழ்வுகளுடன் தொடர்புடைய அல்லது உயிர்வாழ்கின்ற பாரம்பரியங்கள். இந்த அளவுகோல் ஏனைய அளவு கோல்களுடன் இணைத்துப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது என குழு கருதுகின்றது. அதி சிறந்த உலக அதிசயத்தை அல்லது விதிவிலக்குள்ள இயற்கை அழகைக் கொண்டுள்ள மற்றும் அழகியல் முன்னேற்றமுள்ள உள்ளடக்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வாழ்க்கைப் பதிவுகள் உட்பட பூமியின் வரலாற்றின் பாரிய படிநிலைகளைப் பிரிதிநிதித்துவப்படுத்துகின்ற மிகச் சிறந்த உதாரணங்கள், நிலவடிவங்களின் அபிவிருத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குறிப்பிடத்தக்க புவிச்சரிதவியல் அல்லது புவிச்சரித தோற்றங்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குறிப்பிடத்தக்க இயற்கை சார்ந்த பூகோளம் அல்லது உயிரியல் சார்ந்த பூகோளம், நன்னீர், கரையோர மறும் கடல்சார் இயற்கை முறைகள் மற்றும் தாவரங்கள் விலங்குகள் சமூகம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகச் சிறந்த உதாரணங்கள்.

10. அறிவியல் மற்றும் பாதுகாப்பு கண்ணோட்டத்தில் மிகச்சிறந்த உலகப் பெறுமதியுள்ள அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள இனங்கள் உள்ளிட்ட உயிர்ப்பல்வகைமை இருந்த வாழ் விடங்களைப் பாதுகாப்பதற்காக மிக முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க இயற்கை வாழ்விடங்கள் உள்ளடக்கியவை.

இவையே அவ்வளவு கோல்களாகும். இதுவரையிலும் உலகின் மரபுரிமை அமைவிடங்களாக 1052 அமைவிடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 812 கலாசார அமைவிடங்களாகவும் 203 அமைவிடங்கள் இயற்கை மரபுரிமை அமைவிடங்களாகவும் 35 அமைவிடங்கள் கலாசார மற்றும் இயற்கை அமைவிடங்களாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன. இலங்கையிலும் 08 அமைவிடங்களில் 02 இயற்கை மரபுரிமை அமைவிடங்க ளாகவும் 06 கலாசார அமைவிடங்களாகவும் பட்டியலிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் காணப்படும் உலக மரபுரிமை அமைவிடங்ள் (யுனேஸ்கோ பட்டியல் படி)

1. அநுராதபுர புனித நகரம் -1982 (கலாசார மரபுரிமை)
2. பொலநறுவை புராதன நகரம் -1982 (கலாசார மரபுரிமை)
3. சிகிரியா புராதன நகரம் -1982 (கலாசார மரபுரிமை)
4. கண்டி புனித நகரம் -1882 (கலாசார மரபுரிமை)
5. சிங்கராஜவனம் (வனஒதுக்கம்) -1982 (இயற்கை மரபுரிமை)
6. காலி பழைய நகரமும் அதன் கோட்டையும் -1988 (கலாசார மரபுரிமை)
7. தம்புள்ள கோவில் -1991 (கலாசார மரபுரிமை)
8. இலங்கையின் மத்திய மலைநாடு -2012 (இயற்கை மரபுரிமை)

**மரபுரிமைச் சின்னங்களின் சுரங்கம், ஊர்க்காவற்றுறை.**

யாழ்குடா நாட்டில் கடலின் முகப்பாக நீண்டும் அரை இயற்கைத் துறை முகத்துகத்துக்கேயுரிய பண்புகளையும் கொண்டிருக்கும் ஊர்காவற்றுறையானது தீவுக் கூட்டங்களில் மிகப்பெரியதாகக் காணப்படுகின்ற வேலணைத்தீவின் ( லைடன்) வடமேற்குப் பகுதியிலும், காரைநகரிஸ் (முன்னைய காரைதீவு) க்கு தென்மேற்கில் மிக ஒடுங்கிய ஆழமான கடற்பரப்பால் பிரிக்கப்பட்டுக் காணப்படினும் தீவுகள் அனைத்தையும் (காரைநகர் தவிர்ந்த) இணைத்த ஊர்க்காவற்றுறைத் தேர்தல் தொகுதியாகவும் நீதி நிர்வாக நடவடிக்கைகளில் (காரைநகரையும் ஏனைய தீவுகளையும் இணைத்து) அனைத்து தீவுகட்குமான நிர்வாக அமைப்பாகவும் காணப்படுகின்றது. நாகர்களதும் மற்றும் திராவிடர்களதும் வாழ்விடமாக ஆதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Heritage Homes - பாரம்பரிய வீடுகள்








## Harbours - துறைமுகங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கொண்டே அறியப்பட்ட மற்றும் விளங்கி வந்த தீவகத்தையும் உள்ளடக்கிய ஊர்காவற்றுறைப் பிரதேசமானது அண்மித்த காலம் வரையான தொல்லியல் ஆய்வுகளின் படி பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரியதும் சிறத்தலடைந்த பண்பாட்டு நாகரிகங்களையும் கொண்ட மானுட சமூகத்தின் வாழ்விடமாக விருந்தது என்பது ஆய்வாளர்களினால் வெளிக் கொணரப்பட்ட சான்றுகள் மூலம் நீருபிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம், பெருங்கற் பண்பாட்டுக் காலம், வெடியரசன் மற்றும் அவனது முன்னோர்கள் ஆட்சிக்காலம், அடுத்தடுத்து வந்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்கள் காலம் தென்னிலங்கை அரசர்கள் காலம் மற்றும் தம்மைத் தாமே சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள்? என்று அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் காலம், தென் இந்திய படையெடுப்பாளர்கள் காலம் என்று எக்காலத்தினை ஆய்வுக்குட்படுத் தினாலும் அனைத்துக் காலங்களிலும் ஊர்காவற்றுறையிலும் அதனை அண்டிய தீவுக் கூட்டங்களிலும் மக்கள் வசித்தமையும் சிறந்த பண்பாட்டுடன்கூடிய சமூகங்கள் வாழ்ந்த மையையும் சான்றுகள் நிரூபிக்கின்றன.

ஆதிக்குடியேற்றம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மாட்டுக்காலையை அண்டிய கரம்பொன் மேற்கு பருத்தியடைப்பு மற்றும் ஊறணி அதாவது ஊருண்டிக் கோட்டை அமைந்திருந்த பிரதேசம் முதற் கொண்டு சாட்டி, அல்லைப்பட்டி, நாரந்தனை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த தொல்லியல் சான்றுகள் மேலும் இதனை மெய்ப்பிக்கின்றன. அத்துடன் இங்கு காணப்படும் மரபுரிமைச் சின்னங்களும் இப்பிரதேச மக்களது கலாசார பண்பாட்டு வாழ்வியலுக்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

இங்கு காணப்படும் கலாசார மரபுரிமைச் சின்னங்களில் பெரும்பாலானவை இவ்விடத்திற்கேயுரிய தனித்துவம் கொண்டவையாகக் காணப்படும் அதே வேளை வேறு சில கலாசார மரபுரிமை அம்சங்கள் ஏனைய இடங்களில் உள்ளது போல் காணப்படினும் அவற்றினை நுணுகிப் பார்க்கும் போது பல நுட்பமான வேறுபாடுகளையும் இங்கு காணக் கூடியதாக விருக்கின்றது. இடவிரிவினை அஞ்சி இம் மரபுரிமைச் சின்னங்களைப் பற்றி தனித்தனியே விபரிப்பதனை தவிர்ப்பதுடன் பாதுகாக்கப்பட வேண்டிய இம் மரபுரிமைச் சின்னங்களின் பெயர்ப் பட்டியல் மட்டுமே இங்கு தரப்படுகின்றது.

**ஊர்காவற்றுறையின் இயற்கை மரபுரிமை அமைவிடங்கள்:**

1. பருத்தித்தீவு
2. புளியந் தீவு
3. கண்ணகி அம்மன் கோவில் துறை
4. ஊர்காவற்றுறைத் துறைமுகம்
5. ஊருண்டி (ஊருணிப்) பிரதேசம்

**கலாசார மரபுரிமைப் பிரதேசங்கள்:**

1. கடற் கோட்டை
2. ஊருண்டிக் கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆவுரஞ்சிக்கல்
4. சுமைதாங்கிக்கல்
5. நடுகல் (நினைவுக்கல் - கல்லறை)
6. வீரன்கல் (வீர நாராயணன் கல்)
7. புறாக் கூடு
8. வெளிச்ச வீடு
9. அன்ரன் வில்லா மாளிகை
10. கத்தோலிக்க தேவாலயங்கள்
11. ஆலயங்கள்

**தொட்டுணர முடியாத மரபுரிமைச் சின்னங்கள்:**

1. அரிவு வெட்டுப் பாடல்கள்
2. ஒப்பாரிப் பாடல்கள் (ஒப்பாரி இலக்கியங்கள்)
3. மாரியம்மன் தாலாட்டு.

**சடங்குகளும் நம்பிக்கைகளும்:**

1. கோயில் ஆற்றுகைச் சடங்குகள்
2. மகப்பேற்றுக்கான பறைமேளச் சிகிச்சை
3. சடங்கு நிலைப்பட்ட கரணம்

**பாரம்பரிய விளையாட்டுக்கள்:**

1. கிட்டிப்புள்
2. தட்டுமறித்தல் (கிளித்தட்டு)
3. கைக் கொட்டுச் சவாரி

**நாட்டுக் கூத்து கலைமரபு:**

1. கத்தோலிக்க கலைமரபு
2. இந்துக் கலைமரபு

**கைவினைக் கலைகள்:**

விரிவினை அஞ்சி இவ் மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய விபரமான தகவல்களை இங்கு குறிப்பிடமுடியவில்லை.

**நிறைவாக**

ஊர்காவற்துறை துறைமுகமானது அதன் இட அமைவுடன், பாதுகாப்பு மற்றும் கேந்திர முக்கியத்துவமும் காரணமாக சுதந்திரமடையும் வரை மிகவும் புகழ்பெற்றிருந்தது வரலாற்றுக்காலம் முதலே இங்கு சர்வதேச கப்பல் போக்குவரத்தும், வணிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் வரலாற்றுக் காலமுதலே சர்வதேச யாத்திரிகர்களும், வர்த்தகப் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களும் வந்து போகக் கூடிய பாதுகாப்பான இயற்கைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகமாக்க காணப்பட்டதுடன் ஐரோப்பியரது காலனித்துவ ஆட்சியின் பாதுகாப்பு அரணாகவும் நிர்வாக மையமாகவும் விளங்கியதுடன் பெருங்கற் கால பண்பாட்டு நாகரிக மக்கள் கூட்டத்தின் வாழ்விடமாகவும் விளங்கியது. எனவே சுதேச, விதேச கலாசார பண்பாட்டு கலவைகளும் ஏற்படலாயிற்று. அதேவேளை தனக்கே உரித்தான கலாசார மரபுரிமைசார் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மணற் கேணியைத் தோண்டும் தோறும் ஊற்றுநீர் சுரந்து வருவது போன்றும் கனிமச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்ட கனிமங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும் சுரங்கம் போன்று மரபுரிமைச் சின்னங்களைத் தேடி, மரபுரிமை அமைவிடங்களை ஆய்வுக்குட்படுத்தும் போதும் மேலும் மேலும் மரபுரிமைச் சின்னங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். இதுவரையும் அடையாளமிடப்பட்ட மரபுரிமைச் சின்னங்களை வருங்காலச் சந்ததியிடம் ஒப்படைப்பதுடன் நடுநிலையானதும் அறிவியல் ரீதியானதுமான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதுடன் ஆய்வுக்குட்படுத்தப்படாது கிடைக்கும் தொல்லியல் ஆய்வுக்குரிய பகுதிகளை இனம் கண்டு தொல்லியல் மற்றும் வரலாற்றுத்துறையியல் சார் பீடங்கள் துரிதமாக அவற்றை ஆய்வு செய்து அவற்றை ஆவணப்படுத்தி பாதுகாத்து வருங்கால தலைமுறைக்கு கையளிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.


ஊருண்டிக் கோட்டை


ஊர்காவற்றுறை கடற்கோட்டை


ஊர்காவற்றுறை இறங்கு துறையிலிருந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்து நினைப்பிருக்கு!

தம்பாட்டியூர் நிவிதன்

ஆறாத காயங்கள் கண்டு
ஆறிய எம்மிதயமெங்கும்
தீராத நினைப்பாய் தினம்
தித்திக்கிறது தீவகத்து நினைப்பு!

அறியாத வயதினிலே
அயலூர் செல்வதென்றால்
அன்னையின் முந்தானை பற்றி
அவள்பின் நிழலாய் சென்று
அல்லைப்பிட்டி சோதனையை
அச்சத்தோடு கடந்துபோனது

தட்டிவாகனங்களில் சிலநேரமும்
இ.போ.ச பேருந்தில் பலநேரமும்
சாளரத்தின் அருகமர்ந்து
குன்றுங்குழிப் பாதையிலே
குதூகலமாய் பயணித்தது
கணமும் மறவாது
நிதமும் நினைவிருக்கு

ஊர்விட்டு நகருக்கு
நகர்தென்றால் இருவிழிப்பயணம்
பண்ணைவரை ஒருபயணம்
பண்ணையைத் தாண்டமறுபயணம்
நகருக்கு சென்றுவர
நாளொன்றே தேவையானது
நகலாய் இன்னும் நினைவிருக்கு

அயல் கோவில் திருவிழாக்கெல்லாம்
அணியெடுத்துப் போவதும்
அன்னதானம் உண்டதும்
அறியாதவரை நட்பாக்குவதும்
அதிலும் நாகம்மாள் கோவில்
அன்று போனதெல்லாம்
இன்றுபோல் நினைப்பிருக்கு

கோலாகலமாய் கோவிலில் போட்ட
கூத்துக்களும் கச்சேரிகளும்
சின்னமணி ஐயாவின் வில்லிசையும்
கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி தவில் கச்சேரியும்
தாளம் போட்டே நிதம்
தவறாமல் பார்த்தது
தளர்வின்றி இன்னும் நினைவிருக்கு

கற்பகதருக்களின் வளங்களை
பொய்யாய் களவாடி மாட்டாது
நுங்குகடித்ததும் பனங்காய்
பொறுக்கி பணியாரம் சுட்டதும்
பாத்திபோட்டு ஒடியல் எடுத்ததும்
பால்மனதில் பசுமையாய்
நினைவிருக்கு

வெற்றுப்பேணி சிரட்டையெல்லாம்
வெறுமை நேரம் நீக்க
பேணிப்பந்துக்காய் பயன்பட்டதும்
பூத்த பூவரசில் வெட்டிய
கிட்டிப்புள் விளையாட்டும்
கிளித்தட்டு ஒப்பெல்லாம்
ஓயாது நினைவிருக்கு

ஐந்து ரூபாய் காசுக்காய்
அம்மாவோடு செல்லப் போர் நடாத்தி
பனிக்கூள்காரனிடம்
பனிக்கூள் வாங்கியதும்
தும்புமுட்டாசு திண்டதும்
வண்ணமிட்ட குதப்பி வெதுப்பிக்காய்
சண்டையிட்டதும் இன்னும் நினைவிருக்கு

ஆயிரமாயிரம் அனுபவம்
கண்ட என் மனதில்
இன்னும் அழியாத
ஆழ் அனுபவமாய் இருக்கு
தீவகம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் அடங்கியும் அடங்காத மனச்சுமைகள்

திரு. இராசேந்திரம் சிந்துஷன்,
புளியங்கூடல்.

காலைச் சூரியன் கதவினைத் தட்ட வரக்கூடாத விருந்தாளி தேடி வந்தது போல ஏக்கத்துடன் கண்விழித்தார் கமலா நேற்றைய பசியின் மிகுதியாய் பாரமாய் போன உடலை மெல்ல அசைத்து வலிப்போடு கதவினைத் திறந்தார். அங்குமிங்கும் நோட்டமிட்டவள் வீதியில் எங்கும் சன நடமாட்டத்தைக் காணாதவள் அன்றும் ஊரடங்கு தளர்த்தப்படாததை உறுதி செய்து கொண்டு மீண்டும் பெருமூச்சு விட்டபடியே குடிசைக்குள் புகுந்தாள் தம்பியாவது எழும்புங்கோ மணி ஏழாச்சுது என்று பிள்ளைகளை அதட்டியபடியே பசியில் வாடிக்கிடந்த அவர்களின் முகத்தை தடவிக் கண்ணீருடன் முத்தமிட்டுக் கொண்டாள்.

ஈழப்போரின் வடுச் சுமந்து கட்டிலில் படுக்கையாய் கிடந்த கானவனின் அருகில் அமர்ந்து "இஞ்சேயப்பா, இண்டைக்கும் கேவியோ எடுக்கேல்லப் போலக் கிடக்குது. றோட்டில் ஒரு சனத்தையும் காணேல. கூலி வேலைக்குப் போனாலாச்சும் ஏதாவது வாங்கி வரலாம். இந்தப் பாழாப்போன கொரோனாவால் அதுக்கும் வழியில்ல. இப்பிடி எத்தின நாளுக்குத்தான் வைத்த காயப்போடுறது? பாலனுகள் பாவமல்லோ, பசியால் சோர்ந்து போட்டுதுகள். என்ன பாவம் செஞ்சதுகளோ - என்ர வயித்தில் பிறந்து போட்டுதுகள்" என்று கண்ணீர் விட்டாள் கமலா.

என்னப்பா செய்யுது எனக்கு ஏலுமான்டா விறகு வெட்டியாச்சும் ஏதாவது செய்திடலாம் நானும் இப்பிடி உனக்கு பாரமாய் போட்டன் எனக்கும் பார்வையாளுக்குமா நீ இப்படிக் கஸ்ரம்பாந்தாய்" என தன்டாங்கு ஆதாங்கத்தை கொட்டிக் தீர்த்தான் சந்திரன் கவலைப்படாத யுங்கோ படைச்சவன் எப்படியோ படியலப்பான் தானே நான் போய் தேத்தண்ணி கொண்டு வாரன் நீங்க வாயக் கொப்பளியுங்கோ" என்று கையளித்த கண்ணீரை எடுத்து அருகில் வைத்து விட்டு அப்படியே நாடினாள்.

"அம்மா எனக்குப் பசிக்குது. நேற்றும் அப்படித்தான் தந்தியள். அப்ப ஏதாவது செய்து தாங்கோ" என்றான் பத்து வயது நிரம்பிய கமலாவின் மூத்த மகன் கண்ணன். "பொறுடாப்பா, கேவியோ எண்டு கடையெல்லாம் பூட்டிக் கிடக்கு. கொஞ்ச நேரத்தால் போய் உள்ளால ஏதாவது வாங்கியாறன்" என்று கமலா கூறி முடிப்பதற்குள், "எனக்கும் பசிக்குதம்மா...." என்று சிணுங்கிய படி வந்து நின்றாள் கண்ணனின் தங்கை மாலதி. "தாறத்துக்கு ஒண்டும் இல்ல தங்கம், இந்தாங்கோ இப்ப இந்த தேத்தண்ணிய குடியுங்கோ. அம்மா ஓடிப்போய் கடையில ஏதும் வாங்கியாறன்" என்றபடி பையொன்றை எடுத்துக்கொண்டு அவசரமாக நடந்தாள் கமலா.

பிள்ளைகளின் வார்த்தைகளின் ஆதங்கத்தால் வீரியமாய் புறப்பட்டவள் கடை நெருங்க நெருங்க கூனிக்குறுகியபடியே நடக்கத் தொடங்கினாள். ஏற்கனவே கொடுக்க வேண்டிய கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கி நிறைய இருக்குது. இதுக்க எப்படி திருப்பியும் கேக்குறது..... கேட்டால் தருவாரோ... இப்ப என்ன செய்யுறது..." என்று மனதோரம் பல கேள்விகள் போட்டி போட்டுக்கொண்டன. ஆனாலும் வேறு வழியின்றி கடைக்குள் நுழைந்தாள் கமலா.

"என்ன கமலா, இந்தப் பக்கம் வந்திருக்கிறாய். காசேதும் புழங்குதோ... கனநாளாய்ப் போச்சுது. நானும், நீ தருவாய் தானே எண்டு கேக்காமல் விட்டுட்டன்" என்று சற்று அதட்டலான தொனியில் கேட்டார் கடைக்காரர். "ஐயா கேவியோ போட்டதால் இப்ப ஓரிடத்திலயும் வேலையுமில்லை. அதுதான் கொஞ்சம் கஸ்ரமா கிடக்குது. எப்படியாவது வாற மாசமளவில் காசு தந்து போடுவன்" என்று குரலில் வருத்தத்துடன் சொல்லி முடித்தாள் கமலா. "சரி, சரி உன்னில நம்பிக்கையிருக்கு. கஸ்ரப்பட்டாலும் கண்ணியத்தோட வாழுறவள் நீ. அந்த நம்பிக்கை கெட்டுப் போகாமல் இருந்தால் சரிதான்" என்றார் கடைக்காரர். சற்று யோசித்தவள் மேலும் அங்கு நிற்க மனமில்லாமல் கால்போன போக்கில் நடக்கத் தொடங்கினாள்.

நீண்டநாள் தவம் கிடந்து நொந்தவனுக்கு கடவுளே காட்சி தந்தது போல அவன் வார்த்தைகள் அவள் செவிவழி தேனாய் கொட்டியது. இனியும் தாமதிக்கக் கூடாது என எண்ணி மண்டபம் நோக்கி விரைந்து புறப்பட்டாள் கமலா. அந்த நிமிடத்தில் இவள் மனதில் தோன்றிய மகிழ்ச்சியை அவளால் வெளிப்படுத்தவே முடியவில்லை. அதுவும் சில நிமிடத்திற்கு மேல் நீடிக்கவில்லை. ஓட்டமும் நடையுமாக கோயில் மண்டபத்தை வந்தடைந்தாள் கமலா. அங்கு அவர்கள் கிராமத்திற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் அனைவரையும் ஒழுங்குபடுத்தி வரிசையில் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை விநியோகம் செய்து கொண்டிருந்தார். இவரிடம் சென்ற கமலா, "எனக்கும் சாமான் தருவிங்களா....." என்று தயவான குரலில் கேட்டாள். "உங்கட பெயர் இந்தப் பட்டியலில் வரேல்ல. அடுத்ததில்தான் வரும். போயிற்று அடுத்தமுறை வாங்கோ..." என்று அதிகாரத் தொனியில் பதிலளித்தார் அதிகாரி.

"ஐயா என்ர குடும்ப நிலைமை உங்களுக்குத் தெரியும் தானே? வேலை ஒண்டும் இல்லை. சரியான கஸ்ரம். நீங்க பெரிய மனசு பண்ணி இந்த உதவியை மட்டும் செய்தால் புண்ணியமாய்ப் போகும்..." என்று மீண்டும் தொடந்தாள் கமலா. "உங்களுக்கு ஒருக்கா சொன்னா விளங்காதோ? இங்க உங்களுக்கு மட்டும்தான் கஸ்ரமா? எல்லாருக்கும் கஸ்ரம்தான்" என்று கோபம் கொப்புளிக்க வார்த்தைகளால் அர்ச்சனை செய்தார் அதிகாரி.

"உங்கட பெயர் வந்தா கூப்பிடுவம். இப்ப போங்கோ" என மீண்டும் அதிகாரத் தொனியில் பதிலுரைத்தார். "ஐயா உங்களைத்தான் மலைபோல நம்பி வந்தனான்" இந்த உதவிய மட்டும் செய்து தந்தா ஆயுசுக்கும் நீங்க தானய்யா எங்களுக்கு கடவுள். பிள்ளையள் பசியில இருப்பினம். நான் ஏதாவது கொண்டு போனாத்தான் இண்டைக்கு எங்கட வீட்டில அடுப்பெரியும்" என்று சொல்லி முடித்தாள்.

செவிகள் இரண்டிலும் அவள் குழந்தைகளின் பசிக்குரல் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன. "ஐயோ, நான் என்ன செய்வன்? இப்படியே வீட்டிற்குப் போனால் பிள்ளையள் இப்ப பசியில என்ன செய்யுங்களோ தெரியலயே....... கடவுளே! என்னை ஏன் இப்படி புலம்ப வைக்கிறாய்" என்று புலம்பியபடியே தெருவோர அரச மரத்தடியில் அமர்ந்துகொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையில் தன்னை மறந்து போனவளாக இருக்கையில், ஒரு குரல் தட்டியெழுப்பியது. "என்னடி கமலா, ஏதும் பிரச்சனையோ? இதில இருக்கிறாய்" குரல் வந்த திசையை நோக்கினாள் கமலா. "வாங்கோ சாந்தி அக்கா, என்னவாம் நாட்டில் பிரச்சினையள்? எப்ப கேவியோ எடுப்பாங்களாம்? வீட்டில உலைக்கு அரிசியில்ல. கஸ்டமா கிடக்குது. வேலைக்குப் போனாலாச்சும் உழைச்சு சாமான் சக்கட்ட வாங்கிப் போடலாம். இப்ப ஒண்டுக்கும் வழியில்லாமல் கிடக்குது" என்று தன் வேதனையைக் கொட்டினாள் கமலா. "என்னடி பிள்ளை செய்யுறது, கோதாரி போன வைரஸ் ஒண்டு எங்கள இப்படி சோதிக்குது. கடையளுக்குப் போனாலும் அவங்கள் கொள்ளையடிக் குறாங்கள். எங்கட பிழைப்பு நாய் பிழைப்பா போச்சுதடி" என்று தன் பங்கு ஆதங்கத்தைக் கொட்டினாள் சாந்தி.

இருவரும் தங்கள் வேதனையைச் சொல்லிக்கொண்டிருக்கவே மணி பத்தாகியது. வீட்டில் கண்ணனும் மாலதியும் கமலாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். கண்ணன் தங்கையை, "அம்மா வந்திடுவார்" என்று சமாதானம் செய்துகொண்டிருந்தான். பிள்ளைகள் தன்னை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்று உணர்ந்த கமலா, வேதனையின் உச்சத்தை எட்டிக்கொண்டிருந்தாள். அப்போது அந்தத் தெருவழியே வந்த இராமன், "இஞ்ச கமலாக்கா, உங்களை எங்கையெல்லாம் தேடுறது? நிறுவனத்தால ஏதோ சாமான் குடுக்கிறாங் களாம். அதில உங்கட பெயரும் இருக்குதோ தெரியாது. கோயில் மண்டபத்திற்கு வரட்டாம்" என்று ஒரே நடையில் கூறி முடித்தான்.

"ஒண்டும் இல்லையெண்டா குடும்பத்தோட தெருவில பிச்சை எடுக்க வேண்டியது தானே? ஓசியில ஏதாவது குடுக்கினம் எண்டா ஓடி வர வேண்டியது. இதே உங்களுக்கு வேலையாய்ப் போச்சு" என்று கடும் வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தார் அதிகாரி பனையேறி விழுந்தவனை மாடேறி மிதித்தது போல அவன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கமலாவின் இதயத்தை ஈட்டியாய்த் துளைத்தன. அங்கு நின்றவர்களும் தங்கள் பங்கிற்கு ஏதோ முணு முணுத்துக் கொண்டனர். அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாதவளாய் கண்ணீர் கானத்தோடு நடைப்பிணமாய் நடக்கத் தொடங்கினாள் கமலா. அவன் வார்த்தைகள் செவிகளில் ஒழிந்த பாடில்லை. மீண்டும் மீண்டும் ஒலிக்கவே செய்தன. மண்டபத்தில் இருந்து வெளியேறியவளுக்கு எங்கு செல்வது, யாரிடம் உதவி கேட்பது என்று ஏதும் புரியவில்லை. தன் பிள்ளைகள் பசியோடு தன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் என்ற எண்ணம் மட்டும் அவளை மீண்டும் வலிகளுக்குள் தள்ளியது.

"இன்னும் இப்படி எத்தனை நாட்களுக்குத்தான் வேலையில்லாமல் சிரமப்படுகிறது? குழந்தைகளை எத்தனை நாட்களுக்குத் அரைவயிறு காயப்போடுவது? எத்தனை பேரிடம் உணவுக்காய் கெஞ்சுவது?" என்று பலவாறாக நினைத்துத் தன்னை வருத்திக்கொள்ள, கண்கள் குளமாகியது. அவள் கண்களில் இருந்து விழுந்த கண்ணீர்த்துளி தரையில் பட்ட அந்த நொடி அருகிலிருந்த கோயில் மணி அவள் செவிகளில் ஒலித்தது. மனிதம் வாழா உலகில் தெய்வத்திடமே வேண்டிக்கொள்ளலாம் என எண்ணியவள் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலை அண்மித்த போதே அவளுக்குள் ஒரு நம்பிக்கை ஊற்றெடுத்தது. கோயிலுக்குள் நுழைய அவள் கண்கள் குளமாகியது. கண்ணீர் சாரை சாரையாகப் பொழிய ஆரம்பித்தது. மனம் தன்னிலை சொல்லி மண்டாடத் தொடங்கியது. வாய் பலவாறாகப் புலம்ப ஆரம்பித்தது.

"கடவுளே! இந்த உலகத்தில காசு எண்ட வெறும் காகிதங்களுக்கு இருக்கிற மதிப்பு மனுசங்களுக்கு இல்லாமல் போட்டுதே. எல்லாம் காசு, காசு எண்டு ஓடுறாங்களே தவிர ஏழைகளிண்ட மனதையும் வலிகளையும் பார்க்க மாட்டேன் எண்டுறாங்களே? உலகத்தில ஏன் மனுசங்கள ஒரே தரத்தில் படைக்காம விட்டான்? ஏழை என்று ஒன்றை படைக்காமலே விட்டிருக்கலாமே" என்று அழுது முடிக்கும் போது நேரம் பதினொன்றைத் தாண்டியிருந்தது. அவள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் தன் பிள்ளைகள் பசியால் துடித்துக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணியவள், தாமதிக்காமல் கோயிலில் இருந்து வெளியேறத் தொடங்கினாள்.

பசியாலும் வேதனையாலும் சோர்ந்து நடக்கவே முடியாமல் தள்ளாடியபடி கோயிலடியைத் தாண்டும் போது, "அம்மா! கொஞ்சம் நில்லுங்கள்" என்று குரல் ஒன்று தடுத்து நிறுத்தியது. தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கினாள். "அம்மா, என் பெயர் மணிவாசகம். நாங்கள்தான் இன்று வறிய மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கி இருந்தோம். எங்களிடம் இதற்கான பெயர் விபரங்கள் கிராம அதிகாரி மூலமாகவே சிபாரிசு செய்யப்பட்டது. அதில உங்கட பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால், நாங்கள் இங்கு நடந்த எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம். அதனால் உங்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகளைத் தருவதற்கு உத்தேசித்துள்ளோம். இதனைப் பெற்று உங்கள் குழந்தைகளின் பசியைப் போக்குங்கள்" என்று தன் கையில் இருந்த பொதியை நீட்டினார். கமலாவின் கண்கள் மகிழ்ச்சியில் தோய்ந்தன. மனதில் அத்தனை ஆனந்தம். பக்தனின் குரல் கேட்டு கடவுள் எதிர்ப்பட்டது போல கரங்களைக் குவித்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டு குழந்தைகளின் பட்டினியைப் போக்கும் பூரிப்புடன் அங்கிருந்து புறப்பட்டாள்.

சிந்திக்கத் தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவையில்லை
துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு
வாழ்க்கையில் தோல்வியே இல்லை.

- அப்துல் கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச் சூழலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள திருக்கோயில் பண்பாட்டு மாற்றங்களும் தாக்கங்களும்

திரு. கு. கோபிராஜ் M.A
அபிவிருத்தி உத்தியோகத்தர்
(கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்),
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

**திருக்கோயில் பண்பாடு**

இந்து பண்பாட்டின் நிலைகளாக விளங்குபவை திருக்கோயில்கள் ஆகும். இவை காலம் காலமாக பண்பாட்டின் உறைவிடமாகவும், சமயவாழ்க்கையின் கேந்திரமாகவும் விளங்கி வந்துள்ளது. திருக்கோயில்களில் அங்கு எழுந்தருளி இருக்கும் மூர்த்தி தலப்பெருமைக்கு வழிவகுக்கின்றதாக குறிப்பிடத்தக்கது. திருக்கோயில்கள் அமைந்த சூழல் திருக்கோயில்கள் அமைக்கப்பயன்படுத்தும் பொருட்கள் போன்ற இன்னோரென்ன பொருட்கள் எல்லாம் இயற்கையிலே கிடைத்த பொருட்களைக் கொண்டே வழிபாடு இயற்றப்பட்டு வருவதைக் கொண்டு இந்துக்களது திருக்கோயில் மரபுகள், புவியியல் காரணியும் காலம் தோறும் வளம்பெற்று உள்ளன. இந்து பண்பாடு பற்றி தெரிந்து கொள்ள இயக்கசக்தியாக உள்ளவை திருக்கோயில்கள் ஆகும். இந்துபண்பாட்டின் சிறந்த குணம் சகிப்பு தன்மை ஆகும். வரலாற்று காலத்தே முன்பிருந்த ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய இஸ்லாமிய, கிறீஸ்து பண்பாடுகளின் சீரிய கூட்டுணைப்பாக இந்து பண்பாடு விளங்குகிறது. அப்பண்பாட்டின் அடித்தளம் இறையணர்வு. ஆன்மீக வேட்மை ஆகும்.

காலத்துக்கு காலம் இந்து கோயில்கள் அந்நியர் ஆட்சியினாலும், யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டன. இதில் யாழ்ப்பாணத்தில் கி.பி 13. - 16 வரை சுகந்திர அரசு நிலவி வந்துள்ளது. இதற்கு முன்னரே இந்து கோயில்கள் பல இருந்தன. 17 - 18 ம் நூற்றாண்டில் போர்த்துகேயர் ஒல்லாநார் ஆதிக்கத்தில் இக்கோயில்கள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டன. பின்னர் 18ம் நூற்றாண்டின் பித்தானியர் ஆட்சியில் பல கோயில்கள் திருத்தியமைக்கப்பட்டன. போர்த்துக்கேயர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களின் ஆட்சி காலத்தில் 3 சமய குழுக்கள் அரச ஆதரவோடு இங்கு வந்து சமயத்தை பரப்ப கல்வியை ஒரு கருவியாக கொண்டனர். இதில் போர்த்துகேய தளபதி ஒலிவரா மாத்திரம் 500க்கும் அதிகமான கோயிலை அழித்தான் என்று கூறப்படுகிறது. அடுத்து ஒல்லாந்தர் வர்த்தக நோக்கில் கைப்பற்றியராயினும், இந்து, இஸ்லாம், பௌத்த சமய வழிபாட்டுக்கு தடை விதித்ததுடன் யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயம் கட்டுவதற்கும் தடை விதித்தனர். இதன்பின் 20ம் நூற்றாண்டில் முற்பகுதியில் அரசு பௌத்தசமயம், இந்துசமயம் போன்றவற்றை பாடசாலையில் போதிக்கும் சட்ட ஆக்கத்தை நிறைவேற்றியது. 1920ல் கல்வி தளை சட்டத்தை நிறுவியது. இதில் கல்வி ஆனைக்குழுவினால் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளுக்கு எவ்வகை சமயகல்வி போதிக்க வேண்டுமென்பதை தீர்மானிக்கும் உரிமை இருந்தது. இது எல்லா பெற்றோருக்கும் சம அளவில் வழங்கப் படவில்லை. இதனால் 1947 பாடவிதானத்தில் சமயத்தை ஒரு பாடமாக சேர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாண இந்து கோயில் பண்பாடு**

யாழ்ப்பாணத்தின் அமைவிடம், நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலையில் பழமையான பண்பாடுகளை பேணுவதற்கு வாய்ப்பாக இருந்தது. அதன் இந்தியாவிலுள்ள, சைவ கோயில்களை விட யாழ்ப்பாணத்து சைவக்கோயில்களின் வழிபாட்டு நடைமுறைகள் வேறுபட்ட பண்புகளை கொண்டு அமைந்துள்ளன. பிற சமயங்களின் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் பரவுவதற்கு அதன் அமைவிடம் நாதகமாக இருந்தன. வரலாற்று காலங்களிலே புத்தசமயம், கிறித்தவ சமையம் போன்றவற்றில் செல்வாக்கு அதிகரித்த போதிலும் சைவக் கோயில்களின் தொகையும் வகையும் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் பெற்றிருத்த உயர் நிலையை அறிய உதவுகிறது, யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் என்று கூறும் போது "இந்து" என்ற பெயரை எங்கள் சமய நூல்களில் காணமுடியாது. இந்தியா என்ற பெயர் பாரத நாட்டிற்கும் "இந்து" என்ற பெயர் பாரத பண்பாட்டிற்கும் ஏற்றதாகும். இந்துசமயம் என்பது வைதிக மரபை தழுவி நிற்றதால் வேதங்கள் ஊடுருவி பிணைத்து நிற்கும் மதங்களின் தொகுதியே இந்து மதமாகும் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் பெரும் உட்பிரவுகளை கொண்டதும் சைவ சித்தாந்தம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ மீமான்சை, உத்தரமீமான்சை முதலிய தத்துவ நெறிகளை விதந்துரைங்கிறது. இந்து சமயத்தின் நடுத்தண்டாக சைவம் காணப்படுகிறது. வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், போன்ற மதம்களை சைவம் தன்னுள் அடக்கியுள்ளது. இந்து சமயம் என்று கூறும் போது சைவத்தை சுட்டும் தன்மைகாணப்படுகிறது. என்கிறார் கைலாசநாத குருக்கள்.

ஈழ தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்வியலில் இரண்டு அம்சம்கள் முதன்மையானது.

1. தமிழ் மக்கள் வாழ்கின்ற பல்வேறு பிரதேசம்களிலும் காணப்படும் பொதுமைகள், தனித்துவம்கள் உள்ளடக்கிய எடுத்துரைப்பு.
2. சகல சமூக மட்டம்களிலும் உள்ள தமிழ் மக்களின் பண்பாட்டு வேறுபாடுகள், ஒற்றுமைகளை ஆராய்ந்தறிக்கை.

இவ்விரண்டும் முக்கியமானவை. ஒன்று நமது சமூகத்தை செங்குத்தாக எடுத்து காட்டுமேயாணால் மற்றது கிடைநிலையில் எடுத்து காட்டுவதாக அமைகின்றது ஈழத்து தமிழ் பண்பாடானது சில முக்கிய வலயங்களை உள்ளடக்கியது. அவை புவியியல், வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், போன்ற காரணிகளால் வலயங்களாக வகுக்கப்பட்டன. ஈழத்தைப் பொறுத்தவரை தமிழர்களின் பண்பாட்டு வலயங்களாக, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, மன்னார், புத்தளம், சிலாபம், மலையகம் போன்றவையும் இதைவிட கொழும்புக்கு ஒரு தனி பண்பாடு வலயமாக கருதப்படுமளவுக்கு முதன்மையான மதம் நம்பிக்கைகள், சடங்குகள் ஐதீகம்கள் என்பவற்றை அடித்தளமாக கொண்டவை ஆகும்.

இலங்கை பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு வெளியிட்ட "இலங்கை திருநாட்டில் இந்துக் கோயில்கள்" எனும் நூலில் யாழ்ப்பாண மாவட்டம் எனும் பரப்பினுள் யாழ்ப்பாண இந்து கோயில்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன. சிவன், அம்மன், சுப்பிரமணியன், பிள்ளையார், வைரவர், துர்க்கை, விஸ்ணு, எனும் தெய்வம்களுக்குரிய கோயில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதேச நிலையிலே யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, சங்கானை சண்டிலிப்பாய், உடுவில், சுன்னாகம், ஏழாலை, தெல்லிப்பளை, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, பூநகரி, ,பச்சிலைப்பள்ளி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி போன்ற இடம்களின் உள்ள கோயில்களின் நிலையும், பூசைமுறைகளும் குறிப்பிடப்பட்டு உள்ளன.

இலங்கையிலே சமயம் ஒரு பாடமாக பள்ளிக்கூடங்களிலே கற்பிக்கப்பட்டு வருகிறது. மாலை நேர சமயப் பயிற்சி அருகிப் போய்விட்டதுடன் சமய நடைமுறைகள் விஞ்ஞான யுகத்திற்கேற்ப மாற்றம் பெற்று உள்ளன. இதனால் சமயம் பற்றிய சிந்தனையும் விஞ்ஞான ஆய்வு போல திசைமாறி உள்ளது. சைவ கோயில் வரலாறு சமயப் பேணலில் இன்றியமையாதது என்பது உணரப்படுவதில்லை. கோயில்களில் " பரிபாலம் செய்யும் தர்மபரிபாலன சபை மனித நிலையான பதவிகளை பேணி அதிகாரம் செய்யும் சபைகளாகவே இருக்கின்றன. ஒருசில ஆலயம்கள். இவற்றின் நிர்வாகம் சிறப்பாக இருந்தபோதும் கோயில் வரலாற்றை ஆராய்ந்து எழுதி பேணும் நிலை இன்னமும் வளர்ச்சி அடையவில்லை.

**திருக்கோயில் - பொருள் விளக்கம்**

இந்து கலாச்சாரத்தின் உயிர் நாடியாக விளங்குபவை திருக்கோயில்கள் ஆகும். இதனை அப்பர் சுவாமிகள் "திருக்கோயில் இல்லாத திருவில்லூடு" என்றார். கோயில் என்ற சொல் மண்ணினது அரண்மனையையும் ஆண்டவன் இருக்கையையும் குறித்து நிற்கின்றது. அரண்மனையில் அரசனுக்கு நடைபெறுகின்ற உபசாரங்கள் போன்றே திருக்கோயில்களிலும் ஆண்டவனுக்கும் இவை நடைபெற்றதால் இவ் இரண்டும் ஒரே நாமத்தால் அழைக்கப்பட்டன. "ஆலயம்" என்ற பதம் அலைகின்ற மனதை பக்குவப்படுத்தி லயப்படுத்தும் இடம் எனப்பொருள் தருகின்றது. மனதை ஒருநிலைப்படுத்தி மெய்மறந்து தியானத்தில் மனம், வாக்கு, காயம், ஆகியவற்றை ஈடுபடுத்தி வழிபாடு இயற்றப்படும் இடமே ஆலயமாகும். ஆலயத்தின் தோற்ற அமைப்பு அது அமைந்திக்கும் சூழல், அங்கு நடைபெறும் நித்திய, நைமித்திய விழாக்கள் யாவும் மனதை லயப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன. விழாக்கள் கூட வடமொழியில் "உட்ஷவங்கள்" என அழைக்கப்படுகின்றன "உட்ஷவம்" என்றால் சுகம் தரும் என்பது பொருளாகும். மன அமைதி கிட்ட ஆறுதல் பெறவே விழாக்கள் நடாத்தப்படுகின்றன. இவ் விழாக்கள் ஆலயத்தில் நடைபெறும் போது அதனை திருவிழா என அழைக்கின்றனர். இதன் பின்னனியில் தான் நம் முன்னோர் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டனர். எங்கும் நிறைந்த பரம்பொருளை வீட்டிலும் வழிபடலாம். மாறாக மனதை ஒருவழிப்படுத்துவதற்கான சூழல் அமைவதில்லை . இதனால் தான் ஆலயவழிபாடு முக்கிய இடம் பெறுகிறது. பசுவின் பால் அதன் மடியில் இருந்து சுரக்கப்படுகிறதோ அதேபோல ஈசனது அருள் சுரக்கும் இடமாக ஆலயம் அமைந்து விடுகின்றது, ஆலய வழிபாட்டு உரிய மூர்த்திகள் மின்சார சக்தியை வெளிப்படுத்தும் இக்குமிழ்கள் போன்றவை ஆகும். வடமொழியான"பிரதிமா" என்பர் இதன் பொருள் ஆண்டவனின் பிரதிவிம்பம் என்பதாகும். திருவுருக்களும் இப் பொருளையே தருகின்றன. மனதை லயப்படுத்துவதில் இவை பிரதான இடத்தை வகிப்பதால் இந்துமதத்தின் அச்சாணியாக உருவழிபாடு காணப்படுகின்றது.

## இராஜகோபுரம்

**ஆலய அமைப்பு முறைகளில் ஏற்பட்ட மாற்றம்**

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது ஆன்றோர் வாக்கு. கோபுரத்தின் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்க தெரியுமோ அவளவு தூர இடமும் பூகோள கைலாசம் என்று அழைக்கப்படும். கோபுரம் 3 அடுக்குகளை கொண்டது. ஜாக்ரம், சொப்பனம், அசுப்பி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து அடுக்கு என்பது ஐம்பொறிகளையும், ஏழு அடுக்கு என்பது ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பனவைகளையும் ஒன்பது அடுக்கு என்பது ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்றவற்றைக் குறிக்கிறது. ஆலய கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது. அடுக்கடுக்கான தளம்கள் பல்வேறு உலகங்களையும், உலக வாழ்க்கையின் பல்வித அனுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள், சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன. கீழே அகன்று இருக்கும் கோபுரம் மன ஒருமைப்பாடும், பரம் பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்தின்மையும், எண்ணமும், ஆழ்ந்து நின்றாலும் ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியம் என்பதை கோபுரம் எடுத்து விளக்குவதை அவதானிக்கலாம். தூலலிங்கம் என்று கூறப்படும் இக் கோபுரமானது ஆக்கும் லிங்கம் என அழைக்கப்படும் மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாகும். வெகு தூரத்தில் உள்ளவர்க்கு ஆலய இருப்பிடத்தை வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. யுத்தத்தின் முன்னர் 5 தளம்களுக்கு மேல் இருப்பது அரிது. 1996 பின்னர் 7 தளங்கள் அமைக்கப்பபட்டு உள்ளன. அதே நேரம் 5 தளத்திற்கு மேல் கோபுரம் அமைக்கும் மரபு காணப்பட்டது. 2021 பின்னர் 108 அடி உயரமான கோபுரம் அமைக்கும் மரபு தோற்றம் பெற்று உள்ளது.

**மணிக்கோபுரம்**

ஆலயங்களிலுள்ள காண்டாமணியும் தொலைவிலுள்ளவர்களும், பல்வேறு கடமையில் ஈடுபட்டு கொண்டிருப்பவர்களுக்கும் உரிய வேளையில் இறை நினைவை ஊட்டி கோயிலின் இருப்பிடத்தை காட்டி நிற்பதோடு மங்கள ஓசையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கின்றது. நாத தத்துவமாகவும் இருக்கின்றது. ஆலயத்தில் மங்கள வாத்தியம் ஒலிப்பதன் மூலம் பல நாதம்கள் உருவாக்கப் படுகின்றது. மணியோசை தேவர்களை அழைக்கும் சக்தியும், தீய சக்திகளை அகற்றும் சக்தியும் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனால் எந்தக் கிரியையும் ஆரம்பிக்கும் போது பூஜையில் மணிக்கு பூஜை செய்து அதனை ஒலிக்க செய்கின்றார்கள்.

யுத்தத்தின் பின்னர் கோபுரத்தின் 2 மருங்கிலும் காண்டாமணி கோபுரம் அமைக்கும் மரபு கட்டப்படுகின்றது. இருமருங்கிலும் யுத்தத்தின் பின்னர் மணியை காணலாம். பேமிங்காம் அதிநாத மணி லண்டனில் இருந்து வருகின்றது.

**நவக்கிரக மண்டபம்.**

நந்தி, பலிபீடம், கொடிகம்பம் என்பற்றிக்கு நேர் வடக்கே நவக்கிரகத்துக்கான சந்நிதானம் அமைந்திருக்கும். சூரியன் நடுவில் இருக்க சுப கிரகம்கள் நான்கும் நான்கு திக்கிலும் ஏனைய நான்கு கிரகம்களும் நான்கு மூலையிலும் அமைப்பது ஆகம முறை ஆகும். சனீஸ்வரனை தனியாகவும் வைத்திருப்பார்கள். சனீஸ்வரனை தனி சந்நிதிதானத்தில் அமைக்கும் போது ஈசானத்தை அடுத்து வைரவருக்கு அருகில் நேர்முகமாக அல்லது வடமேற்கு மூலையில் தெற்கு முகமாக அமைத்தல் மரபு. கிழக்கு நோக்கிய கோபுரத்திற்கு உள்ளே இரு புறமும் மேற்கு நோக்கியவாறு சூரிய சந்திரர்கள் தனி சந்நிதானம் அமைப்பது மரபு. நாயன்மார் சந்நிதிதான உண்டு. நவக்கிரக மண்டபத்தில் மத்தியில் கிழக்கு நோக்கி சூரியனும், தென்கிழக்கு மேற்கு நோக்கி சந்திரனும், வடகிழக்கிலே கிழக்கு நோக்கி புதனும், வடக்கிலே வடக்கு நோக்கி குருவும், கிழக்கிலே கிழக்கு நோக்கி சுக்கிரனும் மேற்கே மேற்கு நோக்கி சனீஸ்வரனும் தென்மேற்கே தெற்கு நோக்கி ராகுவும் வடமேற்கே தெற்கு நோக்கி கேதுவும் காட்சி கொடுப்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். யுத்தத்தின் ஊர் அடங்கு சட்டத்தினால் சிவன் ஆலயத்தை தேடி தூர இடங்களுக்கு செல்ல முடியாததால் விநாயகர், அம்மன் ஏனைய ஆலயங்களிலும் யுத்தத்தின் பின்னர் நவக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது.

**உள்வீதி அல்லது உட்பிரகாரம்**

கோயிலை சுற்றி மதில் கட்டப்பட்டு இருக்கின்றது. மதில் சுவருக்கும் பிரதான ஆலயத்திற்கு மிடையே உள்ள இடைவெளியை உள்வீதி /உட்பிரகாரம் என்பார். மதிலுக்கு வெளியே காணப்படுவது வெளிவீதி வெளிப்பிரகாரம் எனப்படும். உட்பிரகாரத்தில் ஏனைய பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகள் அமைக்கப்பட்டு இருக்கும். வெளிவீதிகள் இறைவனின் திருவம்சங்கள் அலங்கரிக்கப்பட்டு உலா வருவதற்கும் பக்தர்கள் வீதிவலம் வந்து வழிபாடு இயற்றவும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் என்பன முறையாய் வீழ்ந்து வணங்கவும் வழிபாடு செய்ய ஏற்றதாக உள்ளன.

யுத்தத்தின் பின்னர் உள்வீதி மாபிள்கள், கிரணையிற்கல், ரெறாசோ போன்றன பயன் படுத்தப்படுகின்றன. உள்வீதி மண் நிலம் காணப்பட்டது. தற்போது உள்வீதி, மண்ணில் காண்பது அரிது வெளிவீதி நிலம் தார் போடப்படுகிறது.

அருட்சணை சிட்டை அலுவலகம் போருக்குப் பிறகு பல ஆலயங்களை உள்வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. உள் அடங்கு சட்டத்தின் தூர இடங்களுக்கு போக முடியாத மக்கள் சிவன் ஆலயம் தவிர ஏனைய ஆலயங்களில் நவக்கிரகம் அமைக்கப்படுகின்றது. விநாயகர், அம்மன் கோயிலில் யுத்தத்தின் முன்னர் நவக்கிரகம் இல்லை.

**தேர்**

தேர் உடல் தத்துவத்தை நன்கு விளங்குகின்றது. உடலை தேர் என்றும் உள்ளிருக்கும் ஆன்மாவை கதி அல்லது செல்பவன் என கருதப்படுகின்றது. உடலிலுள்ள இயல்புகளை எல்லாம் தேரில் அமைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. ஒன்றுநிலைத்து நிற்கும் சின்னம் மற்றையது இயக்குகின்ற சின்னம் என்பது. இதன் மூலம் விளக்கம் பெறும் கருத்தாகும்.

யுத்தத்தின் பின்னர் தற்போது கும்பாபிசேகம் நடைபெறாமலே தேர்த்திருவிழா நடைபெறுகிறது. தேர் அமைப்பில் யுத்தத்திற்கு முன்னர் கட்டுத்தேர் அதிகம் காணப்படுகின்றது. யுத்தத்தின் பின்னர் துணி போடுதல், துணி போடும் பணியாள் அமர்வது கடினமானதாக அமைவதாக கூறப்படுகிறது. யுத்தத்தின் பின்னர் தேர் மூலப் பொருள் பெறல், தேர் ஏற்றி ஆலயம் செல்லல் தொடக்கம் அனைத்து காவல் துறையினரின் அனுமதி பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது. தேர்ச் சில்லில் மேலே இரும்பு பூட்டப்பட்டிருக்கிறது. விமானத்தில் புதிய வடிவம் அமைப்பு காணப்படுவதுடன் யாழில் யுத்ததின் முன்னர் தனியாழி காணப்பட்டதும் கீழே சிங்கம், யானையுடன் தும்பிக்கை காணப்பட்டது. சிவன், பார்வதி திருமணத்தில் நாவுறுபடாமல் இருக்க ஒரு முனிவர் யாழியை கைலாயம் கொண்டு சென்றார். இதிலும் பல மாற்றங்கள் காணப்படுகின்றது.

**கோஷ்ட பஞ்சரங்கள்**

ஆலய கருவறை சுவர்களிலும், அர்த்த மண்டப சுவர்களிலும் வெளிப்பறத்தே மாடங்கள் செய்யப்பட்டு அவற்றிலும் திருவுருவங்கள் சில பிரதிஷ்டை செய்யப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் தெற்கே தட்சணாமூர்த்தியும், நிருத்த கணபதியும், மேற்கே லிங்கோற்பவரும், வடக்கே பிரம்மா, துர்க்கை அமைந்திருக்கும். வடக்கு பக்கத்தே கருவறை சுவர், வடக்குத் திசையில் கோமுகி அமைந்திருக்கும். அதன் அருகே சண்டேஸ்வரர் கருவறையை பார்த்த வண்ணமும் சண்டேஸ்வரர் சந்நிதானம் அருகே திருமஞ்சன கிணறும், நந்தவனம், வாகன அமைப்பும், மடப்பள்ளி, களஞ்சியஅறை என்பன அமைந்திருக்கின்றது.

2002 பின்னர் உட்பிரகாரத்தில் 4 அறை என இன்று காணப்படுகின்றது. இதேநேரம் 1997க்கு முன்னர் இருந்த சின்னமோள அறை, நாட்டிய அறை, நாயன்மார் மடம் கைவிடப்பட்டு அற்றுப்போயின.

கோயில் வீதி, கிராமத்தில் இருந்த கேணிகள் யுத்தத்தின் பின்னப் பராமரிக்கப்படாமல் கைவிடப்பட்டு உள்ளன. யாகசாலை தற்பொழுது ஆலயத்தின் தூபி உடைய விமானம் அமைக்கப்பட்டுள்ளது. யாகசாலையில் 2012ற்குப் பின்னர் திருமஞ்ச கிணறு ஆழ்துலை கிணறு களையும் குழாய்க்கிணறுகளையுத் காணலாம். அதிலிருந்து குழாய் நீர் வெளியே மின்மோட்டர் மூலம் எடுக்கப்படுகிறது.

**பலிபீடம்**

மனிதன் தனது கீழான இயல்புகள் அனைத்தையும் இந்த இடத்தில் பலி கொடுக்கின்றது எனப்படுகின்றது. தற்போது யுத்தத்தின் பின்னர் கொடிமரம் சில்வர் தகடு பயன்படுத் தப்படுகிறது. யுத்தத்தின் முன்னர் வெள்ளியால் சில ஆலய கொடிமர தகடுகள் காணப்பட்டன. நயினாதீவு நாகபூசணி, மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை குறிப்பிடலாம். பித்தளை செம்பு காணப்பட்டது. யுத்த காலத்தில் செப்பு பித்தளை தட்டுப்பாடு காணப்பட்டது.

**நந்தி**

நந்தி - ஜீவாத்மாவை குறிக்கிறது. மூலமூர்த்தியை நோக்கியே வாகனமாகிய நந்தி காணப்படும். பதியை அடைய வேண்டியது பசுவின் குறிக்கோள் ஆகும். யுத்தத்தின் (2009) பின்னர் ஆலயத்தின் முன்னால் அதிகார நந்தி எனும் பெரியநந்தி கட்டப்படுவதை அவதானிக்கலாம்.

**கருவறை**

கோயில் கருவறை இருள் சூழ்ந்துள்ளது. காற்றுக்கும். கதிரவன் ஒளிக்கும் அங்கு இடம் இல்லை. என்கிறார்கள். ஸ்தபதிகள் நமது உடலமைப்பின் புற சின்னமாக கருவறை அமைந் துள்ளது. கருவி கரணங்களை ஒடுக்கி, மனதை உள்முகமாக திருப்பினால் உண்டாகும். அனுபவத்திற்கு சின்னமாக அமைந்து உள்ளது. யுத்தத்தின் பின்னர் கருவறை மாபிள் கற்கள், பித்தளை தகடுகள் சந்திரகாச, கமல விளக்கு அற்ற நிலைய மின்சார விளக்குகள் கருவறை காணப்படுகின்றது.

**ஆலயங்கள் வியாபார தலமாக மாற**

நம்மை பற்றிப் பிணித்துள்ள அகங்காரம் அல்லது மமதை ஒருங்குமிடமே ஆலயம் எனபொருள் கொள்ளப்படுகிறது. இன்ற களியாட்ட இடங்களாகவும், வியாபார தலமாகவும் செய்யப்பட்டு வருவதை கண்டு பாராமல் இருந்துவிட முடியவில்லை. கோயில் நிருவாகம் வருமானம் தேடும் செயப்பாட்டிற்காக ஒரு வியாபார நெறியை நில ஆலயங்களில் தோற்றுவித்து நடைமுறைப்படுத்தி வருவதை காணலாம். பணம் சம்பாதிக்கும் சந்தையாகவோ ஜமீர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு மாளிகையாகவோ இங்கே வேண்டிய தேவை இல்லை. அந்தணர்கள் ஆலய பூசைகளில் பயபக்தி இன்றி தொழில்முறை பூசைகளாக (அதிகலாபம்) நடாத்தி வருகின்றனர். அந்தனர் என்போர் அறவோ தன்னிடம் உள்ள பொருள் பிறருக்கு கொடுப்பது மனித நேயப் பண்பாடு ஆகும்.

**சமூக நிலைய மாற்றம்**

சமூக நிலையில் இந்து மதம்பற்றிய சிந்தனையை மக்கள் பெற கோயில்கள் வாய்ப்பளித்தன. கோயில்கள் சமூக ஒற்றுமையை ஒருங்கினைப்பையும் பெரிதும் பேணிப் பாதுகாத்துடன் பொதுமக்கள் குறையை போக்கும் இடமாகவும், பிணி தீர்க்கும் நிலையமாகவும், பசிபோக்கும் நிலையாகவும் காணப்பட்டது. யுத்தத்தின் பின்னர் மடங்கள் அற்றநிலையை ஆலயங்கள் பூசைக்கு மட்டும் திறப்பதாக அமைந்துள்ளது.

**சாத்துப்படி**

திருவிழா காலங்களிலே இறைவனை எழுந்த செய்ய சாத்துப்படி பயன்படுத்தப்பட்டது. சாதாரண திருவிழாவுக்கு ஆடம்பர திருவிழாவிற்கும் இடையே வேறுபாடு காணப்படும். சாத்துப்படி பிராமணர், சைவகுருமார் தான் சாத்துப்படி செய்தனர். ஆசார சீலரான தற்போது இக்கலையை செய்து வருகின்றனர். மலர், இலை, பட்டு, சரிகை, கஞ்சத்தகடு, வர்ணக்கலவை கடதாசி முதலான பலவற்றை பயன்படுத்தி பக்தி பூர்வமாக அலங்காரமாக சாத்துப் படி செய்வதை அவதானிக்கலாம். பொய்காவல், பொய்கை பாவைகள் முதலானவற்றை வைத்து சாத்தப்படி செய்வதுண்டு. யுத்ததின் பின்னர் பிளாஸ்ரிக்பூ, ரெஜிபோம், றிபன் போன்றன ஆலய விழாக்களில் பாவனைக்கு வந்துள்ளது.

**ஒலி அமைப்பு**

ஆலய சூழல் முழுவதையும் ஒலி பெருக்கி ஆக்கிரமித்து கொண்டு இருக்கம் சுற்றச்சூழல் மரபை எல்லாம் பாதித்தாலும் இன்றுவரை அழியாமல் பேணப்பட்டு வருகின்றது. யுத்தத்தின் முன்னர் பெரிய ஜெனரேற்றர் லைற் இன்ஜின் எனும் பெரிய அதிகளவிலான ஸ்பீக்கர் வீதியோரமாகக் கட்டி கொண்டாடினார்கள். தற்போது வெளிநாட்டில் வாழ்பவர்கள் ஒலிபெருக்கி அம்பு தனியாக வாங்கி கொடுத்தனர். அதிலே மங்கள வாத்தியம் மின்சாரம் மூலம் இசைக்கப்படுகிறது. இதனால் ஒலிஅமைப்பு தொழில் செய்வோர் மங்கள வாத்திய கலைக் கைத்தொழில் வாய்ப்பு வெகுவாக குறைந்ததை அவதானிக்கலாம். ஒளி அமைப்பது மின்சார பாவணை அதிகரித்து விட்டது. லைற் இஞ்சின் தொழில் பாதிப்படைத்து உள்ளது. மிகையான ஒளியுடைய மின்விளக்கு பொருத்தப்பட்டன. யுத்தத்தின் பின்னர் எல்லா சமயங்களிலும் ஒலி பெருக்கி பயன்பாடு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

**காவடி ஆட்டம்**

முருக வழிபாட்டோடு காவடி ஆட்டம் தொன்றுதொட்டு இடம் பெற்று வருகிறது. இடும்பன் சிவகிரி, சந்திரகிரி போன்ற மலைகளை கலப்பை போல் தூங்கி வந்தான் என்பதும் தான் தூக்கி வரும் காவடி உடையவர்க்கு அருள் புரிய வேண்டும். என இடும்பன் கேட்டுக் கொண்டான் என்பது மரவு. பக்தர்கள் நேர்த்திக்கடனுக்கு காவடி எடுத்து வந்துள்ளனர். வேல் காவடி, பன்னீர்க் காவடி பால காவடி, தூக்குக் காவடி, சர்ப்பக காவடி போன்ற பலவித காவடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திக் கடனிற்கு எடுக்கப்பட்டன. பறைமேள ஒலியுடன் சேர்த்து காவடி ஆரம்பத்தில் சைவ சமய கலையாக காணப்பட்டது. பின்பு தொழிற்சாலையாகவும் திறமைகாட்டும் மேடை கலையாகவும் ஆற்றுகை கலையாகவும் பர்ணமித்தது எனலாம்

**இந்து இல்லம் மாற்றமடைதல்**

இன்று வீட்டு நிலையில் இந்த மதம் பற்றிய எண்ணம் மங்கி வீட்டு அமைப்பு நிலையில் சுவாமி அறையும் நவநாகரிக அமைப்பை பெற்று வருகிறது. குத்துவிளக்கு ஏற்றி வழிபடும் நிலை உருவாகி உள்ளது. புதிதாக கட்டப்படும் நவீன மரபுத் தொடர் வீடுகளில் வழிபாட்டில் பற்றிய சிந்தனை கைவிடப்பட்டுள்ளது. இந்து என்ற எண்ணத்தோடு வீட்டில் வழிபடும் செயற்பாடு மாற்றமடைந்துள்ளது. வழிபாட்டுக்குரிய நேரம், நாள் என்பன மறக்கப்படுகின்றன. குடும்பமாக வீட்டில் கூடி வாழும் நிலை அருகி வந்தள்ளது. வீட்டின் தூய்மை பேணல், அலங்காரம் என்பவற்றில் வெளிநாட்டு செல்வாக்கு அதிகரித்து உள்ளது. வீட்டில் செடிகள் வளர்க்கும் பண்பாடு மாறி இலை குறோட்ன் வளர்க்கம் பண்பாடு அதிகரித்து உள்ளதை அறியமுடிகிறது. வழிபாட்டு சிந்தனை பாடல்கள் கேட்கும் மரபு அருகிவருவதை அவதானிக்க முடிகிறது. தற்போது ராட்சத இசை ஒலிக்கப்படுகிறது. சினிமாப் பாடல்கள் ஆலயங்களில் ஒலிக்கின்றன.

**முகமூடி ஆட்டம்**

மனிதர்கள் விலங்குகளைப் போல வேடம் போட்டு ஆடும் ஆட்டம் இதுவாகும். பூர்வீக காலத்தில் இருந்து வந்த இந்த ஆட்டம் பறவை முகமூடி, இராட்சத முகமூடி போட்டு ஆடப்படும் இவ்வாட்டம் சூரக்பொர், மானம்பூ பொன்ற விழாக்களில் ஊர்வலங்களில் இடம் பெறுகின்றன.

**கரகாட்டம்**

கரகம் என்பது மாரியம்மன் வழிபாட்டில் இருந்து தோன்றியது. உடல்வளம், மழை வளம், கருவளம் வேண்டுவதும் தொற்று நோயிலிருந்து காக்கவும் இக்கரகாட்டம் மேற்கொள்ளப் படுகின்றது. பெரும் தெய்வ வழிபாட்டில் காணப்படுவது போல் சிறுதெய்வ வழிபாட்டில் கரகம் பயன்படுகிறது. மாரியை பற்றிய பாடலும் உடுக்கு, இசை கருவியும் அதிகம் கரகத்தில் பயன் படுத்திப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**

01. நல்லைக்குமரன் மலர் - 1990
02. அகில இலங்கை இந்துமா மன்ற வைரவிழா சிறப்பு மலர்
03. 2வது உலக இந்து மாநாட்டு மலர்
04. இந்து மதத்தின் இன்றைய தேவைகள் - ஆரையம்பதி க. சபாரத்தினம்
05. நேர்முகம் - செல்லையா - பாலச்சந்திரன் - ஸ்தபதி - ஸ்ரீ காளிகா சிற்பாலயம் கொக்குவில்
06. திருக்கோயில் வழிபாடும் பயனும் - ந. சுப்புரெட்டியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளங்களும் சூழல் பாதுகாப்பும்



**திரு. த. அரியரத்தினம்,** B.A (Cey)
ஸ்ரீலங்கா திட்டமிடல் சேவை, (ஓய்வுநிலை)
J.P சமாதான நீதவான் (அகில இலங்கை)

இயற்கை இனிமையானது, இன்பமயமானது, சுற்றுப்புற சூழல் மனித வாழ்வைச் சுகமானதாகப் பாதுகாக்கும் வசந்தம் ஆனால் இன்று உலகமயமாக்கலினாலும், தொழில் வளர்ச்சிகளாலும், தொழில்நுட்ப வளர்ச்சிகளாலும் நகரமயமாக்கலாலும், மக்கள் அதிகரிப்பால் தேவைகள் அதிகரிப்பும், அபிவிருத்தி என்ற எண்ணத்துடன் சமுதாயம் இயங்குவதாலும் சுற்றுப்புறசூழல், மாசடைவதால் இயற்கை தனது அழகான வளங்களை நாளுக்கு நாள் இழந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

நீர், நிலம், வளி, ஒளி ஆகியவற்றின் கூறுகளுடன், புவி அமைப்பு, இயற்கைச்சூழல், நிலப் பயன்பாடு என்பவற்றால் தான் உயிர்களின் வாழ்க்கைக் கட்டமைப்பு தோற்றம் பெற்றது. இன்று சுற்றுப்புறச்சூழல் பாதிப்புக்களின் விளைவாக அளவுக்கு மிஞ்சிய வெப்பமும், வரட்சியும், விளைநிலங்களின் பாதிப்பும், உற்பத்தி வீழ்ச்சியும், பொருளாதார முடக்கமும் ஆரம்பிக்கும் இன்றைய உலகச்சூழலில் பஞ்சம், நோய், சூழல்மாசு என்ற பல்வேறு கோணங்களில் மோசமான விளைவுகளை மக்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கூறுவதாயின், வளர்ச்சி மேம்பாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கையாளப்படும் பொருளாதாரப் போட்டியில் உலகின் இயற்கை தன்மைகள் அழிக்கப்படு வதுடன், சூழலின் அக்கறையும் குறைந்ததே காரணமாகும். காடுகளை அழிப்பதனாலும், எரிப்பதினாலும் கரி, எண்ணெய் மற்றும் எரிபொருட்கள் பாவனை அதிகரிப்பும் கரியமிலவாயு மற்றும் பசுமை இல்லா வாயுக்கள் நைதரசன் ஒக்சைட், காபன், துகள்கள், மெதேன் வாயு என்பவற்றால் பசுமை இல்ல வாயுக்களின் பரவல் வளிமண்டலத்தில் அதிகரித்தமை புவி நிலப்பரப்பில் சூழல் மாசடைதல் அதிகரிக்க முக்கிய காரணமாகும். வருடம் 7000 - 8000 மெற்றிக் தொன் மாசுப்படிவு ஏற்படுகின்றது. கடந்த 100 ஆண்டுகளில் உலக சராசரி வெப்பநிலையானது 73 டிகிரி செல்சியஸ் அளவில் உயர்ந்துள்ளது. அதேபோல் இந்த நூற்றாண்டு இறுதிக்குள் 2 தொடக்கம் 5 டிகிரி செல்சியஸ் அளவில் வெப்பம் உயர வாய்ப்புள்ளது. அதேபோல் இந்த நூற்றாண்டில் இறுதிக்குள் 2 தொடக்கம் 5 டிகிரி செல்சியஸ் வரையில் உலகின் சராசரி வெப்பநிலை உயரலாம் என எதிர் பாக்கப்படுகின்றது. வெப்ப அதிகரிப்பாலும் வடதுருவ தென்துருவ பனிப்படலங்கள் உருகுவதாலும் கடல்நீர் மட்டம் இன்று 1.9 மில்லிமீட்டர் எனும் விகிதத்தில் வருடந்தோறும் உயர்ச்சி அடைந்து வருகின்றது. இந்த பரவல் உலகம் முழுவதும் தாக்கம் செலுத்தும் காரணியாக மாறியுள்ளமை முக்கிய அம்சமாகும்.

பூமியானது பல்வகைத் தன்மைகளை தன்னுள்ளே பெற்றுள்ளது இவற்றில் காடுகள், நீர்நிலைகள், மண் வகைகள், மலைத்தொடர்கள், கனிமங்கள், எரிபொருள்கள், எனப் பல வளங்களைக் கொண்டுள்ளது. இவற்றை இயற்கை வளங்கள் என்கின்றோம். இவ் இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களின் தாக்கம் ஒரு மனிதனுக்கு எந்த வகையில் நன்மை மற்றும் தீமை பயக்கும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இயற்கை வளங்கள் மற்றும் உயிரினங்கள் அழிவடைவதனை உணர்ந்து இவ் வளங்கள் அழியா வண்ணம் சுற்றுச் சூழலை பாதுகாப்பது அனைவரின் கடமையாகும்.

சுற்றுச்சூழலில் குறிப்பாக வளி, நீர் என்பவை மாசு அடைவது சாதாரணமாகி விட்டது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் அசுத்த வாயுக்கள் தொழிற்சாலைக் கழிவுகள் என்பன மனிதகுலத்துக்கு தீங்காக அமைகின்றன. ஆகவே தொழிற்சாலைகள் வளி, நீர் நிலைகள் மாசுபடாத வகையில் தம் தொழில்நுட்பங்களை கையாள வேண்டும். உலகின் கைத்தொழில் வளர்ச்சியில் தொழிற்சாலைகளின் பங்கு முக்கியமானதாகும். காடுகள் உயிர் இனங்களுக்கு மட்டும் பாதுகாப்பு இல்லை. காடுகள் மண்வளத்தை பாதுகாக்கின்றது. மண் அரிப்பை தடுக்கின்றது. காடுகள் மழையை மட்டும் கொடுப்பதில்லை. மழைநீரை சேகரிக் கின்றது. ஒட்டுமொத்த மரங்களும் காட்டுக்குவரம் எனலாம். மழைநீர் உயிர் இனங்களுக்கு மூலாதாரம். "நீர் இன்றி அமையாது உலகு" எனறு வள்ளுவரும்

"வரம்புயர நீருயரும், நீர் உயரநெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்" என்று ஔவையாரும் நீர் பற்றிப் பாடியிருப்பதனைக் காணலாம் என்பது புலனாகும்.

இவற்றில் இருந்து உயிர் இனங்களுக்கு நீர் உயிர் நாடி அது ஒரு நாட்டின் சொத்து என்பது புலனாகும். அதைப் பாதுகாப்பது மனித சமுதாயத்தின் கடமையாகும்.

இயற்கை வளங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து அமைந்துள்ளது. நீர் இல்லையேல் வரட்சி ஏற்படும் குடிநீர் தட்டுப்பாடு, விவசாயப் பாதிப்பு, கால் நடை பாதிப்பு, ஆறுகுளம், ஏரி என்பவற்றில் வறட்சி என்பன ஏற்படும். இப் பாதிப்பு மிக கொடுமையானது. வறட்சி ஏற்படும் காலங்களில் சில இடங்களில் தண்ணீருக்கு பலமைல் செல்லும் காட்சிகளை காணலாம். தலையில் குடம், நாரியில் குடம், அதுமட்டுமல்ல தலையில் குடம், நாரியில் பிள்ளை என காட்சிகளை காண்கின்றோம்.

இன்று நீர் விற்பனைப் பொருளாக மாறிவிட்டது. உலகில் தண்ணீர் தட்டுப்பாட்டாலும், சுத்தமான நீர் கிடைப்பது அரிதாக இருப்பதினாலும் தண்ணீர் போத்தல் வியாபாரம் பெரு வர்த்தமாக மாறிவிட்டது. அதே நேரத்தில் வளிக்கும் இதே நிலை ஏற்படுகின்றது எனலாம். வளி மாசு அடைவதால் சீனாவில் தூய்மையான காற்றை சுவாசிக்க முடியாததால் அங்குள்ள நிறுவனம் லேக் லூயிஸ் மலைத்தொடரில் சுத்தமான காற்றை போத்தல்களில் அடைத்து பொது மக்களுக்கு சுவாசிக்கக்கூடிய செயற்கை சாதனங்களை விற்பனை செய்கின்றது. இந் நிறுவனம் கனடாவில் இருந்தும் சுத்தமான காற்றை கொண்டு வந்து விற்பனை செய்கின்றது. இதே நிலை விரைவில் உலகில் பல நாடுகளுக்கும் ஏற்படலாம்.

இயற்கை வளங்கள் மனித இனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. பூமியின் தட்ப வெப்பநிலை மற்றும் பருவமழை, வறட்சி என்பவற்றை நிர்ணயிக்கும் சக்தி இயற்கை வளங்களிடம் தான் இருக்கின்றது. பூமியில் ஏற்படும் அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கிக் கொண்டு அதே சமயத்தில் பூமிக்கு தேவையான குளிர்ச்சியையும் வெப்பத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமப்படுத்தி கொடுக்கின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஆற்றல் இயற்கை வளங்களுக்கு உண்டு. குறிப்பாக துரித வளர்ச்சி மேம்பாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கையாளப்படும் பொருளாதார போக்கும், செயற்பாடுகளுமே இம் மாசடைதலுக்கான முக்கிய காரணமாக அமைகின்றன. உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற நோக்கமும், இலாபத்தை மட்டுமே அடிப்படையாக கொண்ட பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் அரசியல் ஆதிக்கம் இன்று இயற்கையை மீட்டெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இன்று மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அச்சமானது சர்வதேச அளவில் 1970ல் இருந்து வெளிக்கொணரப்பட்டது. புவி வெப்பமடைதல், இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது பற்றிய மகாநாடுகள் ஆரம்பித்த பின் 1980ல் இந்த நிலைமை தொடர்பில் உலக நாடுகள் கவனம் செலுத்தின. புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம் தொடர்பில் சிந்தனை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து காலநிலை பற்றிய மகாநாடு 1992ல் பிரேசில் றியோ டிஜெனிரோவில் நடைபெற்றது. புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம் என்பன உறுதி செய்யப்பட்டது. அன்று தொடக்கம் சர்வதேச நாடுகள் இது பற்றிய மாநாடுகளை நடத்தி வருகின்றன. சென்ற ஆண்டு காலநிலை பற்றியும் மகாநாடுகளும் நடந்துள்ளன. ஆனால் இன்றைய பொருளாதார போக்குகளும் நாடுகளின் சுயநலப் போக்குமே, காலநிலையை சீராகப் பேண முடியாத நிலை ஏற்படக் காரணமாகும். அதனால் தீர்க்கமான செயற்திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு காரணிகளாலும் மனிதனின் மனிதநேயமற்ற நடவடிக்கைகளாலும் சுற்றுப்புற சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது. அதனால் இயற்கையும் சமுதாயமும் தேய்வுறத் தொடங்கியுள்ளன.

ஆகவே இன்று நம் புவிச்சூழலை பாதுகாப்பதே எதிர்காலத்தில் தூய்மையான சூழலைப் பராமரிக்க அடிப்படையாக அமையும். ஒவ்வொரு மனிதனும் இயற்கையை நேசித்து பாதுகாத்தால் மட்டுமே எதிர்காலத்தில் பசுமையானதாக அமையும். அதைவிடுத்து விஞ்ஞான போக்கில் இயற்கையுடன் மோதிக் கொண்டால் இறுதியில் வெல்வது இயற்கையே. ஆகவே தொடர்ந்தும் இயற்கையுடன் மனிதன் சவாலை எதிர் கொள்ள வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Temple Rituals - கோயில் சடங்கு

(புளியந்தீவு நகேஸ்வரர் ஆலயம்)











# Traditional Sports - பாரம்பரிய விளையாட்டுக்கள்









பண்பாட்டு விழா



Handicraft Art- கைவினைக் கலைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அ.கிருபாகரன்
-அதிபர்-

# கிருபா லேணர்ஸ்
## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




## தலைமையகம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 399 480

## கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guru Printers. 021 222 88266